வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

# உதயன்

சுடர் 30 கதிர் 192 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 24, ஞாயிற்றுக்கிழமை 07.06.2015

யா/வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலயம்

புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
07.06.2015
உள்ளே சிறப்பு மலர் 》பக்கம் 21,24》

## வாகனச் சில்லில் நசிந்து சிறுவன் பரிதாபச் சாவு

### காக்கைதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

டிராக்டர் இழுத்துச் சென்ற மின் பிறப்பாக்கியில் இருந்து பயணித்த சிறுவன் தவறிக் கீழே விழுந்து சில்லில் நசியுண்டு உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காக்கைதீவுச் சந்தையை அண்மித்து நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதில் பண்டத்தரிப்பு, பிரான்பற்றைச் சேர்ந்த எம்.ரதீபன் (வயது 12) என்ற சிறுவனே உயிரிழந்தான்.

யாழ்.நகரிலுள்ள திருமண மண்டபம் ஒன்றுக்கு பக்.25

## வடமராட்சி விபத்தில் பல்கலை ஊழியர் சாவு



வடமராட்சி, ஜூன் 7

பருத்தித்துறை - யாழ். வீதியில் புறாப்பொறுக்கிப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை காலை 8.15 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் முறாவில் வீதி, புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த செல்வராஜா பிரசன்னா (வயது - 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா ஊழியராகக் கடமையாற்றி வந்த இவர், வேலையின் பக்.25

# பிரபாவின் பிஸ்டலை காணோம்



## விழி பிதுங்கும் பாதுகாப்பு அமைச்சு அரச வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி

கொழும்பு, ஜூன் 7

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடமிருந்து போரின் இறுதியில் கைப்பற்றப்பட்ட நவீன ரகப் பிஸ்டல், ரைபிள் மற்றும் அவரது அடையாளத் தகடு உள்ளிட்ட பொருள்கள் காணாமற்போயுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள்காட்டி, 'மவ்விம' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு வந்தது. இதன்போது, போரில் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் உடல் மீட்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டது. அவரது உடலுடன் இணைந்து மீட்கப்பட்ட பொருள்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பிலேயே, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தற்போது தேடத் தொடங்கியுள்ள னர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் அவரது இடுப்புப் பட்டியில் எப்போதும் பிஸ்டல் வைத்திருப்பார். அவரிடமிருந்த பிஸ்டல் நவீனத்துவமானதும் சக்தி வாய்ந்ததுமாகும். ஜி-லொக் 17 ரக 9 மில்லி மீற்றர் பிஸ்டலையே அவர் வைத்திருந்தார். அத்துடன் பிரபாகரனிடம் எப்போதும் ரைபிள் ஒன்றும் காணப்படும். அந்த ரைபிள், எம்-16 ஏ-2 ரகத்தைச் சேர்ந்தது. அந்த ரைபிளைப் பயன்படுத்தி கிரனேட்டும் ஏவ முடியும். அவ்வாறு தனிச் சிறப்பு வாய்ந்த ரைபிளையே பக்.25

## தலைவர் பிரபாவின் சிலையை அகற்றியது தமிழகப் பொலிஸ்

சென்னை, ஜூன் 7

தமிழகத்தில் காவல் தெய்வமாக அமைக்கப்பட்டிருந்த, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சிலை இரவோடு இரவாக தமிழகப் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளது. ஊர் மக்களின் எதிர்ப்பையும் மீறி இந்தச் சிலையைப் பொலிஸார் அகற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி அருகே தெற்கு பொய்கை நல்லூரில் கடந்த 4 ஆம் திகதி பேச்சியம்மன் கோவில் புதிதாகக் கட்டப்பட்டு பக்.25

## இந்திய ராணுவத்துக்கு பலாலியில் புதிய தூபி

யாழ்ப்பாணம், ஜூன் 7

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் - தமிழ் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதியினுள் - இலங்கையில் கொல்லப்பட்ட இந்திய அமைதிப் படையினருக்காக அமைக்கப்பட்ட புதிய நினைவுத் தூபியில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

புதிய நினைவுத் தூபியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நினைவுகூரல் நிகழ்வில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து



கொண்டு, நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பக்.25

## இளைஞருக்கு வாள் வெட்டு

வடமராட்சி, ஜூன் 7

துன்னாலை குடவத்தைப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கள்ள மணல் ஏற்றுவது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்குவதாகக் குற்றஞ்சாட்டியே பக்.25

## அரச பணம் ஒரு சதம் கூட இல்லை

கொழும்பு, ஜூன் 7

ஷிரந்தியின் சிரிலிய சவிய வங்கிக் கணக்கில் அரச பணம் ஒரு சதம் கூட இல்லை என்று அவரின் கணவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு - நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- பக்.25

## ஐ.நா. அமர்வை இலக்கு வைத்து காணாமற்போனோர் அறிக்கை

### ஓகஸ்ட் 15 ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 7

ஐ.நா. அமர்வை இலக்கு வைத்து, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியிடப்படவுள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், தற்போது இறுதி அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இறுதி அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படும் என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பிலான அறிக்கை வெளியிடப்படவுள்ளது. இதற்கு பக்.25

## ஜெனிவாக் களத்தில் குதிக்கிறார் மைத்திரி

### செப்ரெம்பர் அமர்வில் நேரில் பங்கேற்பார்

கொழும்பு, ஜூன் 7

இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பிலான ஐ.நா. விசாரணை அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் இடம்பெறும், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் வெளியிடப்படவுள்ளது. அந்த அமர்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரடியாகப் பங்கெடுக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை, ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருந்தார். பக்.25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இயற்கை இடர்களைத் தடுக்க ஒரேவழி சுற்றுச்சூழலைப் பேணிக் காப்பதே!

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் சுன்னாகப் பிரதேசத்துக்கு வழங்கப்படும் குழாய் நீர் வீணடிக்கப்படுகிறது. இந்த ஒவ்வாத செயல் குறித்து கந்தரோடையைச் சேர்ந்த வாசகர் ஒருவர், மனம் நொந்து உதயனின் "வாசகர் திருமுகம்" பகுதிக்கு அறிவித்துள்ளார்.

அதிகளவு குடிதண்ணீர் நாளாந்தம் வீணடிக்கப்படுகிறது. தமக்குரிய குடிதண்ணீரை மொண்டு செல்வதற்கு வருபவர்களில் மிகப் பலர், தமது நீரேந்தும் பாத்திரங்களை வீடுகளில் வைத்துக் கழுவிச் சுத்தம் செய்யாது குழாயடியில் வைத்தே குலுக்கிக் கழுவுகிறார்கள் --

அது மட்டுமா? கால், முகம் கழுவுவதற்கும் பாதணிகளைக் கழுவுவதற்கும் பலரும் இங்கு தான் வருகிறார்கள் --

அதனால் சொட்டு நீரல்ல, அதிகளவான குடிதண்ணீர் வீணடிக்கப்படுகிறது. விளைவு, சுற்றாடல் எந்நேரமும் சேறும் சகதியுமாக உள்ளது --

இப்போது, தாராளமாக தண்ணீர் வழங்கப்படுவதே, அது வீணடிக்கப்படுவதற்குக் காரணமாக இருக்குமோ -- என்று தமது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளார், அந்த நல்ல உள்ளம் கொண்டவர்.

மனிதன், மரம் செடிகொடிகள், மிருகங்கள் மற்றும் உயிர் வாழும் சகல ஜீவராசிகளுக்கும் அத்தியாவசியமாக, அன்றாடம் தேவையானது தண்ணீர்.

உதாரணமாக, மணிக்கணக்காக உணவு இல்லாவிடினும் மனிதனால் ஓரளவு பொறுத்துக் கொள்ள இயலும். ஆனால் தண்ணீர் இல்லை என்றால், குடல் சுருண்டு மயக்கம் உண்டாகும் ஆபத்து உண்டு.

மனிதன் மற்றும் விலங்குகள், செடிகொடிகள், நீர்வாழ் உயிரினங்கள் என்று இயற்கையின் சகல படைப்புக்களுக்கும் அத்தியாவசியமானது தண்ணீர். அது இயற்கையின் நியதியும்கூட.

உயிர்வாழ்வன பாதிப்புறாமல் இருப்பதற்கு மண்ணும் விண்ணும், நீரும் நெருப்பும் உட்பட்ட பஞ்ச பூதங்களும் பாதிப்புறாமல் இருக்க வேண்டும்.

அவை எழுதப்பட்ட நியதி அல்ல. காலமாற்றங்களால், மனிதன் உட்பட்ட உயிரினங்களும், ஏனையவையும் அழிவுகளையும் சேதங்களையும் எதிர்கொள்ள வேண்டியது இயற்கை அன்னையின் அழித்து எழுதப்படாத விதி.

கடந்த சில தசாப்தங்களாக, உலகளாவிய மட்டத்தில் இயற்கை சார்ந்த அழிவுகள் அதிகரித்து வருகின்றன. பூமி வெப்பம் அடைதல் முதற்கொண்டு மழை வீழ்ச்சி குறைதல் வரையான பாதிப்புக்கள், கண்டத்துக்குக் கண்டம் பல வகையான பாதிப்புக்களை விளைவிக்கின்றன.

இமயமலைப் பிரதேசங்களிலும், நேபாளத்திலும் சமீபத்தில் உண்டான பேரனர்த்தம் அனைத்துலக நாடுகளையும் அச்சத்தில் ஆழ்த்தி உள்ளது.

காலநிலை மாற்றங்களே, அவற்றுக்குப் பிரதான காரணம் என்று விஞ்ஞானிகள் ஊன்றித் தொட்டுக் காட்டுகிறார்கள்.

அத்தோடு மட்டுமன்றி, சுற்றுச்சூழல் மாசடைவும் சனத்தொகை அதிகரிப்பும் முக்கிய காரணிகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைத்தொழில் மயமாக்கலும், அதன் விளைவுகளான சுற்றுச் சூழல் மாசடைவும் மறுபுறத்தில் ஒவ்வாத விளைவுகளைப் பெருக்குகின்றன.

மொத்தத்தில் --

இயற்கை காலத்துக்குக் காலம் மாறுகிறதோ அன்றிப் பிறழ்கிறதோ என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் --

இயற்கை அள்ளித் தந்த வளங்களை பாதுகாத்துப் பேணும் பெரும் கடமை, எமக்கே உண்டு என்பதை, எந்த வழத்தாலும் புறம் ஒதுக்கமுடியாது, மறந்துவிடலாகாது.

அதாவது --

சுற்றுச் சூழலை பாதுகாப்பதன் மூலமே அனர்த்தங்களைக் குறைக்க இயலும். இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புறாமல் தப்பித்துக் கொள்ள முடியும். அதனை மனதில் கொள்ள வேண்டும்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா -- எனினும் இயற்கையை மாற்றுவதில் அதீத செயற்பாடுகள் ஆகா!

# தமிழரின் போராட்டங்களை மழுங்கடிக்கவே வன்முறை

## தூண்டிவிடப்படுகின்றது என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்களை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த வன்முறைச் சம்பவங்கள், எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் – கொச்சைப்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவரும் நல்லூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரம் அவர்களின் 13 ஆவது ஆண்டு சிராத்த தினம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்களில் அலுவலகத்தில் நினைவுகூரப்பட்டது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, மாவை.சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.

தீங்கு செய்தவர்களுக்கும் கூட நன்மை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த பண்பைக் கொண்டவராக செயல்பட்டவர்தான் சிவசிதம்பரம். அன்று எதிர்க் கட்சித்தலைவர் பதவியை ஏற்பதா இல்லையா என்பதில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் எமது கட்சியினுள்ளும் இளைஞர்கள் மத்தியிலும் காணப்பட்டது. அந்த வேளையில் துணிந்து எதிர்க்கட்சி பதவியை ஏற்க வேண்டும் அதனை அமிர்தலிங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெளிவாகக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

சிவசிதம்பரம் யாரையும் வஞ்சிக்க வேண்டும், விலத்தி விட வேண்டும், கைகழுவி விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக என்றும் செயற்பட்டவர் அல்ல. அனைவரையும் ஏற்றுக் கொண்டு, மன்னித்துக் கொண்டு அவர்களையும் அணைத்துச் செல்லும் நல்ல பண்புகளை கொண்டவராக இருந்தார்.

எமது மக்களுடைய விடுதலைக்கு எதிராகச் செயற்படும் போராட்டங்களைக் கொச்சைப் படுத்தும் செயற்பாடுகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது – நியாயப்படுத்த முடியாது. யாழ்ப்பாணம் இன்று போதைவஸ்து பாவிப்பதிலும்,



வன்முறையில் ஈடுபடுவதிலும், வன்புணர்வு நடவடிக்கைகளிலும், ஜனநாயக விரோத நடவடிக்கைகளிலும் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது.

உலக நாடுகள் பலவற்றில் வன்முறைகள் பல இடம் பெற்றுள்ளன. ஆனால் அவைகள் யாவும் இன விடுதலைக்காக நடைபெற்றன. அவற்றுக்கு வெற்றியும் கிடைத்துள்ளன. ஆனால் இன்று நடைபெறும் நடவடிக்கைகள் – வன்முறைச் சம்பவங்கள ஏற்றுக்கொள்ளக் கூடியவைகள் அல்ல. இவைகள் அனைத்தும் எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் – கொச்சைப்படுத்தும் செயற்பாடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இது ஒரு இலட்சியமற்ற, நம் விடுதலைக்கு விரோதமான, விடுதலையை அழித்து விடுவதாக, எமது பாரம்பரிய நல்ல பண்புகளை அழித்துவிடுகின்ற வன்முறைச் சம்பவங்களாகவே காணப்படுகின்றன.

பொலிஸார் இந்த மண்ணில் தமது கடமைகளை உண்மையாகவும் – நேர்மையாகவும் செய்து இருந்தால் புங்குடுதீவு மாணவியின் படுகொலையைத் தடுத்து நிறுத்தி இருக்கலாம். இத்தகைய வன்முறைக் குழுக்கள் செயற்பட்டு இருக்கவும் முடியாது. இந்த வகையில் பொலிஸாரும் கூட இணைந்து செயற்படுகின்றார்கள் என்றே கூற வேண்டி உள்ளது.

போதைவஸ்து – வன்புணர்வுக்கு எதிராக போராடுபவர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட சம்பவம் தான் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் ஆகும். இதன் பின்னால் போராட்டத்திற்கு எதிரான சக்திகள் பல உள்ளன என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் – என்றார். (த-5-86)

## எரிந்த நிலையில் ஆணின் சடலம்

தென்மராட்சி, ஜூன் 7

சாவகச்சேரி கெருடாவில் இல்வாரைக் குளக்கட்டுக்கு அருகில் ஆணின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

குளக்கட்டுக்கு அருகில் உள்ள பற்றை அருகில் முழுமையாக எரிந்த நிலையில் சடலம் காணப்பட்டது.

சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான சதாசிவம் சபாரத்தினம் (வயது–58) என்பவரே சாவடைந்தவரெனத் தெரிவிக்கப்பட்டது. இவரது வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள குளக்கட்டருகே சடலம் காணப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-9)



# கவுணாவத்தையில் நேற்று 400 கடாக்கள் வெட்டி சரிப்பு



வலி வடக்கு, ஜூன் 7

கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் நேற்றுக் காலை 400 கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டன.

நேற்றுக் காலையில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வைரவருக்கு பொங்கல் இட்டுப் படையல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து கடா வெட்டிச் சரிப்பு இடம்பெற்றது.

நேற்று அதிகாலை முதல் மக்கள் கோவிலுக்குக் கடாக்களை உழவு இயந்திரங்கள், லாண்ட் மாஸ்ரர்கள் என்பவற்றின் மூலம் கொண்டு வந்தனர்.

காலை முதல் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.நந்தகுமார் தலைமையில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கடாக்களைப் பரிசோதனை செய்து வெட்ட அனுமதி வழங்கினர்.

கடா வெட்டப்படும் இடம் நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டமைக்கு அமைவாகக் கோவில் முன்றலில் மூடி அடைக்கப்பட்டுக் காணப்பட்டது. தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி நந்தகுமார் கடாக்கள் வெட்டப்படுவதை அவதானித்தார்.

சுமார் 400 முதல் 450 வரையான கடாக்கள் அங்கு வெட்டப்பட்டுள்ளன. சுமார் 300 வரையிலான கோழிகளும் வெட்டப்பட்டதுடன் ஒரு தொகுதி கோழிகள் உயிருடன் ஆலயத்துக்கு வழங்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

ஆலயச் சுற்றாடலில் பாதுகாப்புக் கருதி இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஞ்சுள டி சில்வா தலைமையிலான சுமார் 30 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபட்டனர். (த-86)

# தெற்கு மீனவர்கள் எச்சரித்து விடுதலை

## அனுமதியின்றிக் கரைவலை மீன்பிடியில் ஈடுபட்டமையால்

யாழ்ப்பாணம், ஜூன் 07

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி கரைவலைத் தொழிலில் ஈடுபட்ட சிங்கள மீனவர், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரால், பொலிஸாரின் உதவியுடன் பிடிக்கப்பட்டுக் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு கடும் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுண்டிக்குளம் பகுதியில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக அந்தப் பகுதி மீனவர்கள் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வருகின்றனர். இது தொடர்பில் பருத்தித்துறைப் பிரதேச சபையினால், யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் கேட்ட போது, சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

1983 ஆம் ஆண்டு சுண்டிக்குளம் பகுதியில் கரைவலைத் தொழில் செய்வதற்கு 28 சிங்கள மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் இப்போது தொழில் நடவடிக்கைக்கு விண்ணப்பிக்கும்போது, அவர்களை நிராகரிக்க முடியாது. மேலும், வடமராட்சி கிழக்குச் சங்கங்கள் குறித்த சிங்கள மீனவர்களுக்கு அல்லது அந்தப் பகுதியைச் சாராத மீனவர்களுக்கு அனுமதி வழங்கும்போது தம்மிடம் அனுமதி பெறவேண்டும் என்று தெரிவிக்கின்றனர்.

சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை. கரைவலைத் தொழிலில் ஈடுபடும் மீனவர்களிடம், தொழில்பாடுக்கான அனுமதிப் பத்திரம் இருந்தால் அதனைப் பதிந்து, ஒவ்வொரு ஆண்டும் தொழில் செய்ய முடியும். அத்துடன் கரைவலை தொழிலில் ஈடுபடுபவர், தனக்குத் தொழில் உதவிக்கு ஆள்களை அழைத்து வர முடியும். அவ்வாறு அனுமதி பெற்றுச் சிங்கள மீனவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

அனுமதிப் பத்திரம் இல்லாமல் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட சிங்கள மீனவர்களைக் கடந்த வாரம், எமது திணைக்கள அதிகாரிகள் பளைப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்தனர். அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அதன்போது கடும் எச்சரிக்கையுடன் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அனுமதியின்றி அல்லது சட்டவிரோதமான தொழில் முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களை, கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவருக்கு புகைபொருள் விற்ற 51 பேர் மாட்டினர்

கிளிநொச்சி, ஜூன் 7
போதைப் பொருள்கள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தினர் நடத்திய திடீர் பரிசோதனையின் போது 21 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்குப் புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்த 51 வர்த்தகர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர்.
இவர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 33 வர்த்தகர்களுக்கு கிளிநொச்சி நீதிமன்றிலும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 13 வர்த்தகர்களுக்கு முல்லைத்தீவு நீதிமன்றிலும் மதுவரி நிலையத்தினரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
இந்த 46 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றங்களினால் அபராதம் விதிக்கப்பட்டன.
கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் மது வரி நிலையத்தினரால் கடந்த ஜனவரி தொடக்கம் நடத்திய திடீர்ப் பரிசோதனைகளின் போது அகப்பட்ட 293 பேருக்கு எதிராகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல செய்யப்பட்டதாகக் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையப் பிரதான பொறுப்பதிகாரி றொகான் சஞ்சே ராஜு தெரிவித்தார்.
21 வயதுக்கு குறைந்தவர்களுக்குப் புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்தமை , தம் உடைமையில் கள்ளு, கசிப்பு, அரச சாராயம் போன்றவற்றை வைத்திருந்து விற்பனை செய்தமை, வீடுகளில் கள் வைத்திருந்து விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். (த-9)

# ரயர் எரித்து சேதமுற்ற காப்பெற் வீதிகளின் சீரமைப்பு சிரமமானது

## மழை நீர் உட்புகுமாயின் வீதி விரைவில் பழுதடைந்து விடும்

யாழ்ப்பாணம், ஜூன் 7
கடந்த மாதம் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது, காப்பெற் வீதிகளின் நடுவே ரயர்கள் எரிக்கப்பட்டமையினால் ஏற்பட்டுள்ள அடையாளத்தை – சேதத்தை இலகுவாகச் சீர் செய்ய முடியாது என்று தெரிவித்த, வீதி அபிவிருத்தித் திணைக்கள திட்ட அலுவலகப் பொறியியலாளர், தற்போதுள்ள சேதத்தின் ஊடாக, மழை நீர் உட்புகுமாயின் காப்பெற் வீதி விரைவில் பழுதடைந்து விடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.
புங்குடுதீவு மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி கடந்த மாதம் 20 ஆம் திகதி யாழ் குடாநாடு தழுவிய ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதன் போது, பிரதான காப்பெற் வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டன. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள காப்பெற் வீதிகளில் ரயர் எரிக் கப்பட்டது. இவ்வாறு ரயர் எரிக்கப்பட்ட இடங்களில் அடையாளங்கள் – சேதங்கள் தோன்றியுள்ளன.
இவை இன்னமும் சீர் செய்யப்படவில்லை. இதனைச் சீர் செய்ய முடியுமா என்பது தொடர்பில், திட்ட அலுவலகப் பொறியியலாளரிடம் கேட்ட போது, கடந்த காலங்களில் பிரதான வீதிகளில் தார் படையாக மாத்திரம் ஊற்றப்படும். இதனால் ரயர் எரித்தால் தார் உருகும். பின்னர் தார் போட்டால் அது சரியாகி விடும். ஆனால் காப்பெற் வீதிகளில் அவ்வாறு இல்லை.
கிட்டத்தட்ட 50 மில்லி மீற்றருக்குத் தாருடன் சேர்ந்த கலவை காப்பெற் வீதிகளில் போடப்படுகின்றது. ரயர் எரிப்பினால் தார் உருகியுள்ளது. இதனை முன்னர் போன்று தார் ஊற்றி சரி செய்ய முடியாது. அந்தப் பகுதி முழுவதையும் வெட்டி எடுத்து, மீண்டும் ஆரம்பத்தில் செய்தது போன்று காப்பெற் போட வேண்டும். அதனை உடனடியாகச் செய்ய முடியாது.
ரயர் எரிப்பினால் உருவாகியுள்ள சேதத்தின் ஊடாக, மழை நீர் உட்புகுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. அவ்வாறு மழை நீர் உட்புகுந்தால், காப்பெற் வீதி விரைவில் பழுதடைந்துவிடும். அதனைப் பயன்படுத்த முடியாத நிலைமை கூட ஏற்படும் என்று குறிப்பிட்டார்.
இதேவேளை, காப்பெற் வீதிகளில் கற்பூரம் எரித்தல், சாம்பிராணி தணலைக் கொட்டுதல் உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கையையும் மக்கள் முன்னெடுக்கக்கூடாது. காப்பெற் வீதியில் நெருப்புப்பட்டு தார் உருகினால் வீதி விரைவில் பழுதடையும் என்பதுடன், மீண்டும் காப்பெற் வீதி அமைப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (த-5)



# பதவி உயர்வைக் கோரி அதிபர்கள் போராட்டம்

## புதிய சுற்றறிக்கை அறிவுறுத்தலால்

யாழ்ப்பாணம், ஜூன் 7
ஒரே தடவையில் அதிபர் சேவைப் பரீட்சைக்குத் தோற்றியும் 3 வருடங்களின் பின்னர் நியமனம் வழங்கப்பட்டவர்களுக்குப் பதவியுயர்வு வழங்குவதில் சிக்கல் உள்ளதனால், அவர்கள் 3 வருடங்கள் சேவையாற்றியிருப்பினும் பதவியுயர்வு வழங்க வேண்டும் என்று கோரி இலங்கை ஆசிரியர் சங்கம் போராட்டம் முன்னெடுத்துள்ளது. கொழும்பு மத்திய கல்வி அமைச்சு முன்பாக அந்தப் போராட்டம் கடந்த வியாழக் கிழமை முன்னெடுக்கப்பட்டது.
அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைப்படி அதிபர் தரத்திலிருந்து பதவியுயர்வு பெறுபவர்கள் ஆங்கில மொழி சித்தியடைந்திருத்தல் வேண்டும்,பட்டப்பின்படிப்பு நிறைவு செய்திருத்தல் வேண்டும், முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ஆகிய 3 விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதனாலேயே தற்போதைய சிக்கல் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.
இது குறித்து பொதுச் செயலாளர் தெரிவிக்கையில்,
2005 ஆம் ஆண்டு பலர் அதிபர் சேவைப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அப்போதைய கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்டவர்களது செயற்பாடுகளால் அதிபர் தரம் 3 ஐச் சேர்ந்த ஆயிரத்து 600 பேருக்கும் அதிபர் தரம் 2– 11 ஐச் சேர்ந்த 2 ஆயிரம் பேருக்கும் அதிபர் நியமனம் கிடைக்கவில்லை. அது தொடர்பில் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
வழக்கு நிறைவில் 2009 ஆம் ஆண்டே குறித்த 3 ஆயிரத்து 600 பேருக்கும் அதிபர் நியமனம் வழங்கப்பட்டது. அதனால் முன்னர் நியமனம் பெற்றவர்களுடன் ஒப்பிடும்போது ஒரே பரீட்சை எழுதியும் 3 வருடங்களை அவர்கள் இழந்திருந்தனர்.
இந்தச் சுற்றறிக்கை 2016 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என்றும் கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் அதிபர் சேவையில் 6 வருடங்கள் பூர்த்தி செய்தவர்களே அடுத்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். அவ்வாறு பார்த்தால் ஒரே காலத்தில் பரீட்சை எழுதியும் தாமதமாக நியமனம் கிடைத்தவர்கள் 3 வருடங்களையே பூர்த்தி செய்துள்ளனர். அதனால் முன்னைய சுற்றறிக்கைப்படி அவர்கள் பதவியுயர்வு பெறமுடியாதுள்ளனர்.
அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க வேண்டுமெனில் 2009 ஆம் ஆண்டு குறித்த பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். அந்தக் கோரிக்கையை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபடுகின்றோம்.
கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினருடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அதன்போது தமது கோரிக்கை தொடர்பில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதாகவும் அவர்களது ஆலோசனையின்படி நடவடிக்கை எடுப்பதாகவும் கல்வி அமைச்சின் செயலாளரால் கூறப்பட்டது – என்றார். (த-4)

# மானிப்பாய் மருதடிக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை வீழ்ச்சி

## ஆலய நிர்வாகத்தின் ஆடைக் கட்டுப்பாட்டால்

வலிதென்மேற்கு, ஜூன் 7
பெண்கள் அணியும் ஆடைகள் சம்பந்தமாக தர்மகர்த்தா சபையினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு காரணமாக மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் எண்ணிக்கையில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் ஆலயத்துக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
இந்த நிலை குறித்து கவலை தெரிவித்துள்ள பொதுமக்கள் மட்டுமல்ல பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு சில தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள், ஆலயத்துக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தையும் அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு நடமுறையில் இருக்கும் விதிமுறைகளைத் தளர்த்துமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.
பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் சுமார் 25 கோடி ரூபா செலவில் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுப் பத்து வருடங்களுக்குப் பின் கடந்த மாதம் வருடாந்த மஹோற்சவம் இடம்பெற்றுள்ளது.
ஆலயம் புனரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்பொழுது பெண்கள் அங்கு சல்வார் அணிந்து செல்வதற்குத் தர்மகர்த்தா சபையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. முழுப் பாவாடையும், சேலையும் அணிந்து செல்பவர்கள் தான் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர் அத்துடன் ஆண்கள் வேட்டி மட்டும் அணிய வேண்டும்.
பெண்களுக்கு அடக்கமானதும், பாதுகாப்பானதுமான பெரும்பாலான மக்களால் கருதப்படும் சல்வார் ஆடையை 90 வீதமான பெண்கள் அணிந்து வருகிறார்கள். இந்த நிலையில் இதற்குத் தடை விதித்ததனால் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் தினசரி மட்டுமல்ல வெள்ளிக்கிழமை தோறும் மற்றும் விசேட தினங்களில் நூற்றுக் கணக்கான பெண்கள் ஆலயத்துக்கு வருவது வழக்கம் .இதனால் வருமானத்திலும் வளர்ச்சி காணப்பட்டது.
தர்மகர்த்தா சபையினருடைய கட்டுப்பாட்டினால் பெண்களின் வருகையில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டதே இந்த நிலைக்குக் காரணம் என்று சுட்டிக் காட்டியுள்ள அடியார்கள் கட்டுப்பாட்டை தளர்த்துமாறு சம்பந்தப்பட்டவர்களை கோரியுள்ளனர். (த-115)

## இருவர் காயம்

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை ஏ 9 வீதியில் இடம்பெற்றது. கண்டியைச் சேர்ந்த செல்வநாதன் உதயமன்(வயது –53)என்பவரும் தெல்தெட்டவைச் சேர்ந்த வாகன சாரதியான பிரபாத் சதுரங்க (வயது–22) என்பவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-9)

## ஆலயத்துக்கு முன்னால் மதுப்பிரியர்கள் அட்டகாசம்

தென்மராட்சி, ஜூன் 7
மட்டுவில் தெற்க அக்கினி வைரவர் கோவில் முன் காணி மதுப் பிரியர்களின் கேளிக்கை நிலையமாகச் செயற்படுவது குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.
மாலை வேளையில் ஆலயத்துக்கு முன்னால் உள்ள காணியில் கூடும் பலர் இங்கிருந்து கும்மாளம் அடிப்பதாகவும், வீதியில் செல்வோருடன் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொள்வதாகவும் கூறப்படுகின்றது.
இதனைக் கட்டுப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவித்தபோதிலும் அவர்கள் அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர் . (த-9)




# உற்பத்தியாளர் உச்சி மாநாடு இந்தியாவில்

யாழ்ப்பாணம், ஜூன் 7
இந்தியாவில் நடைபெறவுள்ள சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களுக்கான உச்சி மாநாட்டில் ஆர்வமுள்ள முயற்சியாளர்களைப் பங்கேற்குமாறு இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜன் அறிவித்துள்ளார் என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.
இந்தியாவில் சகாரா ஸ்ரார் விடுதியில் ஜூலை மாதம் 3 ஆம்,4ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த மாநாடு புதிய தொழில் வாய்ப்புக்கள், அதி நவீன தொழில்நுட்பப் பயன்பாடு, கூட்டு முயற்சியாளர்களுக்கான வாய்ப்புக்கள், ஒப்பந்த முயற்சிக்கான வாய்ப்புக்கள், மற்றும் பல வாய்ப்புக்களை அடையாளம் காணும் சந்தர்ப்பமாக அமையும் என்றும், ஆர்வமுள்ளவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனறும் வணிகா கழகம் தெரிவித்துள்ளது. (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா தம்பிப்பிள்ளை




புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் அராலி வீதி, 04 ஆம் குறுக்கு புதிய குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தம்பிப்பிள்ளை கடந்த (05.06.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- அன்னபூரணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், பூபதியின் அன்புக் கணவரும், கேமலதா, பிறேமலதா, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந் தையும், அருள்நாயகம், சிவகுமார், தமிழ்ச்செல்வி ஆகி யோரின் அன்பு மாமனும், ஷிவானு, விஜியாந்தினி, கேதிஷா, திவாகரன், கேதீஷ்வரன், டயானி, பிருந்தா, தனுஷா, அனுச்சன், கோபிநாத், லக்சிகா, யதுஷன் ஆகி யோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நல்லையா மற் றும் பருவதம் செல்லத்துரை, செல்லம்மா, கந்தசாமி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் சகோதரனும், மங்கயர்க்கரசி, காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் யோகேஸ்வரி, சிவலிங்கம், தேவி, கோகுலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

### பொன்னையா ஜெயச்சந்திரன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி இராசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஜெயச்சந்திரன் நேற்று (06.06.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தலாதேவியின் அன்புக் கணவரும், சதீஸ்வரன் (கனடா), கஜேந்திரன்(பிரான்ஸ்), பிரதீப் (செலிங்கோ லைப், அச்சுவேலி), சயிலேந்திரன் (சுவிஸ்), நிமலேந்திரன் (பிரான்ஸ்), சரண்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசிலா (கனடா), கு. பிரபா (பிரான்ஸ்), விஜிதா (BOC- சாவகச்சேரி), லாவன்ஜா (சுவிஸ்), நிதிகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தங்கராசா, தங்கமலர் (கனடா), காலஞ்சென்ற ஜெயராசா, பேரின்பராஜா (சுவிஸ்), காலஞ் சென்ற புஸ்பமலர், புஸ்பராசா (பிரான்ஸ்), காந்தராஜா (கனடா), ரவீந்திரன் (கனடா), பிறேமச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் சகோ தரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (10.06.2015) புதன் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இராச வீதி, அச்சுவேலி.**

**பிரதீப் (மகன்) தொ.பே: 077 2247738**

தகவல்: குடும்பத்தினர்.

## மறைந்தும் மறவாத எம் அன்புத் தெய்வத்தின் முதலாம் வருட சிராத்த தின நினைவுத் துளிகள்

மண்ணிலே மலராய்
22 . 09 . 1954



விண்ணிலே தீபமாய்
07 . 06 . 2014

நயினா தீவைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்ட

### அமரர் கு.ந. இராஜநாயகம் (B.com, phd லண்டன்)

(முன்னாள் எழுது வினைஞர், (யாழ் கல்வித் திணைக்களம்)

ராஜாவே பல்கலையும் கற்றுணர்ந்து பாரினிலே உயர்ந்து -நின்றீர்
புலமை மிகு ஆற்றலினால் புதுமை பல படைத்தீர்
பாதியிலே சோதரரை தவிக்கவிட்டு பரமன் பாதம் பற்றியதேன்
எங்கே தான் சென்றீர்கள் ஏங்குகின்றோம் நாமிங்கே!
ஆண்டொன்று அகன்றோடி விட்டாலும் எம் ஆழ் மனதில்
அன்பு முகம் அகன்றிட வில்லையே
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவரை வேண்டி நிற்கும்

ஓராண்டு முடிவினிலே, ஓயாத துயருடன்
சகோதரர்கள், மைத்துனர்கள்.

அம்மன் றோட், யாழ்ப்பாணம்.

ROWAD
الرواد
ROWAD ASIA OVERSEAS (PVT) LTD.
சிங்கப்பூரிலும் கட்டாரிலும்
பணிப்பெண்கள் வேலை வாய்ப்பு

| வேலை | நாடு | தொகை | சம்பளம் |
|---|---|---|---|
| பணிப்பெண் (முதல் தடவை ) | சிங்கப்பூர் | 30 | 45,000/= - 50,000/= |
| பணிப்பெண் அனுபவமுள்ளவர்கள் | சிங்கப்பூர் | 30 | 55,000/= - 60,000/= |
| பணிப்பெண் | கட்டார் | 30 | 37,000/= |



ROWAD ASIA OVERSEAS (PVT) LTD.
No. 74, 1st Floor, Sri Sangaraja Mawatha,
Colombo - 10. Tel : 0115 515552, 077 4477280
E-mail : info@rowadasia.com L.L. No. 2365
Hotline : 077 44 77 280


ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து



ஓர் ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி
Spoken English
veta
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
யாழ்ப்பாணம் — Sat sun 8.00 a.m. Mon , Fri 1.30 p.m.
நெல்லியடி — Sat sun 10.30 a.m. Sat sun 4.00 p.m.
சாவகச்சேரி — Mon , Fri 9.30 a.m.
சுன்னாகம் — Tue, Thu 3.00 p.m.
DMI COMPUTER EDUCATION
UK Sponsor / Settlement Visa
IELTS
•Unique Test Tips
•Latest course Materials
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் No.113 Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி, Tel.:021-226 2470
சாவகச்சேரி (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் Tel.:021-224 1970

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் இராஜேஸ்வரன்



செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் பூதவராயர் வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் இராஜேஸ்வரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ கனகரட்ணம் மகா வித்தியாலயம்) அவர்கள் 06.06.2015 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான சண்முகம் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலம்சென்றவர்களான சீனிவாசகம் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரசிறீ (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்) அவர்களின் அன்புக் கணவரும் கீர்த்தனன் (Bio Medical Science-BCAS) அவர்களின் பாசமிகு தந்தையும், காலம் சென்ற தனபாலசிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோ தரனும், லைலாராணி (UK), சூரியகுமார்(UK), ஜெயசிறீ(UK), ராஜகு மாரன்(UK), சொக்கலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் குணசீலன், அனுசா, பவளராணி ஆகியோரின் சகலனும் மாதவன், பிரதீபா, வருணா, ஜனகன், சாமந்தி, சுயீந்திரன், சுபாங்கிதன், சரவணன், குபேரன், பவித்திரா ஆகியோரின் மாமனாரும் அர்ச்சனா, அபிரா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :-
கீர்த்தனன்(மகன்) 094 077 289 4986
சந்திரசிறீ (மனைவி) 094 021 222 1821
சூரியகுமாரன் (மைத்துனன்) 075 060 394 33
இராஜகுமாரன்(மைத்துனன்) 076 606 452 49

தகவல் :- குடும்பத்தினர்.

(60524)

### சதாசிவம் சபாரத்தினம்



இராமலிங்கம் வீதி, கல்வயல் வேதவன பிள்ளையார் கோயிலடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சபாரத்தினம் கடந்த (05.06.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சதாசிவம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், நடராசா, அமுதலிங்கம், நல்லம்மா, பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், லிங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபாகரன், திவாகரன், சிவநேசன், கேதாகரன் , தனுசன், சரண்யன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபிதாவின் மாமனும், ரஜீனா, கஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## விளையாட்டை மேம்படுத்த கழகங்களுக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜூன் 7

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கிரிக்கெட் அணிகளின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் 2015ஆம் ஆண்டுக்கான மக்கள் பிரதிநிதிகளுக்கான அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாவை ஒதுக்குவதாக அறிவித்துள்ளார்.

இந்த நிதி மூலம் பிரதேச கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதுடன் தேவையான உபகரணங்களையும் பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற மீசாலை சீமா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு விருந்தினராகக் கலந்து கொண்டபோதே மாகாண சபை உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், 2015 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் தென்மராட்சி பிரதேச கிரிக்கெட் அபிவிருத்திக்கு நிதி வழங்குவதாகவும் கூறினார். (த-9)

## ஒன்றுகூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (த)

## கேட்போர் கூடம் அமைக்க முடிவு

தென்மராட்சி,ஜூன்7

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நுணாவில் கிழக்கு பிரிவில் கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தில் நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையத்தில் கேட்போர் கூடம் அமைக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கட்டடத்திற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### வீடுகாணி விற்பனைக்கு
சாவகச்சேரி,சங்கத்தானையில் பாட சாலைகளுக்கு அண்மைய பகுதிகளில் வீட்டுடன் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 071 443 5219
(தரகர் வேண்டியதில்லை)

### வீடு விற்பனைக்கு
மானிப்பாய் மூத்த தம்பி லேனில் 04 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. சுற்று மதில் அமைக்கப்பட்டுள்ளது.
T.P: 077 458 4165

### கார் விற்பனைக்கு
வைத்தியரின் பாவனையில் உள்ள Nissan FB15- 2000 Model Hk xxxx-
தொடர்பு : 077 930 9991 (60484) (3.5)

### காணி விற்பனைக்கு
நாவற்குழி - கேரதீவு வீதியில் நாவற்குழி மத்திய மகா வித்தியாலத்துக்கு எதிரே உள்ள ஒழுங்கையில் 13½ பரப்பு வீடுகள்/ கட்டடங்கள் அமைக்கக்கூடிய காணி விற்பனைக்கு உண்டு. இந்தக் காணிக்குள் நல்ல குடிதண்ணீர் உள்ள கிணறும் உண்டு.
தொடர்பு: 021 205 8999
077 199 9661
(60481) (9.3)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
இல 168, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் வீட்டுடன் 3 பரப்பு 8.26 குளி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 604 8895

### விற்பனைக்குண்டு
10 அடி நீளம் 5 அடி உயரம் ,10 அடி நீளம் 2அடி உயரம் உடைய கண்ணாடி பிற்றிங் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 869 2261

### காணி விற்பனைக்கு
சங்கானை வைத்தியசாலைக்கு அருகில் 7¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: கணபதி முத்து வடலி
021 222 8231 (60490)(9.3)

### வீடு காணி விற்பனைக்கு
பிரதான வீதி,சங்கானையில் (சேச் றோட்டுக்கும் தபால் கந்தோருக்கும் இடையில்) பழைய வீட்டுடன் கூடிய 5பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
T.P: 075 039 3007
077 625 7905

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
45 நாள் நிரம்பிய பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 615 4235 (60468)(9.3)

### ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு
சிறந்த ரக ஒருநாள், ஒருமாத யாழ்ப்பாணக் குஞ்சுகள் திருநெல்வேலியில் விற்பனைக்குண்டு.
ஒருநாள் குஞ்சு ரூபா 70/=
(59916)(45.3) தொடர்பு: 077 349 7277

### கார் விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையில் உள்ள Morris Minor கார் 1098 cc 5சிறி மொடல் கார் உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 607 8809
077 920 3380

### TV கள் மலிவு விற்பனை
SONY Wega Flat TVகள் 14"-6000/=, 21"-10000/=, DVD-3250/=, குளிர்சாதனப் பெட்டிகள்- 19500/= BOX வகைகள்.
தொடர்பு: 077 044 0570 (60469)(45.3.7)
சோனிரேற்சென்றர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, கன்னாதிட்டி.

## மணமகள் தேவை

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த கிரகபாவம் - 10 செவ்வாய்க் குற்றமற்ற கனடா(PR)என்ஜினியர் மண மக னுக்கு நன்கு படித்த அழகான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: 077 869 5326 (60442) (9.3)

### மணமகள் தேவை
யாழ் இந்து ,மலேசியா வாசியான மணமாகாத பொறியியலாளராகக் கடமையாற்றும் 56 வயதுடைய மண மகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணம கள் தேவை.
தொடர்பு: pnmal1@yahoo.co.uk
T.P: 006 012 2822 117 (உஆம் திகதிக்குப் பின்புதொடர்பு கொள்ளவும்)
076 591 2520

### மணமகள் தேவை
யாழ் இந்து 1981 இல் பிறந்த ஆயிலிய நட்சத்திரம் 3ஆம் பாதம் கடக ராசியுடைய Uk பிரஜா வுரிமையுடைய Engineer மணமகனிற்கு மணமகள் தேவை.
பதிவு இல.3449
www. arunthathee.com
Srilanka 077 716 4524
London 0044 203 475 2590
அருந்ததி இணைய திருமண சேவை
Colombo 011 406 3282
Jaffna 021 492 7527 -


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


## ஏனையவை

### இணையத்தள வடிவமைப்பு
பாடசாலைகள், கிராமங்கள், கடை கள் மற்றும் ஏனைய தேவைகளுக் கான இணையத்தளங்களை சிறந்த முறையிலும் குறைந்த செலவிலும் வடிவமைத்துக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு: 077 339 4457 (60465) (9.3)

### விஷேட விலைக்குறைப்பு
4R(10 படத்துக்கு மேல்) - 10.00
அழைப்பிதழ்கள்
4R(100 படத்துக்கு மேல்) - 09.00
4R(300 படத்துக்கு மேல்) - 08.00
4R(100UP INKJET PRINT) - 06.00
12x30 NT ALBUM PRINT - 200.00
12X30 EMBOSSING PRINT - 2000.00
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப் 0212221358 — 62/20, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது
நடராஜா சிறீஸ்கந்தராஜா என்பவருடைய கனடா குடியுரிமைப்பத்திரம் அடங்கிய முக்கிய ஆவணங்களுடன் பேர்ஸ் ஒன்று 30.05.2015 சனிக்கிழமை மந்திகைக்கும் தும்பளைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
தொடர்பு: 077 025 4529, 077 643 6280
021 226 4755

### காணவில்லை
ஜமுனா பாறி ஆடு, கறுப்புவெள்ளை, நீண்ட செவி, கழுத்தில் நீளமான சிவப்புக் கயிறு கட்டிய தும் மற்றும் சணல் ஆடு, வெள்ளை, குட்டித்தாச்சி, கழுத்தில் பச்சைக் கயிறுகட்டியும் வளவில் மேய்ச்சலுக்கு கட்டிய ஆடுகள் கடந்த 01.06.2015 திங்கள் பகல் முதல் சில்வர் கொம்பனி லேன், பிறவுண்றோட்,கொக்குவில் கிழக்கு, கொக்கு விலில் காணாமல்போய்விட்டன. கண்டவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 076 70[illegible] 077 [illegible]5841 (60484) (45.3.7)

## தேவை





### கணினித் தட்டெழுத்தாளர் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சட்டத்தரணி அலுவலம் ஒன்றுக்கு தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை வாய்ந்த கணினித் தட்டெழுத்தாளர் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 664 9019
021 321 5081 (60455) (3.5)

### கணக்காளர் தேவை
எமது நிறுவனத்தில் கணக்கு எழுதுவதற்கும், பில்போடுவதற்கும் 30வயதிலிருந்து 55 வயது வரை, முன் அனுபவம் உள்ள, யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிக்கின்ற கணக்காளர் தேவை. கிராம சேவகரின் சிபார்சு கடிதத்துடனும், சுயவிவரக் கோவையுடனும் திங்கள் முதல் சனி வரை மு.ப 10 மணியிலிருந்து 4மணி வரைக்கும் நேரில் வரவும்.
விலாசம்: சிவாநறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்) (சி 16478)(6.3)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


### வீடு வாடகைக்குத் தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு கொக்குவில்,கோண்டாவில், தாவடி ஆகிய பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 077 402 9288 ,077 614 6361

### தேவை
* மோட்டார் வாகன விற்பனை நிலையத்துக்கு முன் அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை.

* முன்அனுபவம் உள்ள பெண் காசாளர் தேவை. கைதடிப்பகுதியைச்சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது
தொடர்பு: 077 611 5199
021 205 7181

### வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் இயங்கிவரும் பிரபலDistributors (விநியோக முகவர்) நிறுவனத்திற்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு முன் அனுபவமுள்ள பொருத்தமானவர்கள் தேவைப்படுகிறார்கள்.
* விற்பனைப் பிரதிநிதிகள்(குடி தண்ணீர்) (சாரதி அனுமதிப்பத்திரம் தேவை)
*உதவியாளர்கள்
Colour Home Distributors
இல: 51, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 788 5011

## வாடகைக்கு

### அறைகள் வாடகைக்கு
யாழ். மனோகரா தியேட்டர் சந்திக்கும் யாழ் இந்துக்கல்லூரிக்கும் இடையில் காங்கேசன் துறை வீதியில் அறைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 922 9032, 077 605 7490 (60472)(9.3)
பிற்பகல் 2மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும்.

### வீடுவாடகைக்குண்டு
இல.21, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு.
தொடர்பு: 021 222 5666, 077 893 3570 (60460)(9.3)

### வீடு வாடகைக்குண்டு
திருநெல்வேலி கிழக்கில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 314 4612

### வாடகைக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி, A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.8, புகையிரதவீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 011 250 4281
071 299 1256
(சி 17471)(9.3)

### வீடு வாடகைக்குண்டு
கண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் 5படுக்கை அறைகளுடன் சகலவசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 171 1386

## வேலைவாய்ப்பு

### CANADAவில் கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு
- O/L உடன் Apply பண்ணலாம்.
- 1 வருடத்திற்கு பின்பு Work Permit .
- குறைந்த செலவில் கூடிய சீக்கிரம் Documents செய்து தரப்படும்.
- Admission உடன் Documents கள் தற்போது நடைபெற்றுகொண்டிருக்கின்றது
- Canada வின் பல கல்லூரிகளின் Representative நாமே

SHARMILA - 0778895640
PRIYA - 0778898568
NISHA - 0776591373
Sky Visa Service
No. 250 1/A, Prince of Wales Avenue, Colombo 14.
Tel / Fax : 0112 338 661 , E-mail : svisa2012@yahoo.com

### வேலை வாய்ப்பு
தெங்குப்பொருள் உற்பத்தி நிறுவன மொன்றில் கடமையாற்ற 18 -40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் - ரூபா 30, 000
உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்பு:
077 356 3927,
077 417 6195
H.M.S. (பிறைவேற்) லிமிட்டெட் பியகம)
(சி.17474) (45.3.7)

## ஜோதிடம்

### சீரடி சாய்பாபா ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளி நாட்டு பிரச்சினை, குழந்தைப் பாக்கி யம், திருமண யோகம் என் பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி - மாலை 6.00 மணிவரை
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கல்லூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக)
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7)

### ஓம் சக்தி ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
சிவசங்கர் ஜோதிடர்
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாடகைத்தாய் தேவை**

வாடகைத்தாயொருவர் தேவை. IUF ஊசிமூலம் செய்வதற்கு கொழும்பிலுள்ள தம்பதியினர்க்கு உடனடியாகத்தேவை. 30 வயதிற்கு குறைவாகவும்,நோய் நொடிகள் இல்லாத தேகாரோக்கியமான வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பெண் ஒருவர் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 906 1406

**தேவை**

தேங்காய்ப் பொருள் தொழிற்சாலை ஒன்றுக்கு வயது 18-45 ஆண்கள் தேவை. தங்குமிடம் ,உணவு இலவசம். மாதத்திற்கு 30 000 /= க்கு மேல் உழைக்கலாம்.

தொடர்பு: H.M.S (pvt) Ltd, Biyagama.
077 892 5364, 071 067 0625

**STUDY in ABROAD**

வெளிநாட்டில் உயர்கல்வி வாய்ப்பு

- New Zealand - நியுசிலாந்து
- Cyprus - சைப்பிரஸ்
- Switzerland - சுவிற்சலாந்து
- Singapore - சிங்கப்பூர்
- Malaysia - மலேசியா



ஆகிய நாடுகளில் உயர்கல்வியை தொடர இன்றே அழையுங்கள்:

விசா கிடைத்த பின்னரே பாடநெறிக் கட்டணம் செலுத்த வேண்டும்

**0774 113577**

**Kingston Business Institute**

No:40,2nd Floor, Galle Road, Colombo - 06.



ஜனநாயக கட்சி தலைவர் மற்றும் பீல்ட் மார்சலலும் ஆகிய திரு.சரத்பொன்சேகாவும், சாஜி ரவல்ஸ் உரிமையாளரும் சிங்கள பட தயாரிப்பாளரும் ஆகிய திரு. முருகேசு புஸ்பராஜாவும் யாழ்ப்பாண வேட்பாளர் தெரிவு பற்றிய பேச்சு வார்த்தையின் போது பிடிக்கப்பட்ட படத்தைக்காண்கிறீர்கள்.

**துபாய் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

**TANZIFCO EMIRATES LLC**

| S/No | Category | Qty | சம்பளம் ( 1AED = LKR.36 ) |
|---|---|---|---|
| 01. | ஆண் சுத்திகரிப்பாளர்கள் | 65 | AED.700 + AED.150 உணவு |
| 02. | பெண் சுத்திகரிப்பாளர்கள் | 27 | AED.700 + AED.150 உணவு |

நியந்தனைகள் & சலுகைகள் :

1 AED = Rs. 36.00

- வேலைக்காலம் 2 வருடம்
- வேலை நேரம் - 8 மணிநேரம் .
- மேலதிகவேலைநேரம் ( Overtime ) - U.A.E நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.
- லீவு வசதி மற்றும் காப்புறுதி - U.A.E நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது. • தங்குமிடம்,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- ஆண்களுக்கு ஒரு வழி விமானச்சீட்டும்,பெண்களிற்கு இரு வழி விமானச்சீட்டுகள் வழங்கப்படும்

**HOT LINE : 0779 333939**
**077 687 2656 (யாழ்ப்பாணம்)**

**MIDDLE EAST LINK TOURS & TRAVELS**

No.629/1A,Wattuman Kada Junction,Kaluthara South

max adz

## நீதி மோசடி விசாரணைப் பிரிவு சட்டவிரோதம் என்று ரிட் மனு

கொழும்பு, ஜூன் 07

நிதி மோசடி விசாரணைப் பிரிவு சட்டவிரோதமானது என்று அறிவிக்குமாறும் அந்த பிரிவையும் அப்பிரிவை நிறுவுவதற்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித் தலையும் வலுவற்றதாக்குமாறும் கோரி ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எல்லே குணவன்ச தேரர் மற்றும் பேராசிரியர் கலோ பொன்சேகா ஆகிய இருவருமே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த ரிட் மனுவை, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்துள்ளனர்.

பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு முரணாக அந்தப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

ஆகையால், அந்தப் பிரிவில் உள்ள அதிகாரிகளினால் முன்னெடுக்கப் படும் விசாரணை சட்ட ரீதியானது அல்ல என்றும் மனுதாரரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த மனுவில், பிரதிவாதியாக பொலிஸ் மா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

பிரதமரின் அனுமதியுடன் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப-குழுவினால் முன்னெடுக்கப்படும் விசேட முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இந்த விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது, பிரதமரின் கீழுள்ள அமைச்சரவை உப-குழுவானது விசேட பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்படும் கட்டளையின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுக்கிறது.இது நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு முரணானது என்றும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

SOS CHILDREN'S VILLAGES

பதவிவெற்றிடங்கள்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமமானதுபெற்றோர்களை இழந்த,பெற்றோரால் கைவிடப்பட்ட, கைவிடப்படும் ஆபத்தானநிலையிலுள்ளசிறுவர்களைகுடும்ப சூழலில் பூரண பாதுகாப்புடன் கூடியகல்வி, மருத்துவசேவைகளைவழங்கும் சமூகசேவைகள் அமைச்சின் கீழ் பதிவுசெய்யப்பட்டஓர் சர்வதேச அரச ,மதசார்பற்ற 133 சர்வதேச நாடுகளிலும் இலங்கையில் 35 வருடங்களாகவும் சிறுவர்களுக்கான பூரணபராமரிப்பு சேவையை வழங்கி வருகின்றஒருஅமைப்பாகும்.

பதவிவெற்றிடங்கள்

1. குடும்பவலுவூட்டல் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் (35வயதிற்குஉட்பட்டோர்)
2. சிற்றூழியர் - **Labour** (ஆண் 35 வயதிற்குஉட்பட்டோர்)

தகமைகள்

பதவி 1

- அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகம் ஒன்றில் சமூகவியல் பட்டம் (**Degree in Sociology**) அல்லதுஅதற்குச்சமமான (**Diploma**)கற்கைநெறிச்சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல்.
- சமூகமொன்றில் வெளிக்களவேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ள ஒருவர், குறைந்தது 02 வருடஅனுபவத்துடன் சாரதிஅனுமதிப்பத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினிஅறிவுமற்றும் மின்னஞ்சல் வாயிலாகஅறிக்கையிடும் ஆற்றல்கொண்டவராக இருப்பதோடு,ஆங்கிலமற்றும் சிங்களமொழியறிவுகொண்டிருப்பது விரும்பத்தக்கது.

பதவி 2

- க.பொ.தசா/தரத்துடன் நற்பழக்கவழக்கம்,பணிவு,தேகஆரோக்கியமும் கொண்டவராக இருத்தல்.
- சாரதிஅனுமதிப்பத்திரத்தினைகொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

இந்நிறுவனத்தின் யாழ்ப்பாணகிளையில் சேவையாற்றவிரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை (தொலைபேசிஇலக்கத்துடன்)15.06.2015இற்குமுன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளகாரியாலயமுகவரிக்கோஅல்லதுமின்னஞ்சல் மூலமோகிடைக்கக் கூடியவாறுஅனுப்பிவைக்கவும். இப்பதவிநிரந்தரமானதும் ஊழியர் சேமலாபநிதி , நம்பிக் கைநிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கானஅழைப்புதொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம், இல:219,நாயன்மார்கட்டு, நல்லூர்,யாழ்ப்பாணம்.

தொ.பே: 021-2211101, 077-3733711

மின்னஞ்சல்: jaffna@sosevsrilanka.org

**இதோ உலகத்தரம் வாய்ந்த கைப்பேசி துறையில் தொழிற்புரியும் வாய்ப்பு**

கைப்பேசி காட்சியறை முகாமையாளர்

உலகத்தரம் வாய்ந்த வீட்டு மின் உற்பத்திப்பொருட்கள் மற்றும் கைப்பேசிகள் போன்றவற்றை இறக்குமதி செய்து விற்பனை செய்துவரும் பிரசித்திபெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்துக்கொள்ளும் வாய்ப்பு இதோ!. நீங்கள் விற்பனை துறையில் நிபுணத்துவம் பெற்ற, விற்பனை இலக்கை எய்தக் கூடியவராயின் எமது கைப்பேசி காட்சியறையொன்றுக்கு நீங்களும் முகாமையாளராகலாம். கீழுள்ள பிரதேசங்களில் கைப்பேசி முகாமையாளர்களுக்கு வெற்றிடம் காணப்படுகின்றது.

**வட பகுதி:** சுன்னாகம், சங்கானை, **யாழ்ப்பாணம், மாணிப்பாய், திருநெல்வேலி, பருத்தித்துறை, அச்சுவேலி, கிளிநொச்சி, மன்னார், முருங்கன்**

விண்ணப்பதாரிகள் கீழ்காணும் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- 35 வயதிற்கு குறைந்த.
- க.பொ.த. சாதாரன தரத்தில் சித்தி பெற்றிருத்தல்.
- காட்சியறையொன்றை நிர்வகிக்கும் திறன், விற்பனை முகாம் மற்றும் குழு விற்பனை, வாடகை மற்றும் குத்தகைக் கொள்வனவு போன்றவை தொடர்பான அறிவு, சிறந்த தொடர்பாடல் அறிவைக் கொண்டிருத்தல்.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ரூ. 150.000 ஐ மீளப் பெறக்கூடிய வைப்புச்செய்யக் கூடியவராயிருத்தல் வேண்டும்.

மேற்காணும் தகுதிகளை தன்னகத்தே கொண்ட விண்ணப்பதாரிகள் தங்களை பரிந்துரைக்கக்கூடிய இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு சுய விபரக் கோவையோடு தங்களுக்கு அண்மையிலுள்ள கீழ்க்காணும் முகவரிகளுக்கு நேரடியாக விஜயம் செய்யவும்.

- இடம்: அபான்ஸ் காட்சியறை, இல 167 A, யாழ்ப்பாண வீதி, நெல்லியடி (புதிய சந்தைக்கு எதிரில்)
- திகதி: 18/06/2015
- நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை

- இடம்: அபான்ஸ் காட்சியறை, இல 31, மாணிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (பிள்ளையார் தங்குமிடத்திற்கு எதிரில்)
- திகதி: 19/06/2015
- நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை

- இடம்: அபான்ஸ் காட்சியறை, A9 வீதி, கிளிநொச்சி (பழைய கச்சேரிக்கு எதிரில்)
- திகதி: 20/06/2015
- நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை

மேலதிக தகவல்களுக்கு:
077 3279992

**Abans**



## தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனு கோரவேயில்லை

### கூறுகிறார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 07

அபயராமய விஹாரை தேர்தல் காரியாலயம் அல்ல என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வென்னப்புவ மற்றும் குளியாப்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கட்சிச் செயற்பாட்டாளர்கள் அபயராமயவில் மஹிந்தவை நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அபயராமய ஒரு விஹாரையாகும். என்னைச் சந்திப்பதற்கு அடிக்கடி மக்கள் வருகின்றார்கள். மக்களைச் சந்திப்பதற்கு அபயராமய விஹாராதிபதி எனக்கு அனுமதி வழங்கியுள்ளார். நான் அடிக்கடி விஹாரைகளுடன் இணைந்து செயற்படுபவன்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட நான் எவரிடமும் வேட்பு மனு கோரவில்லை. அவ்வாறு யார் வேட்பு மனு கோரினார்கள்?

அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் அவர்களது பதவிகளில் இருந்து நீக்கப்படுவார்கள் என நான் நினைக்கவில்லை- என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றக் கூண்டில் ஏற்றுவதில் தேரர்கள் விதி விலக்கல்ல

## சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்கிறார் கோட்டை நீதிவான்

கொழும்பு, ஜூன் 07

நீதிமன்றத்திலுள்ள குற்றவாளிக் கூண்டில் பௌத்த தேரர்களை ஏற்ற வேண்டாம் என பிரதிவாதிகளின் சட்டத்தரணியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை கோட்டை நீதிவானினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக மற்றும் முதலீட்டு அமைச்சினுள் கடந்த 2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அத்துமீறி நுழைந்த பொதுபலசேனா அமைப்பின் முக்கியஸ்தர்களான ஆறு தேரர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் கோட்டை நீதவான் முன்னிலையில் இடம்பெற்றது. இதன்போது குற்றவாளிக் கூண்டில் பௌத்த தேரர்களை ஏற்ற வேண்டாம் எனப் பிரதிவாதிகளின் சட்டத்தரணியினால் நீதிவானிடம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

இதனை நிராகரித்த நீதிவான், 'சட்டத்தின் முன் அனைவரும் சமன். யாருக்கும் இதில் பாரபட்சமில்லை என்றார்.

இதேவேளை, குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளமையினால் அடுத்த வழக்கு விசாரணையின்போது தவறாமல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணைகளின்போது, வர்த்தக மற்றும் முதலீட்டு அமைச்சு சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகளான சரத் சிறிவர்தன, மைத்ரி குணரட்ன மற்றும் சிராஸ் நூர்தீன் ஆகியோர் முன்னிலையாகினர். இந்த நிலையில் வழக்கு விசாரணை ஜூலை 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-10)

## வடமராட்சிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு ஆரம்பம்

வடமராட்சி ஜூன் 07

வடமராட்சிப் பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச செயலர் பிரிவு உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் ஒன்றிணைந்து ஈடுபட்டுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை நேற்று சனிக்கிழமை, நாளை திங்கட்கிழமை என மூன்று தினங்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-173)

## புதிய தேர்தல் முறைமை மூலம் சிறுபான்மைக்கு பாதிப்பில்லை

கொழும்பு, ஜூன் 07

புதிய தேர்தல் முறைமை மூலம் சிறுபான்மைக் கட்சிகளோ அல்லது சிறிய கட்சிகளோ பாதிப்படையப் போவதில்லை – என்று ஊடகத்துறை பிரதி அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

தகவல் அரச திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:–

புதிய தேர்தல் முறைமை தொடர்பில் நாட்டு மக்கள் மத்தியில் ஒரு முறையான தெளிவு நிலை இல்லை. புதிய தேர்தல் முறைமையால் சிறுகட்சிகள் பாதிக்கப்படும் என்ற எண்ணம் தவறானது.

1978ஆம் ஆண்டு முதல் விகிதாசார தேர்தல் முறைமை காணப்படுகின்றது. அதற்கு முன்னர் தொகுதிவாரி தேர்தல் முறைமை காணப்பட்டது. இந்த நாட்டில் விகிதாசார தேர்தல் முறைமைமற்றும் தொகுதிவாரிதேர்தல்முறைமை என மாறி மாறி இருந்துள்ளன.

இரண்டு தேர்தல் முறைமைகளிலும் பெரிதாக மாற்றம் நிகழ்ந்தது இல்லை. இவை இரண்டையும் கலந்து உருவாக்கப்பட்டுள்ள தேர்தல் முறைமை மூலம் சிறுபான்மைச் சமூகம் பாதிப்படையப்போவதில்லை. அத்துடன், புதிய தேர்தல் முறைமையில் மாவட்ட ரீதியான ஒதுக்கீடுகள் காணப்படுவதால் சிறு கட்சிகள் பாதிக்கப்படா"

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 14.12.1934

ஆண்டவன் அடியில் 08.05.2015

### அமரர் கணபதிப்பிள்ளை துரைஐயா

(ஓய்வுபெற்ற அஞ்சல் உத்தியோகத்தர்- யாழ். அஞ்சலகம்)

31 நாள் ஆனதுவே துயர் ஆறவில்லை
நீங்கள் இன்றி நாம் இன்று நிர்க்கதியாய் தவிக்கின்றோம்
வாராயோ இன்னொரு காலம் எம்மோடு வாழ்வதற்கு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.05, முதலாம் ஒழுங்கை, விளையாட்டு அரங்க வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(60423)(45.3.6)

---

### மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி கனகசபாபதி



தோற்றம் 07.05.1931 மறைவு 05.06.2015

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, லைட்டி யைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி (ராணியம்மா) கனகசபாபதி (05,06. 2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - பூரணம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை கனக சபாபதியின் அன்பு மனைவியும், அருந்தவராணி (ராணி -கனடா), விஜயகுமார் (விஜயன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், பாலசுப்பிரமணியம், காலஞ் சென்ற சச்சிதானந்தம் மற்றும் தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான விசாலாட்சிதேவி, குமாரசாமி, பராஜசிங்கம் மற்றும் கனகரட்ணம், மாணிக் கராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற ஞானலக்சுமியின் சகலியும், சாந்தகுமாரி, காலஞ்சென்றவர்களான நடராசா, கமலா, செல்வரட்ணம் மற்றும் பத்மநாதன், சகுந்தலா, பாலதேவி, சிவஞானேஸ்வரி, றட்ணமாலா ஆகியோரின் மைத்துனியும், சிறிஸ்கந்தராசா, மகாலக்சுமி, சோமாஸ்கந்தராசா ஆகியோரின் பெரியதாயாரும், காலஞ்சென்ற கனகதாசன் மற்றும் சாந்தினி, வாசினி, தேவராசா, செல்வரதி ஆகியோரின் அன்பு மாமியும், சிவனுஜன், லக்ஷாயி (லண் டன்), ஆர்த்திகா, தர்மிகா, கோபிநாத், கோபிகா - அருண் (கனடா), பகீரதா - கமலதீபன், கௌசிகா, ரகுபரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த. தேவராசா (ஒய்வு பெற்ற ஆசிரியர்)
314, பலாலி வீதி, ஆலடிச் சந்தி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 4590395, 077 4598445

தகவல்: குடும்பத்தினர்.

---

### சாரதாம்பாள் பாலசுப்ரமணிய ஐயர்

அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோவிலடி, வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி சாரதாம்பாள் பாலசுப்ரமணிய ஐயர் 05.06.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்ரமணிய ஐயரின் அன்பு மனைவியும் ஸ்ரீதரன்(மாத்தளை), சாந்தா(ஓய்வு பெற்ற ஆசிரியை யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலக்ஷ்மி, யசோதரன்(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், ப.நோ. கூ.சங்கம், சங்கானை) ஆகியோரின் அன்பு மாமியாரும், கோதாலக்ஷ்மி, சாருஸ்மிதா, சுதர்சனன், சுந்தர்ராம், ஸ்ரீவைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர். 021 300 8389

---

### கண்ணீர் அஞ்சலி

### கனகரட்ணம் சொர்ணலிங்கம்



பிரதீபன் அவர்களின் அன்பு மாமனார். கனகரட்ணம் சொர்ணலிங்கம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுந்தர்சன் பணியாளர்கள்

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கதிரிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா

தோற்றம் 24.11.1956

மறைவு 19.05.2014

திதி : 07.06.2015

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றென்றும் எம் மனதில் நீங்காது
நிலைத்து நிற்கும் அன்பு அப்பாவே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை(அப்வரா)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### ஆறுமுகம் ஜெயபாலன்



மண்ணில் 12.04.1954

விண்ணில் 19.05.2014

திதி: வைகாசி தேய்பிறை பஞ்சமி (07.06.2015)

உங்கள் அன்பையும் பண்பையும் மறக்க முடியுமா அப்பா?
இன் முகத்துடன் வந்தாரை வரவேற்று உபசரிக்கும்
உங்கள் மாண்பை எப்படி அப்பா மறக்கமுடியும்?
துயரத்துடன் ஓராண்டு கழிந்து விட்டது
என்றும் உங்கள் அன்புத் திருமுகம்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குகன் மில்லடி,

அன்பு மனைவி, மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mahindra Rise.

# Mahindra CENTURO
# திருடப்படக்கூடியது என்பது பொய்!!!

**இலங்கையில் முதல் தடவையாக அன்ரி – தெஃப்ட் மற்றும் ரிமோட் ஃப்லிப் கீ உடன்**

பார்த்தவுடன் மனம் விரும்பும் புதிய தோற்றத்துடன், மஹிந்திரா சென்சூரோ மோட்டார் சைக்கிள் அன்ரி-தெ.ஃப்ட் தொழில்நுட்பத்துடன் அமைந்துள்ளதால் எந்தவொரு நபராலும் திருடப்பட முடியாது. ரிமோட் ஃபிலிப் கீ மற்றும் ஃபைண்ட் மீ லாம்ப் இருப்பதால் பல சைக்கிள்கள் மத்தியில் உங்கள் சென்சூரோவை இலகுவாக கண்டுபிடித்துக் கொள்ள முடியும். எரிபொருள் சிக்கனமான உயர் தரமான என்ஜின் என்பதால் செலவும் குறைவு. டிஜிட்டல் மீற்றர், சேர்விஸ் ரிமைண்டர் போன்ற மேலும் பல சிறப்பு உள்ளம்சங்கள் பலதும் காணப்படுகின்றன. இன்றே வாங்குங்கள். பெருமையுடன் செலுத்துங்கள்.




**Mahindra CENTURO**
IT'S GREAT TO BE ME




- அன்ரி தெ.ஃப்ட் தொழில்நுட்பம்
- ரிமோட் ஃபிலிப் கீ மாதிரி சாவி மற்றும் ஃபைண்ட் மீ லாம்ப்
- டிஜிட்டல் ஸ்பீட் மீற்றர் மற்றும் சேர்விஸ் ரிமைண்டர்
- எரிபொருள் சிக்கனமான மேம்படுத்தப்பட்ட MCi 5 என்ஜின்
- 5 வருடங்கள் ஒப்பற்ற உத்தரவாதம்

## Mahindra Range » உயர் நுட்பத்துடன், எடுப்பான தோற்றத்துடன்



| GUSTO | CENTURO | UZO 125 | ARRO | RODEO RZ |
|---|---|---|---|---|
| RS. 205,500/= | RS. 206,950/= | RS. 214,950/= | RS. 149,950/= | RS. 214,950/= |

**HOTLINE: 0772 880 555**

பிரதான காட்சியறை – கொழும்பு 06 077 002 3968

| | | | |
|---|---|---|---|
| மத்திய மற்றும் வட மத்திய | 077 002 3974 | தெற்கு/ஊவா/சப்ரகமுவ | 077 002 3971 |
| வடக்கு மற்றும் வட கிழக்கு | 077 332 5402 | கம்பஹா | 077 002 3973 |
| களுத்துறை | 077 087 5159 | கொழும்பு | 077 002 3968 |
| | | யாழ்ப்பாணம் | 077 101 8925 |

Authorised Service Centre
நாடு முழுவதும் உதிரிபாகங்கள் மற்றும் சேவை

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

ஐடியல் டூ வீலர்ஸ் தனியார் நிறுவனம்
611, காலி வீதி, கொழும்பு 06
தொலைபேசி - 0112 221222
பக்ஸ் - 0112 221223

IDEAL 2 Wheelers

கொழும்பு 6 - 077-2814193, அக்குரெஸ்ஸ - 076-5522707, அளுத்கம - 077-9930676, அம்பலாங்கொட - 091-5734774, அம்பலந்தோட்டை - 071-3555535, ஆனமடுவ - 071-3107671, அங்குனுகொலபெலெஸ்ஸ - 071-2692692, அநுராதபுரம் - 077-6576921, அவிசாவளை - 036-7200927, பத்தேகம - 077-6182043, பதுளை - 077-3986031, பலாங்கொட - 071-2891299, படபொல - 077-3996438, பேருவளை - 071-6511613, பிபில - 077-8860686, தம்புளை - 077-7683313, திகண - 076-6755740, திக்வெல்ல - 077-3193919, எம்பிலிப்பிட்டிய - 077-7674898, கலென்பிந்துனுவெவ - 072-4593445, கலிகெல - 077-3616213, காலி - 077-0023971, ஹங்வெல்ல - 718279722, ஹொரண - 076-8551313, இங்கிரிய - 072-7100800, ஹாஎல - 077-3751752, யாழ்ப்பாணம் - 077-1018925, கதுருவெல - 078-8747349, கடுவளை - 071-8279722, கஹடகஸ்திகிலிய - 072-8705573, கம்புருபிட்டிய - 076-6020620, கண்டி - 077-5083673, கட்டான - 077-6732830, கட்டுகஸ்தோட்டை ... கிரிபத்கொட - 072-6305091, குருநாகல் - 077-77705329, மதுரங்குளி - 072-8353441, மஹோ - 077-3802982, மாத்தறை - 077-0819674, மத்துகம - 077-7326200, மதவாச்சி - 077-2911082, மெதிரிகிரிய - ..., மிரிகம - ..., மீரிகம - 077-5436128, மொனராகலை - 078-9021999, மொரவக - 076-7551820, நீர்கொழும்பு - 031-2234602, நிட்டம்புவ - 071-3669924, தொச்சியாகம - 072-9910844, பன்னல - 037-4930100, பொலபிதிகம - 072-3155436, புத்தளம் - 077-3172236, இமதுவ - ..., ... தங்காலை - 077-0819329, தம்புத்தேகம - 072-9491836, திஸ்ஸமஹாராம - 077-9299790, வரகாபொல - 077-7444086, வெலிகம - 077-7204357, வெலிகந்த - 712-909191, வெலிமேரிய - 071-6366109, வெல்லவாய - 76-7205222, யக்கல - 077-31..., யக்கலமுல்ல - 071-9566338, இரத்மலானை - 070-2822380, பாதுக்க - 077-7890204, பக்கலமுல்ல - 077-5063939, காலி - 0778211470, கொச்சிக்கடை - 077-3939073.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் குடிக்கும் உண்ணிக் காய்ச்சல்

## (Scrub Typhus)

இன்று காய்ச்சல் என்றவுடன் எல்லோரும் பயப்படுவது டெங்குக் காய்ச்சலுக்குத்தான். ஆனால் டெங்கைப்போல ஆபத்தான மற்றுமொரு காய்ச் சல் இருப்பதைப் பலரும் அறிந் திருக்கமாட்டார்கள். அதுதான் உண்ணிக் காய்ச்சல். இது யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. விரைவில் இனங்காணப் பட்டு தகுந்த சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் இது மரணத்தைக் கூட ஏற்படுத்தலாம்.

உண்ணிக்காய்ச்சலை ஆங்கிலத்தில் ஸ்கிரப் டைபஸ் (Scrub Typhus) என அழைப் பார்கள். இது Oriontia tsutsugamushi எனும் சிறிய Richeotsia ஆல் ஏற்படுகிறது. (பக்ரீரியா போன்ற நுண்ணுயிர்) இந்தக் கிருமிகள் Trombiculrd mits எனப்படும் தெள்ளின், குடம்பிப் பருவத்தினால் பரப்பப்படுகின்றன. இந்தக் குடம்பிகள் சிகர் (chigger) என அழைக்கப்படுகின்றன. இந்தக் குடம்பிகள் மிகச் சிறியவை (0.2 mm) வெற்றுக்கண் களால் பார்க்கும்போது, ஒரு சிகப்புப் புள்ளியாகத் தென்படும்.





Trombiculid mits பற்றைகளிலும், புதர்களிலும் வாழ்கின்றது. குடம்பிப் பருவம் மட்டும் விலங்குகளின் உடலில் ஏறி (குறிப் பாக எலிகள், முயல்கள்) தோலிலுள்ள திர வத்தை உறிஞ்சுகின்றன. இவை பற்றைகளின் இலைகளின் விளிம்பிலிருந்து விலங்கு களின் உடலில் ஏறுகின்றன. மனிதன் பற்றைக் காடுகளில் நடமாடும்போது, மனிதனின் உடலில் ஏறி ஊர்ந்து சென்று மறைவான இடங்களில் கடிக்கின்றன. கடித்து 618 நாள்களில் காய்ச்சல் ஏற்படுகின்றது.


இனி உண்ணிக்காய்ச்சலின் அறிகுறி களைப் பார்ப்போம்.

பாதிக்கப்பட்டவருக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்படும். தலையிடி, உடல் நோ, கண்கள் சிவப்படைதல் என்பவை யும் ஏற்படும். இந்த அறிகுறிகள் சாதா ரண வைரஸ் காய்ச்சல், டெங்குக் காய்ச்சல், லெப்டோஸ் பைரோஸிஸ் எனப்படும். எலிக்காய்ச்சல் போன்ற நோய் களிலும் ஏற்படும் என்பதால் வேறுபடுத்தி அறிவது கடினம். ஆனால், உண்ணிக்காய்ச் சலைக் கண்டு பிடிக்க ஒரு வழியுண்டு. அது தான் Eschar எனப்படும் கறுப்பு நிற அயறு ஆகும். இது குடம்பி கடித்த இடத்தில் ஏற்படும். இது சிகரட் சுட்ட புண்ணைப்போன்ற அமைப் புடையது. இது கமக்கட்டு, அரை போன்ற மறைவான ஈரலிப்பான இடங்களில் காணப் படும். இது நோவையோ, சொறிவையோ ஏற்படுத்துவதில்லை. எனவே நோயாளி இது பற்றிப் பெரிதுபடுத்துவதோ அவதானிப் பதோ இல்லை. தற்செயலாக நீங்கள் இதை அவதானித்தால் வைத்தியரிடம் தெரியப் படுத்துங்கள். ஆனால் உண்ணிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானவர் களுக்கே இந்த அயறு ஏற்படுகின்றது.

உண்ணிக்காய்ச்சலை கண்டுபிடிக்காமல் உரிய சிகிச்சையளிக்காமல் விட்டால், பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம். மூளை அழற்சி, நிமோனியா, இருதயப் பாதிப்பு மற்றும் குருதியமுக்கம் குறைவடை தல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்பட்டு இறுதியில் இறப்பு ஏற்படலாம்.

உண்ணிக்காய்ச்சலுக்கு நல்ல சிகிச்சை முறை கள் உள்ளதால் தகுதியான வைத்தியரிடமோ அல்லது வைத்தியசாலையிலோ காலம் தாழ்த்தாது சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இனி உண்ணிக்காய்ச்சல் ஏற்படாமல் எவ் வாறு பாதுகாத்துக்கொள்ளலாம் என்று பார்ப்போம்.



குடம்பிகள் பற்றைகளில் காணப்படுவதால் வீட்டைச் சுற்றியுள்ள பற்றைகளையும், புதர் களையும் அழித்துவிடுங்கள். பீடை நாசினி களை விசிறுவதன் மூலமும் குடம்பிகளின் பரவலைத் தடுக்கலாம். பற்றைகளிலும், புதர் களிலும் நடமாடுவதை இயன்றளவில் தவி ருங்கள். அவ்வாறு நடமாட வேண்டிய தேவை யிருந்தால் சப்பாத்து, காலுறை, முழுநீளக் காற்சட்டை, சேட் அணிந்து செல்லுங்கள். உங்கள் செல்லப்பிராணிகள், வளர்ப்பு மிருகங்களுக்கு தெள்ளு, உண்ணி என்பவை தொற்றாது பாதுகாத்துக்கொள்ளுங்கள். புற்தரையில் அமர்வதையும், குந்தியிருந்து மலசலம் கழிப்பதையும் தவிருங்கள். சித்திர னெல்லாப்புல்லெண்ணெய் போன்ற பூச்சி களை விரட்டும் எண்ணெய்களை உடலில் பூசுவதன் மூலமும் ஓரளவு எம்மைப் பாது காத்துக்கொள்ளலாம்.

உண்ணிக்காய்ச்சல் அபாயகரமான மற்றும் பொதுவான நோயாகக் காணப்பட்ட போதிலும், இதைப்பற்றி விழிப்புணர்வு மக்களிடையே போதாமல் உள்ளது. எனவே உரிய தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், காலம் தாழ்த்தாமல் சிகிச்சை பெறுவதன் மூலமும் இதனால் ஏற்படும் பாதிப்புக்களிலி ருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

**Dr.வி.கேதீஸ்வரன்,**
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# சளிக்காய்ச்சலும் வயிற்றோட்டமும் குழந்தைகளின் மிகப் பொதுவான தொற்று நோய்கள்

குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய மிகப் பொதுவான தொற்றுநோய்களாக சளிக்காய்ச்சலும் வயிற்றோட்டமும் அமைவதை பெரும்பாலான பெற்றோர் அவதானித்திருப்பார் கள். அவர்களுக்கு தோன்றும் கேள்வி இதுதான். ஏன் எனது குழந்தைக்கு அடிக்கடி சளிக்காய்ச்சல், வயிற்றோட்டம் ஏற்படுகின்றன? உலக சுகாதார நிறுவனத்தினதும் (WHO) யுனிசெவ் (UNICEF)இனதும் தகவலின் படி குழந்தைகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களில் 27 சதவீதமாக சுவாசத் தொற்று நோய்களும் (சளிக்காய்ச்சல்)23 சதவீதமாக வயிற்றோட்ட நோய்களும் காணப்படுகின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் தகவல்படி ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 1.8 மில்லியன் குழந்தைகள் நியூமோனியா எனப்படும் சளிக் காய்ச்சலினால் ஒவ்வொரு வருடமும் உலகில் இறக்கின்றார்கள். ஏறத்தாழ 800,000 குழந்தைகள் வயிற்றோட்டத்தால் ஒவ்வொரு வருடமும் இறப்பதுடன் 1.7பில்லியன் பேர் வயிற்றோட்டத்துக்காக சிகிச்சை பெறு கிறார்கள். இந்தத் தகவல்களின்படி இவ்விரு நோய்களும் எவ்வளவு தாக்கத்தை குழந்தைகளின் வாழ்வில் உண்டாக்கு கின்றன என்பதை அறியலாம்.

**சளிக்காய்ச்சலும் வயிற்றோட்டமும் ஏன் குழந்தை களுக்கு அதிகமாக ஏற்படுகின்றன?**

இவ்விரு நோய்களும் மிக இலகுவாக தொற்றக் கூடிய நோய் கள் ஆகும். மிகப் வைரசு கிருமித் தொற்றுக்களே இவ்விரு நோய்க்கும் பிரதான காரணிகளாக அமைகின்றன. எமது சூழலில் நூற்றுக் கணக்கான சுவாசத் தொகுதியையும் சமிபாட் டுத் தொகுதியையும் பாதிக்கக் கூடிய வைரசுக்கள் உள்ளன. அவை பொதுவாக காற்றினூடாக ஒருவர் இருமும் போதும் தும்மும் போதும் அல்லது தொடுகை மூலம் ஒருவரின் கையி லிருந்தோ, பொருள்களிலிருந்தோ உணவு, நீர், பானங்கள் அருந்தும் போதோ இலகுவில் தொற்றிவிடுகின்றன. ஒரு குழந்தைக்கு தொற்று ஏற்படுமாயின் ஒரு சில நாள்களி லேயே அந்தக்கிருமி சுவாசத் தொகுதியிலோ அல்லது சமி பாட்டுத் தொகுதியிலோ பெருகி நோய்க்கான அறிகுறிகளைக் காண்பிக்கும். பெரியவர்களிலும் பார்க்க குழந்தைகளுக்கு இந்தநோய்களின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதற்கான காரணம் குழந்தைகளின் உடல் உறுப்புக்கள் முதிர்ச்சியடையாமல் இருப்பதுடன் குழந்தைகள் நோய் எதிர்ப்புசக்தி குறை வானவர்களாக இருப்பதும் ஆகும். மேலும் பிறந்த முதல் ஓரிரு வருடங்களுக்கு பிள்ளைகள் வீட்டிலே இருப்பார்கள். பின்னர் முன்பள்ளிக்கோ அல்லது பகல் பராமரிப்பு நிலையத் துக்கோ செல்கையில் வேறுவிதமான சூழலுக்கு முகம் கொடுப்பதுடன் நோயுற்ற மற்றைய குழந்தைகளுடன் சேர வேண்டி ஏற்படுகிறது. இதனால்தான் முன்பள்ளி சிறார் களுக்கு அடிக்கடி சளிக்காய்ச்சலும் வயிற்றோட்டமும் ஏற்படு கின்றன. சில சமயங்களில் ஒரு பிள்ளைக்கு ஒரு வருடத்தில் 8 முதல் 10 தடவை சளிக்காய்ச்சலும் 3,4 தடவைகள் வயிற்றுப் போக்கும் ஏற்படுகின்றன. எனினும் அதனால் பெரியளவில் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. ஏனெனில்அவை வைரசு கிருமித்தொற்றுக்கள் என்பதாலாகும்.

**சளிக்காய்ச்சலும், வயிற்றோட்டமும் ஏற்படுகையில் எவ் வகையானபராமரிப்புக்களை வழங்கவேண்டும்?**

பொதுவாக குழந்தைகளுக்கு ஏற்படும் மேற்கூறிய நோய்கள் சாதாரணமாக மாற்றக்கூடியவை. எனினும் காய்ச்சல் காணப்படும் வேளைகளில் சரியான அளவில் பரசிற்றமோல் எனப்படும் காய்ச்சலைக் குறைக்கும் மருந்தைக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளை சௌகரியமாக இருப்ப துடன் உணவு உண்ணக் கூடியதாக இருக்கும். அதேபோல் காய்ச்சல் அல்லது வயிற்றோட்டம் உள்ள குழந்தைக்கு அதிகளவு நீராகாரங்களைக் கொடுத்தல் வேண்டும். இதன்மூலம் நீர் இழப்பை தடுக்க முடியும். அதே நேரம் குழந்தைக்கு சாதார ணமாக கொடுக்கும் உணவுகளைத் தொடர்ந்து வழங்க வேண் டியதுடன் குழந்தை உணவை அல்லது நீராகாரத்தை எடுக் கின்றதா என அவதானிக்க வேண்டும். முக்கியமாக குழந்தை சாதாரணமாக சிறுநீர் கழிக்கின்றதா என அவதானிக்க வேண்டும். காய்ச்சல், இருமல் அல்லது வயிற்றோட்டம் மூன்று நாள்களின் பின்னரும் குறையா விடின் அல்லது குழந்தை உணவருந்தாது அல்லது பால் குடிக்காது சோர் வடைந்தால் வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும். ஒருபோதும் வைத்திய ஆலோசனையின்றி அன்ரிபயோற் றிக் எனப்படும் மருந்துகளை மருந்துக்கடைகளில் பெற்றுக் கொடுக்கக் கூடாது. சாதாரணமாக இந்த நோய்கள் வைரசுத்தொற்றுக்கள் என்பதால் அன்ரிபயோற்றிக்குகள் தேவை யில்லை. தேவையற்ற வகையில் அவற்றைப் பாவிக்கும் போது அவற்றுக்கு எதிர்ப்புத் தன்மையை கிருமிகள் உண்டாக்கி அவற்றின் செயற்றிறன் இல்லாதுவிடுவதுடன் நோய் அற்ற பக்க விளைவுகளும் உண்டாகலாம். முக்கியமாக பெற்றோர்கள் குழந்தைக்கு காய்ச்சல், வயிற்றோட்டம், சளி ஏற்பட்டு வந்துவிட்டது எனப் பயந்து மனம் சோர்வடையாது தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற்று திடமாக குழந்தை களைப் பராமரிக்க வேண்டும். அதேபோல மற்றவர்களுக்கும் இந்தக் கிருமித் தொற்றுக்கள் ஏற்படாதிருக்க சரியான நோய்த்தடுப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும்.

**சளிக்காய்ச்சல், வயிற்றோட்டம் போன்றவை ஏற்படாது எவ்வாறு எம்மை பாதுகாத்துக்கொள்வது.**

அனைவரும் தகுந்த நியம பாதுகாப்பு முறைகளைப் பின்பற்று வதன் மூலம் இந்த நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும். நியமப் பாதுகாப்பு முறைகளில் மிகமிக முக்கியமானது. சரியான முறைகளில் கைகளைக் கழுவுவதாகும். சவர்க் காரமோ அல்லது வேறு சுத்தப்படுத்தும் திரவத் தையோ (Detergents)பாவித்து நன்றாகக் கைகளைக் கழுவவேண்டும். பின்வரும் சந்தர்ப்பங்களில் கைகளை முக்கியமாக கழுவ வேண்டும்.

1.உணவு அருந்த முன், உணவு சமைக்க அல்லது பரிமாற முன்
2.மலசல கூடத்துக்குச் சென்ற பின்னர்.
3. குழந்தைகளை தொடுவதற்கு அல்லது பராமரிக்க முன்னர்
4. இருமிய பின்னரும் தும்மிய பின்னரும்.
5.அழுக்கான அல்லது தொற்று ஏற்பட்ட இடங்களைத் தொட்ட பின்னர்.
6.குழந்தைகளுக்கு நப்பி (Nappy)மாற்றிய பின்னர்.
7. நோயுற்றவரை பராமரித்த பின்னர்.

கைகழுவுதல் போன்று இன்னொரு முக்கியமான பாதுகாப்பு என்னவெனில் கைகுட்டையை திசுதாளை (Tissue )அல்லது வாயையும் மூக்கையும் மறைக்கக் கூடிய முகமூடியை (Mask)சளிக்காய்ச்சல் உள்ளவர்கள் பாவிப்பதாகும். ஒரு வீட்டில் ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் அவர் மேற்கூறிய வற்றை எந்த் நேரமும் பாவித்தல் மற்றவர்களுக்கு சளிக் காய்ச்சல் (குறிப்பாக குழந்தைகளுக்கு)ஏற்படுவதைத் தடுக்க உதவும்.

மேற்கூறியவற்றை விட நோயுற்றவர் தகுந்த சிகிச்சையை பெறுவதன் மூலமும் குழந்தைகளுக்கு நோய்களுக்கு எதி ரான தடுப்பூசிகளை வழங்குவதன் மூலமும் குழந்தை களுக்கு தகுந்த போஷாக்கான உணவுகளை வழங்குவதன் மூலமும் குறிப்பாக தனித் தாய்பாலூட்டலை குறைந்தது 6 மாதங் களாவது வழங்குவதன் மூலமும் சளிக்காய்ச்சல் வயிற் றோட்டம் போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க முடியும்.

**Dr.ந.ஸ்ரீசரவணபவானந்தன்,**
குழந்தை வைத்திய நிபுணர்,
யாம்.போகனா வைக்கியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ALPHA α

YAMAHA

லொறி ஒன்னுட லோட்
இரண்டே டயர்ல



ரூ. 225,900/-



முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

உங்கள் சிறு தொழில் முயற்சிகளை சிறப்பாக செய்யத் தேவையான சக்தியையும் இடவசதியையும் கொண்டது
உங்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்களை இலகுவாக கொண்டு செல்வதற்கு உதவுவதுடன் உங்கள் சிறு தொழில் முயற்சிகளுக்கும் ஏற்றது. புதிய Yamaha Alpha ஸ்கூட்டர் அதிக இடவசதியைக் கொண்டதுடன் சிறந்த சக்தியையும் கொண்டது. எனவே நீங்களும் இன்றே Yamaha Alpha ஸ்கூட்டர் ஒன்றை வாங்கிடுங்கள், உங்கள் வாழ்வின் கனவுகளை சுகமாக சுமந்திடுங்கள்.

BLUE CORE FUN & ECO

5 YEAR YAMAHA WARRANTY

*நிபந்தனைகள் உள்ளடங்கும்

தெல்கொட 033-2256187 | ஹொறண 034-4939472 / 077-3031210 | மாத்தளை 066-2222845 / 071-8378983 / 077-3745837 | பட்டபொல 077-3854734 / 091-5627000 | கடுறுவெல 027-2226221 / 077-3216277 | அனுராதபுரம் 025-2221823 | பேருவளை 077-3648603 | யாழ்ப்பாணம் 021-2224040 / 077-6623824 | நெல்லியடி 021-2224040 / 077-6623824 | தம்புத்தேகம 071-6807510 / 025-2276189 | கம்பஹா 075-9450804 / 071-4036639 | களனிய 075-9450801 / 0114342857 / 071-4036639 | வவுனியா 024-2220051 / 077-2737622 | குருநாகலை 037-2223878 / 037-2223220 / 077-7361920 | மாத்தறை 041-2224216 / 077-3054150 041-7210625 | கல்கிசை 077-7722518 | புத்தளம் 077-2906075 | நீர்கொழும்பு 077-6989787 | வென்னப்புவ 077-6989787 | அக்கரைப்பற்று 067-4718603 / 071-2228887 | பொரலஸ்கமுவ 071-8567264 / 0112150350 | மொனராகலை 077-7718263 | தம்புள்ளை 066-2283133 / 077-7712793 | திகனை, ராஜவெல 081-2374155 / 071-5969653 | அவிசாவலை 071-7158156 | இரத்தினபுரி 045-2222060 / 045-2231414 / 071-7158156 | ஹோமாகம 011-5673001 / 077-6113460 / 071-4478765 | பதுளை 055-3592344 / 077-1623304 | மட்டக்களப்பு 065-2224821 / 077-3268484 | காலி 768203089 | மன்னார் 077-6944137 / 071-9001588 / 023-3238555 | சீதுவை 011-2291932 / 077-6100390 | எம்பிலிபிட்டிய 047-5679609 | அம்பலாங்கொடை 077-3854734 / 091-5627000 | பாணந்துறை 038-3392832 / 077-7717494 / 077-6197112 / 071-8275041 | அம்பலாந்தொட்டை 077-9123156 | ஹக்மன 077-7183375 | திருகோணமலை 077-8683236 | மாலபே 072-4390210 / 077-8730580 | கடவத்தை 077-7000005 / 011-7650650 / 072-3000003 | பண்டாரவளை 077-3490594 | கிரிந்திவளை 071-6874007 | கேகாலை 035-5670185 / 077-6575477 | களுத்தறை 077-7951630 | நிதீகம 077-3600976 / 071-8298172 | ஆணைமடு 077-3529591 | நாகொட 077-951630 | தங்கல்லை 077-1808056 / 071-1129038 | நாநுஓயா 072-3493677 / 052-23539315 | ஊறுபொக்கை 077-2829000 / 072-6153894 | வாழைச்சேனை 077-3268484 | எல்பிட்டிய 077-3229066 / 091-2290066 | கல்முனை 077-3222023 / 067-2226777 | நெலுவ 077-3911427 | மஹியங்கனை 072-5446008 / 055-2258220 | வத்தளை 071-2774775 / 076-5588884 | நொச்சியாகம 0773-675639 | பிங்கிரிய 071-2283033 | யக்கலமுல்லை 077-9550432 | கண்டி 071-5506058 | வெல்லவாய 071-3718211 | சிலாபம் 077-3279277 | பிலிலை 071-6038004 | நாரம்மல 071-3410069 / 037-2249208 | கலேவெல 077-4418537 | கலென்பிந்துனுவெவ 072-7272473 / 077-2966919 | பெலியத்த 0772-966919 | கிண்ணியா 076-7526839 / 075-4248655 | பிலியந்தலை 077-5436800 | அக்குரஸ்ச 077-4415460 | குளியாபிட்டிய 071-8659834 | கந்தளாய் 071-3417752 | மாவனல்லை 077-8253153 | முல்லைத்தீவு 021-2224040 / 077-6623824 | கடுவெல 077-8401417 | அம்பாறை 077-3599034 / 077-2640000 | ஹொறணை 076-8401144 | கிரியுள்ள 773-744101 / 716-419215 | கந்தானை 777-203009 | மினுவங்கொடை 773-301106 / 773-507882 | பிடிகல 718-148168 | நிட்டம்புவை 777-883666 | கனேமுல்லை 777-000005 | வெலிகமை 713-421559 | ஹங்வெல்லை 777-939661 | வெலிகல்லை 779-005544 | மீரிகம 778-581243 | கெக்கிராவை 773-650656 | கலகெடிஹேன 777-883666 | மாவத்தகமை 758-606027 / 724-806564 | பதலங்கமை 779-418574 / 047-5672592 | திஸ்ஸமஹாராமை 777-666867 | ஹெந்தளை 765-588864

AMW bringing the world to you

அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்,
107, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
www.yamahaworld.lk

#seetherealme

Clean & Clear




இதுபோல உங்களைப் பற்றிய உண்மையை எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.
சிறியதொரு வீடியோவை #seetherealme வாயிலாக அப்லோட் செய்யுங்கள்.

Clean & Clear Sri Lanka | CleanClearLK | CleanClearLK | Clean & Clear Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் ஞாயிற்றுக்கிழமை ஜூன் 07 2015



# பாசையூர் புனித அந்தோனியார்

## இந்து மதத்தினரையும் அரவணைக்கும் அற்புதர்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்

ஜூன் மாதம் பிறக்க முன்பே பாசையூர்ப் பங்குமண் தன் பாதுகாவலர் கோடி அற்புதர் புனித அந்தோனியாரின் பெருவிழாவைக் கொண்டாட விழாக்கோலம் பூண்டு விடும். ஆண்டு முழுவதும் இந்தப் பெருவிழாவிற்காகவே காத்திருந்தது போன்று பாசையூர் மக்கள் அனைவரும் புத்துணர்சி பெற்று - தொழில் துறைகளை மறந்து - அன்பு நெஞ்சங்களோடு இணைந்து - ஆடை 'அணிகலங்கள் வாங்கி - அறுசுவை உணவு உண்டு புனித அந்தோனியார் விழாவை அமர்க்களப்படுத்தி விடுவார்கள்.

ஜூன் மாதம் 13 ஆம் திகதி புனித அந்தோனியார் இவ்வுலக வாழ்வை முடித்து இறைவனோடு இணைந்து கொண்ட தினத்தில் புனித அந்தோனியாரின் பெருவிழாவை உலக கத்தோலிக்க திருச்சபை வெகு சிறப்பாக கொண்டாடிவருகிறது.




தேவ அன்னைக்கு அடுத்ததாக புனித அந்தோனியார் பெயரிலேயே அதிக ஆலயங்களும் - யாத்திரைத் தலங்களும் - நிறுவனாங்களும் உலகளாவிய ரீதியில் கட்டி எழுப்பப் பட்டுள்ளதாக அறியவருகின்றது.

இலங்கையில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேசிய யாத்திரைத்தலம் - யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் - மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் என்பன பெயர் போன புனித அந்தோனியாரின் தலங்கள் ஆகும்.



பாசையூர் - மானிப்பாய் புனித அந்தோனியாரின் யாத்திரைத் தலங்களை விட யாழ்.மறை மாவட்டத்தில் பருத்தித்துறை - மணல்காடு - தாளையடி - வெற்றிலைக்கேணி - கரவெட்டி - மாதகல் - சுன்னாகம் - அச்சுவேலி - நீர்வேலி - பண்டத்தரிப்பு - பெரியவிளான் - நாவற்குழி - அளம்பில் - பரந்தன் - மல்லாவி - குமிழமுனை - நாவல்நகர் - ஜெயந்திநகர் - ஸ்கந்தபுரம் - கிளாலி - கிராஞ்சி - 155 ஆம் கட்டை கிளிநொச்சி - யூனியன் குளம் - 13 ஆம் கட்டை பாரதிபுரம் - பல்லவராயன்கட்டு - வவுனிக்குளம் வடகாடு - பாலையடி - கீரிக்குடா - ஜெயபுரம் - கள்ளப்பாடு - செல்வபுரம் - கேப்பாபிலவு - பள்ளிக்குடா - கௌதாரிமுனை - அல்லைப்பிட்டி - ஊர்காவற்றுறை - நெடுந் தீவு - மண்டைக்கல்லாறு - கச்சதீவு - பாலைதீவு - கற்கடதீவு - குருசடித்தீவு என புனித அந்தோனியார் ஆலயங்கள் நிறைந்துள்ளன.



ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க மதம் பல சவால்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் 1775 ஆம் ஆண்டு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் ஒரு சிற்றாலயமாக அமைக்கப்பட்டதாக சரித்திர ஏடுகள் சான்று பகருகின்றன.

1844 - 1845 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒறற்ரோறியன் தியான சபை குருவான கபிரியேல் யோகின் அடிகளார் காலத்தில் பாசையூர் புனித அந்தோனியார் ஆல யம் கல்லால் கட்டப்பட்டதாக அறிய வருகின்றது.

1850 இல் கசினிலி அடிகளார் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் பற்றிய குறிப்பேட்டில் இது விசாலமானதாகவும் அழகானதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டு குருக்கள் தங்கியிருந்து பணியாற்றுவதற்கு வசதியான பணிமனை அமைக்கப்பட்டுள்ளது எனத்தெரிவித்துள்ளார்.

1906 இல் ஆலயம் சேதமடைந்தமையால் ஏற்கனவே இருந்த ஆலய அத்திபாரம் முற்றாக மாற்றியமைக்கப்பட்டு புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

165 ஆண்டு கால பழைமை மிக்க பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் 1850 ஆம் ஆண்டில் இருந்து தனிப் பங்காக இயங்கிவருவதாக அறியவருகிறது.

அழகிய கருநீலக் கடல் - கடல் கரையோடு ஒட்டிய நெருங்கிய வீடுகள் - என்பவற்றின் மத்தியில் கம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்கும் புனித அந்தோனியார் ஆலயம் - பாசை யூரின் ஆழ்ந்த கத்தோலிக்க விசுவாசத்துக்கும் - கலை வளத்திற்கும் - கடல் வளத்துக்கும் சான்று பகர்ந்து நிற்கிறது.

பாசையூர் பங்கில் புனித அந்தோனியார் ஆலயக் கொடியேற்றத்துக்கு முன்பதாக பாசையூர் கடற்துறைமுக வாயிலில் கடலில் அமைந்துள்ள கடல் அந்தோனியார் என்று அழைக்கப்படும் புனித அந்தோனியாரின் திருச் சொரூபத்திற்கு முன் சென்று வழிபாடு நடத்துவது இங்கு நடைபெறுகின்ற ஒரு தனிச்சிறப்புமான நிகழ்வாகும்.

மறைந்து போன யோண் பிரான்சிஸ் அடிகளாரும் அவருக்கு உதவியாக பணியாற்றிய மறைந்து போன கிளி கருணாரட்ணம் அடிகளாரும் பாசையூரில் பணியாற்றிய காலத்தில் இந்தக் கடல் அந்தோனியாரிடம் சென்று வழிபாடு நடத்தும் வழக்கம் தொடங்கப்பட்டு இவ்வாண்டு 25 ஆண்டுகள் நிறைவுறுவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வெறும் 36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த புனித அந்தோனியார் தம் அர்ப்பணிப்பு மிகக் பணியாலும் ஆற்றிய அதிக புதுமைகளாலும் பதுவைப் பதியர் - நாவழியாப் புனிதர் - கோடி அற்புதர் - காணாத பொருள்களை காட்டிக்கொடுப்பவர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

ஐரோப்பாவில் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் மாநகரில் 1195 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆம் திகதி வேத அன்னையினுடைய விண்ணேற்பு தினத்தன்று பிறந்த இவரின் பெயர் பர்ணாந்து என்பதாகும்.

1219 ஆம் ஆண்டு தனது 24 ஆவது வயதில் புனித அகுஸ்தீன் சபையில் சேர்ந்து குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் 1221 ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகிப் புனித பிரான்சீஸ்கன் சபையிற் சேர்ந்த போது பர்ணாந்து என்ற பெயரை மாற்றி மடத்தின் பெயரால் அந்தோனி என்ற பெயரை எடுத்துக் கொண்டார்.

1231 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி தனது 36 ஆவது வயதிலேயே இறந்து போன போது பதுவையில் அடக்கம் செய்யப்பட்டார். இவரின் கல்லறை 336 ஆண்டுகளின் பின்னர் தோண்டப்பட்ட போது அவரது நாக்கு அழியாமல் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு இன்றும் பதுவை நகர்க் கோவிலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே தான் இவர் நாவழியாப் புனிதர் என அழைக் கப்படுகிறார்.

புனித அந்தோனியார் இறந்து ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே கத்தோலிக்க திருச்சபையால் புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டார் என்பது இங்கு குறிப்படப்பட வேண்டிய தகவலாகும்.

36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்து இறந்த ஒருவர் - இன்றும் மக்கள் மனதில் அசைக்கப்பட முடியாத ஒரு புனிதராக - ஒரு கோடி அற்புதராக - கத்தோலிக்க மக்கள் மனதுகளில் மட்டுமல்ல - இந்து சமய மக்கள் மத்தியிலும் வாழ்ந்து வருவது ஒரு பெரும் புதுமையாகும்.

1946 ஆம் ஆண்டு புனித அந்தோனியார் கத்தோலிக்க திருச்சபையின் மறை வல்லுனராகத் திருத்தந்தை 12ஆம் பத்தினாதர் பாப்பரசரால் பிரகடனப்படுத்தப்பட்டார் என்பது இவரின் மறைப்பணிக்கு மேலும் மெருகூட்டும் ஒரு தகவலாகும்.

இவர் லிஸ்பன் நகரில் பிறந்தாலும் பதுவைப் புனிதர் - புனித அந் தோனியார் என்றே அழைக்கப் படுகிறாார் என்பது இங்கு நோக் கப்பட வேண்டிய விடயமாகும். புனித அந்தோானியார் லிஸ்பன் நகரில் பிறந்திருந்தாலும் பதுவை நகரே அவரை உரிமை கொண்டாடுகிறது.

பதுவைப் பதியர் புனித அந்தோனியார் என்று இவர் அழைக்கப்படுவதற்கு பதுவைப் பதியில் புனித அந்தோனியார் தங்கியிருந்த 3 ஆண்டுகளில் அங்கு நிறைவேற்றிய அதிக அளவிலான புதுமைகளும் - இறுதியில் புனித அந்தோனியார் மரித்து அங்கு அடக்கம் செய்யப் பட்டதுமே காரணமாகும்.

புனித அந்தோனியார். கடவுள் அவருக்கு அளித்த விசேட கொடையால் - தமது வாழ்நாட்காலத்திலும் இறந்த பின்னரும் செய்த புதுமைகளாலும் - அருஞ்செயல்களாலும் - கோடி அற்புதர் புனித அந்தோனியார் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

புனித அந்தோனியார் குழந்தை இயேசுவைக் காட்சியில் கண்டு கையில் ஏந்தியதாக கூறப்படுகிறது. இதனால்த்தான் புனித அந்தோனியார் ஒரு கையில் குழந்தை இயேசுவையும் மறு கையில் வேதாகம நூலையும் வைத்திருப்பதாக படத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது.

கோடி அற்புதர் புனித அந்தோனியார் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க அரசு நீதியோடும் நேர்மையோடும் பணியாற்றி எல்லோர் வாழ்விலும் மகிழ்வும் சுதந்திரமும் சுபீட்சமும் நிறைய தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏரிகளால் சூழ்ந்த இயற்கைப் பூங்கா



குரோஷியாவில் அமைந்துள்ள Plitvice Lakes National Park என்ற தென் கிழக்கு ஐரோப்பாவின் பழைமை வாய்ந்த தேசிய பூங்கா ஏரிகளால் நிறைந்துள்ளது. 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தப் பூங்கா, சுமார் 297 சதுர கிலோ மீற்றர்களில் அமைந்துள்ளது. இந்த தேசிய பூங்கா அதில் உள்ள ஏரிகளுக்காக புகழ்பெற்றது. அங்கு சுமார் 16 ஏரிகள் தற்போது உள்ளன. இந்த ஏரிகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளன.


இந்தப் பூங்காவில் எண்ணற்ற அழகிய ஏரிகள், குகைகள் மற்றும் நீரூற்றுகளும் அமைந்துள்ளன.

இயற்கை சார்ந்த இடமாக விளங்கும் இந்த பூங்காவில், ஐரோப்பிய பிரவுன் கரடி, ஓநாய் மற்றும் சுமார் 126 வகை பறவைகளின் வீடாக பூங்கா அமைந்துள்ளது. இந்த அழகிய பூங்காவினை 1979ஆம் ஆண்டு உலக பாரம்பரியதளமாக அறிவித்துள்ளனர். இங்குள்ள 16 ஏரிகளும் பலவித மினரல்களை தன்னில் கொண்டுள்ளது அதன் சிறப்பம்சமாகும். ஆனால் இந்த ஏரிகள் எவற்றிலும் சுற்றுலாவாசிகள் குளிப்பதற்கு அனுமதி அளிப்பது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏரிகள் அமைந்துள்ள இடத்தில், பல இயற்கையான அணைகளும் உருவாகியுள்ளன. ஏரியில் ஓடும் நீர் பார்ப்பதற்கு கண்ணாடி போல் சுத்தமாக உள்ளதோடு எண்ணற்ற உயிரினங்களுக்கு முக்கியமான அம்சமாக விளங்குகிறது. மேலும், அந்த ஏரிகள் அனைத்தும் upper lakes மற்றும் lower lakes என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் சுமார் ஒரு மில்லியன் சுற்றுலாவாசிகளுக்கும் அதிகமானவர்கள் சென்று வரும் இந்த அதிசய பூங்காவில் பலவித கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

மேலும், இரண்டாம் உலகப்போர் முடிந்ததை அடுத்து இந்த இடம் சுற்றுலாவாசிகளின் மனம் கவர்ந்த இடமாக மாறத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.


பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணம், கண்டி கிளைகளில்.

ஜூன் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டுடன் வரவும்
  பிள்ளைகளுக்கு(16-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000

70 ரக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை 0830-1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை 0830-1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை 0900-1730
ஞாயிறு 0900-1600

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk



பாராட்டி வாழ்த்துகிறோம்



ரமேஷ் கங்காதரன்

பிரபல சட்டத்தரணி திருவாளர் கங்காதரன் மற்றும் சட்டத்தரணி திருமதி சிவராணி கங்காதரன் தம்பதியரின் புதல்வன் ரமேஷ் கங்காதரன் ஆஸ்திரேலியா, சிட்னி சர்வகலாசாலையில் பொறியியல் துறையில் (CIVIL ENGINEERING) முதல் வகுப்புத் தேர்ச்சியடைந்து பட்டம் சூட்டப்பெற்றார்.

அவர் ஆரம்பக் கல்வியை கொழும்பு புனித ஜோசப் கல்லூரியிலும், மேற் படிப்பை கொழும்பு றோயல் கல்லூரியிலும் படித்தார்.

மேலும் ரமேஷ் கங்காதரன் அவர்கள் ஆசியாக்கண்டத்தில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற முதல் மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதையிட்டு நாங்கள் ரமேஷ் அவர்களை பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நலன்விரும்பிகள் - வட கொழும்பு.










ashok STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT

அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம் அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள். தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.112,500 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832, ... உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

375


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிய மையத்துக்கு புத்தகங்களை நன்கொடையாக வழங்கிய பியர்சன்

பியர்சன் அண்மையில் 30000 புத்தகங்களை ஆசிய மையத்துக்கு நன்கொடையாக வழங்கியிருந்தது. ஆசிய மையம் என்பது இலாப நோக்கமற்ற சர்வதேச அபிவிருத்தி தாபனம் என்பதுடன், அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய பகுதிகளில் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது. இலங்கையில் இந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முதற் தடவையாக பியர்சன் இன்டர்நஷனலுடன் ஆசியமையம்கைகோர்த்துள்ளது. கவனமாக தெரிவு செய்யப்பட்ட ஆங்கில மொழி புத்தகங்கள் பொருத்தமான தேவையை கொண்ட பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், நூலகங்கள், தாபனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். உத்தியோகபூர்வ கையளிப்பு வைபவத்தில் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரேமிளா போல்ராஜ் பங்கேற்றிருந்ததுடன், இலங்கைக்கான பிரதிநிதி தினேஷ் டி சில்வா விக்ரமநாயக்க மற்றும் ஆசியாவுக்கான புத்தகங்கள் மற்றும் மேற்பார்வை அமைப்பின் பணிப்பாளர் அன்டன் நல்லதம்பி ஆகியோர் ஆசிய மையத்தை பிரதிநித்துவப்படுத்தி பங்கேற்றிருந்தனர்.

இது தொடர்பில் போல்ராஜ் கருத்து தெரிவிக்கையில், 'ஆசிய மையத்தின் செயற்பாடுகள் என்பது வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. பியர்சனைச் சேர்ந்த நாம், சகல பயிலுநர்களுக்கும் அவசியமான சாதனங்களை வழங்குவதை எதிர்பார்ப்பாக கொண்டுள்ளோம். எமது பரிபூரண வளங்கள் அல்லது பயிற்சிப்பட்டறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிகள் மூலமாக இவை மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய ஆசிய மையத்துக்கான புத்தக நன்கொடை தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நன்கொடையின் மூலமாக, நாம் வளங்கள் குறைவாக காணப்படும் பயிலுநர்களுக்கு அவசியமான வளங்களைப் பெற்றுக் கொடுக்க தீர்மானித்துள்ளோம்' என்றார்.

ஆசிய மையத்தின் மூலமாக 1954 ஆம் ஆண்டு முதல், 4.5 மில்லியன் புத்தகங்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளது. வருடாந்தம், இதன் மூலமாக 100,000 புதிய புத்தகங்கள் அமெரிக்க வெளியீட்டாளர்களின் மூலமாக நன்கொடை செய்யப்படுகின்றன. நாட்டிலுள்ள 1000க்கும் அதிகமான நிறுவனங்களுக்கு இந்த புத்தகங்கள் சென்றடைந்துள்ளன. இவற்றில் இரண்டாம் நிலை பள்ளிகள், அரசசார்ப்பற்ற நிறுவனங்கள், அரசாங்க முகவர் அமைப்புகள், பொது நூலகங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் முன்பள்ளிகள் போன்றன அடங்கியுள்ளன.

'இந்த புதிய பங்காண்மையில் பெருமளவு எதிர்பார்ப்பு மற்றும் ஆர்வத்துடன் ஆசிய மையம் கைகோர்த்துள்ளது. உயர் தரம் வாய்ந்த ஆங்கில மொழி புத்தகங்கள் மற்றும் ஏனைய வாசிக்கும் புத்தகங்களை இலங்கையிலுள்ள நூலகங்களுக்கு விநியோகிப்பது தொடர்பில் நாம் எப்போதும் கவனம் செலுத்துகிறோம், பியர்சன் இடமிருந்து புதிதாக கிடைத்துள்ள இந்த புத்தகங்கள் உயர்ந்த தரத்தில் அமைந்துள்ளன. மிக முக்கியமாக பெருமளவான புத்தகங்கள் உயர் தர மற்றும் சாதாரண தர மாணவர்களுக்கு பொருத்தமான வகையில் அமைந்துள்ளன. நிபுணத்துவம் வாய்ந்த முறையில் மொழி நடை பிரயோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். நாம் பியர்சனுடன் தொடர்ச்சியாக கைகோர்த்து செயலாற்ற திட்டமிட்டுள்ளோம்' என ஆசிய மையத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி தினேஷ் டி சில்வா கருத்து தெரிவித்தார். (த)

## சமூக அமைப்புக்களை மேம்படுத்துவதற்கு மைக்ரோசொவ்ட் விசேட வேலைத் திட்டம்



நாடு முழுவதிலும் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களை மேம்படுத்தும் நோக்கில் நவீன தொழில்நுட்ப செயற்திட்டங்கள் தொடர்பாக மைக்ரோசொவ்ட் நிறுவனம், உலக வங்கி மற்றும் சர்வோதய நிறுவனம் ஆகியன விசேட பட்டறை ஒன்றை முன்னெடுத்துள்ளன. வெள்ளவத்தை சேப்பியர் ஹோட்டலில் இரு நாள்கள் இடம்பெற்ற இந்த வேலைத் திட்டத்தில் 23 சமூக அமைப்புக்கள் கலந்து கொண்டன. தற்போதைய உலகில் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை தெளிவாகப் புரிந்துகொள்வதன் ஊடாக அதனை சரியான முறையில் தத்தமது பயன்பாட்டிற்கு அமைப்பின் ஊடாக பொதுமக்களுக்கு சேவையை மேம்படுத்துவது தொடர்பான ஒரு விளக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதே இந்த விசேட பட்டறையின் நோக்கமாகும்.

இதன்போது கருத்து தெரிவித்த உலக வங்கியின் இலங்கை மாலைத்தீவு நடவடிக்கைகளுக்கான ஆலோசகர் ரொணால்ட் பிரைஸ், இலங்கை, தொழில்நுட்பத்துறையில் புதிய வழிமுறைகளை மேற்கொண்டு வருவதோடு, தகவல் மற்றும் தொலைத் தொடர்பு துறையில் முன்னோக்கிச் செல்வதற்கு அசூர பலத்துடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. பல்வேறு அபிவிருத்தி ஆய்வாளர்களின் அறிக்கைகளுக்கு அமைய பல்வேறு துறைகளில் இலங்கை முன்னோக்கிச் செல்கின்ற போதிலும் ஆண் பெண் பாலின இடைவெளியை அவதானிக்கும் போது அதில் இலங்கை 20 ஆவது இடத்தில் உள்ளது. இது நாட்டின் அபிவிருத்திக்கும் ஆண் பெண் இருபாலாருக்கும் இடையிலான சம உரிமைக்கும் ஓரளவு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார். தற்போதைய கால கட்டத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் சிவில் சமூக அபிவிருத்தியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற விசேட வேலைத்திட்டங்கள் மூலம் பூரண சமூக எழுச்சி மற்றும் அபிவிருத்திகளை ஏற்படுத்த முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். தகவல் மற்றும் தொலைத்தொடர்கள் மனிதனது சிந்தனை, அதன் செயற்பாட்டு எல்லை மற்றும் வேலைத் திட்டம் மட்டுமன்றி சமூகத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் குறித்து கதைப்பதற்கும் அதனை செயற்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றமை பாரிய ஒரு சாதகமாகும். எமது எதிர்பார்ப்புக்களுக்கு அமைய சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் தொடர்பாக அறிவுறுத்தி, விசேடமாக பெண்களின் அறிவு மட்டத்தினை மேம்படுத்துவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என அவர் தெரிவித்தார். இந்த இருநாள் பட்டறைக்கு சமூகமளித்தவர்களுக்காக தற்போதைய செயற்திட்டங்களுக்கான தொழில்நுட்பம் குறித்த தீர்வுகள் மற்றும் அதனை எவ்வாறு பயன்படுத்துதல் என்பதுடன் தொழில்நுட்ப வலையமைப்புக்கள் தொடர்பான அறிவும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. (த)

## லபார்ஜ் நடத்திய ஒன்றுகூடல்




லபார்ஜ் மகாவலி சிமெந்து நிறுவனத்தின் விற்பனை பிரதிநிதிகளது வாகன சாரதிகள் மற்றும் உதவியாளர்களது சேவையை கௌரவிக்கும் வகையில் வெள்ளவத்தை சஃபாயார் ஹோட்டலில் ஒன்றுகூடல் ஒன்று இடம்பெற்றது.

லபார்ஜ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைப் பிரிவின் பிரதானி சுசந்த பெரேராவின் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒன்றுகூடலுக்கு நிறுவனத்தின் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதிலும் உள்ள லபார்ஜ் நிறுவனத்தின் விநியோகஸ்தர்கள் உட்பட அவர்களது வாகன சாரதிகள் மற்றும் உதவியாளர்களுக்கு இடையில் ஒரு நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துவதோடு அவர்களது சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாகவே இந்த ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தக மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த வருடத்திற்குள் அதிகளவிலான சிமெந்து பைகளை ஏற்றி இறக்கிய வாகன சாரதிகள் மற்றும் அதன் உதவியாளர்கள் 200 பேருக்கும் அதிகமானோருக்கு இதன்போது பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இதன் போது அதிகமான சிமெந்து பைகளை ஏற்றி இறக்கிய சாரதிகளில் முதலாவது இடத்தை எஸ்.ஜே. பெரேராவும் அவரது உதவியாளர் ஐ.டி. அசித்த சுரஞ்ஜித் ஆகியோர் பெற்றனர். இரண்டாவது இடத்தை ஏ.பி.டி. அத்துகோரளவும் அவரது உதவியாளர் டபிள்யூ. கித்சிறி ஆகியோர் பெற்றனர்.

## மாணவருக்கு புலமைப்பரிசிலை வழங்கியிருந்த களனி கேபிள்ஸ்



இலங்கையின் முதல் தர பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள் வகைகளுக்கான வர்த்தக நாமமான களனி கேபிள்ஸ், இரத்தினபுரி சீவலி மத்திய பாடசாலையைச் சேர்ந்த தஷ்மில சமரசேகர அவர்களுக்கு கல்விப் புலமைப்பரிசிலை வழங்கியிருந்தது. 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளை பெற்ற தஷ்மிலாவுக்கு, களனி கேபிள்ஸ் பிஎல்சி பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால வழங்கியிருந்தார்.

களனி கேபிள்ஸ் மூலமாக களனி விசுர இலத்திரனியலாளர்கள் கழகத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு வருடாந்தம் இந்த புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொள்ளும் வரை நிதி உதவிகளை இந்த புலமைப் பரிசிலை பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் பெறுவார்கள். இந்த ஆண்டின் புலமைப்பரிசில் வெற்றியாளரான தஷ்மில, களனி விசுர இரத்தினபுரி வலயத்தைச் சேர்ந்த உபுல் ரஜீவ சமரசேகரவின் பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பங்களிப்புக்காக இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளரான உபுல் ரஜீவ சமரசேகர களனி கேபிள்ஸ் ஸ்தாபனத்துக்கு தனது நன்றியை தெரிவித்திருந்ததுடன், கருத்து தெரிவிக்கையில், நான் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளராக 20 வருடங்களாக பணியாற்றுகிறேன். களனி விசுர இலத்திரனியலாளர்கள் கழகத்தில் நான் 10 வருடங்களுக்கு மேலாக அங்கத்துவத்தை கொண்டுள்ளேன். இந்த கழகம் எமக்கு உலகத்தரம் வாய்ந்த அறிவை பெற்றுக் கொடுப்பதுடன், ஆயுள் காப்புறுதிக்கான வாய்ப்பையும் மேலும் பல அனுகூலங்களையும் வழங்குகிறது. குறிப்பாக, நிதிசார் உதவிகள் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்விசார் தேவைகளுக்காக வழங்கப்படுகின்றன என்றார்.

உபுல் ரஜீவ சமரசேகரவின் புதல்வர் தஷ்மில, கருத்து வெளியிடுகையில், களனி கேபிள்ஸ் நாமம் என்பது, எனது வாழ்நாளில் மறக்க முடியாது. களனி கேபிள்ஸ் மூலமாக வழங்கப்படும் இந்த நிதி உதவி என்பது, எனக்கு மட்டுமல்லாமல், எனது குடும்பத்துக்கு சிறந்த நிவாரணமாக அமைந்துள்ளது என்றார். களனி கேபிள்ஸ் பிஎல்சி பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால களனி விசுர தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், களனி கேபிள்ஸ் நிறுவனத்தின் பிரதான சமூக பொறுப்புணர்வு செயற்திட்டங்களில் ஒன்றாக களனி விசுர அமைந்துள்ளது. இதன் மூலமாக நாட்டின் பெருமளவான இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

களனி விசுர வை பொறுத்தமட்டில் நாட்டின் வேறெந்தவொரு இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர் கழகங்களை விட அதிகளவு அங்கத்துவம் காணப்படுகின்றது. களனி விசுர மூலமாக வழங்கப்படும் உதவிகள், அறிவு மற்றும் அனுகூலங்கள் என்பன ஒப்பிடப்பட முடியாதவையாகும். இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்களின் அறிவை மேம்படுத்துவதுடன், அவர்களின் குடும்பத்தாருக்கு பெறுமதி சேர்ப்பது என்பது எமது பிரதான நோக்கமாகும். இந்த கல்விசார் புலமைப்பரிசில் என்பது அந்த திட்டத்தின் ஒரு அங்கமாகும். எதிர்வரும் ஆண்டுகளில் இந்த சமூக பொறுப்புணர்வு திட்டத்துக்கு மேலும் பெறுமதியை சேர்க்க களனி கேபிள்ஸ் திட்டமிட்டுள்ளது என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி வலய இசை ஆசிரிய ஆலோசகர் திருமதி நா.ஆனந்தராணியின் பாட்டி சொன்ன கதைகள் மற்றும் செல்லப் பிராணிகள் ஆகிய இரு சிறுவர் சித்திரக் கதைகள் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது நூலின் பிரதியை வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரனிடம் இருந்து வல்வெட்டித்துறை இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் எஸ்.ஸ்ரீஸ்குமார் பெற்றுக்கொள்வதையும் நூலாசிரியர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (173)









துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் திருவள்ளுவர் நகர் கிராம மதகு அமைப்புக்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அடிக்கல் நடுவதைப் படத்தில் காணலாம்.





கிளிநொச்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது. வலயக் கல்விப் பணிப்பாணர் க.முருகவேள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்தியர் எஸ்.ஜெயரூபன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அலுவலர் இ.செந்தூரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். (୨)





சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக பட்ஷ மணவாளக் கோலத் திருவிழா அண்மையில் சங்கானை மாவடி இந்து இளைஞர்களால் நடத்தப்பட்டது. இரவு நேர பூஜையின் பின்னர் ஞான வைரவப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வெளி வீதியுலா வருவதைக் காணலாம்.





வவுனியா இந்து அறநெறிப் பாடசாலை பேரவையின் ஏற்பாட்டில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேசசெயலக அனுசரணையில் பிரதேசசெயலாளர் க. உதயராசா தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் வவுனியா கல்வியல் கல்லூரி விரிவுரையாளர்க ளான திருமதி. எல். துணைவன், திருமதி. எ. ரவீந்திரன் ஆகியோரும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியரான திரு. எஸ். ரமேஷும் வளவாளர்களாக கலந்துகொண்டனர். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் நகராட்சி மன்ற உறுப்பினர் சி.நந்தகுமார் திருகோணமலை புனிதவளனார் வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை கையளித்துள்ளார். குறித்த உபகரணங்களை வித்தியாலய அதிபர் திருமதி எஸ். ஞானராஜா பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.(40)







உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தில் விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டுள்ளது. "பொலித்தீன் பாவனையை முற்றாக ஒழிப்போம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்தப் பேரணி மாவட்ட செயலகம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வேல்ட் விஷன், சிடிஎவ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் விளக்கமளிப்பதையும், பேரணியில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (40)









வீ.ஆர் வடிவேற்கரசன் ஞாபகார்த்த சிறுவர் பூங்கா திறப்பு விழா அண்மையில் யா/தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் இரா. சிறீ நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. சிறீகரன், யாழ் வணிகர் சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் அ.இராசகுமாரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். வித்தியாலய ஸ்தாபகர் வீரகத்திப்பிள்ளையின் பேரன் மறைந்த வீ.ஆர்.வடிவேற்கரசன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட மேற்படி பூங்காவின் திறப்பு விழாவில் 30 மாணவர்களுக்கு காலணிகளும் வித்தியாலய நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களும் வழங்கப்பட்டன. (10)









தண்ணீரூற்று பரி.மத்தியா ஆலய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி மு.உதயராணி கலந்துகொண்டதுடன் தண்ணீரூற்று இலங்கைத் திருச்சபை தமழிக்கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபர் தேவராஜா, தற்போதைய அதிபர் சபாஜிதன், கிராம சேவை உத்தியோகத்தர், காவல்துறை அதிகாரிகள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (10)



கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களுக்கான செயலமர்வொன்று நடத்தப்பட்டுள்ளது.

கட்டிளம் பருவத்தில் ஏற்படும் பிரச்சனைகளும் அதற்கு முகம் கொடுத்து தீர்வுகள் பெறுதலும் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட செயலமர்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் இ.செந்தூரன் வளவாளராகக் கலந்துகொண்டார். (9)



"ஆசை அண்ணாவின் அன்புக் கனவுகள்" புலம் பெயர் அமைப்பினால் மன்னார் இலுப்பைக்கடவை அ.த.க பாடசாலை, அந்தோனியார் புரம் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் பிரஜைகள் குழுவின் உப தலைவர் சாள்ஸ், தேவன்பிட்டி பங்குத் தந்தை அருட்குமரன், அமைப்பின் மன்னார், கிளிநொச்சி மாவட்ட அமைப்பளர்கள் கலந்து கொண்டனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ச் சவடால் விட்ட உறுப்பினர் வெளிநாடு செல்வதற்குத் தடை

கொழும்பு, ஜூன் 07
தென்மாகாண சபை உறுப்பினர் டீ.வி உபுல், வெளிநாட்டுக்குச் செல்வதற்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் வியாழக் கிழமை தடை விதித்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை அடுத்தே நீதிமன்றம் மேற்கண்டவாறு தடை விதித்துள்ளது.

யாழ்ப்பணம் திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு 07.06.2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி மிகவும் சிறப்பாக நடைபெறத் திருவருளை வேண்டுகின்றேன். இவ்வாலயத்தில் பல்வேறு திருப்பணிகள் நடைபெறுவதற்கு நிதிவழங்கியதுடன் அல்லும், பகலும் அயராது உழைத்த அறங்காவலர்கள் மற்றும் அன்பர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

இலங்கையிலுள்ள விநாயகர் ஆலயங்களுள் வழிபாட்டுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாக இவ்வாலயம் திகழ்வது குறிப்பிடற் பாலதாகும்.

"விநாகயனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்"

பேராசிரியர் மா. வேதநாதன்,
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.



## செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

"அத்திமுகவனை நித்தம் நினைப்பவர் சித்த மகிழ்வோடு வாழ்ந்து முத்தி பெறுவரே"

திருநிறைந்த திருநெல்வேலியில் அருள் நிறைந்த ஆனைமுகப் பெருமானுக்குக் கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து ஆனந்தமடைகிறேன். பழங்கிணற்றடியான் எனப் பக்தர்கள் போற்றும் இத்திருக்கோயில் புதுப் பொலிவு பெற்றுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். பசுவதைக்கு அஞ்சி பாரத தேசம் சென்றவர் சுவாமி ஞானப்பிரகாசர். அத்தகைய பெருமக்கள் வாழ்ந்த மண்ணில் சைவ மரபைக் காக்க எழுந்த இத்திருக்கோயிலை நேசித் தவர்களை வணங்குகிறேன். திருப்பணிக்கு உதவிய பக்தர்களை வாழ்த்து கிறேன். விக்கினம் தீர்க்கும் விநாயகரின் கும்பாபிஷேகத்தோடு எம் மண்ணில் வில்லங்கம் நீங்கி மங்களம் நிறைய வேண்டுதல் செய்வோம். கருணை, இரக்கம், அன்பு, பண்பு பெருக மன்றாடி வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம் - தெல்லிப்பழை,
தலைவர் சிவபூமி அறக்கட்டளை.

## வாழ்த்துரை

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருக்கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷமகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு எமது பயபக்திகலந்த வாழ்த்துக்களைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். நமது வழிபடுகடவுளரான ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் திருவருட்சிறப்பைத் தினமும் அனுபவிக்கும் அடியார்களில் அடியேனும் ஒருவன். எண்ணியது எண்ணியாங்கு அடைய வீரகத்தி விநாயகர் வழி காட்டுவார்.

மனவளமும் மண்வளமும் ஒருங்கே அமைந்த திருநெல்வேலிப்பதி வந்தாரை வரவேற்று வாழவைக்கும் திருவூராகும். நாவலரின் மூதாதையரான ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். மட்டுவிலைச் சேர்ந்த பண்டிதமணி இலக்கியகலாநிதி சி. கணபதிப்பிள்ளையவர்கள் திருநெல்வேலியிலே இந்த ஆலயச் சூழலிலேதான் மரண பரியந்தம் வாழ்ந்தவர்.

ஈழத்துத் தமிழ்க்கல்வி மரபின் ஊற்றுக் கால் எனக் கருதப்படுகின்ற கனகசபாபதி யோகி எனும் கூழங்கைத்தம்பிரான் திருநெல்வேலியிலேயே சமாதி வைக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது. சைவமும் தமிழும் செழித்து வளரும் திருநெல்வேலிப் பகுதியிலே எழுந்தருளி இருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் வீரகத்தி விநாயகரின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற வணங்கி வாழ்த்துகிறோம்.

பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா,
முன்னாள் தலைவர்
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கண்கண்டதெய்வம்

திருநெல்வேலிப்பதியிலே பழங்கிணற்றடியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவீரகத்தி விநாயகப்பெருமான் இப்பதிவாழ் மக்களின் கண்கண்டதெய்வமாக விளங்குகின்றார்.

இங்குள்ளவர்கள் எக்காரியங்களையும் தொடங்குமுன்னர் தேங்காய் அடித்து கற்பூரம் கொழுத்தி பெருமானை வணங்கிக்கொண்டே ஆரம்பிப்பார்கள். இவ்வாறு ஆரம்பிக்கப்படும் காரியங்கள் தங்கு தடையின்றி இனிதே நிறைவேற பெருமானின் அருட்கடாச்ஷம் கிடைக்கப்பெறுகின்றது.

விநாயகப் பெருமானை வேண்டுதல் செய்யாது தொடங்கின்ற காரியங்கள் தடைப்படுவதும் நிறைவேறாமல் போவதும் இப்பகுதி மக்கள் அனுபவத்தில் கண்ட நிகழ்வுகளாகும்.

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனது தாள் முடியுறப் பணிவரேல்
அன்னவர் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையையூறு செய்திடுக நீ"

என்று தந்தையாராகிய சிவபெருமானே விநாயகருக்கு கூறியதாக கந்த புராணத்தில் கஜமுகன் உற்பத்திப் படலத்தில் ஓர்பாடல் உண்டு.

"மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"

என்பதற்கமைவாக இவ்வாலயத்தில் மாதாந்தச் சதுர்த்தி, விஷேட தினங்கள், மஹோற்சவ காலங்களில் மனம் நிறைந்தவர்களினதும் பணம் நிறைந்தவர்களினதும் பங்களிப்போடு அன்னதான மண்டபத்தில் அன்னதான நிகழ்வு அடிக்கடி நிகழ்வது பெருமையானதாகும். இங்குள்ள மண்டபம் சமய நிகழ்வுகளுக்கும் அறநெறிப் பாடசாலை, யோகாசன வகுப்புகள் என்பவற்றிற்கும் பயன்படுவது குறிப்பிடத் தக்கதாகும். சிறப்பு வாய்ந்த இந்தக் கும்பாபிஷேக நிகழ்வையொட்டி வெளிவரும் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உள்ள மகிழ்ச்சியுடன் பெரு மானின் அருட்கடாட்ஷம் அனைவருக்கும் கிட்டவேண்டுமென்று விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

இக் கும்பாபிஷேக நிகழ்வை யொட்டிய பூர்வாங்க வேலைகளில் பெரிதும் உதவிய இவ்வூர் இளைஞர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

இ.சுரேஷ் தலைவர்,
கலாமன்ற சனசமூகநிலையம், திருநெல்வேலி.


அறிவொளி போன் சொப்
பலாலி வீதி, திருநெல்வேலி.

நியூ வேல்முருகன் சைவ உணவகம்
பலாலி வீதி, திருநெல்வேலி.

ஐங்கரன் களஞ்சியம்
பலாலி வீதி, திருநெல்வேலி.


சிவகாமி ரேடர்ஸ்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

ஹரன் புடவையகம்
பலாலி வீதி, திருநெல்வேலி.

நியூ ஹரன் பன்சி
பலாலி வீதி, திருநெல்வேலி.


ஆலயபரிபாலன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அற்புத நடனமாடும் அ
கற்பகக் கௌரி தந்
பொற்புடை அடியார் நெஞ்சி
சிற்பனைப்பதி அ
போற்றி

# யா/வேலணை மேற்

# புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பா

## நாள் - மன்மத வருடம் வைகாசி 24 ஞாயிறு, 07.06.2



### முருகன் அடியார்களுக்கு....

வேலணைப் பிரதேசத்தில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது மன மகிழ்ச்சியைத் தருகின்றது. முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகப் பெருமான் வேண்டுவார் வேண்டு வதை இவ்வாறு ஏற்று நீண்டகாலமாக எழுந்தருளி இருந்து அருளாட்சி புரிகின்றான். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அபிஷேகம் இன்று நடைபெறுவதால் ஆலயத்திற்கும் ஊருக்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக இருக்கிறை வேல்பெருமான் இவ் ஆலயத்தில் அமர்ந்திருப் பது ஆன்மாக்களின் ஞான உணர்வை ஏற்படுத்துவதாகும். இம்மைக்கும் வறுமைக் கும் பேரின்பத்தைத் தருகின்ற முருகவழிபாடு யாழ்ப்பாணத்தில் தனித்துவமானது. முருகனுடைய புகழைக் கூறும் புராணத்தை (கந்தபுராணம்) ஆதாரமாகக்கொண்டு நீண்ட காலமாக வாழ்ந்துவரும் மக்களுடைய ஆதாரமாக விளங்குகின்றது. இங்கு நடைபெறும் அபிஷேகத்தை அனைவரும் தரிசித்து மண்ணினல்ல வண்ணம் வாழ்வோமாக. இப் புனிதமான பணியை ஆற்றும் குருமார்களுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் ஊர் மக்களுக்கும் இறை இன்பம்கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



### சிற்பனையில் உறையும் சிங்கார வேலன்

உலகெங்கும் வாழும் சைவ நன் மக்களின் சமய வாழ்வில் கலியுகவரதன் கந்தன் வழிபாடு முதன்மைபெறுகின்றது. இவ்வகையில் யாழ்ப்பாண நகரில் வேலணை எனும் பதியில் அரை நூற்றாண்டுக்கு மேலாக சிற்பனை சிங்கார வேலனாக கோயில் கொண்டு அருள்பாலிக்கும் ஆலயம் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயம்.

இவ்வாலயம் முருகன் திருவருளால் மேன்மையடைந்த வேளாண் பெருமக்கள், வணிகர்கள் புலம்பெயர்ந்த முருகபக்தர்கள் இவர்களின் பொருளுதவியோடும் வாலிப முன்னணியின் சரீர உதவியுடனும் இந்திரலோகமென மிளிர்கின்றது. இவ்வாலய மகா கும்பாபிஷேகம் இன்று முருகானுபூதிச் செல்வன் சிவஸ்ரீ நடராஜ உமேந்திரக் குருக் கள் தலைமையில் நடைபெறுகின்றது.

நிறைவாக பள்ளிப்பருவத்தில் துள்ளித்திரிந்து பூஜை செய்த ஸ்ரீ வேலனின் கும்பாபிஷேகம் சிறப்புறவும் சரீர உதவி, பொருளுதவி, ஆலோசனை வழங்கிய அனைவரும் திருவருள் பெறவும் நல்லாசிபெறவும் வாழ்த்தி அமைகின்றோம்.

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை.

கும்பாபிஷேக சர்வசாதகர்,
வேதாகம வித்யா பூஷணம்
பிரம்மஸ்ரீ விஸ்வநாராயணக்குருக்கள் கொழும்பு.



### வேலவனின் பெரும் சாந்தி விழா

இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாண நகரின் சப்த தீவுகளில் ஒன்றான வேலணை மேற்கு சிற்பனைக் கிராமத்தில் முருகப்பெரு மானின் ஆலயம் அமைத்து முதல் கும்பாபிஷேகம் 1999ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. அடுத்த இரண்டாவது மகா கும்பாபிஷேகம் நடைபெற இங்கு வாழ்ந்த பெரும்பாலான மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் தங்களுடைய உணர்வுகளும் சிந்தனைகளும் எமது குலதெய்வம் ஸ்ரீ முருகனின் நினைவோடு வாழ்ந்தவர்கள்.

தற்போது ஊரில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியோர்களும் வாலிப முன்னணியில் இருக்கும் இளைஞர்களும் தங்களால் இயன்ற சரீர உதவிகளும் பொருளுதவிகளும் செய்துள்ளனர். இன்று நடைபெறுகின்ற ஸ்ரீமுருகனின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற முருகன் நன்மலர்ப்பாதம் பணிந்து நல்லாசி கூறுகின்றோம்.

ஆலய பிரதம குரு, கும்பாபிஷேக பிரதம குரு
"சிவா கமதத்துவ நிதி"
குஹானுக்கிரஹர்
சிவஸ்ரீ நடராஜ உமேந்திரக் குருக்கள் - வேலணை.



### ஊர்சிறக்க அருளும் முருகன்


...று அருளாட்சி புரியும் யா/ வேலணை மேற்கு சிற்பனை ...த்தின் மஹா கும்பாபி ஷேகத்திற்கான ஆசிச் செய்தி கிடைத்தவாய்ப்பினையிட்டு அகமகிழ்கின்றேன்.

...தனித்துவமான சிறப்புடைய வேலணைப் பிரதேசத்தின் ...ன அடையாளப்படுத்தி நிற்கும் யா/ வேலணைப் மேற்கு சிற்பனை முருகன் ஆலயமானது புதுப் பொலிவுபெற்று மஹா கும்பாபிஷேகம் காண்பதானது வேலணை மக்க ளுக்கும் இறை பக்தர்களுக்கும் ஓர் உன்னத நிகழ்வாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகள் கூறியது போல் கும்பாபிஷேகம் செய்தல் செய்வித்தல் துணைநிற்றல் காண்பது மிக்க சிவ புண்ணியத்தை ஈட்டித்தரும். இதில் பங்கெடுப்போர் இருமை இன்பங்களை எய்தி இன்புறுவார்.

இவ் ஊர் மக்களை ஆன்மிகத்தின் ஊடாக ஒன்றிணைத்து சமூகத்தின் நற்பேறினை அடையவும் ஊர் செழிப்புற்று சிறக்கவும் ஒழுக் கம் தளைத்தோங்கவும் அருள்புரியும் முருகப்பெருமானின் மஹா கும் பாபிஷேகம் சிறப்புற ஆசிகளை வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைகிறேன்.

மங்களாதேவி சதீஸ்வன்
பிரதேச செயலர் - வேலணை.



முருகனருட் செல்வர்களே,
சிவபூமி எனப் போற்றப்படும் லங்காபுரியின் வடபால் சைவ...
இந்நகரின் அழகுக்கு அணி செய்வன சப்த தீவுகள் ஆகும்...
புகையிலைத் தோட்டங்களும் நிரம்பி வேலணை... ...ும் கிராம...
ஆலயம் சிற்பனை முருகன் ஆலயமாகும். இந்த ஆலயம் மு...
ஆலயத்தில் திருப்பணிகள் நிறைவுபெற்று நிகழும் மங்களம்...
பானுவாரம் திருவோண நட்ஷத்திரம் பஞ்சமி திதி அமிர்த சி...
லக்ன சுபவேளையில் குருஹோரையில் திருக்குட திருமஞ்ச...
வேளையும் அதற்கு முன்பின் நடைபெறும் கிரியா காலங்களி...



### ஆலய குருவின் ஆசியுரை

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகப் பே...
படும் முருகப்பெருமான் சைவச் சான்றோர்கள் ...
இயற்கை எழில் கொஞ்சும் வேலணைக் கிராம...
சிற்பனைப் பதியிலே உன்னை யொழிய ஒரு...
யும் நம்புகிலேன் பின்னை ஒருவரையான் பின்...
லேன் என்று நம்பி வரும் அடியார்கள் வேண்டிய வற்றை வே...
வாறு வழங்கும் முருகப்பெருமான் கோயில் கொண்டு அருள்...
கின்றார். இன்று முருகப்பெருமானுக்கு குட முழுக்குப் பெரு...
நடைபெறுகின்றது. ஆன்மாக்கள் எத் தனை தீவினைகள் பாவ...
புரிந்தனரோ, அவற்றை நீக்கி, அடியார்கள் அனைவரும் சுபீட்...
வாழ வேண்டும் என்று கலியுக வரதனாகிய முருகப்பெரும...
வணங்கி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை...
சண்முக மயூரசர்மா ஆ...


கலைவாணி
கல்வி நிலையம்
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
0773343983, 0779361331

துஷியந்தன்
பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி,
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
0771488101

கிரிஷாசாந்
ஹாட்வெயர்
பிரதான வீதி,
வங்களாவடிச் சந்தி,
0776508963 வேலணை.

அன்னராஜா
ஸ்ரோர்ஸ்
இல.356, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பரந்தாமன்
பல்பொருள் வாணிபம்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.

S.K.R. Communication
& Book Centre &
Van for Hair
பிரதான வீதி,
வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 2211512, 0775075431

கஜமுகன்
மலர் சொப்
குறிகாட்டுவான் வீதி,
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
021 790 3208, 077 4010622

விஜயன்
வெதுப்பகம்
குறிகாட்டுவான் வீதி,
வங்களாவடிச் சந்தி,
வேலணை. 075 039 9698

ஜீவா
உணவகம்
குறிகாட்டுவான் வீதி,
வங்களாவடிச் சந்தி,
வேலணை.

விஜிதா
ரைஸ் மில்
தாவடி தெற்கு,
கொக்குவில்.

நியூ லதா
ஸ்ரோர்ஸ்
இல.36,
ஒல்க்கோட் மாவத்தை,
காலி.

வசந்தம்
புட்ஸ் (Foods) சென்ரர்
(இந்தியன் இனிப்பு வகைகள்)
423, காலி வீதி,
வெள்ளவத்தை.

அருணா
பீடி கம்பனி
இல.10, பிரதான வீதி,
வறக்கா பொல.

தியாகராஜா
ஸ்ரோர்ஸ்
இல.10,
ஒல்க்கோட் மாவத்தை,
காலி.
091 222 4589

Paramalingam
& Sons
Main Street,
Warakapola.


இதழமைப்பு ... அருட்சுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு சரவணபவன் எம்.பி உதவியளிப்பு




யாழ்ப்பாணம்,ஜூன் 7
யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு நேற்றுப் பருத்தித்துறையில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.
குறித்த நிகழ்வு நேற்றுப் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இரு நூலகங்களில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு தையல் இயந்திரங்களை வழங்கினார்.
பருத்தித்துறை கந்தமுருகேசனார் சனசமூக நிலையம்,ஓடக்கரை சனசமூக நிலையம் என்பவற்றில் இவ்வாறு 11 தையல் இயந்திரங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் சிவயோகன், பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(த)

# கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 7
விசுவமடு கரிஸீன் முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய், கவிதை நூல் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. சுண்டிக்குளம் சந்தி, விசுவமடுவில், அறிவிப்பாளர்ரி.எஸ்.முகுந்தன்தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.
(த-5)

# யாழ். நகரில் இன்று நற்கருணைப் பவனி

கொழும்புத்துறை, ஜூன் 7
யாழ். ஆயர் இல்லத்தின் ஏற்பாட்டில் யாழ் நகரில் மாபெரும் நற்கருணைப் பவனி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமாகும் பவனி யாழ். மரியன்னை பேராலயத்தில் நிறைவடையும்.
திருமுழுக்கு யோவான் ஆலயத்திலிருந்து புறப்படும் நற்கருணைப் பவனி வைத்தியசாலை வீதி வழியாக புனித அடைக்கல அன்னை ஆலயத்தை அடைந்து வழிபாட்டின் பின்னர் 4 ஆம் குறுக்குத்தெரு, பிரதான வீதி வழியாக குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தை அடைந்து ஆராதனைகள் நடைபெறும்.
அங்கிருந்து பாங்சால் வீதி, பத்திரிசியார் வீதி, கதீற்றல் வீதி வழியாக யாழ். மரியன்னை பேராலயத்தை அடைந்து இறுதி வழிபாடுகளுடன் நிறைவு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
பேரணிப் பவனியில் கலந்துகொள்ளவுள்ளோர் வெள்ளை உடையுடனும் வெள்ளை அல்லது சிவப்புக் கொடி கொண்டும் வருமாறும், பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (த-135)

# வலுக்கட்டாய நிதி சேகரிப்பு பயனாளிகள் கடும் விசனம்

பளை, ஜூன் 7
பச்சிலைப்பள்ளி பிரதேச வாழ்வின் எழுச்சி பயனாளிகளுக்கு நிவாரண உதவிக் கொடுப்பனவு வழங்கியபோது குடும்பங்களிடமிருந்து வலுக்கட்டாயமாக உண்டியலில் நிதி சேகரிக்கப்பட்டது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.
கடந்த இரு மாதங்களுக்குரிய நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதையடுத்த பளை பிரதேச வளாகத்தில் இயங்கும் வாழ்வின் எழுச்சி வங்கிக்கு 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களின் பயனாளிகள் கொடுப்பனவைப் பெற வருகை தந்திருந்தனர்
வங்கியில் மூடி வைக்கப்பட்டிருந்த உண்டியலில் பயனாளிகள் ஒவ்வொருவரும் குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்ப அங்கத்தவருக்கு தலா 100 ரூபா வீதமும், அதனுடன் மேலதிகமாக ஒவ்வொரு குடும்பமும் 100 ரூபாவையும் உண்டியலில் போட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.
உண்டியலில் பிரதேசத்தில் வறிய நிலை மாணவர் உதவி எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் கொடுப்பனவில் வங்கியினர் நிதி அறவிடுவது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.
உண்டியலில் பணம் போடாதவர்கள் வாழ்வின் எழுச்சித் திட்டத்திலிருந்து பெயர் நீக்கப்படுமென தெரிவிக்கப்பட்டதால் பயனாளிகள் மனவிரக்தியடைந்த நிலையில் உண்டியணலில் பணம் செலுத்தி விட்டுச் சென்றதாகவும் தெரிவித்தனர்.
இது தொடர்பாக வாழ்வின் எழுச்சி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது,
ஏனைய பிரதேசங்களைப் போல் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் காணப்படும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வின் எழுச்சிப் பயனாளிகளின் சம்மதத்துடன் அவர்கள் விரும்பிய தொகையை உண்டியலில் இடுமாறு தெரிவித்ததாகவும், எவரையும் வலுக்கட்டாயமாக நிதி வழங்குமாறு கோரவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.
போதைப் பொருள்கள் எதிர்ப்பு வாரத்தையொட்டி நாட்டில் உள்ள அனைத்து வாழ்வின் எழுச்சிப் பிரிவினரால் உண்டியல் மூலம் நிதி சேகரித்து கிடைக்கும் நிதியினைச் சிப்தொற திட்டத்தின் கீழ் வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.
(த-9)

## வாகனச்

மின்சாரம் வழங்குவதற்காக அராலியில் இருந்து குறித்த மின் பிறப்பாக்கி எடுத்துச் செல்லப்பட்டது. அதனை டிராக்டர் கட்டி இழுத்துச் சென்றது. அந்த பிறப்பாக்கியின் மேல் இருந்தே குறித்த சிறுவன் பயணித்ததாகக் கூறப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதன் போதே சிறுவன் தவறிவிழுந்து அந்த இயந்திரத்தின் சில்லினுள் அகப்பட்டு நசிந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவ்ன் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அது பயனளிக்காது உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. (த-4)

## வடமராட்சி

நிமித்தம் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். புறாப்பொறுக்கி ஆலடிப் பகுதியில் இவர் சென்று கொண்டிருந்தபோது முன்னால் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் பயணிகளை ஏற்றுவதற்கு நிறுத்தப்பட்டதாகவும், இதனால் பஸ்ஸின் பின்பக்கமாக இவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் கூறப்பட்டது.
பலத்த காயங்களுக்கு உள்ளான இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். ஐந்து மாதங்களுக்கு முன்பே இவர் திருமணம் செய்து கொண்டதாகவும் கூறப்பட்டது.
(த-108)

## தலைவர்

கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.
கோயிலின் தெற்கு பகுதியில் தங்களது காவல் தெய்வத்துக்கு இரண்டு குதிரைகளைக் காவலாக சிலையாக வடிவமைத்திருந்தனர். அதில் ஒன்று சுபாஸ் சந்திரபோஷ் குதிரையைப் பிடித்த படியும், மற்றொரு குதிரையுடன் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் துப்பாக்கி ஏந்திய படியும் சிலையாக வடிவமைத்திருந்தனர்.
இந்தச் செய்தி ஊடகங்களிலும், சமூக வலைத் தளங்களிலும் பரவியிருந்தது. இந்தத் தகவல் உளவுத் துறையினரால் மேலிடத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து நாக பட்டினம் மாவட்ட பொலிஸார் இந்த விடயத்தில் அவசரம் காட்டினர்.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 12 மணிக்கு தெற்கு பொய்கை நல்லூருக்கு வந்த பொலிஸார், பிரபாகரனின் சிலையை அகற்றும்படி உத்தரவிட்டுள்ளனர். அதற்கு முதலில் எதிர்ப்பு தெரிவித்த கிராம மக்கள், பின்னர் பொலிஸாரின் அதிரடியால் அதனை வடிவமைத்தவரை கொண்டு அகற்றியுள்ளனர்.
இதனால் அந்தப் பகுதி முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், சிலையை வடிவமைத்தவர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (த-5)

## ஐ.நா.

முன்னதாக, இலங்கை அரசினால் நியமிக்கப் பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரைச் சமாளிக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதி மைத்திரிபால கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.
ஆணைக்குழுவுக்கு 20 ஆயிரம் முறைப்பாடுகள் வரையில் கிடைக்கப் பெற்றிருந்தன. அதில் 2 ஆயிரம் முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவற்றை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இந்த இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக, ஆணைக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்கனவே வெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கையில், காணாமற்போதல் சம்பவங்களில் 60 சதவீதமானவை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டவை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பிரபாவின்

பிரபாகரன் பயன் படுத்தியிருந்தார். இதற்கு மேலாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டவர்களுக்கு, அடையாளப் படுத்துவதற்காகத் தகடு வழங்கப்பட்டிருக்கும். பிரபாகரனது தகடு த.வி.பு 001 ஆகும். அந்தத் தகட்டையும் தற்போது காணவில்லை.
போரின் இறுதியில் பிரபாகரனது உடலை மீட்ட இராணுவ உயர் அதிகாரிகள் நினைவுச் சின்னமாக, இவற்றை எடுத்துச் சென்று விட்டனரா? அல்லது அதனை எரித்து விட்டனரா? என்பது தெரியவில்லை. இதனால் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் குழம்பிப் போயுள்ளதாக, மவ்பிம ஊடகம் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (த-5)

## இந்திய

அத்துடன், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரகாஸ் கோபாலன், 51 ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் எஸ்.கே.திருநாவுக்கரசு ஆகியோரும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.
1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 12 ஆம் திகதி நள்ளிரவு விடுதலைப் புலிகளின் தலைமையகத்தை முற்றுகையிடுவதற்காக யாழ்.பல்கலைக் கழகச் சூழலில் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்டபோது, விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இந்திய இராணுவத்தின் 10 ஆவது பரா கொமாண்டோ படைப் பிரிவைச் சேர்ந்த 33 கொமாண்டோகள் கொல்லப்பட்டனர். இதன் போது கொல்லப்பட்ட லெப்.கேணல் அருண்குமார் சப்ரா உள்ளிட்ட 33 இந்தியப் படையினர் நினைவாகவே பலாலியில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. (த-5)

## இளைஞருக்கு

அவர் மீது சரமாரியாக வாள் வீச்சு நடத்தப்பட்டுள்ளது. ஈவிரக்கமற்ற கும்பல் இளம்பிள்ளை வாத நோயினால் ஒரு கால் பாதிப்படைந்த அந்த இளைஞரின் குறித்த காலையும் வாளால் வெட்டியுள்ளது.
இது தொடர்பாக தெரியவருவதாவது
வடமராட்சி, துன்னாலை குடவத்தைப் பகுதியில் இளைஞர் ஒருவரை வழிமறித்த கும்பல் ஒன்று அவரைச் சரமாரியாக வாளால் வெட்டி விட்டுத் தலைமறைவாகியுள்ளது. கை, கால் பகுதியில் பலமான வெட்டு காயத்துடன் இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்களுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
இந்தச் சம்பவத்தில் துன்னாலை குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த துரைசிங்கம் பிரபு (வயது-29) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்கானவர் ஆவார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் நடத்தி வருகின்றனர். (த-109)

## அரச பணம்

எனது மனைவி சிரந்தியின் சிரிலிய சவிய வங்கிக் கணக்கில் அரச பணம் ஒரு சதம் கூட இல்லை. அவ்வாறு இருக்குமென்றால் அதனை அரசிடம்தான் நீங்கள் கேட்க வேண்டும். இந்த அபயராம விகாரயை நான் தேர்தல் அலுவலகமாகப் பயன்படுத்துவதாக சிலர் விமர்சனம் செய்கின்றனர். தூய்மையான இந்த விகாரையை நான் அவ்வாறு பயன்படுத்தமாட்டேன். இந்த அபயராம விகாரை நான் மனதார வழிபடும் விகாரை- என்றார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தவுடன், மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் நடந்த ஊழல்கள், அதிகார அத்துமீறல்கள் வெளியாகி வருகின்றன.
மஹிந்தவின் சகோதரர் பஷில் ராஜபக்ஷ பல லட்சம் நிதி மோசடி செய்தார் எனக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். மற்றொரு சகோதரர் கோத்தபாய, ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் விசாரணையின் கீழ் உள்ளார். இந் நிலையில், மஹிந்தவின் மனைவி ஷிரந்தியின் பெயரில் இயங்கிவரும் சிரிலிய சவிய வங்கிக் கணக்குகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிரிலிய சவிய வங்கிக் கணக்கு தொடர்பில் சில தினங்களுக்கு முன்னர் ஷிரந்தியிடம் நிதி மோசடிப் பிரிவு வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளது என்பதும் குறிப்பிடத் ததக்கது.
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் இலஞ்ச ஊழல் விடயங்கள் சூடுபிடிக்கும் என்று அரசியல்ஆர்வலர்கள்கருத்துத்தெரிவித்து வருகின்றனர். (த-சி)

## ஜெனிவாக்

இந்தப் பேச்சுக்களின் போது, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் இடம்பெறும் அமர்வில் பங்கேற்க விரும்புவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார்.
இலங்கையில் புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னர், ஜெனிவாவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்க விரும்புவதாக மைத்திரிபால சிறிசேன, ஐ.நா பொதுச் செயலரிடம் குறிப்பிட்டதாக ஜனாதிபதி செயலகம் தகவல் வெளியிட்டுள் ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செப்ரெம்பர் மாத அமர்வில், இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணைக் குழுவின் அறிக்கை வெளியிடப்படும் என்று ஐநா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோதும், பல அமர்வுகள் இடம்பெற்றபோதும், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதில் பங்கெடுக்கவில்லை என்பது நினைவில் கொள்ளத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண வலைப்பந்தாட்டத் தொடர்

## யூனியன், விக்டோரியா, சரஸ்வதி கல்லூரிகள் அசத்தல்







யாழ்ப்பாணம், ஜூன் 7
வடமாகாணப் பாடசாலைகளுக் கிடையிலான பெண்கள் பிரிவின் வலைப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.
இதில் 15 வயதுப் பிரிவில் யூனியன் கல்லூரி அணியும், 17 வயதுப் பிரிவில் விக்டோரியாக் கல்லூரி அணியும் 19 வயதுப் பிரிவில் அராலி சரஸ்வதி அணியும் கிண்ணத்தைக் கைப்பற்றின.

**15வயதுப்பிரிவு**

15 வயது பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி அணி மோதியது. ஆட்டத்தின் முதல்பாதியிலேயே யூனியன் கல்லூரி அணியின் ஆதிக்கம் 8:6 என்ற அடிப்படையில் அதிகரித்துக்காணப்பட்டது. இரண்டாவது பாதியில் இரு அணிகளும் விடுவதாக இல்லை. இருந்தபோதிலும் முதல்பாதியில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க தெல்லிப்பழை யூனியன்; 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. இந்த வெற்றியின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் கைகளில் இருந்த கிண்ணம் நடப்பாண்டில் தெல்லிப்பழை யூனியன் கல்லூயின் கைகளுக்கு மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது..
3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. இதில் சுந்தரபுரம்அணி 14:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

**17வயதுப்பிரிவு**

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலையை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் முதல்பாதியில் 7:4 என்ற அடிப்படையில் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை முன்னிலை வகித்த போதும் இரண்டாவது பாதியாட்டத்தில் வீறு கொண்ட விக்டோரியா அணி 11:8 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சமநிலையை ஏற்படுத்தியது. இதனால் மேலதிக நேரத்தில் விக்டோரியா அணி 6:4 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துகல்லூரி அணி மோதியது. இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் அணி ஆட்ட நேர முடிவில் 23:11 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.




**19வயதுப்பிரிவு**

19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி அணி மோதியது. இரு அணிகளும் மாறிமாறி புள்ளிகளைக் குவிக்க ஆட்டத்தின் முதல்பாதி 12:12 என்று சமநிலையானது. இரண்டாவது பாதியில் யூனியனை முழுவதுமாகக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய அராலி சரஸ்வதி அணி இறுதியில் 20:30 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது. 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் சென்.ஜோசப் அணி மோதியது. இதில் ஆட்டம் முதல் ஆதிக்கம் செலுத்திய விக்டோரியா அணி 28:9 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.இந்திரராஜா, ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ம-422-86)

### திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் – ஹாட்லி யைற்ஸ்

## அனல் பறக்கும் இறுதி இன்று

யாழ்ப்பாணம் ஜூன் 7
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் 25ஆவது ஆண்டாக நடத்தும் 40பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இந்த இறுதியாட்டத்தில் ஹாட்லி யைற்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர் எம்.ஈ.எஸ். மோகனதாஸும் சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தனும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ம-23-108)

### பல்கலைக்கழகங்களுக்கிடையிலான

## வீதியோட்டம் இன்று

யாழ். பல்கலைக்கழகங்களின் ஏற்பாட்டில் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் இடையிலான வீதியோட்டப் போட்டி இன்று காலை நடைபெறவுள்ளது.
14 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றும் இந்த வீதியோட்டப்போட்டி இன்று காலை 6 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்கு அருகாமையில் ஆரம்ப மாகி பலாலி வீதியூடாக திருநெல் வேலிச் சந்தியை அடைந்து ஆடிய பாதம் வீதியூடாக யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் முடிவடையும். (ம)

### வவுனியா உதைபந்தாட்டக் கழகங்களுக்கு பந்துகள் கையளிப்பு

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் கொழும்பு லீக்கின் தலைவருமான ஹேர்லி சில்வேரா தனது சொந்த நிதியிலிருத்து உதைபந்தாட்டப் பந்துகளை கொள்வனவு செய்து வவுனியாவிலுள்ள கழகங்களுக்கு வழங்கியுள்ளார்.
வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜோண்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபா பெறுமதியான உதை பந்துகள் வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் 18 கழகங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.
(ம-23)

### கொக்குவில் இந்து, வேம்படி மகளிர்

## அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் கனிஷ்ட பிரிவினருக்கிடையில் நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகின.
இந்தத்தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற 17வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 33:7என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. 13 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணி 13:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
(ம-23)

### சென்.சேவியரிடம் வீழ்ந்தது தெல்லிப்பழை யூனியன்

யாழ்ப்பாணம், ஜூன் 7
மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி பலப்பரீட்சை நடத்தியது. இந்த ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



### இன்றைய மோதல்கள்

*யாழ்.கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தொடர்*

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் கனிஷ்ட பிரிவினருக்கிடையில் நடத்தும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*15வயதுப்பிரிவு –பெண்கள்*
15வயதுப்பிரிவின் பெண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பிற்பகல் 3மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

*19வயதுப்பிரிவு –ஆண்கள்*
19வயதுப்பிரிவின் ஆண்களுக்கான ஆட்டத்தில் பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதவுள்ளது.

*19வயதுப்பிரிவு –பெண்கள்*
19வயதுப்பிரிவின் பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. பி.ப. 4.15 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மோதல் இடம்பெறவுள்ளது.

*கொலின்ஸ் வி.க.தொடர்*
வடமாரட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடந்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*புனித.தோமையார் வி.க.தொடர்*
மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் மு.ப. 10மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் இலங்கை சுருளும்

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடர் இந்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்துவோம் என்று பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவர் மிஷ்பா தெரிவித்துள்ளார்.

இலங்கை - பாகிஸ்தான் தொடர் தொடர்பாக மிஷ்பா தெரிவித்ததாவது இலங்கையை அதன் சொந்த மண்ணில் சந்திப்பது கடினமான விடயம். ஏனெனில் இலங்கை அணி வலுவான அணியாக இருக்கிறது. நாங்கள் ஏற்கனவே இரண்டு தொடர்கலள இழந்துள்ளோம். இருப்பினும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சொந்த மண்ணில் இலங்கையை வீழ்த்துவோம் - என்றார். (ம)

# மூன்றே நாட்களில் முடிந்தது முதல் டெஸ்ட்

## ஆஸி. அபார வெற்றி

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலியா 9 இலக்குகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து வெறும் 148 ஓட்டங்களில் சுருண்டது.

பந்துவீச்சில் ஜோன்சன், ஹசில்வூட் தலா மூன்று இலக்குகளையும் ஸ்ராக் இரண்டு இலக்கையும் லைன், சிமித் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸி. சகல இலக்குகளையும் இழந்து 318 ஓட்டங்களைக் குவித்தது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமானால் 170 ஓட்டங்களை கட்டாயம் பெறவேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய தீவுகளுக்கு ஆரம்பவீரர்கள் இருவரும் மீண்டும் சொதப்ப இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் தீவுகள் 25-2 என்ற நிலையில் இருந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்து வலுவான இலக்கை நிர்ணயிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் பிராவோ 3 ஓட்டங்களுடனும் டவ்றிச் ஒரு ஓட்டத்துடனும் களமிறங்கினார்கள். வந்த வேகத்தில் பிராவோ விடைபெற்றாலும் மறுமுனையில் தொடர்ந்து நிலைத்து நின்றார் டவ்றிச். நிலைமையை உணர்ந்து கைகொடுத்தார் சாமுவேல்ஸ். இணைப்பாட்டம் நிலைபெற தீவுகள் படிப்படியாக பலம்பெற ஆரம்பமானது. ஐம்பது, நூறு என்று இணைப்பாட்டம் அதிகரித்துக் கொண்டு சென்றது இலக்கு மட்டும் விழுந்தபாடில்லை. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து இணைப்பாட்டமாக 144 ஓட்டங்களைப்பகிர்ந்திருந்த வேளையில் டவ்றிச்சை வீழ்த்தி இணைப்பாட்டத்தைப் பிரித்தார் ஹசில்வூட். சிறிது நேரத்தில் சாமுவேல்ஸும் பவி லியன் திரும்ப பின்வரிசை இலக் குகள் சீட்டுக்கட்டைப் போல் சரிந்து முடிந்தன. வெறும் 216 ஓட்டங்களில் சுருண்டு மீண்டும் சொதப்பியது தீவுகள்.



ஆட்டநாயகனான வோக்ஸ்

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க ஆஸ்திரேலியாவுக்கு வெற்றியிலக்கு வெறும் 47 ஓட்டங்கள் மட்டுமே. ஆட்டத்தை மூன்றே நாட்களில் முடித்து விடவேண்டும் என்று நோக்கில் அடித்தாட முற்பட்டது ஆஸி. முயற்சிக்கு கிடைத்த பலனாக ஐந்தே பந்துப்பரிமாற்றங்களில் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்டநாயகனாக வோக்ஸ் தெரிவானார். (ம)

# பவுச்சரைப்போல் பரிதாபமாக விடைபெற்றார் இங்கிலாந்தின் கிரேக் கீஸ்வெட்டர்



கிரேக் கீஸ்வெட்டர்

கண்ணில் ஏற்பட்ட காயம் காரணமாக சர்வதேச ஆட்டங்களிலிருந்து இங்கிலாந்து இலக்குக்காப்பாளர் கிரேக் கீஸ்வெட்டர் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்து ஆண்டு இங்கிலாந்தின் கழகம் ஒன்றுக்காக விளையாடும் போது கிரேக் கீஸ்வெட்டர் கண்ணில் காயம் ஏற்பட்டது. அத்துடன் கன்னத்தில் உள்ள தாடை எழும்பிலும் முறிவு ஏற்பட்டது. இதில் இருந்து குணம் அடைந்து மீண்டும் விளையாட வாய்ப்பில்லாததால் சர்வதேச ஆட்டங்களிலிருந்து 27 ஆவது வயதிலேயே அவர் ஓய்வினை அறிவித்துள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்கா அணியின் இலக்குக் காப்பாளராக இருந்த மார்க் பவுச்சரது கண்ணில் பெயில்ஸ் பறந்து அடித்ததால் இவரது கண் வெடித்து இரத்தம் கொட்டியது. இதனால் கிரேக் கீஸ்வெட்டர் போலவே வைத்தியசாலையில் வைத்து பவுச்சரும் தனது ஓய்வினை அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# வீழ்த்த முடியாத சந்தர்போல்

எதிரணியால் இறுதிவரை வீழ்த்த முடியாமல் ஆட்டமிழக்காதிருந்த வீரர்கள் வரிசையில் சந்தர்ப்போல் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

மொத்தம் 164 டெஸ்ட் ஆட்டங்களில் 278 இன்னிங்ஸ்களில் களமிறங்கிய சந்தர்போல் 49 தடவை இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்து முதலிடத்தில் உள்ளார். சந்தர்போலின் இந்த சாதனை வித்தியாசமானது ஏனெனில் அவர் சக வீரர்களின் துணையில்லாமல் தனிநபராக ஒரு முனையில் போராடியது மிகவும் அதிகம்.

இவருக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் வாஹ் 167 டெஸ்ட் ஆட்டங்களில் 255 இன்னின்ஸ்களில் களமிறங்கி 44



சந்தர்ப்போல்

தடவை ஆட்டமிழக்காமல் இருந்துள்ளார். மூன்றாவதாக ஆஸ்திரேலியாவின் முன்னாள் தலைவர் ஆலன் பார்டர் 156 டெஸ்ட் ஆட்டங்களில் 263 இன்னிங்ஸ்களில் களமிறங்கி 43 தடவை ஆட்டமிழக்காமல் இருந்துள்ளார்.

இவர்களை விட நான்காம் இடத்தில் தென்னாபிரிக்காவின் கலிஸ். ஐந்தாம் இடத்தில் இந்தியாவின் லக்ஸ்மன்; ஆறாம் இடத்தில் சச்சின் டெண்டுல்கர். ஏழாம்; இடத்தில் ராகுல் ராவிட். எட்டாம் இடத்தில் ரிக்கி பொண்டிங். ஒன்பதாம் இடத்தில் இங்கிலாந்தின் கிரகாம் தோர்ப் பத்தாம் இடத்தில் மே.இ.தீவுகளின் [illegible] பார் உள்ளனர். (ம)

# ஜெரி கொலின்ஸும் மனைவியும் கார் விபத்தில் உடல் நசுங்கிச்சாவு



நியூஸிலாந்தின் ரக்பி ஜாம்பவானான ஜெரி கொலின்ஸ் கார் விபத்தில் தனது மனைவியுடன் சாவடைந்தார்.

தனது மனைவி மற்றும் மூன்று மாதக் குழந்தையுடன் தெற்கு பிரான்சில் உள்ள ஹெரால்ட் தேசிய நெடுஞ்சாலையில் காரில் சென்று கொண்டிருந்தார் ஜெரி கொலின்ஸ். எதிர்த்திசையால் வேகமாக வந்துகொண்டிருந்த பஸ் கார் மீது மோதியதில் கார் பல பாகங்களாக நொருங்கிச் சிதறியது. விபத்தினையடுத்து காரில் பயணித்த ஜெரி கொலின்ஸும் அவரது மனைவியும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

படுகாயம் அடைந்த அவரது 3 மாத குழந்தை விமானம் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பொலிஸாரின் விசாரணையில் தவறு பஸ் ஓட்டுநரிடம் என்பது தெரியவந்துள்ளது. கொலின்ஸின் மரணத்துக்கு நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் மக்கலம் உட்பட பல விளையாட்டு வீரர்களும் அரசியல் பிரமுகர்களும் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர். (ம)

# தேறப்போவது யார்?

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் புதன் கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான இந்திய வீரர்களின் உடற்தகுதிப் பரீட்சை கொல்கத்தாவில் இன்று நடைபெறவுள்ளது.

இன்றைய உடற்தேர்வு முடிந்த பின்னரே பங்களாதேஷுற்கு எதிரான இந்திய அணி அறிவிக்கப்படும். தகுதிபெறும் இந்திய வீரர்கள் பங்களாதேஷ் தொடரில் பங்கேற்பதுக்காக நாளை புறப்படுவார்கள். (ம)



பயிற்சியில் இந்திய வீரர்கள்

# சங்காவுக்கு வெற்றி சர்ரேக்கு தோல்வி

இங்கிலாந்தின் கழகங்களுக்கிடையில் தற்பொழுது நடைபெற்று வரும் ரி-20 தொடரில் சர்ரே அணிக்காக விளையாடிவரும் சங்கா எசெக்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் அரைச்சதமடித்து அசத்தினாலும் சர்ரே அணி தோல்வியடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சர்ரே அணி சங்காவின் அரைச்சத்தின் உதவியுடன் 169 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எசெக்ஸ் அணி 19.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் சங்கா அரைசசதம் கடந்திருந்த போதிலும் சர்ரே அணி தோல்வியடைந்துள்ளது. (ம)



சங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ப்பந்தயத்தில் டோனியை வீழ்த்திய ஹோக்லி

இந்திய அணியின் டெஸ்ட் அணித்தலைவர் ஹோக்லி அணித் தலைவர் டோனியுடன் கார்ப் பந்தயத்தில் மோதிய சுவாரஸ்ய மான தகவலைப் பற்றி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை டெல்லியில் பிரபல்யமான கார் நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட ஹோக்லி டோனியுடன் கார்ப்பந்தயத்தில் மோதியது தொடர்பாக தெரிவித்ததாவது ஆஸ்திரேலியா இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது டெல்லியில் நடக்கப் போகும் ஆட்டத்துக்காக நாங்கள் அங்கு சென்றிருந்தோம். அந்த சமயம் மைக்கல் ஜாக்சனின் ஆவணப் படத்தை பார்க்க முடிவு செய்திருந்தோம். இந்த நிலையில் எனக்கும் டோனிக்கும் இடையே யார் முதலில் திரையரங்கிற்கு செல்வது என்று ஒரு போட்டி வைத்தோம். அது ஒரு நடுஇரவு. டோனியும் ரெய்னாவும் ஒரு காரில் இருந்தனர். நான் ஒரு காரில் இருந்தேன். அங்குள்ள தெருவில் பறந்தோம். நான் தான் முதலில் திரையரங்கிற்கு சென்றேன் என்று தெரிவித்துள்ளார். (ம)



## பிரேசிலை வியக்க வைத்த ரஷ்யா இலட்சனை வெளியீடே அமர்க்களம்

2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால் பந்தாட்டத்துக்கான இலச்சிணையை 100 அடியளவுக்கு பிரமாண்டமாக தயாரித்து தனதுநாட்டின்மலைப்பகுதியொன்றில் காட்சிப்படுத்தியுள்ளது ரஷ்யா.

நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் சர்வதேச கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள நிலையில் ரஷ்யாவின் கால்ப்பந்து சம்மேளனமும் சர்வதேச கால்பந்து சம்மேளனமும் இணைந்து 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால் பந்து தொடருக்கான இலட்சிணையை அண்மையில் வெளியிட்டடிருந்தன. கால்ப்பந்தாட்ட உலகக்கிண்ணத்தையும் ரஷ்யாவின் உள்ளூர் இலட்சணைகளையும் கால்பந்தாட்டத்தின் பாரம்பரியங்களையும் வெளிப்படுத்தும் விதமாக இந்தக் இலட்சணை தயார்ப்படுத்தப்பட்டிருந்தது. ரஷ்யாவில் உள்ள மிகப்பிரமாண்டமான திறந்தவெளி அரங்கொன்றில் ஏராளமான மக்கள், ஊடகங்கள் சூழ்ந்திருக்க அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இலட்சிணை 100அடி உயரமுடையதாக மிகப்பிரமாண்டமான அளவில் செய்யப்பட்டு ரஷ்யாவின் பனிமலைப் பகுதிக்கு பிரத்தியேக வாகனம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு மலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவின் இந்த செயல்பாடுகளால் உலகக்கிண்ணக் கால் பந்து தொடரை கோலாகலமாக செய்த நாடுகளில் முதலிடத்தில் உள்ள பிரேஸில் தனது சாதனை தகர்ந்து விடுமோ என்ற அச்சத்தில் உள்ளது. (ம)



## இதற்காகத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா!

தேனிலவுக்காக மனைவி பிரியங்காவுடன் பரிஸ் சென்றுள்ள சுரேஷ் ரெய்னா, அங்கு எடுத்த புகைப்படங்களை தனது வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான ரெய்னா, தனது குழந்தைப் பருவ தோழியான பிரியங்கா சவுத்ரியை சமீபத்தில் திருமணம் செய்தார். ஐ.பி.எல். தொடரில் கவனம் செலுத்தி வந்த ரெய்னா, தற்போது தனது மனைவியுடன் நேரத்தை செலவிட்டு வருகிறார். இவர் தனது மனைவியை அழைத்துக் கொண்டு பரிஸுக்கு தேனிலவுக்காகச்சென்றுள்ளார். சமீபத்தில் மனைவியுடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட செல்பி புகைப் படத்தை ருவிட்டரில் பதிவேற்றி பரிஸில் காதல் அலை எனக் குறிப்பிட்டார். இதைத்தொடர்ந்து மேலும்சிலபுகைப்படங்களை ருவிட்டரில் பதிவேற்றியுள்ளார். (ம)



**கோனேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**
GERMAN LANGUAGE ACADEMY
தற்பொழுது ஜேர்மன் கல்லூரி பலாலி வீதி யில் இருந்து ஆரியகுளம் சந்திக்கு இடமாற் றப்பட்டுள்ளது. புதியபிரிவுகள் வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளன. பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்
தொடர்பு:- 077 9707322
ஆரியகுளம் சந்தி,யாழ்ப் பாணம்.

**CAR PERMIT**
யாழ் மாவட்டத்தை தளமாகக் கொண்ட எமது வாகன இறக்குமதி நிறுவனத்தினால் வாகன பெமிட் (Car Permit) கொள்வனவு செய்யப்படுகின்றது
(நீங்கள் கொழும்பு செல்ல வேண்டிய அலைச்சல் இல்லை)
Contact: Dr Suman T.P: 0773 169433
AQUA HOLDING INTERNATIONAL (PVT) LTD
Direct Importers of All Kind of Motor Vehicles

**இந்திய சாஸ்திரியார் வருகை**
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
இல.424/11, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (சிவன் கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
T.P: 072 681 6681, 072 681 6691
(57712) (4.3.6)

**MBA**
MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT
Duration : 1 year
New Batch Starts on 14.06.2015
ADMISSION REQUIREMENTS
- A Bachelor Degree - must be from a recognized University or College.
- An Accepted Professional Qualification
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.
ACCREDITED AND UGC APPROVED
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna.
Tel: 021 222 8060
Web: www.iis.edu.lk
மேலதிக விபரங்களுக்கு : 071 777 4555

**பதவி வெற்றிடம் Ceylinco VIP இல்........**
கிளை:- யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம், அச்சுவேலி, பருத்தித்துறை
தகைமை:- O/L, A/L
நேர்முகத்தேர்வு நடைபெறும் காலம்:- 09.06.2015 9.00am
நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:-Ceylinco VIP பிரதான காரியாலயம், யாழ்ப்பாணம்.
குறிப்பு:- நேர்முகத்தேர்வாளர் மேற்படி கிளைகளுக்கு அருகில் வசிப்பது விரும்பத்தக்கது.
Ceylinco VIP Jaffna Branch
173, Stanly Road, Jaffna
021 222 6257

**விரைவான வேலை நிறைவான இலாபம்**
ஜூஸ் பக்கெட் மெசின்
1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்
பக்கட்டுகளை தயாரிக்கலாம்
WINRICH
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

**அலுவலகத்துக்கான இடம் உடனடியாக வாடகைக்குத் தேவை**
சர்வதேச அமைப்பொன்றின் அலுவலகத்துக்கான இடம் வவுனியா நகர்ப்புற எல்லைக்குள் வாடகைக்கு உடனடியாக தேவை.
ஆகக்குறைந்தது பத்து அறைகள், பத்து வாகனங்களுக்கான தரிப்பிட வசதி மூன்று நிலை மின்சாரம், குழாய் நீர் வசதி, வெளிப்புற சுற்றுமதில் என்பவற்றினை உள்ளடக்கியதாக அமைந்திருக்க வேண்டும்.
மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி 077 3157703
024 222 2875 (அலுவலக நாள்களில் மட்டும்) இற்கு தொடர்பு கொள்ளவும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகளவிலான வேலை வாய்ப்புக்களை உடைய தகவல் தொழில்நுட்ப
**வெளிவாரி பட்டப்படிப்பு**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
க.பொ.த சா.த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்க முடியும். வேலை தேடுவோர், பதவி உயர்வுக்கு விணைப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது. வீரிவுரைகள் வார, வாரஇறுதி, மாலை ஞாயிறு மட்டும் என் மூன்று பிரிவுகளாக நடைபெறும்.
புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்குType BIT<Name> & send to 772395895
MCS யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 07.06.2015



# வெளிப்படும் ஈழத்தமிழரின் தொன்மை

பேரா.சி.பத்மநாதன்

P-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியா சி.பத்மநாதன்
வேந்தர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வெல்லாவெளியில் நாகரின் தொல்பொருட் சின்னங்கள்








மட்டக்களப்பு மாவட்டத்துப் போரதீவுப் பற்றிலுள்ள மிகவும் புராதனமான ஊர்களிலொன்று வெல்லாவெளி. அது முன்னாள்களில் நாதனை வன்னியனாரின் ஆட்சியின் கீழமைந்த ஊர்களில் ஒன்று. அங்குதான் சில வருடங்களுக்கு முன் தமிழ் பிராமி சாசனங்கள் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டு அடையாளங் காணப்பட்டன. அவற்றை முன்பு சிலர் கண்டுள்ளனர். புகைப்படங்களையும் எடுத்துள்ளனர். ஆனால் பலரின் கவனத்துக்கு வரவில்லை.

இந்த நிலையில் நாவற்குடாவில் உள்ள இந்து கலாசார நிலையத்திற்குப் பொறுப்பாக இருக்கும் எழில்வாணி பத்மகுமாரின் முயற்சியால் அவை மீண்டும் அடையாளங் காணப்பட்டு தென்னிந்திய தொல்லியலாளர்களான சு.இராசகோபால், வே.வேதாசலம், சொ.சாந்தலிங்கம் போன்றோரின் ஆதரவுடன் வாசிக்கப்பட்டன. இந்த வாசகங்களைப் பதிவு செய்து எமது விளக்கங்களோடு வெளியிட்டோம். கிறிஸ்துவுக்கு முன் முதலிரு நூற்றாண்டுகளில் வெல்லாவெளியில் தமிழ் மொழி வழங்கியமைக்கு இவை உறுதியான சான்றுகளாகிவிட்டன.

வெல்லாவெளியின் வடமுனையில் இருவேறிடங்களில் இருபத்துக்கும் மேலான தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் சென்ற ஆறு மாத காலத்திற் கண்டுபிடிக்கப்பட்டன. எழில்வாணி பத்மகுமாரின் முயற்சியால் இவையும் கண்டுபிடிக்கப்பட்டுப் படம் எடுக்கப்பட்டன. இவற்றின் மூலம் வெல்லாவெளியிலே தமிழ்மொழி வழக்கின் தொன்மை பற்றி ஏற்கனவே கூறியவை உறுதியாகிவிட்டன. மேலும் தமிழ்மொழியைப் பேச்சு வழக்கு மொழியாகக் கொண்ட சமூகம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுகளிலேயே அங்கு உற்பவித்துவிட்டமை தெரியவந்துள்ளது. அத்துடன், அவர்கள் வெல்லாவெளியை மையமாகக் கொண்ட சிற்றரசு(வேள்புலம்) ஒன்றினையும் அமைத்திருந்தனர் என்பது உறுதியாகின்றது.

எழில்வாணி சென்று பார்த்து அடையாளங் கண்ட 14 கல்வெட்டுகள் மலைப் பாறையில் அமைந்தவை. அவற்றைப் பற்றி வேறோர் இடத்தில் விளக்கியுள்ளோம். அவர் மிக அண்மையிற் கண்டுபிடித்த கல்வெட்டுகள் குடியிருப்பு பகுதியில் உள்ளன. சாசனம் எழுதிய, எல்லாமாக ஆறு உருப்படிகள் வீடொன்றிற்குரிய வளவிலே காணப்படுகின்றன.





சாசனங்கள் தமிழ்ப் பிராமி வரிவடிவங்களிலும் தமிழ் மொழியிலும் எழுதப்பட்டுள்ளமை அவற்றின் ஓர் சிறப்பம்சமாகும். நாகரின் சமய, பண்பாட்டு வழமைகள் பற்றிய சிற்ப வடிவங்கள் அமைந்துள்ளமை அவற்றின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.வாசகர்கள்அவற்றை இலகுவிற் புரிந்துகொள்வதற்குப் புதிதாக கண்டுபிடிக்கப்பெற்ற உருப்படிகளை இலக்கமிட்டு, அவற்றை சுருக்கமாக இங்கு வர்ணிப்பது பொருத்தமாகும்

1. எட்டுத் துண்டமான கருங்கற்களை அடுக்கிச் சற்றுக் கூம்பிய வடிவிலமைந்த உருப்படியில் சில சொற்கள் காணப்படுகின்றன. அவை தமிழ்ப் பிராமி வரிவடிவங்களில் அமைந்த தமிழ்ச் சொற்கள். "மணிணாகன் பள்ளி" என்ற பெயர் தெளிவாகத் தெரிகின்றது. "வேள்ணாகன் மகன் வேள் கண்ணன் மகன் வேள்ணாகன்" என்ற ஓரளவு நீளமான வசனம் எழுதப்பட்டுள்ளது.

இதில் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த வேளிர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேள்ணாகன், வேள் கண்ணன், வேள்ணாகன் என்போரே அவர்கள். அவர்களில் இறுதியாகச் சொல்லப்படும் வேள்ணாகன் என்பவனே இங்கு குறிப்பிட்ட மணிணாகன் பள்ளியை அமைப்பித்திருக்க வேண்டும். நாகர்கள் நாகபாம்பினை வழிபடும் வழக்கம் உடையவர்கள். தாம் வழிபடும், தெய்வீகமானதென்று கொள்ளப்படும் நாகத்தை மணிணாகன் என்று குறிப்பிட்டனர். மணிணாகன் பள்ளி கொள்ளும் இடத்தை மணிணாகன் பள்ளி என்றனர் அதனைப் பல்வேறு வடிவங்களில் அமைத்தனர் என்பது அண்மையிலே கண்டு அடையாளப் படுத்திய நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் மூலம் அறிய முடிகின்றது.

தமிழிற் குற்றிடங் கொண்டார் என்ற தொடர் சைவசமயம் தொடர்பானது. அரவங்கள் புற்றில் வாழ்வதால் இங்கு வர்ணிக்கப்படும் மணிணாகன் பள்ளி பாம்புப் புற்றினைப் போன்ற வடிவில் அமைக்கப்பட்டது எனக் கருதலாம்.

2. இரண்டாவது உருப்படி நன்கு செதுக்கி, மெருகூட்டப்பட்ட பளபளப்பான வட்டவடிவமான கல்லாகும். அது ஒரு கல் மூடி போன்றது. அது ஒரு வட்டமான கல்லறையின் மூடி. அருகில் அவ்வாறான கல்லறை தெரிகின்றது. இதனைப் போன்ற மூடிகள் பல்வேறிடங்களிலும் கிடைத்துள்ளன. இந்தக் கல்லில் மணிணாகன் பள்ளி என்ற பெயரும் வேள்ணாகன் மகன் வேள்கண்ணன் மகன் வேள்ணாகன் என்ற வசனமும் எழுதப்பட்டுள்ளன. புற்று வடிவமான மணிணாகன் பள்ளியினை அமைப்பித்த வேள்ணாகனே வட்டவடிவமான, நிலத்தின் கீழ்வெட்டிய கல்லறையான வேள்ணாகன் பள்ளியினையும் உருவாக்கியுள்ளான்.

3. மூன்றாவது உருப்படி, முன்னே குறிப்பிட்ட வட்டவடிவமான கல்லறை. பெருங்கற்கால மக்கள் நிலமட்டத்தின் கீழ் கற்பாறையினை வெட்டி நீள் சதுரமான கல்லறைகளை அமைக்கும் வழக்கமுடையவர்கள். மணற்பாங்கான இடங்களில், ஈமக் கல்லறைகளை, வட்டமான செங்கல் வளையங்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, அவற்றுள்ளே சடலங்களையோ ஈமத்தாழிகளையோ புதைத்தனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் அருகிலுள்ள தீவுப்பற்றில் இவ்வாறான கட்டமைப்புக்கள் உள்ளன. வட்டவடிவமான கல்லறை அமைப்பிலுள்ள மணிணாகன் பள்ளிகள் படுவான்கரை மேற்கு பகுதியில் சில இடங்களில் இருந்தன. அவற்றின் சில கல் மூடிகளை இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன் எடுத்துவந்து சித்தாண்டி, வந்தாறுமூலை, மாவடி வேம்பு என்னும் இடங்களிலுள்ள கோயில்களில் வைத்துள்ளனர். அவை தேங்காய் அடிப்பதற்கும் கர்ப்பூரம் எரிப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.

4. வெல்லாவெளியிலுள்ள நான்காவது சின்னம் ஒரு சதுரக் கல். அதிலும் மணிணாகன் பள்ளி என்று எழுதப்பட்டுள்ளது. அதில் ஆறு தலைமுறைகளைச் சேர்ந்த வேளர்களைப் பற்றி மேல்வருமாறு எழுதப்பட்டுள்ளது!

1. வேள் ணாகன் மகன் வேள் கண்ணன்
2. வேள் கண்ணன் மகன் வேள் ணாகன்
3. வேள் ணாகன் மகன் வேள் கண்ணன்
4. வேள் கண்ணன் மகன் வேள் ணாகன்
5. வேள் ணாகன் மகன் வேள் ணாகன்

நாகரிடையில் வேள் என்னும் பதவி தந்தையும் பின் மகனும் என்ற வழியிற் சாசனம் வழி உரிமையானது என்பதற்கு இந்தக் கல்வெட்டு ஓர் உறுதியான சான்றாகும்.

5. வெல்லாவெளியிற் காணப்படும் ஐந்தாவது சின்னம் தலைப் பாகத்திலே குதிரையின் வடிவம் செதுக்கப்பெற்ற கருங்கற் தூணாகும். குதிரை வடிவம் நாகருக்கும் பெருங்கற் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பினைக் குறிப்பது. இலவாணை வேரத்து நாகான் கட்டுமானமாகிய கிணற்றுக் கட்டின் நாகபந்தமான அமைப்பில் அலையின் தலைப்பாகத்திலே இடையிடையே குதிரை வடிவங்கள் காணப்படுகின்றன. கந்தரோடையிலும் சாட்டி (வேலணை)யிலும் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களோடு குதிரை எலும்புகள் கிடைத்தமையும் இங்கு குறிப்பிடற்குரியது.

குதிரையின் அருகில், சற்றுக் கீழே வல, இடப்புறங்களிற் சிங்க உருவங்கள் தெரிகின்றன.

இந்தக் கல்லிலே மணி நாகன் பள்ளி என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது. ஐந்து தலைமுறைகளைச் சோந்த வேளிரின் பெயர்களைக் குறிப்பிடும் சாசனம் மேல் வருமாறு அமைந்துள்ளது.

வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் மகன் வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் மகன் வேள் ணாகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரன்




# சிறுபான்மைக்கு எதிராக சிங்களப் பேரினவாதிகளை தூண்டி விடும் கைங்கரியம்

சிங்கள பேரினவாத அமைப்புக்களைச் சிறுபான்மையினருக்கு எதிரான சம்பவங்களுக்கு தூண்டிவிட்டு, அதில் தாம் அரசியல் நடத்துவதற்குக் கடந்தகால ஆட்சியாளர்கள் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு வந்தனர். அதன் ஓர் அங்கமே பொரளை ஜும்மா பள்ளிவாசல் மீதான தாக்குதல்.

பொரளை, ஜும்மா பள்ளிவாசல் கடந்த சனிக்கிழமை இரவு தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. தம்மை எவரும் அடையாளம் காண முடியாதவாறு முகத்தை மூடிக்கட்டிக்கொண்டு வந்த நான்கைந்துபேர் கல்வீச்சு நடத்தி பள்ளிவாசலின் கண்ணாடியையும் ஜன்னல்களையும் சேதமாக்கிவிட்டு பேஸ் லைன் வீதியில் தயாராக நின்ற காரில் தப்பித்துச் சென்றுவிட்டனர். தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும். இப்படியான சம்பவங்கள் இனியும் தொடரக் கூடாது.

மஹிந்த ஆட்சியின்போது இடம்பெற்ற பள்ளி வாசல்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுடன் ஒப்பிடும்போது பொரளை ஜும்மா பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் பெரிய சம்பவம் அல்ல. ஆனால் இன்னும் ஒரு சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள சமயம் இது இடம்பெற்றிருப்பதால் இதனை சிறிய சம்பவமாக நாம் கருத முடியாது. இதன் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த முஸ்லிம்களின் வாக்குகளைத் திருப்பும் நோக்கம் கொண்டதாகவும் இருக்கலாம். இப்பள்ளிவாசல் நிர்வாகத்தில் அதிருப்தி கொண்டவர்களை அரசியல் நோக்கம் கொண்ட தீய சக்திகள் பயன்படுத்தியும் இருக்கலாம். ஆகவே அரசு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து உண்மையை வெளிக் கொணர வேண்டும்.

மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. முஸ்லிம் பெண்களின் உடை கள் விமர்சனத்துக்குள்ளாகின. ஹலால் பிரச்சினையை முன்

> "சிங்கள பேரினவாத அமைப்புக்களைச் சிறுபான்மையினருக்கு எதிரான சம்பவங்களுக்கு தூண்டிவிட்டு, அதில் தாம் அரசியல் நடத்துவதற்குக் கடந்தகால ஆட்சியாளர்கள் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.



வைத்து முஸ்லிம் மக்கள் பல வழிகளிலும் துன்புறுத்தப்பட்டனர். முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டன. தொலைக்காட்சிகளில் பள்ளிவாசல் தாக்குதல்காரர்களை அனைவரும் அடையாளம் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. எவரும் கைது செய்யப்படாததால் மஹிந்த அரசும் இதற்கு ஆதரவு என்பதே வெளிப்படையான உண்மை. இதற்கான அறுவடையைத்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த பெற்றுக்கொண்டார்.

தற்பொழுது மைத்திரி ஆட்சியில் இடம்பெற்ற முதலாவது சம்பவம் பொரளை ஜும்மாப் பள்ளிவாசல் மீதான தாக்குதல். இத்தாக்குதலுக்கு இரு விடயங்கள் காரணமாக இருக்கலாம். ஒன்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பொதுத் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளைத் திசைதிருப்பும் நோக்கம் கொண்டதாக இருக்கலாம். அடுத்தது, மியன்மார் முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவித்து கடந்த வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையின் பின்னர் கிழக்கு மாகாணத்திலும் தலைநகரிலும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாக இருக்கலாம். மியன்மாரின் 969 அமைப்பின் தலைவர் விராது தேரர் பொதுபலசேனாவுடன் மிகவும் நெருக்கமானவர். முஸ்லிம் மக்களின் பரம எதிரி. மியன்மாரில் உள்ள பங்களாதேஷ் வம்சாவளியினரான றோஹிங்யா முஸ்லிம்களை முற்றாக அழித்தொழிக்கும் நோக்கத்துடன் செயற்படுபவர். அதனால் தான் பௌத்த கடும் போக்குச் சக்திகள் குறித்தும் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

நாட்டில் தற்போது இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் குறித்து புதிய அரசிடம் அதிகம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

புதிய அரசின் அணுகுமுறையால் சிறப்பாக இடம்பெற்றுவரும் சிவில் செயற்பாடுகளைக் குழப்பியடித்து குளிர் காய்வதற்கு தீய சக்தி ஒன்று புறப்பட்டிருக்கிறது. இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் புதிய அரசுக்கு எதிரான தோற்றப்பாட்டை உண்டு பண்ணி, அதன் மூலம் அந்த அரசைப் பதவியில் இருந்து கவிழ்த்து, தாம் ஆட்சிபீடம் ஏறுவதற்கு சில இனவாதத் தலைமைகள் கங்கணம்கட்டிச் செயற்பட்டுவருகின்றன. இதற்காக மக்களிடையே இன, மத வன்முறைகளைத் தூண்டிவிட்டு மோதல்களை உருவாக்கி அதன் மூலம் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதைப் பார்ப்பதற்குச் சிலர் ஆசைப்படுகின்றனர். அவ்வாறா னவர்களின் செயற்பாடே இந்தப் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களின் பின்னணி என்பது பலருக்கும் தெரியாத தொன்றல்ல.

கடந்த மஹிந்த அரசின் ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்த போதிலும்அது தொடர்பில் ஆட்சியில் இருந்த அரசு அக்கறை எதனையும் காட்ட வில்லை. இதன்மூலம் இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் அந்த அரசே செயற்படுகின்றது என்பது மக்களுக்குத் தெளிவாக விளங்கியது.

கொழும்பில் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். பொரளை பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் அனைத்து முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவத்துக்குச் சமனானது. மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் மஹிந்தவின் ஆட்சிக்கு ஆதரவாக இருந்தன. முஸ்லிம் அமைச்சர்களும் இருந்தனர். தாக்க தலைப் பகிரங்கமாக நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாததுதான் அப்பொழுது மஹிந்த ஆட்சி செய்த பெரிய தவறு.

சிங்கள பேரினவாதஅமைப்புக்களைச் சிறுபான்மையினருக்கு எதிரான சம்பவங்களுக்கு தூண்டிவிட்டு, அதில் தாம் அரசியல் நடத்துவதற்குக் கடந்தகால ஆட்சியாளர்கள் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதே நிலைமையைத் தற்போதுள்ள புதிய அரசின் காலத்திலும் உண்டுபண்ணி, அதன்மூலம் தாம் ஆட்சிக் கதிரையைப் பிடிப்பதற்கு இவ்வாறான குறுக்குவழிகளைச் சில சிங்கள அரசியல் தலைமைகள் இப்போதும் கையாண்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஸ்மார்ட்' சட்டை

'ஸ்மார்ட்' செல்பேசி தொடுதிரையைப் பாருங்கள். அது உங்கள் விரலின் மொழிகளை எப்படி எல்லாம் புரிந்துகொள்கிறது. தொட்டால் இருக்கிறேன் என்கிறது. குறுக்கே விரலால் கோடு கிழித்தால் திறக்கிறது. நேர்க் கோடு கிழித்தால் ஓர் அர்த்தம் சொல்கிறது. அதற்கு எதிர் திசையில் கோடு கிழித்தால் வேறோர் அர்த்தம் சொல்கிறது.

## காதல் 'ஸ்கிரீன்'

தொடுகையின் மொழியை விதவிதமாக வெளிப் படுத்தத் தெரிந்தவர்கள் காதலர்கள் மட்டுமல்லர்; டச் ஸ்கிரீனும்தான். உங்களின் விரல்களுக்குள் அடங்கும் வித மாக உள்ள 'ஸ்மார்ட்' செல்பேசி தொடுதிரையே மற்றவர்களின் கண்களுக்குப் புலப்படாத வகையில் உங்களின் சட்டையில் கலந்திருந்தால் எப்படி இருக்கும்? உங்களின் சட்டையின் முன்கைப் பகுதியிலோ முன்புறத்திலோ உள்ள துணியை ஒரு ஸ்மார்ட் போனின் தொடுதிரைபோலக் கையாண்டால் எப்படி இருக்கும்?

## 'ஸ்மார்ட்' சட்டைகள்

எதிர்கால ஆடைகளில் இந்த தொழில்நுட்பம் வரப்போகிறது. கூகுள் நிறுவனம் பிரபலமான ஆடை நிறுவனங்களுடன் இணைந்து இந்தப் புதுமையான திட்டத்தைத் தயாரித்து வருகிறது. இதற்கான ஆய்வுகள் இன்னமும் ஆரம்ப நிலையிலே இருந்தாலும், மும்முரமான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. பருத்தியோ, செயற்கையான நூல் இழைகளோ துணியாக நெய்யப்படும் போது தனித்துவமான உலோக இழைகளும் அவற்றோடு சேர்த்து நெய்யப்படும். அந்தத் துணிகளை வைத்து உடைகள் தயாரிக்கப்படும். அதில் ஒரு 'எலக்ட்ரொனிக் சர்க்யூட்டும் வைக்கப்படும். அந்தச் சட்டைகள் செல்பேசி அலைகளை உள்வாங்கக் கூடியதாக இருக்கும். உங்கள் விரல்களின் தொடு மொழியை நன்கு புரிந்துகொண்டு உங்கள் சட்டை பதிலளிக்கும். உங்கள் 'ஸ்மார்ட்' செல்பேசியோடு இணைந்து சட்டை செயல்படும்.

இதன் மூலம் என்ன பயன் என்கிறீர்களா, செல்பேசியை சட்டைப் பைக் குள்ளேயே வைத்துவிட்டு சட்டையில் அல்லது காற்சட்டையில் உள்ள தொடுதிரை மூலமே அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் ஒவ்வொரு தடவையும் செல்பேசியை எடுத்து எடுத்தே பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டாம்.

அலாவுதீன் விளக்கிலிருந்து புறப்பட்ட அற்புதமான பூதத்தைப் போலக் கணினித் துறையிலிருந்து மென்பொருள் தொழில்நுட்பம் கிளம்பியது. பல்வேறு துறைகளிலும் இப்போது ஆதிக்கம் செலுத்துகிறது. அந்த ஆதிக்கம் மேலும் மேலும் விரிவடையும். எதிர்காலச் சட்டைகளும் அதற்கு விதிவிலக்கு அல்ல. எப்போது கிடைக்கும் எனக்கு அந்த டச் ஸ்கிரீன் சட்டை என்கிறீர்களா? முதலில் இதைப் பார்த்து ரசிங்க: Google plans on turning your clothes into touchscreens

## 'அப்பிள்' அருமை அறியாப் பெண்மணி

அப்பிள் அபிமானிகள் அதன் பழைய கணினிகளைத் தூக்கி எறிந்துவிடுவதில்லை. பொக்கிஷங்களாக அவற்றைப் பாதுகாப்பார்கள். அதிலும் ஆரம்ப கால அப்பிள் கணினி என்றால் கேட் கவே வேண்டாம்.

இப்படிப் பொக்கிஷமாகக் கருதப்படும் ஆரம்ப கால அப்பிள் கணினி ஒன்றை அமெரிக்கப் பெண்மணி ஒருவர் அதன் அருமை தெரியாமல் மறுசுழற்சி மையத்தில் பழைய குப்பைகளோடு கொடுத்துச் சென்றிருக்கிறார். கலிபோர்னியாவில் அமைந்துள்ள 'கிளின் பே ரீசைக்ளிங்' என்னும் அந்த மறுசுழற்சி உடனே அந்தக் குப்பைகளைப் பிரித்துப் பார்க்காமல் கிடப்பில் போட்டுவிட்டது. பின்னர் எடுத்துப் பார்த்தபோதுதான் அதில் மிகவும் அரிதான அப்பிள்–1 கணினி இருப்பது தெரிய வந்தது.



அப்பிள் நிறுவுநர்கள் மறைந்த ஸ்டீவ் ஜாப்ஸ் மற்றும் ஸ்டீவ் வாஸ்னியோக் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டு அவர்கள் கைப்பட உருவாக்கப்பட்ட இந்தக் கணினிகள் மொத்தமே 200தான் தயாரிக்கப்பட்டன. இவற்றில் மிகச் சில மட்டுமே எஞ்சியிருப்பதாகக் கருதப்படுகிறது. இவற்றில் ஒன்றான இந்த அரிய கணினியை பழம்பொருள் சேகரிப்பாளர் ஒருவருக்கு 2 லட்சம் டொலர்களுக்கு விற்றுள்ளது மறுசுழற்சி மையம். மையத்தின் கொள்கைப்படி இதன் மூலம் கிடைத்த தொகையில் பாதியை ( ஒரு லட்சம் டாலர்) ஒப்படைப்பதற்காக அந்தப் பெண்மணியைத் தேடிக் கொண்டிருக்கிறது. இதற்காக வீடியோ பதிவு ஒன்றையும் உருவாக்கித் தனது தளத்தில் வெளியிட்டுள்ளது.

## துயில் எழுப்பும் நறுமணம்

காலையில் சரியான நேரத்தில் கண் விழிக்க யாராவது தேவையா? கையில் இருக்கும் 'ஸ்மார்ட்' பேசியிலேயே இப்போது குரல் எழுப்பியை வைத்துக்கொள்ளலாம்.

இதற்காக என்றே குரல் எழுப்பிச் செயலிகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அப்படி இருக்க, இதற்காக என்றே ஒரு தனி சாதனத்தை வடிவமைத்திருக்கிறார் பிரான்ஸ் வாலிபர் கிலாமே ரோல்டண்ட் (Guillaume Rolland). சென்சார்வேக் எனும் இவரது சாதனத்தில் என்ன விசேடம் என்றால் இதில் ஒலி வராது. மாறாக நறுமணம் உண்டாகும். அதாவது, ஒருவர் கோப்பிப் பிரியர் என்றால் காலையில் குறிப்பிட்ட நேரத்தில் கோப்பியின் மணம் தோன்றச் செய்யலாம். ஆக, காலையில் குரல் எழுப்பிக்குப் பதிலாக கோப்பி மணம் வீசித் துயிலெழுப்பும். இப்படி விருப்பமான பல நறுமணங்களை நாம் அந்தச் சாதனம் மூலம் வருவித்துக் கொள்ளலாம்.

கூகுள் நிறுவனத்தின் விஞ்ஞானப் போட்டிக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சாதனம் இப்போது 'கிக் ஸ்டார்ட்டர்' தளத்தில் நிதி உதவி கோரி வந்திருக்கிறது.




## நல்லதும் செய்யும் இணையம்




இணையத்தில் கேலிக்கு ஆளாகித் தலை குனிந்து நின்ற மனிதர் இணைய வெற்றிக் கதையாகி இருக்கிறார். பிரிட்டனைச் சேர்ந்த சீன்ஓ பிரைன் உடல் பருமன் அதிகம் கொண்டவர். அவர் ஒரு நடன நிகழ்ச்சியில் பங்கேற்க விண்ணப்பித்தபோது இணையத்தில் சிலரால் கேலி செய்யப் பட்டார்.

அவர் நடனமாடும் ஒளிப்படமும், கேலி வாசகங்களும் இணையத்தில் வெளியாயின. ஆனால் அதன் பிறகு நடந்ததுதான் இணைய அற்புதம். உடல் பருமன் காரணமாகக் கேலி செய்யப்பட்ட அவருக்கு ஆதரவாக டிவிட்டரில் குறும் பதிவுகள் குவிந்தன.

உடல் அமைப்பு நடனமாடும் ஆர்வத்துக்குத் தடையாக இருக்கக் கூடாது என இணையவாசிகள் அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். அமெரிக்காவைச் சேர்ந்த காஸண்ட்ரா பேர்பேங்க்ஸ் எனும் எழுத்தாளர், சீன் ஒவுக்கு பிரத்தியேக நடன நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதாகக் கூறி அவர் அடையாளத்தை வெளிக்காட்டுமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த ஆதரவால் நெகிழ்ந்த சீன்ஓ தன்னை டிவிட்டரில் வெளிப்படுத்திக்கொண்டார். அவருக்காகத் திட்டமிடப்பட்ட நடன நிகழ்ச்சி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல் ஸில் கோலாகலமாக நடந்திருக்கிறது. சீன்ஓ உற்சாகமாக நடனமாடியிருக்கிறார். அவரைக் கேலி செய்தவர் களை இணையம் தலைகுனிய வைத்துவிட்டது.

## 'ஸ்மார்ட் கார்'

எதிர்கால நகரங்களுக்கு ஏற்ப ஸ்மார்ட் கார்களை தயாரிக்க பல்வேறு கார் தயாரிப்பு நிறுவனங்களும் முயற்சி செய்து வருகின்றன. சாரதி இல்லாத கார், சோலர் கார், பறக்கும் கார் என பல முயற்சிகளும் நடந்து வருகின்றன. அந்த வகையில் ஜெர்மனியைச் சேர்ந்த பெர்மன் பல்கலைக்கழக ரோபோ துறையினர் ஒரு 'ஸ்மார்ட்' காரை வடிவமைத்துள்ளனர். இரண்டு பேர் பயணிக்கும் விதமாக உள்ள இந்த காரின் சக்கரங்கள் 90 டிகிரிவரை சுழலும். இரண்டு கார்களுக்கு இடையில் உள்ள சிறிய இடத்திலும் இதன் மூலம் தரித்துவிட முடியும்.

மேலும் இந்தக் காரின் பின்புறம் இன்னொரு 'ஸ்மார்ட்' காரை இணைக்க முடியும். இதேபோல ஒவ்வொரு காருக்கு பின்புறமாக பல கார்களை இணைத்துக் கொள்ளலாம். தேவைப்படும் நேரத்தில் இடையில் ஒரு கார் மட்டும் கழற்றிக் கொள்ளவும் முடியும். மீண்டும் பிற கார்கள் இணைந்து கொண்டு ஓடும்.

காரின் அனைத்து செயல்களும் சென்சார் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. காருக்குள் அனைத்தும் டிஜிட்டல் தொழில்நுட்பம் என்பதால் செல்ல வேண்டிய இடத்தை குறிப்பிட்டுவிட்டு அமர்ந்தால் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் அன்புக்கு ஈடு இணை கிடையாது



அந்த 47 வயதான தாயார் ஆர்டிசம் என்ற உடல் பருமன் நோயாலும் மூளை வாதத்தினாலும் பாதிக்கப்பட்ட தனது இரு புதல்வர்களான இரட்டைச் சகோதரர்களை இருபது வருட காலமாக பெரும் போராட்டங்களுடன் வளர்த்து வருகின்றார். இந்தத் தாய் தனது புதல்வர்களுக்காகச் செய்துள்ள தியாகம் குறித்து நாடு முழுவதும் செய்தி பரவியதால் அந்தத் தாய்க்கு அனைவரது அன்பும், ஆதரவும் அமோகமாகக் கிடைக்கத் தொடங்கியிருக்கிறது.

மாஷிக்கியூ என்ற அந்த தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் 21 வருடங்களுக்கு முன் குறைப்பிரசவத்தில் பிறந்தன. ஒரு பையனுக்கு ஷாங் இங்ன், மற்றவனுக்கு ஷாங்யுவான் ஜினி என்று பெயர். எந்த ஒரு தாய்க்கும் குழந்தையொன்று பிறந்தால் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவது வழமைதான். ஆனால் மாஷிக்கு வாழ்க்கை தலை கீழாக மாறிவிட்டது.

தனது பிள்ளைகளின் மாற்ற முடியாத நோய்களைக் கண்ட கணவன் மன அழுத்தத்துக்குள்ளானார். கணவன்–மனைவி விவாகரத்து செய்து கொண்டார்கள். மாஷி தனது நல்ல வருமானம் தரும் தொழிலையும் கைவிட்டுதன் பிள்ளைகளை வளர்க்கும் பணியில் இறங்கிவிட்டார். தாமே எதனையும் செய்து கொள்ள முடியாத பிள்ளைகளை அருகில் இருந்து கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாள் பொழுதும் பெரும் போராட்டத்துடனேயே கழிந்தது.

ஹங்குயின் என்ற பையனின் எடை 250 கிலோ. படுக்கையில் இருந்து எழவோ எவருடனும் தொடர்பாடல் நடத்தவோ முடியாது. ஒவ்வொரு நிமிடமும் பிறரின் உதவி தேவை அவனுக்கு. இவ்வளவு கஷ்டங் களுக்கு இடையிலும் தனக்கு கவலைகள் இல்லை என்று மாஷி கூறுகின்றார்.



"மூத்தவன் ஹங்குயின் மூளை வாதத்தின் தாக்கத்தால் அதிகம் பாதக்கப்பட்டவனாய் இருக் கிறான். வீட்டில் அவனால் தன்பாட் டில் நகர முடியாது. இருந்தாலும் அதிஷ்ட வசமாக யுவான் ஜினால் தன்னைத்தானே பார்த்துக் கொள்ள முடிகிறது. சிறிது எனக்கும் உதவியாக இருக்கிறான். இருவரும் அழகாய் இருக்கிறார்கள். நான் எதைப் பற்றியும் கவலை கொள்வதில்லை" என்றார்.

சீனாவின் வடகிழக்கில் லியாவோனிங் மாகாணத்தில் ஷான்யாங் நகரில் இந்த குடும்பம் வாழ்கின்றது.

பையன்கள் நோய்வாய்ப்பட்டவர்களாய் இருந்தாலும் மாஷி அவர்களை உற்சாகப்படுத்தி ஆதரவளித்து வருகிறார்.

யுவான்ஜின் நல்ல பாடகன். நாட்டில் ல இடங்களிலும் நடைபெறுகின்ற ாட்டுப் போட்டிகளில் கலந்து காள்கின்றான். அந்த வகையில் ல பரிசில்களையும் வென்றிருக் றான். இத்தாலி, ரஷ்ய மொழி ளிலும் சில சாஸ்திரிக பாடல் ளைப் பாடி வருகிறான். அவன் பியானோ வாசிப்பதிலும் ஆர்வம் உள்ளவன். ஒரு சிறுவர் நலன்புரிச் சங்கத்தில் இலவசமாக சமீப காலத்தில் அவனுக்கு பயிற்சியளிக்கிறார்கள். அங்குள்ள ஆசிரியர்கள் பியானோ ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார்கள். அதில் வீட்டில் பியானோ வாசித்துப் பழக முடிகிறது. "பியானோ வாசிக்காமல் அல்லது பாட்டு பாட போகாமல் இருக்கும் வேளைகளில் அவன் வீட்டில் எனக்கும் வேலைகளில் உதவுகின்றான்" என்கிறார் அவனது தாயார் மாஷி.

தமையனைக் கவனித்துக் கொள்வதிலும் ஈடுபடுகின்றான். "நான் நெடுங்காலம் தொடர்ந்து வாழப் போவதில்லை, அதனால் அண்ணனை எவ்வாறு பார்த்துக் கொள்வது என்பதில் அவனுக்கு பயிற்சி அளித்து வருகிறேன். தன்னையும் சகோதரனையும் எவ்வாறு கவனித்துக் கொள்வது என்பதை விரைவில் கற்றுக்கொள்வான் என்று நம்புகிறேன்" என்றார் மாஷி.

மாஷி தனது பிள்ளைகள் மீது காட்டுகின்ற அன்பும் அர்ப்பணிப்பும் நாட்டு மக்கள் மனங்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன. சமூக வலையமைப்புக்களில் அவருக்கு பாராட்டும் உதவியும் குவிந்த வண்ணமிருக்கின்றன என்று செய்திகள் கூறுகின்றன.




# கருணைக் கப்பலில் நடந்த 12 மணிநேர அறுவைச் சிகிச்சை




## கழுத்தில் இருந்த 16 இறாத்தல் சதைக்கட்டி அகற்றப்பட்டது

நாற்பதாண்டு காலம் சம்பானி தனது கழுத்தில் வளர்ந்த ஒரு கட்டியுடன் வாழ்ந்துள்ளார். அதன் பாரம் 14 இறாத்தல். ஒரு மனிதனின் தலையின் அளவு பெரியது. இவ்வளவு காலத்துக்குப் பிறகு கருணை உள்ளம் படைத்தவர்களின் ஆதரவில் 12 மணி நேரம் நடைபெற்ற ஒரு அறுவைச் சிகிச்சையின் பின்னர் அந்தக்கட்டி அகற்றப் பெற்று சுகமடைந்துள்ளார்.

இந்த அறுவைச் சிகிச்சையானது வாழ்க்கையை மாற்றி அமைப்பதற்கான ஒரு மாபெரும் சாதனையாகக் கருதப்படுகின்றது. இந்த அதிசயம் டோம் சினா என்ற பகுதியின் கிழக்குத் துறைமுகத்தில் நிகழ்ந்தது. அங்கே நங்கூரமிட்டிருந்த (மேர்சி ஷிப்) கருணைக் கப்பலில் இது நிகழ்ந்துள்ளது.

சம்பானி மடகஸ்காரின் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர். 20 வயதாய் இருந்த போது இடது கழுத்தில் ஒரு சிறுகட்டி வளரத் தொடங்கியது. காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகி வளரத் தொடங்கியதால் அதன் பாரத்தை சமப்படுத்திக் கொள்வதற்காக சம்பானி தலையை மற்றப் பக்கமாக சாய்த்துக் கொண்டு வரத்தொடங்கினார். அதன் வளர்ச்சி உடலின் மீதும் அழுத்தத்தை அதிகரித்து வந்தது. இந்தப் பளுவை சமாளிப்பதற்கு அவரது இதயமும் பெரும் பாடுபட்டு வரத் தொடங்கியது.

ஏறத்தாழ 60 வயது மதிக்கத்தக்கவரான சம்பானிக்கு டோ சூமா சினா துறை முகத்தில் இந்த கருணைக் கப்பல் வந்து தரித்து நிற்கும் தகவல் எவ்வாறோ எட்டியிருக்கிறது. அதனால் அந்தக் கப்பல்



இருந்த இடத்துக்கு சம்பானி தனது பேரப்பிள்ளை யையும் கூட்டிக்கொண்டு மூன்று நாள்கள் கால் நடையாக நடந்து சென்றார். துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தவுடனேயே அந்தக் கப்பல் அங்கு நங்கூரமிட்டிருப்பதைக் கண்டு கொண்டார். அங்கே கப்பல் பணியாளர்களையும் மருத்துவர்களையும் சந்தித்து தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டார். அவர்களுக்கு பெரும் எண்ணிக்கையில் சிக்கல்கள் தென்பட்டன. அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வதிலும் பிரச்சினைகள் தோன்றின. இவ்வளவு பெரிய சதைக்கட்டியை அறுவை செய்து சிகிச்சையளித்து அவர்களுக்கு அனுபவமும் இல்லை. ஆனால் திறமை மிக்க வல்லுநர்களைக் கொண்ட மருத்துவக் குழு பிரச்சினைகளை எல்லாம் சமாளித்து அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இந்தக் குழுவில் பெல்பாஸ்டை சேர்ந்த பிரிடிஷ் மயக்க மருந்து நிபுணர் டாக்டர் மைக்கல் மக் பிரியன் என்பவரும் இருந்துள்ளார்.

அறுவைச் சிகிச்சை முடிவடைய, எதிர்பார்க்கப்பட்டதைவிட இரண்டு மடங்கு நேரம் பிடித்துள்ளது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அந்தச் சதைக் கட்டியை நிறுத்துப் பார்த்ததில் அதன் பாரம் 16.45 இறாத்தல் (7.46கி.கி) இருந்தது.

அறுவைச் சிகிச்சைக்கு நிபுணர்கள் சம்மதித்ததையடுத்து சம்பானி கூறுகையில்; "என்மனம் மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கிறது. அறுவைச் சிகிச்சை இல்லாவிட்டால் நான் இறந்து போவேன் என்பது எனக்குத் தெரியும். அதேபோல் அறுவைச் சிகிச்சையின்போதும் நான் சாகக்கூடும் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் நான் இதுவரை எதிர் கொண்டவைகளினால் ஏற்கனவே உள்ளத்தால் இறந்துதான் போயுள்ளேன். எதுவானாலும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதை நான் தேர்ந்தெடுத்தேன்" என்று கூறினார்.

அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் டாக்டர் மக்பிரியன் மெயில் ஒன்லைனுக்குத் தகவல் தருகையில்; "சம்பானி என்ற நோயாளி எப்பொழுதும் நினைவு கூரப்படுபவராக இருப்பார் என்பது எனக்குத் தெரியும். அவருடைய வயது மற்றும் சதைக் கட்டியின் அளவையும் கவனத்தில் எடுக்கும் போது எமது அறுவைச் சிகிச்சை மற்றும் மயக்க மருந்து நிபுணர்குழுவானது மிகப்பெரிய நம்பமுடியாத சாதனையை நிகழ்த்தியுள்ளது. அதுவும்கூட ஒரு துறை முகத்தில் தரித்து நிற்கும் கப்பலில் நடந்துள்ளமை, நினைத்துப் பார்க்க முடியாத அளவு அதிசயமானது" என்றார்.



"சம்பானி குணமடைவதற்கு சற்று நீண்டகாலம் எடுக்கவே செய்யும். சம்பானியின் வாழ்க்கையை மாற்றி அமைப்பதில் மருத்துவ நிபுணர்கள் கப்பல் சிப்பந்திகள், உள்ளூர் பணியாளர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான மக்கள் அர்ப்பணிப்புச் செய்துள்ளார்கள்" என்று அவர் மேலும் சொன்னார்.

அறுவைச் சிகிச்சையின் பின்னர் சம்பானி தனது முகத்தை கண்ணாடியில் பார்த்தபோது, "நான் மகிழ்ச்சியடைகிறேன். இதைத்தான் நான் விரும்பினேன்" என்று ஆச்சரியத்துடன் கூறினார். அன்று காலையில் அவர் தன் பெருவிரலை உயர்த்திக் காட்டினார். மத்தியானம் படுக்கையில் எழுந்து அமர்ந்து பேரனுடன் காட் விளையாடக் கூடியவராய் இருந்தார். இன்னும் சில மாதங்களுக்கு அவர் கப்பலிலேயே தங்கியிருக்க வேண்டும் குணமடைவதற்காக. ஆனால் நன்றாகக்குணமடைந்து விடுவார் என்ற நம்பிக்கை உறுதியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருவர் ஒன்றானால்
## சராசரிக்கும் கீழ்

எல்லாம் மாறிக்கொண்டே இருக்கும் உலகில். காதலும் அது ஏற்படுத்தும் உணர்வுகளும் மட்டும் அப்படியே இருக்கும். இந்தக் கோணத்தில் காதலை விரிவாக அலச முயன்றிருக்கிறார் இயக்குநர் அன்பு ஜி.

அனைவரிடமும் இயல்பாகவும் இனிமையாகவும் பழகும் கல்லூரி மாணவன் கவுசிக். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த அவனைச் சக மாணவிகளில் சிலர் காதலிக்கிறார்கள். அவர்கள் காதலை அவனிடம் வெளிப்படுத்தும்போது பதற்றப்படாமல் "உங்ககூட ஃபிரெண்டாத்தானே பழகினேன்" என்று உண்மையைப் பேசுகிறான்.

அப்படிப்பட்டவன் ஓவியா என்ற பெண்ணைப் பார்க்கிறான். தன் மனசுக்குப் பிடித்த பெண் கிடைத்துவிட்டதாக எண்ணி அவள் வீட்டின் முன் தவமிருக்கிறான். அவளைப் பின்தொடர்கிறான். ஒருதலையாக அவளைக் காதலிக்கத் தொடங்குகிறான். தொல்லை தாங்காமல் அவனைத் திட்டி, கன்னத்தில் அறைகிறாள் ஓவியா. அதன் பிறகு அவன் காணாமல் போகிறான். தன்னை சுற்றிச் சுற்றி வந்தவன் இல்லாமல் போன வெறுமை அவளை வாட்டுகிறது. வெட்கத்தை விட்டு அவனை போனில் அழைக்கிறாள். ஓவியாவின் அழைப்பை ஏற்று கவுசிக் அவளைச் சந்திக்கச் சென்றானா? அவர்களது காதல் என்னவானது என்பதுதான் படம்.

கல்லூரி வாழ்க்கை, சட்டென்று கடந்துபோகிற வானவில் வாழ்க்கை. அதில் மாணவர்கள் காதலுக்கே அதிகம் முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்ற கோணத்தில் முதல் பாதி கடந்துபோகிறது. பள்ளியில் சேர்ந்து பயிலும் மாணவர்கள் கல்லூரியிலும் நண்பர்களாகத் தொடர்வது செயற்கையாக இருக்கிறது.

"நீ ஓகேன்னு சொல்ற வரைக்கும் உனக்காக காத்திட்டிருப்பேன்" என்று உருகி கவுசிக்கை விரும்பிய தோழிகள் பிறகு அவனது நண்பர்களையே காதலிப்பதும், அதை கவுசிக் பெரிதுபடுத்தாமல் அவர்களுடன் நட்பைத் தொடர்வதும் இயல்பான பதிவு.

இரண்டாம் பாதியில் காதலின் தீவிரம், திரைக்கதையை மொத்தமாக ஆக்கிரமித்துக் கொள்கிறது. கவுசிக் - ஓவியா இடையிலான காட்சிகள் யூகிக்கும் விதமாக இருப்பதுடன் சினிமாத்தனமும் பூசிக்கொண்டிருக்கின்றன.

என்றாலும் சின்னச் சின்ன வசனங்கள் மூலம் அறிமுக நடிகர்களை ஈடுபாட்டுடன் நடிக்க வைத்ததால் கவுசிக் - ஓவியா காதலுக்கு போதிய நம்பகத் தன்மையும் அழுத்தமும் கிடைத்துவிடுகிறது. இருப்பினும் இரண்டாம் பாதிக் காட்சிகள் செல்வராகவன் பாணியில் அமைந்துவிட்டதை இயக்குநர் தவிர்த்திருக்கலாம்.


கவுசிக்காக நடித்திருக்கும் பி.ஆர்.பிரபு பக்கத்து வீட்டுப் பையனைப் போலத் துறுதுறு வென்று கவர்கிறார். ஓவியாவாக நடித்திருக்கும் கிருத்திகா மாலினி, தன்னைக் காதலிப்பதாகக் கூறி தொல்லை செய்பவர்களால் எரிச்சலடையும் பெண்ணாகவும் பிறகு கவுசிக் மீது ஏற்பட்ட ஈர்ப்புக்குப் பிறகு அவன் தன்னைக் காண வராத போது உள்ளுக்குள் காதல் மலர்ந்திருப்பதை உணர்வதும் வாடுவதுமாக உணர்வுகளின் வண்ணங்களை இயல்பாக வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது தோழியாக நடித்திருக்கும் ஷ்ரவ்யாவின் நடிப்பும் நேர்த்தி.

தெரிந்த நடிகர்கள் என்று யாரும் இல்லாதது, நடிகர்களில் பெரும்பான்மையானவர்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பது என இரண்டரை மணி நேரப் படம். முழுக்க முழுக்க இளமை பொங்கி வழி யக் காரணமாக இருக்கிறது நட்சத்திரத் தேர்வு.


பொருத்தமான நட்சத்திரத் தேர்வுகள், கவர்ச்சியோ ஆபாசமோ இல்லாமல் காட்சிகளை அமைத்தது என்று கவரும் படத்தின் உச்சக் காட்சி மட்டும் மனதில் ஒட்டாத நகைச்சுவைக் காட்சியாகக் கடந்து போய் விடுகிறது.

காதலில் விழும் கதாபாத்திரங்கள் கனவுகளைச் சுமந்தபடி சாலையில் பயணிக்கும் அழகையும் அவர்களது தனிமையையும் அதிக பரபரப்பு இல்லாமல் இயல்பாக படம் பிடித்துக் காட்டியிருக்கிறது குமார் ஸ்ரீதரின் ஒளிப்பதிவு. குரு கிருஷ்ணனின் இசையில் பாடல் கள் தேறாவிட்டாலும் பின்னணி இசை காப்பாற்றி விடுகிறது.

அதிக திருப்பங்கள் தேவைப்படாத, பம்மாத்துக்கள் இல்லாத காதல் கதையை இளம் நடிகர்களைக் கொண்டு படமாக்கிய விதத்தில் கவனம் ஈர்க்கிறார் அறிமுக இயக்குநர் அன்புஜி. ஆனால் படம் சராசரிக்கும் கீழானதுதான்.



# மீண்டும் டெர்மினேட்டர்




அதிரடி அடிதடிக் காட்சிகள் நிறைந்த சாகசப் படங்களை எப்போதுமே திரைப்பட ரசிகர்கள் கொண்டாடுவார்கள். அதிலும் அறிவியல் புனைவுடன் உளக் கிளர்ச்சியை ஊட்டும் படமாக இருந்துவிட்டால் அது தரும் சுவாரசியத்துக்கு ஈடு இணையே இல்லை என்பார்கள்.

அப்படியான சுவாரசியத்தை அளித்த, சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் (1984) ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் வெளியான டெர்மினேட்டர் திரைப்படம் ரசிகர்களின் மனதில் நீங்காத இடம்பிடித்த ஒன்று. அப்படத்தின் நாயகன் ஆர்னோல்ட் ஸ்வாஸ்நெகர் ரசிகர்களின் நாடி நரம்புகளை முறுக்கேற்றிய ஆதர்ச நாயகனாகப் போற்றப்பட்டார். அப்படத்தின் இமாலய வெற்றி காரணமாக டெர்மினேட்டர் வரிசைப் படங்களில் இது வரை நான்கு வெளியாகி அனைத்தும் அமோகமாக வெற்றிபெற்றுள்ளன. இந்த நிலையில் டெர்மினேட்டர் வரிசையில் ஐந்தாவது படமான டெர்மினேட்டர் ஜெனிசிஸ் அடுத்த மாதம் 3ஆம் திகதி வெளியாக உள்ளது. டெர்மினேட்டர் ஒரு தொடக்கம் என்னும் பெயரில் இது தமிழிலும் வெளியிடப்படுமாம்.

உணர்ச்சியுள்ள மனிதர்களுக்கும் உணர்ச்சியற்ற இயந்திரங்களுக்குமான போரை மையமாகக் கொண்ட இப் படம், டெர்மினேட்டர் வரிசையின் முதல் இரண்டு படங்களை நினைவுக்குக் கொண்டு வரும் வகையிலான கதையமைப்பிலும் வண்ணத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு வித காலகட்டங்கள் இடம்பெறுகின்றன. ஒன்று 1984 மற்றொன்று 2029ஐ ஒட்டிய காலகட்டம். இந்த இரண்டு காலகட்டங்களையும் வேறுபடுத்திக் காட்டுவதற்கு இரண்டு விதமான

1984ஆம் வருட சம்பவங்களுக்குப் பச்சை, நீலம், கறுப்பு ஆகிய வண்ணங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். எதிர்காலமான 2029 ஆண்டுக் காட்சிகள் 'த டெர்மினேட்டர் ஜட்ஜ்மெண்ட் டே' படத்தைப் போன்ற நிறத்தில் இருக்கும். எதிர்காலத்துக்குள் நுழையும் பயணம் இந்தப் படத்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான அம்சமாக இருக்கும் என்கிறார்கள். ஆலன் டெய்லர் இயக்கியுள்ள இந்தப் படத்தின் காட்சிகள் திருப்தியையும் வித்தியாசமான அனுபவத்தையும் அளிக்கும் என நம்புகிறார்கள் ரசிகர்கள். இந்தப் படத்தின் வீடியோ முன்னோட்டத்தைப் பார்க்கும் போதே படம் குறித்த எதிர்பார்ப்பு எக்கச்சக்கமாக எகிறுகிறது. "ஐ வில் பீ (B) பக்" (நான் திரும்பவும் வருவேன்) என்று வசனம் பேசி ரசிகர்களைக் கவர்ந்த ஆர்னோல்ட் ஸ்வாஸ்நெகர் இப்படத்திலும் டெர்மினேட்டராக வந்து மிரட்டியுள்ளார். வயதானாலும் கட்டுக் குலையாத தோற்றத்துடன் காட்சியளிக்கும் அவருடன், ஜேஸன் க்ளார்க், எமிலா க்ளார்க், ஜெய் கர்ட்டனி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தில் ஸ்வாஸ் நெகர் தனது 67 வயதுக்குரிய தோற்றத்துடன் இல்லாமல் மிக இளமையாகத் தோன்றுகிறார். முழுக்க முழுக்க ஜேம்ஸ் கமரூன் படம் போலவே பட மாக்கப்பட்டிருக்கிறது என்றும் இது வரையிலும் பார்த்து ரசித்திராத புதிய வகையிலான திரைப்பட அனுபவத்தைத் தரும் ஒரு படமாக இது அமையும் என்றும் ஸ்கைடான்ஸ் தயாரிப்பு நிறுவனம் கூறியுள்ளது. இதைத் தொடர்ந்து இதன் அடுத்த இரு பாகங்களும் தயாரிக்கப்பட உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி வழி

# விளையாடிய விதி!



## இழந்துபோன கடைக்காக காத்திருக்கும் ஏழைத் தொழிலாளி

தேவி பரமலிங்கம்

ஏன்று தசாப்தகாலம் (1979 - 2009) நமது மண்ணில் நடந்து ஓய்ந்த உள்நாட்டுப் போர், பலரது வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றிப்போட்டது. அதுபோலவே 2012இல் ஆரம்பமான யாழ்ப்பாணப் பெருந்தெருக்கள் அகலிக்கும் வேலைகளும், போரொன்று நடந்து முடிந்ததுபோல் சிலரது வாழ்க்கையைத் தலைகீழாக ஆக்கிவிட்டது.

அவ்விதம் இன்று வாழ்க்கையில் கீழ் மட்டத்துள் தள்ளப்பட்டுள்ளவர்களில் சிவன்பண்ணை வீதியில் வசித்து வருகின்ற கந்தசாமி தர்மநாதனும் ஒருவராவார்.

இவரது தகப்பன் அரை நூற்றாண்டுக்கு முன்பாக யாழ். காங்கேசன்துறை வீதியில் முட்டாஸ் கடைச்சந்தி வடகிழக்கு மூலைக்கடையில் (விவேகானந்தா அச்சகத்துக்கு அருகில்) கந்தசாமி அன்சன்ஸ் நகைக் கடையை நடத்தி வந்தவராவார்.

சிவன்கோயில் ஆதனமான அந்த இடத்தை 99 ஆண்டுகளுக்கு நிரந்தரமாய் எழுதிக் கொண்டதும் தகப்பனுக்குப் பின்பாகத் தமையனின் அனுசரணையுடன் அவ்விடத்தில் சைக்கிள் கடையை இடம்பெயர்வுக்குப் பின்பாக 1998இல் நிறுவி ஜீவனோபாயத்தை நடத்தி வந்தார் தர்மா. அவரது வாழ்க்கையில் 2012ஆம் வருடம் வீதியை அகலிக்கும் போர்வையில் இடி விழுந்தது தலையில். சிவன்கோயில் தர்மகர்த்தா காலஞ்சென்ற கந்தப்ப செட்டியாரிடம் கந்தமாசி உறுதி எழுதிக்கொண்ட அந்த ஆதனத்தின் முன் பகுதியை வீதியைப் பெருப்பிப்பதற்காக உடைத்தார்கள். அப்படி உடைக்கையில், வீதித் திருத்த வேலைகள் முடிந்த பின்னர் கடையைச் செப்பனிட்டு புதிதாகித் தருவதாக தர்மநாதனுக்குச் சொல்லப்பட்டதன் அடிப்படையில் அவர் இரண்டு வருடங்களாகக் காத்திருக்கிறார்.

அந்த இடத்துக்கு ஏற்கனவே 15 லட்சம் ரூபா வரையில் உப குத்தகைக்குப் பேரம் பேசப்பட்டு வந்திருந்தது. எனினும் தகப்பன் காலப் பரம்பரை இடம் அதனை வேறு யாருக்கும் வழங்க விரும்பாமல் தானே வைத்திருந்தார் தர்மநாதன். ஆனால் வீதி அகலிப்பு வடிவில் அவரது வாழ்க்கையில் விதி விளையாடிவிட்டது.

தர்மநாதன் பெயருக்கு ஏற்றாற்போல் வெள்ளை உள்ளம் கொண்டவராகவே இருக்கிறார். ஆலய நிர்வாகம் தனக்கு மீண்டும் கடை தருவார்கள் என்ற நம்பிக்கையுடன், யாழ். வெள்ளாந்தெரு சிவன் பண்ணை வீதியில் மனைவி வழியால் கிடைத்த காணியில் சிறுகடையை நிறுவித் தொழிலைத் தொடர்கிறார். அவரை நம்பி ஒரு மகனும், இரு மகள்மார்களும், மனைவியும் வாழ்கிறார்கள்.

யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் கல்வித் தராதரப் பத்திர சாதாரண தரத்துடன் கல்வியை நிறுத்திக் கொண்டவர் தர்மநாதன். தகப்பனாரது நகைக் கடையில் ஆரம்பத்தில் நின்றார். இப்பொழுது 60 வயதை எட்டியுள்ள தர்மநாதன் 26ஆவது வயதில் சிங்கப்பூருக்குச் சென்று 4 வருடங்கள் லிப்ற் மெக்கானிக்காக இருந்ததாகக் கூறுகிறார்.

> “
> **ஆலய நிர்வாகம் தனக்கு மீண்டும் கடை தருவார்கள் என்ற நம்பிக்கையுடன், யாழ். வெள்ளாந்தெரு சிவன் பண்ணை வீதியில் மனைவி வழியால் கிடைத்த காணியில் சிறுகடையை நிறுவித் தொழிலைத் தொடர்கிறார். அவரை நம்பி ஒரு மகனும், இரு மகள் மார்களும், மனைவியும் வாழ்கிறார்கள்.**

அங்கிருந்து தாயகம் வந்தவர் யாழ். நாச்சிமார் கோயிலடி, அரச மரச் சந்தியில் தேநீர்க்கடை ஒன்றை 2 வருடங்கள் நடத்தியிருக்கிறார். 1992இல் சிவன் கோயிலடியில் நண்பரொருவரிடம் சைக்கிள் திருத்தும் வேலை கற்றுக் கொண்டவர். இன்று வரையும் மூலாதாரத் தொழிலாக அதையே செய்தும் வருகிறார்.

1995இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வால் தென்மராட்சிக்குச் சென்று, நுணாவில் சந்தியில் சைக்கிள் கடை வைத்து அக்கால வாழ்க்கையை சிரமத்தின் மத்தியில் நகர்த்த நேர்ந்தது. 1998ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திரும்பிய அவர், தகப்பனாரின் கடையில் சைக்கிள் கடையை நிறுவினார். 14 வருடங்களில் அந்தக் கடையைத் தான் இழக்க விதி வீதி வழியில் விளையாடும் என்று அப்போது அவர் கனவிலும் நினைக்கவில்லை.

“கடை உடைபட்ட பின்பாக பல தடவைகளில் தர்மகர்த்தாவைச் சந்தித்த போதெல்லாம் எனக்கே அக்கடையைக் கட்டித் தருவதாக வாக்களித்து இருந்தார். இப்பொழுது அந்த இடத்தில் மூன்று மாடிக்கட்டடம் எழுந்துள்ளது. வாக்களித்ததுபோல் அவர் கடையை எங்கள் பரம்பரைக்குத் தந்துதவுவார் என்ற நம்பிக்கையில் காத்திருக்கிறேன். கடந்த 23 வருடங்களாக சைக்கிள் திருத்தும் தொழிலிலேயே ஈடுபட்டு வருகிறேன். புறம்போக்கான சிவன்பண்ணை வீதியில் வேலைகள் வருவது அரிது. மிகக் கஷ்டமான நிலையில் அன்றாட சீவியத்தை நடத்த வேண்டிக் கிடக்கிறது. சிவன் கோயிலடியில் என்றால் கொஞ்சம் வருமானம் வரும். குடும்பத்துக்கும் போதுமானதாக இருக்கும்.”

கண்களில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட ஏக்கப் பார்வையுடன் வெள்ளந்தியாகச் சிரிக்கிறார் கந்தசாமி தர்மநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பஞ்ச சக்திகளின் சங்கமம்

சந்திரசேகர ஆசாத்

இலங்கையின் அரசியல், 'டாம்' வீதியில் தீர்மானிக்கப்படுவதில்லை. பஞ்ச சக்திகள் சங்கமிக்கும் இடத்திலேயே அது தீர்மானிக்கப்படும்.'' இப்படித் தெரிவித்தவர், வேறு யாருமல்லர் இலங்கையின் முன்னாள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் தற்சமயம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதம ஆலோசகர்களில் ஒருவருமான மஹிந்த ராஜபக்ஷவே தான்.

அவர் 'டாம்' வீதி எனக் குறிப்பிடுவது, 'டாம்' வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைச் செயலகத்தைத்தான். தான் இதுவரை தலைமை தாங்கிய தனது கட்சிக்கு அவர் எப்படியான கௌரவத்தை வழங்கியுள்ளார் என்பதை அவரது இந்தக் கூற்றிலிருந்து புரிந்து கொள்ள முடியும். அவர் அதிகாரத்தில் இருந்தபோது அலரிமாளிகையே அரசில் மையமாக இருந்தமையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அவரின் விரலசைவுக்கு ஏற்ற முறையில் செயற்பட்டமையும் கடந்த கால அனுபவங்கள்.

அவர் பஞ்ச சக்திகள் சங்கமமாகும் இடம் என விகாரையையே குறிப்பிட்டுள்ளார். அவர் நுகேகொடை அபயராம விகாரையைத் தலைமைச் செயலகமாகக் கொண்டு விகாரை விகாரையாக தீர்த்த யாத்திரை செய்து வருகிறார்.

இந்து சமய மக்கள் தாங்கள் செய்த பாவங்களைக் கழுவ காசி, ராமேஸ்வரம் என நாடு பூராகவும் உள்ள முக்கிய ஆலயங்களுக்குத் தீர்த்த யாத்திரை சென்று நீராடி வருவதுண்டு. அதேபோன்று, அதிகாரத்தில் இருந்த காலத்தில் அவர் செய்த பாவங்களுக்கு பஞ்ச சக்திகள் மன்னிப்பு வழங்கிவிடும் என்ற நம்பிக்கையுடன் தீர்த்த யாத்திரை சென்று, தான் குற்றமற்றவன் என ஒப்பாரி வைத்து வருகிறார் ராஜபக்ஷ இப்போது. ஆனால் அவர் செய்த பாவங்கள் மன்னிப்புக் கிடைக்கக் கூடிய அளவுக்கு வலுவற்றவையாக இல்லை.

### பண்டாவின் பஞ்ச சக்திகள்

பஞ்ச சக்திகளின் சங்கமம் என்பது 1956ஆம் ஆண்டு தேர்தலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்கொள்ளும் வகையில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவால் முன்வைக்கப்பட்ட ஒரு ஜனநாயகக் கோட்பாடாகும். தொழிலாளர், விவசாயிகள், ஆசிரியர்கள், கிராமிய வைத்தியர்கள், மதகுருமார் என கிராமிய மக்கள் மத்தியில் பெரிதும் மதிக்கப்பட்டவர்களைக் கொண்ட ஒரு தேசிய உணர்வு கொண்ட அமைப்பாகவே இது கிராமங்கள், நகரங்கள் தோறும் உருவாக்கப்பட்டது. பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் உள்ளூர் சேவகர்களாகச் செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை இறக்கி தேசிய பொருளாதாரத்தையும், கலாசாரத்தையும் கட்டி வளர்த்து சுயாதீன அரசை உருவாக்கும் நோக்குடனேயே இந்தப் பஞ்ச சக்திகளின் சங்கமம் என்ற கோட்பாடு அன்று முன்வைக்கப்பட்டது. ஆனால் இலங்கைப் பொருளாதா ரத்தை உலக மயமாக்கல் என்ற போர்வையில் ஏற்றுமதி, இறக்குமதி என்ற தங்குநிலைப் பொருளாதாரத்துக்குள் முழுமையாக அமிழ்த்திவிட்ட மஹிந்த ராஜபக்ஷ இப்போது பஞ்ச சக்திகளின் அவசியம் பற்றிப் பேசப் புறப்பட்டிருக்கிறார்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிங்களத் தேசிய எழுச்சியின் ஓர் அம்சமாக ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கச் சட்டம் கொண்டு வந்தார். அது சாதாரண அடிமட்டச் சிங்கள மக்கள் கல்வியில் முன்னேறவும், அரச பணிகளில் இணையவும் வாய்ப்புக்களை உருவாக்கியது. ஆனால் அவர் அதே மதிப்பைத் தமிழுக்கு வழங்க மறுத்தமையால் அவரின் தேசிய எழுச்சிக்குத் தமிழ் மக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய பங்களிப்பை இழந்ததார். தமிழ் மக்களின் எதிர்ப்புக்கும் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இன்னொருபுறம், அவர் சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்துக்கும் தேசியத்தின் பேரால் வழங்கிய முதன்மை இடம், பஞ்ச சக்திகளின் அரசியல் போக்குக்கு பௌத்த பீடங்களே வழிகாட்டிகளாக உருவாகும் நிலையையும் ஏற்படுத்தியது.

அவர் இனப்பிரச்சினையில் விட்ட தவறை பண்டா – செல்வா ஒப்பந்தம் மூலம் திருத்திக் கொள்ள முயன்ற போது, ஐக்கிய தேசியக் கட்சி ஒரு புறமும் பௌத்த மத பீடங்கள் மறுபுறமுமாகப் போர்க்கொடி தூக்கின. அவர் தேசிய அரசுக்குக் கொடுத்த சிங்கள பௌத்தம் என்கிற ஒரு பக்க முகம் காரணமாகச் சிங்கள மக்களும் இந்த மத பீடங்களின் பின்னால் இழுபடுவதைத் தவிர்க்க முடியவில்லை. இந்த நிலையில் அவரே, தானே உருவாக்கி ஏற்றுக் கொண்ட பண்டா– செல்வா ஒப்பந்தந்தை கிழித்தெறிந்து நிரந்தரமாகவே தமிழ் மக்களிடம் இருந்து தன்னைப் பிய்த்துக் கொண்டார். அதேவேளையில் களனி பௌத்த பீடத் தலைவர் புத்தரகித்த தேரரும் வேறு சிலரும் இணைந்து திட்டமிட்டு சோமராம தேரர் என்ற பௌத்த பிக்கு மூலம் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

### இனவாதத்தைத் தூண்டும் ராஜபக்ஷ

இதன் மூலம் பஞ்ச சக்திகளை பௌத்த மத பீடங்களே வழிநடத்தும் நிலை உருவாகியது. அதன் காரணமாக எந்த ஓர் அரசியல் சக்தியும் பௌத்த சிங்கள மேலாதிக்க எல்லைக்குள்ளேயே செயற்படும் நிலை உருவாகியது. எனவே இடதுசாரிகளாகத் தம்மை இனங்காட்டிக்கொண்ட அரசியல்வாதிகள் உட்பட சகலருமே பௌத்த சிங்கள இனவாதத்தையே தங்கள் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதில் போட்டியிட்டுச் செயற்படும் நிலை உருவாகியது.

இந்த நிலைமையில் தமிழ் மக்களுக்கு ஆயுதப் போராட்டத்தைவிட, விமோசனத்துக்கு வேறு வழிஇல்லாத நிலையில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்று உலகம் வியக்கும் வகையில் முன்சென்றது.

மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச உதவியுடன் ஓர் இன அழிப்புப் போரைக் கட்டவிழ்த்து விட்டு விடுதலைப்போரின் ஆயுத வடிவத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்.

இந்தப் போரின் வெற்றியை மூலதனமாகக் கொண்டு ஏற்கனவே ஜனாதிபதிக்கு இருந்த நிறைவேற்று அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தி ஒரு சர்வாதிகார ஆட்சியை உருவாக்கினார். மேலும் இனஒடுக்குமுறை நடவடிக்கைகள் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் மொழியுரிமை, நிலஉரிமை, பொருளாதாரம், கலாசாரம் என்பவற்றை அழித்து இனத் தனித்துவங்களைத் துடைத்துத் துவம்சம் செய்வதிலே தீவிரமாக அவரும் அவரின் ஆதரவாளர்களும் இறங்கினர்.

அதேவேளையில் மதபீடங்கள் மூலம் பஞ்ச சக்திகளை வழிநடத்தி வந்த பௌத்த குருமார் நேரடியாகவே நாடாளுமன்ற அரசியலிலும் வன்முறை அரசியலிலும் இறங்கும் நிலை தோன்றியது. இத்தகைய சிங்கள பௌத்த பேரினவாத வன்முறை நடவடிக்கைகளுக்கும் இன அழிப்பு முயற்சிகளுக்கும் அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு வழங்கியது. பொலிஸாரும் ஆயுதப் படையினரும் பகிரங்கமாகவே ஆதரவு வழங்கினர்.

இந்த நிலைமையில்தான், தம்மைத் தட்டிக் கேட்க ஆள் இல்லை என்ற நிலைமையில் செயற்பட்டு வந்த மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது ஆதரவுச் சக்திகளையும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தூக்கி எறிந்தனர். இவர்களின் பதவி, அதிகாரம் எல்லாமே பறிக்கப்பட்டு விட்டன. அதுமட்டுமன்றி இவர் சந்திரிகாவிடம் இருந்து முறையற்ற விதத்தில் பறித்து எடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியும் மைத்திரிபால சிறிசேனவினால் பறிக்கப்பட்டு விட்டது.

இன்னொருபுறம் இவர்கள் மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் எனப் பல கத்திகள் இவர்களின் தலைகளுக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில்தான் நுகேகொட, அபயபுர விகாரையை மையமாகக் கொண்டு விகாரைகளுக்கான தீர்த்த யாத்திரைகள் இடம்பெற்று வருகின்றன.

மேலும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது எனவும் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலேயே போட்டியிடுவார் எனவும் அப்படி அவர் அந்தக் கட்சியில் போட்டியிட அனுமதிக்கப்படாவிட்டால் ஏதோ ஒரு வகையில் பிரதமர் வேட்பாளராகவே போட்டியிடுவார் எனவும் அவரின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த இலக்குக்காகத்தான் மஹிந்த பஞ்ச சக்திகளிடம் பாவ விமோசனம் பெற முயற்சிக்கிறார். அதற்கும் அவர் தரம்கெட்ட இனவாதத்தையே முன்வைத்து வருகிறார். இனக்குரோதத்தை எழுப்புவதன் மூலம் சிங்கள மக்களை ஏமாற்றி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைகிறார்.

போரில் இறந்த தமிழ் மக்களுக்கு அஞ்சலி செய்ய தமிழ் மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமை படையினருக்கு இழைக்கப்பட்ட அநீதி என நீலிக் கண்ணீர் விடுகிறார். வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் புலிக்கொடியுடன் சென்று சுடர் ஏற்றினார் என அப்பட்டமான பொய்யைப் பரப்பி வருகிறார். புங்குடுதீவு மாணவி கொலை தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் ஏற்பட்ட குழப்பங்கள், புலிகள் மீண்டும் தோன்றுவதற்கான அறிகுறியெனப் பரப்புரை செய்கிறார்.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு அல்ல. இது ஒரு பல்லினங்கள் வாழும் நாடு என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கு எதிராக ஹெல உறுமய பெரும் எதிர்ப்புப் பரப்புரையை மேற்கொண்டு வருகிறது. பொது பல சேனா, முஸ்லிம் பெண்களுக்குக் கருத்தடை மேற்கொள்ளவேண் டும் எனவும் இல்லாவிடில் இலங்கையில் இன்னும் கொஞ்சக் காலத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக மாறி விடுவர் என்றும் கூறும் பரப்புரை இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

### மஹிந்தவுக்கு வெற்றி கிட்டாது

அதாவது கடந்த காலங்களைப்போன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியை இனவாத பரப்புரைக்கு பாவித்து அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாத நிலையில் மஹிந்த ராஜபக்ஷ பௌத்த விகாரைகளை மையமாகக் வைத்து பஞ்ச சக்திகளைதான், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றப் பயன்படுத்த வியூகம் வகுத்துச் செயற்பட்டு வருகிறார். அதற்கான காரியங்களை ஹெலஉறுமய, பொதுபலசேனா போன்ற அமைப்புகள் மக்களை இனவெறியூட்டும் வகையில் உருவாக்கம் செய்கின்றன. ஆனால் மஹிந்தவின் கடந்த பத்து வருட ஆட்சிக்காலம் எப்படிப்பட்டது என்பதைப் பஞ்ச சக்திகளான தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், கிராமிய வைத்தியர்கள் ஆகியோர் நன்றே புரிந்துவைத்துள்ளனர்.

கட்டாய ஓய்வூதியத் திட்டத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திய தொழிலாளர்களை சுட்டுக்கொன்றதும், வெலிவேரியாவில் குடிதண்ணீர் கோரிப் போராடிய மக்களைச் சுட்டுக்கொன்றதும், பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களுக்கு எதிராக பொலிஸாரும் காடையர்களும் இணைந்து வன்முறையில் ஈடுபடுவதும், மாணவர்கள் மேல் பிரதியமைச்சர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தாக்குதல் தொடுப்பதும் இலகுவில் மறக்கக் கூடிய விடயங்கள் அல்ல.

1956இல் பஞ்ச சக்திகள் ஒரு தேசிய எழுச்சியின் அடிப்படையில் ஒரு தலைமையில் சங்கமமாகினர். ஆனால் மீண்டும் ஒரு கொடிய சர்வாதிகார ஊழல் ஆட்சிவர அவர்கள் ஆதரவளிக்க மாட்டார்கள். அத்தகைய ஆட்சிக்கு எதிராக பஞ்ச சக்திகள் அணிதிரள்வார்கள் என்பது மட்டும் உறுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook வலைப்பக்கம்

அறுபடாமலே புறக்கணிக்கப்பட்டது
இரண்டாம் செருப்பு!
144 92

சிலருடைய குணங்களில் எதைப் பிடித்து
பேசுறோமோ நாளடைவில் அந்தக் குணமே
பிடிக்காமல் போய் விடுகிறது...
இதான் மனித இயல்பு...

குடும்பத்தில் மூத்த பிள்ளைக்கு யாரும் கடமை,
பொறுப்புச் சொல்லிக் கொடுப்பதில்லை.
பிறப்போடு தோள்களில்

மரணத்திற்கு பிறகான வாழ்க்கைக்கு வாய்க்கரிசி
தான் அட்சதை....

யாரையும் சமாதானப்படுத்த ஒரு சாரி போதும்.ஆனால்
மனைவியை சமாதானப்படுத்த சாரியுடன் சினிமா, பீச்,
ஹோட்டல், சுடிதார்னு ஒரு இலவச இணைப்பு வேணும்

BabyPriya May 27
உடுத்திக்கொள்ள புதுத்துணி உள்ள தினங்களில்
குளிப்பதற்குக் கூட ஆர்வமாகத் தானிருக்கிறது.

எவருக்கு எவர் எத்தனை உரிமைப்பட்டவர் என்பது
நிச்சயமற்ற சூழலில் தாமரை இலை தண்ணீர் போல
நட்புகளை கையாளுவது புத்திசாலித்தனம்.
58 24

வந்தியத்தேவன் Jun 1
இறந்துவிட்ட ஒரு நண்பனின் பெயரை
அலைபேசியிலிருந்து அழிப்பதற்கு ஒரு கொலை
செய்வதற்கான துணிச்சல் தேவைப்படுகிறது.
315 165






## இப்படிக்கு "உன் அன்புக் கணவன்"

மிஸ்டர் எக்ஸ் ஒரு முறை வெளியூர் சென்று பெரிய ஹோட்டலில் தங்கினார். அவரது அறையில் ஒரு கணினி இருந்தது. அவர் தன் மனைவிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்ப உத்தேசித்துக் கணினியை இயக்கி மின்னஞ்சலைத் தட்டச்சினார். அவசரத்தில் யாருக்கு என்கிற இடத்தில் அவரது மனைவியின் மின்னஞ்சல் முகவரியைத் தட்டாமல் வேறு தவறான முகவரியை எழுதிவிட்டார்.

மிஸ்டர் எக்ஸ் தான் செய்த பிழையை உணரவேயில்லை. மின்னஞ்சலும் பெறுநர் முகவரிக்குச் சென்றுவிட்டது.

வேறு ஒரு நகரம். அங்கே ஒரு விதவை. அவள் தனது கணவனை இரண்டு நாட்களுக்கு முன்னர் இழந்தவள். இறந்துபோன தனது கணவனை அடக்கம் செய்து துக்கம் தாங்காமல் அழுதுகொண்டிருந்தாள்.பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு தனது கணினியைத் திறந்து துக்கக்கடிதங்கள் ஏதேனும் மின்னஞ்சல் ரூபத்தில் வந்திருக்கிறதா எனப் பார்வையிட்டாள்.

அவளுக்கு வந்திருந்த முதல் மின்னஞ்சல் கடிதத்தைப் படித்ததும் அவளுக்கு மயக்கம் வந்து தலைசுற்றிவிட்டது.தரையில் வீழ்ந்துவிட்டாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு அந்த விதவையின் மகன் அந்த அறைப்பக்கமாக வந்தார். தனது தாய் தரையில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். கணினி இயக்கத்திலேயே இருந்தது. கணினியில் தெரிந்த வாசகத்தைப் படித்தார். அதில் பின்வருமாறு இருந்தது.

**அன்பான மனைவிக்கு,**

எனது கடிதம் உனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். அவர்கள் இங்கே கணினியெல்லாம் கூட வைத்திருக்கிறார்கள். நமக்குப் பிரியமானவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அனுமதிக்கிறார்கள். நான் இங்கே நல்லபடியாக வந்து சேர்ந்தேன். இங்கே எல்லாம் தயாரான நிலையில் உள்ளது. நாளையே நீ இங்கே வந்துவிடலாம். உனது வரவை வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன்.

**–இப்படிக்கு உன் அன்புக் கணவன்.**



என் மகன் கொஞ்சம் உடம்பு
நல்லா இல்லைன்னாகூட
"செக்கப்" பண்ணக்
கிளம்பிடுவான்...

**உடம்பு நல்லா இருந்தா...?**

"பிக்கப்" பண்ணக்
கிளம்பிடுவான்..!









பசங்க மனசு மொபைல் மாதிரி......!
பொண்ணுங்க மனசு தண்ணி
மாதிரி.........!
தண்ணீல மொபைல்
விழுந்தாலும்..........
மொபைல் தண்ணீல விழுந்தாலும்........
ஆபத்து மொபைலுக்குதான்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழே நாள்களில் வெள்ளையாக ஆசையா?



**முகத்தை கழுவுதல்**
முகம் பொலிவோடு இருக்க வேண்டுமெனில், தினமும் முகத்தைக் கழுவுவது என்பது முக்கியமான ஒன்று. ஏனெனில் முகத்தில் தூசிகள் படிந்திருப்பதால், முகம் பொலிவின்றி காணப்படும். எனவே அவ்வப்போது முகத்தை சுத்தமான நீரினால் கழுவினால், முகம் நன்கு சுத்தமாகப் பருக்களின்றி இருக்கும்.

**பேஸ் பேக்**
முகத்தில் உள்ள கருமையைப் போக்குவதற்கு நிறைய பேஸ் மாஸ்க்குகள் உள்ளன. அத்தகைய மாஸ்க்குகள், ஸ்கரப்கள் போன்றவற்றை மேற்கொண்டால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகள் நீங்கி, சருமத்தின் நிறம் இயற்கையாகவே அதிகரிக்கும்.

**எலுமிச்சை**
எலுமிச்சை ஒரு சுப்பரான ப்ளீச்சிங் பொருள். இத்தகைய எலுமிச்சையின் துண்டுகள் அல்லது சாற்றைக் கொண்டு, தினமும் முகத்தை சிறிது நேரம் தேய்த்துக் கழுவினால், சருமத்தில் உள்ள அழுக்குகள் நீங்கி, சருமம் பொலிவோடு மின்னும்.

**பழங்கள்**
பழங்களில் வாழைப்பழம், பப்பாளி, போன்றவை சருமத்துக்கு பொலிவைத் தரக்கூடியவை. எனவே இத்தகைய பழங்களைச் சாப்பிடுவதோடு, சருமத்துக்குத் தடவி வந்தால், நல்ல பலன் கிடைக்கும்.

**ஸ்கரப்**
வாரத்திற்கு 2–3 முறை ஸ்கரப் செய்தால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமம் புத்துணர்ச்சியுடனும், சுத்தமாகவும் காணப்படும்.

**தயிர் மசாஜ்**
தயிர் முகத்தை வெள்ளையாக்க உதவும் அழகுப் பொருள்களில் ஒன்று. எனவே அதனைக் கொண்டு தினமும் முகத்துக்கு மசாஜ் செய்து கழுவினால், 7 நாள்களில் ஒரு நல்ல முகப்பொலிவு கிடைக்கும்.

**கிளீன்சிங்**
கற்றாழை ஒரு சிறந்த கிளீன்சிங் பொருள். எனவே கற்றாழையின் ஜெல்லை முகத்துக்கு தடவி மசாஜ் செய்து, காய வைத்து கழுவினால், முகத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் நீங்கி, முகம் பளிச்சென்று புத்துணர்ச்சியுடன் காணப்படும்.



## ஆணழகனாக மாற...

கட்டாயம் சலூன் செல்லவும். ஆண்கள் தவறாமல் 2–3 மாதங்களுக்கு ஒருமுறை சலூன் சென்று, ஹேர் கட், ஷேவிங், ட்ரிம்மிங் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். இதனால் முடி நன்கு ஆரோக்கியமாக இருப்பதோடு, தோற்றத்தையும் அழகாக வெளிப்படுத்தும்.

**வாய் பராமரிப்பு**
பெண்களுக்கு மட்டும் புன்னகை அழகைத் தருவதில்லை, ஆண்களுக்கும் தான். ஆகவே தினமும் பற்களை இரண்டு முறை துலக்குவதோடு, ப்ளாஷ் செய்யவும் வேண்டும். முக்கியமாக பற்களை துலக்கும் போது, நாக்கையும் சுத்தம் செய்ய வேண்டும். இதனால் வாய் துர்நாற்றம் வீசுவதைத் தவிர்க்கலாம்.

**8 மணிநேர தூக்கம்**
அழகை அதிகரிக்க வேண்டுமெனில் நல்ல தூக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக 7–8 மணநேர தூக்கத்தை ஆண்களும் சரி, பெண்களும் சரி அவசியம் பின்பற்ற வேண்டும். இதனால் சரும செல்கள் புத்துயிர் பெற்று, சருமத்தை அழகாக வெளிக்காட்டும். முக்கியமாக, நல்ல நிம்மதியான தூக்கத்தின் மூலம்

**சரும பராமரிப்பும் அவசியம்**
அவ்வப்போது முகத்துக்கு பேஸ் பேக், ஸ்கரப் போன்றவற்றை செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல், தினமும் மாய்ஸ்சுரைசர் தடவ வேண்டும். இதனால் சருமம் வறட்சி அடைவதைத் தடுப்பதோடு, சூரியக் கதிர்களால் சருமம் பாதிக்கப்படுவதையும் தடுக்கலாம்.



## மைக்ரோவேவ் உபயோகித்து மூன்றரை நிமிடங்களில் ருசியான தேங்காய் பர்பி செய்வது எப்படி? இதோ உங்களுக்கான செய்முறை

## தேங்காய் பர்பி

**தேவையான பொருள்கள்:**
தேங்காய்த் துருவல் – 1 கப்
ஏலக்காய் – 3
முந்திரிப் பருப்பு – 8
சர்க்கரை – 1 கப்
பச்சைக் கற்பூரம் – 1 சிட்டிகை
நெய் – 1 டீஸ்பூன்

**செய்முறை:**
தேங்காயை நைசாகத் துருவிக் கொள்ளவும்.
ஏலக்காயையும், பச்சைக் கற்பூரத்தையும் சிறிது சர்க்கரையுடன் சேர்த்து, நைசாகப் பொடித்துக் கொள்ளவும்.
முந்திரிப் பருப்புகளைச் சிறுதுண்டுகளாக ஒடித்துக் கொள்ளவும்.
எல்லாப் பொருள்களையும் நன்றாகக் கலந்து ஒரு மைக்ரோவேவ் பாத்திரத்தில் மூடாமல் வைக்கவும்.
சில நிமிடங்கள் ஹமைக்ரோவில் வைக்கவும். நடுவில் ஒருமுறை லேசாகக் கிளறிக் கிளறவும். மைக்ரோவேவிலிருந்து எடுத்த கையோடு, நெய் தடவிய தட்டில் கொட்டிச் சமமாகப் பரப்பவும். சிறிது சூடு ஆறத் தொடங்கியதும், நெய் தடவிய கத்தியால் 3 செ.மீ. சதுரக் கட்டிகளாக வெட்டவும். மூன்றரை நிமிடங்களில் தேங்காய் பர்பி தயார்.





# உதடுகளைப் பராமரிக்க



கிளிசரின், பெட்ரோலியம் ஜெல்லியை உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் மென்மையாக மாறும். வாரம் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு உதடுகளை [illegible] மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் [illegible] மென்மையாக மாறும்.

உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்பட வேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும், நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். மற்றவர்கள் உபயோகிக்கும் லிப்ஸ்டிக்குகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அதனால் தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு. இப்போது மேட் பினிஷ் லிப்ஸ்டிக்குகள் மிகவும் பிரபலம். அவற்றில் ஈரப்பதம் குறைவு என்பதால் உதடுகளில் உள்ள இயற்கையான எண்ணெய்ப்பசையை அழித்து விடும். இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக உதடுகளில் உள்ள லிப்ஸ்டிக்கை சுத்தமாக அகற்றி விட வேண்டியது மிக முக்கியம்.

முட்டையின் வெள்ளைக் கருவோடு தேன் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை அழகு பெறும். தினமும் நெய் அல்லது வெண்ணெயை உதடுகளில் தடவி வர, அவற்றில் உள்ள வெடிப்புகள் நீங்கி, உதடுகள் வழுவழுப்பாகும். முட்டையின் வெள்ளைக் கருவோடு அரை ஸ்பூன் பாதாம் பவுடரைக் கலந்து, அத்துடன் கொஞ்சம் பாலாடையையும் சேர்த்து உதடுகளில் தடவி வர, வறண்ட உதடுகள் குணமாகும்.

[illegible] எண்ணெயுடன் இரண்டு கிராம் தேன் மெழுகும், பன்னீரும் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை சிவப்பாகவும், மென்மையாகவும் மாறும். கொத்தமல்லிச் சாற்றை உதடுகளில் தினமும் தடவி வந்தால் அவை இயற்கையிலேயே சிவப்பு நிறத்தைப் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் முன்னேற்றத்தின் வழிகாட்டியாக....



உடுவிலூர் கலா.

மனித மூளையின் சிந்தனை வளர்ச்சி அறிவியலின் பிரசவம். அறிவியலின் அதீத வளர்ச்சி தொலைக்காட்சி, தொலை நகல், இணையம் போன்ற நவீன கண்டு பிடிப்புக்கள். எந்தவொரு அறிவியல் சாதனமும் மனிதனின் வாழ்வை அழிப் பதற்கெனக் கண்டுபிடிக்கவில்லை.

மனிதன் பயன்படுத்தும் வழிகளே தவ றானவை. தொலைக்காட்சி பெண் களின் வாழ்வை நாசமாக்குகிறது. நேரத்தை சூறையாடுகிறது என்று குற்றம் சொல்கிறது சமூகம். நாண யத்தின் இரு பக்கங்கள் போல் தொலைக்காட்சியால் நன்மையும், தீமையும் இருக்கின்றன.

தொலைக் காட்சியில் மெகா தொடர் கள் மட்டும் ஒளிபரப்பப்படுவதில்லை. மெகா தொடரில் கூட பல நன்மையான விடங்கள் இருக்கின்றன. அவற்றை சரிவரப் பயன்படுத்தாது வெறுமனே தொடர்களைப் பார்த்து விட்டு தமது நேரத்தை வீணடிக்கின்றனர் பெண்கள். ஆனால் வளரத் துடிக்கும் பெண் களுக்கு சிறந்தொரு வரப்பிரசாதம் தொலைக் காட்சி.

டிஸ் ரீவியில் 370 சனல்கள் பல மொழி களில் உள்ளடங்கலாக உள்ளன. தமிழ் மொழிச் சனல்களில் பெண்களின் வளர்ச்சிக்குத் தேவையான பல நிகழ்ச் சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. தினசரி புதுப்புது சமையல், நோய்கள் பற்றிய விளக்கங்கள், உளவள ஆலோசனை, கைவேலை, தையல், வீட்டுத்தோட்டப் பராமரிப்பு போன்ற நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படுகின்றன.

பணவிரயமின்றி வீட்டில் இருந்தவாறே சுயதொழில் செய்யக்கூடிய அளவுக்கு நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவை ஒளிபரப்பபப்படுவது பல பெண்களுக் குத் தெரிவதில்லை.

மெகா தொடருக்கு முன்னுரிமை அளிக் கும் பெண்கள் அவற்றுக்கான நேரத்தை கருத்தில் கொண்டு செயற்படுகின்றனர். பெண்ணிய வளர்ச்சிக்கு தேவையான நிகழ்ச்சி களை விடுத்து மெகா தொடர்க ளுக்கு பெண்கள் அடிமையானது தமது வளர்ச்சிக்குத் தாமே போடும் முட்டுக்கட்டை. பெறுமதிமிக்க நேரத்தை மெகா தொடர் களுக்காக விரயம் செய்து ஓய்வு நேரமாக மாற்றும் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் ஒன்று மட்டுமே. மெகா தொடர்களுக்கு வரவேற் பளிக்கும் பெண்களால் வளர்ச்சிய டைவது தயாரிப்பாளர்களும், நடிகர் களுமே. முன்னேற்றம் எதுவுமின்றி குடும்பத்தில் பிரச்சினையை எதிர் நோக்குவதும் நேரயத்தை விரய மாக்குவதுமே இவர்களுக்கு மிஞ்சும். ஆக மெகா தொடர் மேல் ஆர்வம் காட்டாது பெண்களின் முன்னேற்றத் துக்கான நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் பார்ப்பதன் மூலம் பெண்களாகிய எமது அறிவு விருத்தியடையும்.

பெண்களின் வளர்ச்சிக்கு சிறந்த வழி காட்டியாக தொலைக் காட்சியுள்ளது. அதனைத் தவறாகப் பாவித்து நேரத்தை விரயமாக்காமல் வளர்ச்சிக்கான ஏணிப் படியாக மாற்ற வேண்டும். மாற்றம் ஒன்றே நம்மை முன்னேற்றும். புரிந்து கொள்வீர்கள் பெண்களே..

பெண்களின் முன்னேற்றத்தின் வழிகாட்டியாக....

அன்னை ஓர் ஆலயம்

அன்னை என்பவள் கோயிலடா– அவள்
மனமே என்றும் தெய்வமடா
அன்பால் ஆன உருவமடா– அதைப்
பேணுதல் எமது கடமையடா

பெண்ணின் பெருமை தாய்மையடா– அந்தத்
தாயின் உள்ளம் தூய்மையடா–அவள்
வாயில் வருவது வாய்மையடா–இதை
உணர்வது எமது கடமையடா

துளியாய் எம்மை ஏற்று நின்று
தூய நல் உடம்பில் வளர்த்திருந்தாள்
உயிரை உடலில் புகுத்தி நின்று
உலகில் படைத்து உவகையுற்றாள்

பத்தியம் பலவும் பார்த்திருந்தாள்
பண்பாய் எம்மை வளர்த்திருந்தாள்
பாடசாலைக்குச் செல்ல வைத்திருந்தாள்
பாரினில் எம்மை உயர்த்தி வைத்தாள்

எத்தனை வயதே ஆனாலும்
எவ்வகைத் துன்பம் வந்தாலும்
அருகினில் இருந்து அரவணைத்து
ஆறுதல் பலவும் தந்திடுவாள்
உவகை படைத்தவன் இறைவனென்றால்
மனிதனைப் படைத்தவள் அன்னையன்றோ
உலகினில் தெய்வம் இறைவனென்றால்
மனிதரில் தெய்வம் அன்னையன்றோ

தூய்மையின் குலமே பெண்களடா
அந்தப் பெண்களை நீயும் பேணிடடா
சீதனக் கொடுமை நீ ஒழித்து
சீரான வாழ்வைக் கொடுத்திடடா



நா.ஸ்ரீகிருஷ்ணா
யாழ்ப்பாணம்.

# என் இந்தப்பாகுபாடு

சு.சிவாஜினி, சுன்னாகம்.



இன்று எங்கு பார்த்தாலும் ஆணுக்கு பெண்கள் சளைத்தவள் இல்லை. எதிலும் சமவுரிமை என்று தானே அனைவரும் வாய்ப்பு வரும் இடமெல்லாம் முழங்கித் தள்ளுகின்றோம். பெண் களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு என்று வாதிடும் பெரி யோர்களும் துறைசார் அதிகாரிகளும் இந்த விடயத்தை சற்று சிந்தியுங்கள்.

ஆணும் பெண்ணும் செய்கின்ற தொழில் சமஅள வாக இருந்தாலும், அங்கே ஆண் தொழிலாளிக்கு கிடைக்கின்ற ஊதியம் பெண் தொழிலாளிக்கு கிடைப்பதில்லை. இன்று கூலித் தொழில் புரிகின்ற எமது பெண்கள் ஆண்களோடு சமமாக அதே அளவு தொழில் செய்கின்ற போதும் சம்பளம் குறையவே கிடைக்கின் றது. ஏன் இந்த நிலை?

பெண்களிடமிருந்து உழைப்பை உறிஞ்சப் பெறும் முதலாளி வர்க்கத்தினர் கொஞ்சம் யோசிக்க வேண் டும். பெண்கள் என்றால் கொடுக்கிறதை வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்று பெரிய முதலாளிகள் கூறுவார்கள். இன்று அரச உத்தியோகம் பார்க்கும் பெண்களின் நிலை என்பது பிரச்சினை இல்லை. கூலிக்கு போகும் பெண்கள் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து போவது தான் மிச்சம்.

கடைகளில் தொழில் புரியும் பெண்களின் நிலை ஏதோ கொடுப்பதை வாங்கிக் கொண்டு போவது தான். கூலிக் காரர்களை ஏய்த்து ஏதோ முதலாளி வர்க்கம் வசதி படைத் தவர்களாக வாழ்கிறார்கள். தனது வறுமையை விரட்டப் பாடுபடும் எமது பெண் தொழிலாளர்களின் சம்பள உயர்வுகள் பற்றி யாரும் கதைப்பது இல்லை. அவர்களும் காலை கூலி வேலைக்குப் போனால் ஏதோ கிடைப்பதைக் கொண்டு வந்து எமது பிள்ளை குட்டிகளை பார்ப்பது என்று இருந்து விடுவார்கள்.

எது எப்படியோ எமது பெண்களின் நிலை மீதும் அக்கறை கொள்ளுங்கள். ஆண்களோடு சரி நிகராக தொழில் புரியும் பெண்களுக்கு சமமான பாகுபாடு அற்ற சம்பளத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சித் தவிப்பு

புத்தூர் விஸ்வம்



குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு என்பார்கள். தான் பேசியதை அவனால் நினைவில் வைத்துக்கொள்ள முடியாத மதி மயங்கிய நிலையை இது குறிக்கும். அதுபோல குடிக்கும் நேரம் வந்ததும் அதற்காக அந்தரப்படுவதும் எந்த வேலையானாலும் அதைவிட்டு விட்டு தவிப்புடன் குடியைத் தேடி ஓடிப்போவதும் அவனது தணியாத தாகம்.

தொலைக்காட்சித் தொடர் நாடகம் பார்க்கும் தங்காவின் நிலையும் இதுதான். மாலை ஆறு மணிக்கு மரகதவீணையுடன் தொடங்கி தென்றல் தொடர் முடிந்து, புதிதாகத் தொடங்கிய இது காதலா அதையடுத்து 7 மணிக்குப் பிரியமானவள், 7.30 மணிக்கு தொடங்கும் மூன்று முடிச்சு நாடகமும் பார்த்துத்தான் இரவுச் சாப்பாட்டுக்கான தயாரிப்புக்கள் தொடங்கும். தாயும் மகளும் இந்த விடயத்தில் ஒற்றுமை.

மகள் அருகிலுள்ள ஊர்ப் பாடசாலையில் ஆசிரியையாகப் பணிபுரிகிறாள். உயர்தர வகுப்புகளின் கணித ஆசிரியை. இன்னும் திருமணம் ஆகவில்லை. கணித ஆசிரியையின் நேரக் கணிப்புப்படி இரவு 8.30 மணிக்கு சமையல் அறைக்குள் அம்மா புகுந்தால் போதும் தான் தேங்காய் துருவுதல் போன்ற சில சிறிய ஒத்துழைப்புகளைச் செய்துவிட்டு பாடசாலை முன்னாயத்த வேலைகளைக் கவனித்துக் கொள்வாள்.

மூன்று நேரமும் சமையல் வேலைகளைக் கவனிக்கும் அம்மா, இடைநேரங்களில் தன் மன ஆறுதலுக்காகத் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொள்ளட்டுமே என்பதில் அவள் உடன்பாடாக இருந்தாள். அதற்காகச் சில சமயங்களில் தந்தையுடனும் வாதாடிப் பெண் உரிமைகளை நிலை நிறுத்துவாள்.

தந்தை லோகநாதன் மட்டும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள் பார்ப்பதற்கு சிடுசிடுப்புக்காட்டுவார். தென்னை மரங்களில் விழுந்த தேங்காய், ஓலைகள் பொறுக்க நேரமில்லை. என்ன திரைப்படம், எப்பபோடுவார்கள், என்ன நாடகங்கள், எப்ப எப்ப என்பது மட்டும் அவவுக்குத் தெரியும் என்று சினந்துகொள்வார்.

காங்கேசன் சிமெந்து ஆலையில் ஒரு காலத்தில் பணியாற்றிய லோகநாதன் ஓய்வு நிலையில் இப்போது தனியார் மின்சாரக் கடையில் தொழில் பார்த்து வருகிறார். மகளின் திருமணச் செலவுகளுக்காக உழைப்புச் செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர். அவர் வேலையால் வரும்போது தேநீர் சிற்றுண்டி கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் மனுசன் கடுமையாகப் புறுபுறுப்பார் என்பதை விளங்கி, இடைவேளை விளம்பரங்களின் போது எழுந்தோடி சமையலறையையும் சற்றுக் கவனித்துக்கொள்வாள் தங்கம்.

நாளைமறுதினம் பக்கத்து வீட்டுப் பங்கயம் அக்காவின் மகளுக்குத் திருமண எழுத்து. அதற்குப் பலகாரம் சுட உதவி ஒத்தாசைக்கு வரச்சொன்னவை. நாங்கள் உதவினால்தான் நாளைக்கு அவர்களும் உதவுவார்கள் என்பது தெரிந்த தாயும் மகளும் தொலைக்காட்சி நாடகங்களைப் பார்க்காமல் போவதில் பெரும் தவிப்பு அசௌகரியத்தை உணர்ந்தனர். அதுவும் பிரியமானவள் நாடகத்தில் அவந்திகா மணப்பெண் தப்பியோடிய பின் என்ன ஆனாள் என்பதை அறிந்துகொள்ளும் தவிப்பு அதிகரித்தது. அதை மட்டுமே பார்த்து விட்டுப் போவம் என்ற நினைப்பில் தொலைக்காட்சியை இயக்க முனைந்தனர். ஆனால் என்ன அநியாயம் பெட்டிக்குள் இருந்து ஏதோ கிறுகிறு என்று இரையும் சத்தம் கேட்டது.

"மகள்! ஏதோ கிறுகிறு என்று இரையும் சத்தம் கேட்கிறதே. இங்கே வா! பார்!" என்று தாய் குரல்கொடுத்தாள். "அம்மா! அவதானம் பகல் மழை பெய்தது. ஏதேனும் மழைத் தண்ணீர் ரி.வி. வயர் வழிய வந்து கரண்ட் பாயுதோ தெரியாது" என்கிறாள் மகள். "அப்ப நீ கிட்டப் போகாதை பிள்ளை. உதயன் பேப்பரிலை படிச்சனான். மழை வெள்ளத்துக்கைபோன தகப்பனும் மகனும் அறுந்த கரண்ட வயரிலை தடக்கி உயிரிழந்ததாம். வேறு எங்கையோ மின்சார சபைப் பொடியன் தூணிலை ஏறி வயரோ பல்போ மாத்தேக்கை கரண்ட் அடிச்சுச் செத்ததாம்" என்று தாயார் பய முறுத்தி எச்சரிக்கைகள் விட்டார்.

கிர்.... எனத் தொடரும் சத்தம் மட்டும் இருவர் மனதிலும் பயப் பீதியைமூட்ட செய்வதறியாது திகைத்தனர். அந்தளவில் அரை மணித்தியாலம் முடிந்து அடுத்த நாடகம் தொடங்கும் நேரத்தைச் சுவர்மணிக்கூடு காட்டியது.

"அம்மா நில்லுங்கோ! நான் 'றிப் சுவிச்' பார்த்திட்டு வாறன்" என்று மகள் விரைந்தாள். "எல்லாம் ஒழுங்காய்தானே கிடக்கு 'றிப்' விழவில்லை. கரண்ட் ஒழுங்காய்த் வாறதுக்கான சிவப்புச் சமிக்ஞையும் எரியுது. அப்ப என்ன சத்தமாயிருக்கும்" என மகள் சொல்லும்வேளை வெளியே இருமல் சத்தம் கேட்கிறது.

"அம்மா! அப்பா வந்திட்டார்" என்ற குரல் கேட்ட தாய் தங்கம் ஓடி வந்தாள். "வாருங்கோ! வாருங்கோ!" என்று அன்புடன் குரல் கொடுத்தாள். "என்ன! ஒருநாளும் இல்லாத திருநாளாகப் பலமான வரவேற்புக் கொடுக்கிறாய்" என்று அதிசயமாகக் கேட்டார் லோகநாதன். "ஏன் இன்றைக்கு நாடகங்கள் இல்லையோ அல்லது அடுத்த வீட்டுப் பலகாரச் சூட்டுவேலை பார்க்கப் போறதோ" என்றார் லோகநாதன்.

"ஓமப்பா! நீங்கள் கால் [illegible] வாங்கோ. தேத்தண்ணி குடிக்கலாம்" என்றாள் மகள். உபசரிப்புப் பலமாக இருப்பதைப் புரிந்துகொண்ட லோகர் கிணற்றடிக் குழாயில் கால்முகம் கழுவித் துவாய்த் துண்டால் துடைத்துவிட்டுச் சாமியறைக்குச் சென்று, "அப்பா முருகா! இன்று என்ன வரம் கொடுத்தாய் அன்னந் தண்ணி நேரத்துக்குக் கிடைக்கப் போகுதே" என்று மகிழ்ந்தபடி உள்ளே சென்றார்.

> "இந்த மனுசனுக்கு எங்கை நேரம்! உதயன் பேப்பர் படிச்சனீங்களே?" என்றாள்தாய். "உதயனிலை என்ன புதினம்? எதைச் சொல்லுறாய் அப்பா!" என்றார் லோகர். "அது தானப்பா! அண்டைக்கு ஒரு தகப்பனும் மகனும் கரண்ட் அடிச்சு செத்தது. பிறகு மின்சாரக் கம்பத்திலை ஏறின பெடியன் செத்தது. இதுதான் புதினங்கள்.

மகள் அன்புடன் கொண்டு வந்த தேநீரை [illegible] ந்தியபடியே, "அம்மா [illegible] நாடகங்கள் இல்லையே? வலு ஆறுதலாய் நிக்கிறியள்!" என்று நக்கல் அடித்தார்.

"இல்லையப்பா! நாடகங்கள் நடக்கும். எங்களுக்குத்தான் பயம்" என்றாள். "நாடகத்திலை என்ன பயம்பிள்ளை?" என்றார் அப்பா. "இந்த மனுசனுக்கு எங்கை நேரம்! உதயன் பேப்பர் படிச்சனீங்களே?" என்றாள் தாய். "உதயனிலை என்ன புதினம்? எதைச் சொல்லுறாய் அப்பா!" என்றார் லோகர். "அது தானப்பா! அண்டைக்கு ஒரு தகப்பனும் மகனும் கரண்ட் அடிச்சு செத்தது. பிறகு மின்சாரக் கம்பத்திலை ஏறின பெடியன் செத்தது. இதுதான் புதினங்கள். வாசிக் கேல்லையோ!" என்றாள் தாயார் தங்கா. "உதுகள் கதைச்சவை பேப்பரிலும் வாசிச்சனான். அதுக்கு ஏன் நீங்கள் அழுறியள்" என்றாள் லோகர்.

"அப்பா! நாடகம் பார்க்க அம்மா ரீ.வி. போட்டா ஏதோ கிறுகிறு என்று சத்தம் வந்தது. என்னைக் கூப்பிட்டுப் பார்க்கச் சொன்னா. பிறகு உந்தக் கதையளைச் சொல்லி தொடாதை மழைத் தண்ணி நிக்கும் கரண்ட் அடிக்கும் என்று பயமுறுத்தினா" என்றாள் மகள்.

"எடே இதோ சங்கதி!" என்று கூறி லோகர் ரி.வி. பெட்டியை நெருங்கி ரி.வி. கரண்ட சுவிச்சை நிறுத்தினார். அப்போதும் கிர் சத்தம் தொடர்ந்தது. ஸ்குறு சாவியை எடுத்து மேல் மூடியை கழற்றினார். கிர் சத்தம் போட்ட குளவி வெளியே பறந்து வந்தது. மூவரும் வாய் விட்டுச் சிரித்தனர்.


நேரம் 8.30 தாண்டிவிட்டது. தொடர் நாடகங்கள் பார்க்காமல் தவிப்படைந்த அம்மா அற்பக் குளவியை விளக்குமாற்றால் அடித்தாள்.

பிரியமானவள் நாடகத்தில் ஓடிப்போன அவந்திகா திருமணம் என்ன ஆச்சுதோ என்று மகள் அம்மாவின் தவிப்பை மீண்டும் கிளறினாள். "அடுத்த வீட்டுத் திருமணப் பதிவுக்குப்போக உதவ மனமில்லை. கதையிலை வாற திருமணத் தொடருக்காக கவலைப் படுறியளே!" நாளைக்கு ஆர் உங்களுக்கு உதவுறது என்று ஆதங்கப்பட்டார் அப்பா. நாளைக்கு இரண்டு மூன்று குளவி பிடிச்சு விட்டிட்டுத்தான் தான் போறதென்றார் லோகர். தாயும்மகளும் சிரித்துக்கொண்டே அடுத்த வீட்டுத் திருமணத்துக்குப் புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது காதலா?

அ.பைந்தமிழ்



அதிகாலைக் குளிரில் நடுங்கியபடியே தன் வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்த பூக்களின் வாசனையை சுவாசித்து மெல்ல நடந்து வருகின்றாள் நிகிதா. பனித்துளியில் நனைந்த மலர்களை ஒவ்வொன்றாய் இரசித்தவாறு, மணல்மேட்டில் அமர்ந்த அவளின் நினைவுகள் கல்லூரியை நோக்கி பயணிக்கின்றன.

எந்தவித கவலைகளுமின்றி சுதந்திரமாய் சிறகடித்துத் திரிந்த கல்லூரிக் காலத்தில் கல்வெட்டுக்கள் இல்லாமல் பொறிக்கப்பட்ட பெயர்கள் அஸ்வின்,அரவிந்த்,றோசி,நிகிதா. நால்வரும் வெவ்வேறு ஊரிலிருந்து உயர் கல் விக்காக ஒரே கல்லூரியில் இணைந்தவர்கள். முதல்நாள் அறிமுகத்திலேயே நால்வரும் நல்ல நண்பர்களாகினர். தாயிடமும் சில தயக்கங்கள் இருக்கும் தோழமையில் அது கிடையாது என்பது இவர்களது நட்பில் முற்றிலும் உண்மை. இரண்டு வருடகால உயர் கல்வியில் உயிர்கொண்ட புதிய நட்புக் கிடைத்ததில் அனைவருக்கும் மகிழ்ச்சிதான். அவர்களின் நட்பு பலரின் சந்தோஷத்துக்கும், சந்தேகத்துக்கும் வழிவகுத்தது. ஆனாலும், இவர்களின் இலக்கு கல்வியிலும் நிலை தவறா நட்பில் தடம்மாறாது வாழ வேண்டும் என்பதிலுமே இருந்தது.

உயர்தரப் பரீட்சையை எழுதிவிட்டு பெறுபேறுக்காகக் காத்திருந்த காலத்திலும் நால்வரும் பிரத்தியேக வகுப்புகளுக்கு சென்று வந்தனர். அரவிந் எப்பொழுதும் அமைதியான, சிந்தனையாற்றல் மிகுந்தவனாகக் காணப்பட்டான். அவ்வப்பொழுது சிறுசிறு சண்டைகள் வந்த போதிலும், இவர்களுக்கிடையில் பிரிவு என்ற வார்த்தையைக் காண எவராலும் முடியவில்லை. பரீட்சை முடிவுகள் வெளியாகின. நால்வரும் பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்றனர்.

ஒவ்வொருவரும் தமது சொந்த ஊருக்குச் செல்ல வேண்டிய காலம் வந்தது. அப்பொழுதுதான் நிகிதாவின் மனதில் இனம் புரியாத தடுமாற்றம். அவளால் நண்பர்களின் பிரிவைத் தாங்க முடியவில்லை. அதிலும் அஸ்வினைப் பிரிந்து செல்வதை எண்ணுகையில் உயிர் உருகியது. அவளால் பிரியாவிடை கூட பகிர நண்பர்களிடம் செல்ல முடியவில்லை. அஸ்வின், அரவிந்த், றோசி மூவரும் சந்தித்து வாழ்த்துக்களைக் கூறி நினைவுப்பொருள்களை வழங்கி, தங்கள் ஊர்களுக்குப் புறப்பட்டனர்.

நிகிதாவின் மௌனம் அனைவருக்கும் புரியாத புதிராகவே இருந்தது. அவள் தொலைபேசி அழைப்புகளுக்குக்கூட பதிலளிக்காது துண்டித்து விட்டாள்.

"நிகிதா" எனத் தாயார் அழைக்கும் சத்தம் கேட்டு நினைவலைகளைப் புறந்தள்ளி தோட்டத்திலிருந்து வேகமாக நடந்து சென்றாள். அவளின் பாதங்கள் மணலில் பதித்த தடயங்களை வேகமாய் வீசிய தென்றல் அழித்துச் சென்றது. ஆனால், அவள் மனதில் பதிந்த அஸ்வினின் நினைவுகளை மட்டும் அவற்றால் அழித்து விடமுடியாது. மனதின் நினைவைக் கூறி சாவு வரை தொடரும் நட்பை இழக்க நிகிதா விரும்பவில்லை. மீண்டும் நண்பர்களைச் சந்திக்கும் போதும் நட்புடன் மட்டுமே உரையாடுவாள் அவள். இதுவும் காதலா?

## சொற்சிலம்பம் - போட்டி இல: 372

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ✿ | 4 | 5 |
| | ✿ | 6 | | ✿ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ✿ |
| 11 | | ✿ | 12 | | | ✿ | 13 |
| | ✿ | 14 | | | ✿ | 15 | |
| ✿ | 16 | | | ✿ | 17 | | |
| 18 | | | ✿ | 19 | | ✿ | |
| 20 | | | | | ✿ | 21 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமான தபால் விலாசம்: ..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. மிகச் சிறப்பு
4. ஒருவகைத் தானியம்
6. நில்
7. ஒரு வகை மீன்
8. வல்லமை
11. கண். வாய் முதலிய உறுப்புக்கள் உள்ள பகுதி
12. திறன் மிக்க தன்மை
14. சாரீரம்
15. இருபால் இணைவில் உருவாவது
16. தீயைத் தொட்டால்
17. மனைவி
18. வேள்வி
19. முக்கனிகளில் ஒன்று
20. துதிக்கை
21. வழுவழுப்புத் தன்மை கொண்டது

### மேலிருந்து கீழ்

1. நைவேத்தியம் செய்த உணவு வகை
2. பெண்கள்
3. வறுமை
4. பூச்சாகப் படிவது
5. ஓர் தூர அளவீடு
7. பண்பற்ற தன்மை
9. பர்வதம்
10. திறன்
13. ஒரு வகைத் தாவர ஒட்டுண்ணி
14. காதுக்குள் சேரும் அழுக்கு
15. அம்பு
16. நலம்
17. கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உதவுவது
18. என்ன
19. குரோதம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன். அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 370 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) தாமதம் (4) நகாசு (7) கருவி (8) தகுந்த (9)சாவித்திரி (11)தன் (12) தரித்தல் (14) திகில் (16) திரு (18) ஆரம்பம் (20) சக்கரம் (22) சுப (23) மகுடம் (24)அமைதி

### மேலிருந்து கீழ்

(1) தாகசாந்தி (2)மருவி (3)தவித்தல் (4) நகு (5) காந்தல் (6) சுதன் (8) தரித்திரம் (10) திரி (13) தரும் (15) கிழக்கு (17) தம்பதி (18) ஆரம் (19) பசுமை (20) சம (21) கட (22) சுமை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 370 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

கே.சுதர்சினி,
இல.154, கே.கே.எஸ்.வீதி,
குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.

**2 ஆம் பரிசு**

கி.வயித்திலிங்கம்,
முதலாம் பகுதி, திருவையாறு,
கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**

சா.ராதிகா
யாசோ ரெக்ஸ்,
நெல்லியடி,
கரவெட்டி.

**4 ஆம் பரிசு**

ப.சகுந்தலராணி
வேலணை மேற்கு,
வேலணை 06.

**5 ஆம் பரிசு**

ச.சாருஜா,
இடைப்பிட்டி,
காரைநகர்.

**பாராட்டுப் பெறுவோர்**

ய.ரேணுகா,
கொற்றாவத்தை,
அ.மி.த.க.பாடசாலை,
வல்வெட்டித்துறை.

வி.நிர்மலாதேவி,
இணுவில் வீதி,
மானிப்பாய்.

உமா சங்கர் நவீன்
பிரதான வீதி,
மந்திகை அம்மன் கோவிலடி
புலோலி

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.372
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்.
(17.06.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.372 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 21.06.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 370 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாணயங்கள்

ஆஸ்திரியா – ஷில்லிங்
அல்பேனியா – லெக்
அல்ஜீரியா – தினார்
கனடா – டொலர்
சிலி – பிசோ
லாவோஸ் – கிப்
மாலைதீவு – ரூபியா
மொராக்கோ – டிர்காம்
ஈரான் – றியால்
நோர்வே – கிரோன்

## அப்பா

*அப்பா என்பவர் ஆலமரம்*
*அன்பாய் குடும்பம் தாங்கும் மரம்*
*தப்பு செய்தால் கண்டிப்பார்*
*தவறை உணர்ந்தால் மன்னிப்பார்.*

*நம்மைக் காக்க உழைத்திடுவார்*
*நாளும் நன்றாய் வளர்த்திடுவார்*
*செம்மை நமக்குத் தந்திடவே*
*சிறுகச் சிறுக சேமிப்பார்.*

*படிக்கச் சொல்லி அனுப்பிடுவார்*
*படிப்பதைப் பார்த்து மகிழ்ந்திடுவார்*
*இடித்து நம்மைத் திருத்திடுவார்*
*ஏற்றம் கண்டு களித்திடுவார்.*

*சுத்திய வழியில் நடந்திடவே*
*சரியாய் நமக்கு உதவிடுவார்.*
*நித்தமும் சுகத்தை நாம் பெறவே*
*நித்திரை மறந்து பார்த்திடுவார்.*



## பொது அறிவுத் தகவல்கள்

* சுண்டெலியின் ஆயுள் காலம் 3 வருடங்கள்
* கறையான் அரிக்காத மரம் தேக்கு
* பாம்புக்கு ஒரு நுரையீரல் மட்டுமே உண்டு.
* தக்காளியின் தாயகம் அமெரிக்கா.
* நமது உடலின் பெரிய சுரப்பி கல்லீரல்.
* இங்கிலாந்து, ஈரான் நாடுகளின் தேசிய சின்னம், ரோஜாமலர்.
* இந்தியத் தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டதாகும்.
* நில நடுக்கத்தின் கடுமையை துல்லியமாக அறிந்து கொள்ள ரிக்டர் ஸ்கேல் என்ற கருவி பயன்படுகிறது.
* உலகிலேயே மிகப் பழைமையான பல் கலைக் கழகம் மொராக்கோ நாட்டில் உள்ளது.
* மண்புழுவுக்கு கண்கள் கிடையாது.





## கண்டுபிடிப்புக்கள்

பொஸ்பரசை கண்டுபிடித்தவர் – பிராண்ட் (1669)
பொட்டாசியத்தை கண்டுபிடித்தவர் – டேவி (1807)
ரேயானை கண்டுபிடித்தவர் – கார்டனேட்
மிதிவண்டியை கண்டுபிடித்தவர் – கிர்க்பாடிரிக் மாக்மிலென் (1839–40)
மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்தவர் – டெய்ம்லர் (1885)

# முல்லாவிடம் இருந்த சக்தி



தற்பெருமை பேசுவார்களைக் கண்டால் முல்லாவுக்கு பிடிக்காது. அவர்களை எவ்விதமாவது மட்டம் தட்ட அவர் முயற்சி செய்வார். ஒரு தடவை ஒரு மதச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக வெளிநாட்டில் இருந்து மதத் தலைவர்கள் சிலர் வந்திருந்தார்கள்.

அவர்கள் மக்கள் மத்தியில் சொற்பொழிவாற்றும் போது மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ அதிகம் பேசமால் தங்களுக்கு அதிசய சக்திகள் உண்டு என்றும் தாங்கள் விரும்பினால் நீரில் நடக்க முடியும், நெருப்பில் புகுந்து வெளி வர முடியும், மணலைக் கயிறாக திரிக்க முடியும் என்றும் அவர்கள் புராணத்தை தம்பட்டமடித்தே காலத்தை ஒட்டினர். கடைசியாக நன்றி கூறுவதற்காக வந்த முல்லா தனக்கும் சில சக்திகள் உண்டு என்றும் குறிப்பாக நல்ல இருளில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் வழிநடக்க முடியும் என்றும் கூறினார்.

விளக்கே இல்லாமல் அடர்ந்த காட்டில்கூட நல்ல இருளில் உம்மால் நடந்து செல்ல முடியுமா? என்று மதத்தலைவர்கள் கேட்டனர். முடியும் என்று முல்லா கூறினார். அன்று இரவு உணவுக்குப் பிறகு, முல்லாவின் அந்தச் சிறப்பு ஆற்றலைப் பரிசோதனை செய்து பார்ப்பது என்று முடிவாயிற்று. மதத் தலைவர்களும் உள்ளூர் பிரமுகர்கள் சிலரும் காட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆங்காங்கே நின்று முல்லாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.



அன்று உண்மையிலேயே இருள் மிகவும் அதிகமாக இருந்தது. மிகவும் அருகில் இருக்கும் பொருள் கூட கண்களில் படவில்லை. குறுக்கும் நெடுக்குமாக நிற்கும் மரங்களை அடையாளம் கண்டு முல்லா எவ்வாறு இருளில் வருகிறார் என்று பார்க்க எல்லோரும் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்து முல்லா ஒரு கைவிளக்கை எடுத்துக் கொண்டு நடந்து வந்தார்.

இது என்ன? கைவிளக்கு வெளிச்சத்தில் நடந்து வருகிறீர், இருளில் அல்வா நடப்பதாக சவால் விட்டீர் என்று மற்றவர்கள் கேட்டனர்.

நண்பர்களே, எவ்வளவு பயங்கர இருளாக இருந்தாலும் எனக்குக் கண் நன்றாகத் தெரியும், ஆனால் நடந்து வருவது நான்தான் என்று உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டாமா? எனக்குப் பதிலாக வேறு ஆளை நடக்க விட்டு நான் உங்களை ஏமாற்றி விட்டேன் என்ற அவப்பெயர் நாளை வரக்கூடாதல்லாவா? அதனால் என்னை நீங்கள் அடையாளம் கண்டுபிடிப்பதற்காகத்தான் கைவிளக்குடன் நடந்து வந்தேன் என்றார் முல்லா.


பின்னர் முல்லா அன்பார்ந்த மதத் தலைவர்களே உங்களிடமெல்லாம் ஏதேதோ அபூர்வ சக்தி இருப்பதாகக் கூறினீர்களே? அதற்கு என் சக்தி ஒன்றும் இளைத்ததல்ல என்றார். தங்களை மட்டம் தட்டவே இப்படி ஒரு நாடகத்தை முல்லா ஆடினார் என்பதை மதத் தலைவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.



அ.றெமிங்கன்
கொக்குவில் இந்துக் கல்லூரி



சு.ஸ்ரீகுருபிரசாத்
யாழ். இந்துக் கல்லூரி



உ.கனிஸ்ரன்
புனித ஜோன் பொஸ்கோ ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15
07.06.2015
சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# மேட்டுநிலத்து ஊற்று

தொடர்கதை

தேவி பரமலிங்கம்

கந்தையர் வீட்டைவிட்டுத் தான் வெளியேறிய கதையை கணேசன் சொல்லச் சொல்ல பாலசிங்கம் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டே கூட நடந்து கொண்டிருந்தான். கணேசனின் மனப்புழுக்கம் அவனுக்குப் புரிந்தது. கந்தையரின் அணுகுமுறை மாறியதுமே அங்கிருக்கப்பிடிக்காமல் கணேசன் புறப்பட்டுவிட்டான் என்பதும் தெளிவானது.

"அப்படிச் சொன்ன பின்னாலே அங்க இருக்க எனக்குப் பிடிக்கேல்லை... தெரியுந் தானே..! அப்புடிப் புளங்கிய வீட்டில அன்னியனா இருக்கச் சரிவரேல்லை... வெளிக்கிட்டிட்டன்..."

தன்னுடைய நிலைமையை பாலசிங்கத்துக்குப் பேச்சோடு விளக்கிக் கூறியவனாய் நடந்தான் கணேசன்.

"அப்ப.. இவ்வளவத்துக்கும் உன்ரை ஆளை வெளியிலை காணேல்லையோ?" கணேசனிடம் விடுத்துக் கேட்டான் பாலசிங்கம்.

"ஊம்... ஹூம்... காணேலும் காணேல்லை..! போனோடனையே பிரச்சினை துவங்கீட்டுதே..! பிறகென்னெண்டு அதுகளைக் கவனிக்க மனம் வரும்!" சுருக்கமாகச் சொல்லி முடித்தான் கணேசன்.

"அதுசரி..! உன்னோட இப்பிடி நடக்கக் காரணம் என்னெண்டு விளங்கிச்சுதா...?"

"ஊம்... ஹூம்... அதைத்தான் அறியமுடியாமல் போயிட்டு... நீ கேட்டது நல்ல விசயம் மச்சான். அறிஞ்சா நிம்மதியாகவும் இருக்கும்..."

"எண்டாலும் உனக்குக் கொஞ்சமாவது விளங்காமல் இருக்க நியாயமில்லை..."

"அப்படியெண்டா..! நான் ஊருக்குப் போயிருக்கேக்கை.... எனக்கு வேண்டியவர் எண்டு சொல்லுவனெல்லோ வேலுப்பிள்ளை மாஸ்ரர்! அவர் வந்திட்டுப் போயிருக்கிறார்..."

"அப்ப அவருடைய வேலையா இருக்குமோ..?"

"அதுவும் ஒன்றுதான் கணேஸ்.. படித்ததென்றால், சித்தாந்தங்களைத்தான் படித்தினமெண்டில்லைத்தான்! அவர்கள் படித்த காலங்களில் கல்வி முறை அத்தகைய கருத்துக்களைப் புகுத்தி அமைந்திருக்க வுமில்லை... முதலாளித்துவ நோக்கை வளர்க்கும் கல்வி முறைகளைத்தானே அந்தக் காலங்களில் கற்பித்தனர்... அதன் காரணமாகவும் இருக்கும்."

"அப்புடியிருக்கா... ஏனெண்டா... இந்த இடம் கிடைச்சதும் அவராலதானே! அவர் மூலம் எங்கட உள் விசயங்களை அறிஞ்சிருப்பினம்... அந்தாள், இதுகள் இப்புடி எடுக்குமெண்டாச் சொல்லி இருக்காது."

"விசயம் அதுதான் மச்சான்..! அந்தாளுக்கு மற்ற விசயங்கள் தெரிஞ்சிருக்க நியாயமில்லைத்தானே..!"

"ஓமோம்!"

இருவரும் கதைத்துக் கொண்டே வந்து சைவ ஹோட்டலில் சாப்பாட்டுக்கு ஓடர் செய்து எதிரெதிராய் அமர்ந்தனர்.

★------ ★------★

ஓரிரு தினங்கள் உருண்டோடி இருந்தன!

எண்ணெய் ஊற்றித் தூண்டிய் விளக்காகப் பிரகாசித்த காதலை திடீரென பெற்றோர் அணைத்தது பாமாவுக்கு வாழ்க்கையில் பிடிப்பையே மழுங்கடித்து விட்டிருந்தது.

கிணத்துத் தவளை போல் வீட்டுள்ளே அடைந்து கிடக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆசைக்கு எல்லை போட்டு வீட்டுள்ளே அடைத்து வைத்திருந்தால் விபரீதம் நிகழ்ந்து விடலாமெனக் கருதிய கந்தையரும் ஏற்பாடொன்று செய்திருந்தார். அதனால் பாமா, சங்கீத வகுப்பு எடுக்க வீட்டில் இருந்து வெளியே போய்வரக் கூடியதாக அமைந்தது.

பிக்கறிங்ஸ் வீதியால் நாளாந்தம் கொட்டாஞ்சேனை வீதி, கல்பொத்த வீதி, ஜெம்பட்டா வீதி வழியாய் புதுச்செட்டித் தெருவுக்கு பாடம் எடுக்கப் போய் வந்தாள் பாமா.

அவளது வீட்டிலிருக்கும் பொழுது இல்லாத ஆவல் கணேசனுக்கு இப்பொழுதெல்லாம் பெருகிக்கொண் டிருந்தது. அவளை ஒரு நாளாவது சந்திக்கக் கிடைக்காதா என்னும் ஆவலே அது.

எதுவென்றாலும் தூர விலகும் போதுதானே அதில் ஆவலும் அதிகமாகி விடுகின்றது. அதுவும் கணேசனுடைய மனம் இவ்வளத்துக்குத் துடிக்க இன்னொரு காரணமும் இருந்தது. வீட்டில் ஒரு நாள் இருவரும் தனித்து இருக்கையில் கேட்டு வைத்த அபிப்பிராயத்தை இந்த நேரத்தில் அவளிடம் அறிந்து கொள்வதே அது.

பொதுவாகப் பெண்கள் எவ்வளவு கூறினாலும் அவர்களின் வீரம் வீட்டுக்குள்ளேயே அஸ்தமித்து விடுமென்றே கருதிக் கொண்டிருந்தான் கணேசன். எனினும் பாமா மீது அவனுக்கு அனுதாபந்தான் தோன்றியது. ஏனெனில் பெண் பிள்ளைகள் காதல் கீதலென்று பெற்றோரையும் எதிர்த்து வீதிக்கு வந்து விட்டால் அவர்களுக்கு என்னதான் பெருமை இருக்கப் போகிறது? இதனால் பாமாவைச் சந்தித்து அவளுடைய மனநிலையைத் தெரிந்து கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தான் கணேசன். அதற்கான வழிகள் இன்னமும் திறந்து விடப்படவில்லை.

"மச்சான்.. மனித சமுதாயத்தில் நிலவும் சாதிபேதம், அமைப்புக்களைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

பாலசிங்கத்துடன் தங்கிக்கொண்டிருக்கும் நாள்களில் இத்தகைய பலதரப்பட்ட கேள்விகளும் மறுமொழிகளும் அவர்களுக்கிடையே தோன்றி மறையும். அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் கணேசன் பாலசிங்கத்திடம் கேட்டு வைத்தான்.

பாலசிங்கம் வகுப்பு வெறிக்குட்பட்டிருக்கவில்லை. பழகக் கிடைத்த காலங்களில் அதை அவதானிக்கவும் முடிந்திருந்தது கணேசனுக்கு.

கிராமத்தில் வாழ்கின்ற காலங்களில் அத்தகைய பாதிப்புக்களுக்கு ஆளாக நேர்ந்திருந்தாலும் கொழும்பு வந்த பின்னால் தெளிவு ஏற்பட்டும், மாக்ஸ் சித்தாந்தங்களைக் கற்றுக் கொண்டதாலும் பாலசிங்கத்துக்கு சாதி அமைப்புக்களும் அதனை நடைமுறைப்படுத்தலும் அடிப்படைப் பம்மாத்தாகவே பட்டது.

அதனாலே கணேசனுக்குச் சொன்ன பதிலிலும், அக்கருத்துக்களே தெரிந்தன.

"கணேஸ்.... உதெல்லாம் பழந்தலைமுறையினரின் பம்மாத்துத்தான்.. மேல் சாதியினர் தமது வருவாயை நிரந்தரமாக்கிக் கொள்ள அமைத்துக் கொண்டது தான் சாதி முறையும்... அமைப்புக்களும்.. இதில் புத்திஜீவிகளின் நிலை மாறுபட்டது..."

பாலசிங்கத்தின் பதிலை அவதானித்துக் கேட்ட கணேசனுக்கு, ஏலவே சித்தாந்தங்கள் தெரிந்து இருந்ததால் அதுபற்றித் தெளிவாகப் படித்திருந்த பாலசிங்கத்தை மெச்சினான்.

"அதே கருத்துத்தான் என்னுடையதும்... படித்தவர்கள் மட்டத்திலும் அப்பேற்றபட்ட அறிவிலிகள் வாழ்ந்து கொண்டும் தானை இருக்கினம்! எப்பிடி அவர்கள் படித்தவர்களாக இருக்க முடியும்?" சந்தேகத்தை கேட்டு வைத்தான் கணேசன்.

"அதுவும் ஒன்றுதான் கணேஸ்.. படித்ததென்றால், சித்தாந்தங்களைத்தான் படித்தினமெண்டில்லைத்தான்! அவர்கள் படித்த காலங்களில் கல்வி முறை அத்தகைய கருத்துக்களைப் புகுத்தி அமைந்திருக்கவுமில்லை... முதலாளித்துவ நோக்கை வளர்க்கும் கல்வி முறைகளைத்தானே அந்தக் காலங்களில் கற்பித்தனர்... அதன் காரணமாகவும் இருக்கும்."


விளக்கமாகக் கூறிவந்த பாலசிங்கம் சற்றே நிறுத்தினான். மேற்படி கருத்துக்களைக் கேட்டு நீண்ட காலம் வாழலாம் போலிருந்தது கணேசனுக்கு. அதனால் அவனிடம் கேள்விகளைப் போட்டுத் துளைத்துக் கொண்டிருந்தான்.

"அதுசரி! ஓரளவுக்குப் புரிந்தவர்களே நடைமுறையில் தயங்குகின்றனர். அது பற்றி என்ன சொல்லுறீர்..?" மற்றுமோர் கேள்வியைப் போட்டான் கணேசன்.



(16 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதி கெட்ட அறிக்கை

தமிழருக் கெதிராகப் போர் செய்யவில்லையாம்
சத்தியம் செய்கிறார் நம் பழைய (அதமர்) உத்தமர்
மக்களால் தூக்கி எறியப்பட்ட மஹிந்த மன்னவர்
மறுபடி கட்டில் ஏறி ஆட்டம்போட முனைகிறார்.

முள்ளி வாய்க்காலில் கொன்று குவித்தார்கள்
மஹிந்த ராஜபக்ஷவின் மாண்புறு படையினர்
கொத்துக் கொத்தாய்க் கொன்று குவித்தார்கள்
சாட்சிகளின்றியே சங்காரம் செய்தார்கள்.

தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள்,
கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள்,
வான் தாக்குதல்கள், எறிகணை வீச்சுக்கள்
பல நாடுகளின் பங்களிப்புடன் படுகொலை செய்தார்கள்.

அன்னையர், தந்தையர், கன்னியர், காளைகள்
அரும்புகள், பிஞ்சுகள் அத்தனை உயிர்களையும்
கொன்று குவித்தார்கள். கொடும் கொலை செய்தார்கள்
கை, கால் இழந்தவர்கள் கருகி மாண்டவர்கள்.

எடுத்துப் புதைப்பாரின்றி ஏதிலியாய்ச் செத்தவர்கள்
மருந்து கிடைக்காமல் மரணித்துப் போனவர்கள்
எத்தனை நாடுகளின் ஈனத் துணையுடன்
லட்சக் கணக்கில் இனப் படுகொலை செய்தார்கள்!

சரணடையப் போனோரையும் கொன்று குவித்தார்கள்,
கடத்திக் கொன்றார்கள், காணமற்போனார்கள்
மனிக்பாம் முகாம்களில் மந்தைகளாய்
மக்களை அடைத்து வதைத்தார்கள்.

தமிழருக் கெதிராகப் போர் செய்யவில்லையாம்
தறிகெட்டுப் போனபின் வகையற்றுப் புலம்புகிறார்
மக்களை மாங்காய் மடைய ரென்றெண்ணிய
மஹிந்த ராஜபக்ஷவின் மதிகெட்ட அறிக்கை

**- கந்தபேரின்பம், தீவான்**

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**07.06.2015 முதல்
13.06.2015 வரை**

## மேடம்

உறவினர்களின் அன்பு, பாசம், கிடைக்கும். நற்செயல்களால் புகழ் பெறுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகமுண்டு. விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். இல்லறத் துணை அதிக அன்பு பாராட்டுவார்.
தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை மதித்துச் செயல்படவும்.

## இடபம்

ஆரோக்கியம் மேம்படும். புதிய திட்டம் தீட்டி செயற்படுத்துவீர்கள். வீடு, வாகனத்தில் பராமரிப்பில் உரிய கவனம் செலுத்துவது நல்லது. புத்திரரின் செயல்பாடு சிறக்க உதவுவீர்கள். இல்லறத் துணையின் பாராட்டைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் படிப்படியாக முன்னேற்றம் பெறும். பணியாளர் பணிச்சுமையைச் சந்திக்க நேரிடும்.

## மிதுனம்

வார்த்தையில் வசீகரம் இருக்கும். வெளியூர் பயணம் ஏற்படலாம். உடன் பிறந்தவர்களிடம் எதிர்பார்ப்புக் கூடும். தாயின் அன்பைப் பெறுவீர்கள். புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். இல்லறத் துணையின் செயல்பாட்டால் கௌரவம் காண்பீர்கள். தொழிலில் அபிவிருத்திப் பணி மேற்கொள்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

## கடகம்

மூத்த சகோதரர் ஆலோசனை கைகொடுக்கும். வாகனத்தில் பராமரிப்பு பணிபுரிவீர்கள். புத்திரர் வகையில் வீண்செலவைத் தவிர்ப்பது நல்லது. இல்லறத் துணையின் பாசம் கண்டு மகிழ்வீர்கள். தொழிலில் அதிர்ஷ்டவசமாக திடீர் பணவரவு கிடைக்கும். பணியாளர், தொழில் நுட்ப அறிவில் மேம்படுவர்.

## சிம்மம்

முயற்சி முழுஅளவில் நன்மையைத் தரும். இளைய சகோதரர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்க்கு இடம் தர வேண்டாம். புத்திரரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியம் சீர்பெற ஓய்வு அவசியம். இல்லறத் துணை பெருந்தன்மையுடன் செயல்படுவார். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

## கன்னி

நண்பர்களின் உதவி கிடைக்கும். சமூகத்தில் நற்பெயர் பெறுவீர்கள். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரர் நற்சிந்தனையுடன் செயல்படுவர். இல்லறத் துணையின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். பணியாளர் நிம்மதியாகப் பணிபுரிபவர்.

## துலாம்

தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபடக் கூடாது. பேசும் வார்த்தையில் நிதானம் வேண்டும். குடும்பத் தேவை தாமதமாக நிறைவேறும். வாகனத்தில் பராமரிப்பு அவசியம். புத்திரரின் மனதில் நம்பிக்கை வளர்ப்பீர்கள். இல்லறத் துணை செயல்குறையைப் பொறுத்துக் கொள்வது நலம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் இருக்கும்.

## விருச்சிகம்

புதியவர்களின் நட்பு கிடைக்கும். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரர்கள் உங்களின் சொல் கேட்டு நடப்பர். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். நிலுவைப் பணம் வசூலாகும். இல்லறத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது.

## தனுசு

முன்னேறும் வாய்ப்பு உங்களைத் தேடி வரும். ஆரோக்கியம் பலம் பெறும். இயன்ற அளவு சமூகப் பணியில் ஈடுபடுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரரைக் கண்டிப்பதில் நிதானத்தைக் கடைபிடிக்கவும். பூர்வசொத்தால் வருமானம் கூடும். இல்லறத்துணை பாசத்துடன் நடந்து கொள்வார்.

## மகரம்

இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். உறவினர் வருகை மகிழ்ச்சி அளிக்கும். வாகன பயன்பாடு திருப்திகரமாகும். புத்திரரின் குறையைப் போக்க முயல்வீர்கள். பகைவர்களை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். இல்லறத்துணை கடமையை உணர்ந்து செயற்படுவார். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி உண்டாகும்.

## கும்பம்

உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். பொது இடங்களில் அதிக நேரம் செலவழிக்க வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது. புத்திரர்களின் செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கும். சத்து நிறைந்த உணவு உண்ணவும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களை குறை சொல்ல வேண்டாம். தொழிலில் போட்டி அதிகரிக்கும்.

## மீனம்

புதியவர்களின் நட்பு கிடைக்கும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும். சமூகப் பணியில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவினர் அன்பு பாராட்டுவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும். இல்லறத் துணையின் உடல் நலனுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். தொழில் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவீர்கள்.

# மேட்டு நிலத்து ஊற்று

*(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)*

"ஓமோம்! அதுவும் இருக்குத்தான்... அதுக்கு ரெண்டு உதாரணத்தைச் சொல்லலாம். என்னெண்டு..! கோட்பாடுகளைத் தெளிவாகத் தெரிந்திருந்தும் அதனைச் சமூகத்தில் தாங்கள் நடைமுறைப்படுத்த ஏஞ்சிப்போர்... மற்றது பிற்போக்கு பேதங்களால் சிந்தனை மழுங்கடிக்கப்பட்ட சாதி வெறியர்..."

"சரியாகச் சொன்னீர்..."

"அதிலும் சமகாலங்களில் மூன்றாம் நிலையினரும் உருவாகியுள்ளனர்... இரண்டுங்கெட்டான் நிலையில்."

"அதிலும் சமகாலங்களில் மூன்றாம் நிலையினரும் உருவாகியுள்ளனர்... இரண்டுங்கெட்டான் நிலையில் வாழ்கிறவர்களைத்தான் சொல்லுறன்... முதலாளித்துவ சிந்தனைப் பாதிப்பே இதுக்கெல்லாம்காரணம் எண்டாலும் சமீப காலங்களில் எவ்வளவோ மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதை கவனிச்சால்... எதிர்காலம் ஒளிமயமா இருக்குமெண்டு எதிர்பார்க்கலாம் கணேஸ்."

"அது சரி மச்சான்..! கோட்பாட்டு தெளிவு பெற்றும் அது வாழ்வியலுக்கு உகந்ததாக இருந்தும் அந்த நடைமுறைக்கு வர ஒஞ்சிக்கின்றனர் எண்டியே அதேன்...?

"ஒஞ்சிக்கக் காரணம் தெளிவின்மைதான்... ஆனாலும் அவர்களையும் இணைச்ச மாற்றமொன்றாலேயே சமுதாய மாற்றமும் ஏற்பட முடியும்... அவ்விதம் வாழ்வதில் இன்னொரு வகைக்கு சரியாகவும் இருக்கும்... ஒட்டுமொத்த சமுதாய மாற்றம் ஏற்படாதவிடத்து தம்மைப் புறக்கணிக்கக்கூடுமென்பதால் ஒஞ்சிக்கவுங்கூடும்..."

பாலசிங்கமும் கணேசனும் ஒன்றாகத் தங்கக் கிடைத்த பின்பு கிடைக்கும் ஓய்வு நேரங்களில் தர்க்கித்துத் தெளிவு பெறுவர்.

இந்த வாதப்பிரதிவாதங்களால் கணேசன் உணரும் உண்மையை பாமாவால் பெறமுடிமா? இந்த எண்ணம் கணேசனை ஊடுருவிச் செல்லும்போதெல்லாம் ஏக்கப் பெருமூச்சே மேலெழும். சமூகத்தில் நிலவும் சாதி அமைப்புக்கள் போலியானவை என்பதை அவளுக்கு யார் உணர்த்துவர்? அவனுக்கு இந்த எண்ணம் பிறந்ததும் அவளை எவ்விதத்திலும் சந்திக்க வேண்டும் என்ற துடிப்பில் அவசரமும் சேர்ந்துகொண்டது.

சங்கீத பாடமெடுக்க பாமா உலா வருவதை தெரிந்திராத கணேசனுக்கு அவளைச் சந்திப்பது இமாலயப் பிரச்சினையாக மாறி மலைக்கச் செய்திருந்தது.

பாடம் முடிந்து வருகின்ற சமயங்களில் வீதிகளில் பாமாவின் கண்கள் இவனைத் தேடிக்கொண்டிருப்பது எங்கே தெரியப்போகிறது கணேசனுக்கு? பாமா புதுச்செட்டித் தெருவுக்கு செல்லும்போதும் பாடம் முடிந்து பிக்கறிங்ஸ் வீதிக்கு திரும்பும் பொழுதும் பார்வையால் மேய்ந்து கணேசனைக் காணமாட்டோமா என்னும் ஏக்கத்துடனேயே இருந்தாள்.

கணேசனின் நினைவில் திடீரென தோன்றிய ஞாபகம் அவளைச் சந்திக்கலாம் என்னும் தெம்பைக் கொடுத்தது. வெள்ளிக்கிழமைகளில் அவள் முத்துமாரியம்மன் கோவிலுக்கு செல்லும் நினைவே அது. மறுநாள் வெள்ளிக்கிழமையாக இருப்பதால் பாலசிங்கத்துடன் சென்று சந்தித்து அவளுடன் கதைக்கலாம் என்று நினைத்த கணேசனுக்கு கூடவே மற்றுமொரு எண்ணமும் தைத்தது. அவளோடு தாயோ தகப்பனோ வராமல் இருக்க வேண்டுமே! *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயம் ஒரு பலம்

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

பயத்துடன் படிப்பவன் அவதானத்துடன், ஆழமாக, நிதானத்துடன், இலக்கின் அடிப்படையில் படித்து பட்டத்துடன் வெளியே வருவான். பெற்றோருக்குப் பயந்த பிள்ளைகள் கலாசார சீரழிவுகளுக்குள் செல்லார், மதுவுக்கு அடிமையாகார், போதைக்கு ஆளாகார். நல்ல பிள்ளைகளாக ஆரோக்கிய மாணவர்களாக சமூகத்துக்கு பொருத்தப்பாடு டையவர்களாக வளர்ந்து வருவர்.

பயம் என்பது அச்சத்தை வெளிப்படுத்தும் ஓர் உணர்ச்சிவயப்பட்ட வெளிப்பாடாகும். இதன் அடிப்படை வழிமுறையானது, வலி அல்லது ஆபத்தில் அச்சுறுத்தல் போன்ற பிரத்தியேகத் தூண்டலின் மூலமாக விளைகிறது.
பயம் என்பது உள்ளார்ந்த மன உணர்வுகளின் வெளிப்பாடுகளில் ஒன்றென உளவியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். பலம் என்பது திண்ணம், தைரியம், மனத்திடமாகும். மனவளம் மிகுந்தால் மனோபலம் கூடும். மனோபலம் கூடும் போது செயலில் தெளிவும் விரைவில் முழுமையும் நிகழும். பலம் வாழ்வின் நலம். பயத்துக்கும் பலத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பயத்தினால் பலமடைய வேண்டும்.

**பலப்படு மனமே**

பயம் அகத்திருந்துதான் கிளம்புகிறது. அதனை உங்களுக்கு எதிராகக் கிளம்ப நீங்கள் இடமளிக்காதீர்கள். அது உங்களை பலப்படுத்துவதற்குத்தான் என்பதை உணர்ந்து செயற்படுங்கள். வெற்றிகள் யாவும் பயம் தந்த பரிசுகள்தான். பயமில்லாமல் சாதனைகள் இல்லை. ஒவ்வொரு துன்பமும் நம்மை ஒரு நன்மைக்கு எடுத்துச் செல்கின்றது. இது பிறவியின் தத்துவம் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே அறிவைச் சரியாகப் பயன்படுத்தினால் பயம் ஒரு பலமாகும். நமக்கு ஏற்படும் பயத்தை எப்படிப் பார்த்தாலும் அதிலே ஒரு பலம் இருக்கத்தான் செய்கிறது. பயப்படும் பெண்ணைப் பலவந்த மாகப் புணர முடியாது. பயம் கற்புக்கு ஒரு பலம். இது சாதாரண மனிதர்களுக்கு மட்டும் பொருந்தும். விதிவிலக்கான காமுகர்களும் உள்ளனர். இவர்கள் மனிதர்களுக்குள் அடங்கார். மனித மிருகங்களுக்குள் அடங்குவர். பலம் என்பது உடல் பலம் அல்ல. மனோபலம்தான் உண்மையான பலம்.
பயத்துடன் படிப்பவன் அவதானத்துடன், ஆழமாக, நிதானத்துடன், இலக்கின் அடிப்படையில் படித்து பட்டத்துடன் வெளியே வருவான். பெற்றோருக்குப் பயந்த பிள்ளைகள் கலாசார சீரழிவுகளுக்குள் செல்லார், மதுவுக்கு அடிமையாகார், போதைக்கு ஆளாகார். நல்ல பிள்ளைகளாக ஆரோக்கிய மாணவர்களாக சமூகத்துக்கு பொருத்தப்பாடுடையவர்களாக வளர்ந்து வருவர்.
ஒரு மனிதனை அச்சுறுத்துவதற்கு நோயை விட சிறந்த உதாரணம் வேறு தேவையில்லை. பயத்தை வைத்து நோய்க்கு எதிரான நடவடிக்கையில் இறங்குபவர்கள்



மிகப் பெரிய சுகதேகிகளாக வெளிவருகிறார்கள். எனவே மூன்றெழுத்துப் பயம் மூன்றெழுத்து பலத்தை வழங்குகின்றது.
பயமறியாதவன் கல்நெஞ்சக்காரன். மனச்சாட்சியும் பயத்தின் அம்சமே. பயப்படுபவன் மனச்சாட்சியை மதிக்கிறான். பயப்படுபவன் ஒருபோதும் பயமுறுத்தமாட்டான். பயம் வந்தாலன்றி பக்திகூட வராது. ஒவ்வொரு வரும் பயபக்தியுடன் நடந்து கொண்டால் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும்.
மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்ற பயம்தான் ஒவ்வொருவரையும் எச்சரிக்கையாகவும், கௌரவமாகவும், மற்றவர்கள் மதிக்கத்தக்கவர்களாகவும், சமூகத்துக்கு பொருத்தப்பாடுடையவராகவும், மனிதநேயம் உள்ளவராகவும், மிருகக் குணமற்றவராகவும், நாகரிகமாகவும் வாழ வைக்கின்றது. எனவே பயம் ஒரு பலம் என்பதை மனதில் கொள்ளுங்கள்.
முதுமையில் நலமாகவும், சுகமாகவும், மகிழ்வாகவும் வாழத்தான் எல்லோருக்கும் ஆசை. இதனை முதுமை வரும்போது எண்ணிப் பயனில்லை. முதுமை பற்றி சிந்திக்காது வாழ்பவர்களுக்கு முதுமையில் வாழ்வு திண்டாட்டம்தான். பிற்காலத்தில் தான் வசதிகளின் தேவைகள் அதிகம். முதுமைபற்றி எண்ணிப் பாராதவர்களுக்கு முதுமை சோகமாகத்தான் அமையும். இளம் வயதில் இஷ்டத்துக்கு வாழ்ந்து விட்டு முதுமை வரும்போது வாழ்வில் துன்பியலை சந்திப்பவர்கள்தான் அதிகம். எனவே இளம் வயதிலேயே முது மையை எண்ணிப் பயப்படுங்கள். பயப் படும் அளவுக்கு முதுமையில் உங்கள் வாழ்வு சிறக்கும். இளமையாகவும் வாழ்வீர்கள். திருமணமாகி மணமகள் பயத்துடன் காலடி எடுத்து வைப்பாளாகின் அவள் வெற்றிகரமாகக் குடும்பத்தை நடத்திக் கணவனதும், மாமியாரதும் ஆசீர்வாதம் பெற்று குடும்பத்துக்கு பலம் பொருந்திய தலைவியாக விளங்குவாள். பயமின்றி ஓர்மத்துடன் எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற மமதை கொள் வாளாயின் குடும்பம் சரிவையே சந்திக்க நேரிடும். பயமில்லாமல் காரியத்தில் இறங்கினால் அது பெரும் சேதாரத்தில் போய்முடியும்.
அரபு நாடுகளில் உள்ள இஸ்லாமிய ஷரியா சட்டத்தின் மூலம் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கப்படுகிறது. இதன் மூலம் குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. எமது நாடு ஆரம்பத்தில் விதிக்கப்பட்ட தண்டனை முறைகளையே தற்போதும் பயன்படுத்தி வருகின்றது. முன்னைய காலங்களில் இல்லாதவாறு தற்போது புதிய உத்திகளை குற்றச்செயல்களில் குற்றவாளிகள் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் குற்றச் செயல்களும் பயமின்றி தாராளமாக நடக்கின்றன. என்றைக்குச் சட்டங்கள் கடுமை யாக்கி குற்றவாளிகளைப் பயமுறுத்துமோ அன்றைக்குதான் எமது பிரதேசம், நாடு திருந்தும். எனவே எந்த விடயமானாலும், எந்தக் காரியமானாலும், எந்த நடவடிக் கையானாலும் பொதுவாக மக்களுக்கு ஒரு பயம் ஏற்படவேண்டும். அந்த நேரத்தில் அறிவைச் சரியாகப் பயன்படுத்தி பயத்தில் உள்ள பாதுகாப்பு உணர்வைப் பலமாக்கி குடும்பத்துக்கு, சமூகத்துக்கு, நாட்டுக்குத் தேவையான குடிமக்களாக வாழ முயற்சிப்போம்.

# புவியைக் காப்போம்!

## சந்ததிக்கும் மிச்சம் வைப்போம்!



(சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்)

**1972**ஆம் ஆண்டு சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்பும் சுற்றாடலும் என்ற வரலாற்றுப் புகழ்மிக்க உலக மாநாட்டில் உலக சுற்றுச் சூழலின் முக்கியத்துவம். இயற்கை வளங்கள் அதன் பிரயோகம் என்பன பற்றிக் கலந்துரையாடப்பட்டது. முடிவில் ஜூன் 5ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் (World Environment Day) தினமாக பிரகடனப்படுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்தத் திட்டங்களுக்கும் இந்தத் தினத்துக்கும் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம் (UNEP) செயற்படுகின்றது.
இன்று உலகம் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை. அதிகரித்து வரும் வெப்பமும் அதன் காரணமாக ஏற்பட்டு வருகின்ற காலநிலை மாற்றமுமாகும். காலநிலை மாற்றம் என்பது சூழலின் அடிப்படைப் பண்பாகும். புவியின் பனிக்கட்டியாற்றுக் காலத்திலிருந்து இன்றைய நவீன யுகம் வரை இது நிகழ்ந்து வருகின்றது. பனிக்கட்டியாற்றுக் காலத்திலிருந்து காலநிலை மாற்றம் இயற்கையின் காரணிகளால் ஏற்பட்டது. இன்று பெருமளவில் மனித நடவடிக்கைகளே காலநிலை மாற்றத்துக்குக் காரணமாக அமைந்திருக்கின்றன.
உலகில் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை புவியில் ஏற்படுகின்ற சில மாற்றங்களில் இருந்து அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. புவியில் ஏற்பட்டு வரும் வெப்ப நிலை உயர்வு காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுகின்றது. வெப்பநிலை நிரல்களிலிருந்து 1930ஆம் ஆண்டுக்குப் பின் புவியின் வெப்பநிலை படிப்படியாக அதிகரிப்பது தெளிவாகின்றது. 2100ஆம் ஆண்டளவில் புவியின் வெப்பநிலை தற்போதிருப்பதைவிட சராசரி யாக 2 பாகை செல்சியஸ்ஸிலிருந்து 4 பாகை செல்சியஸால் அதிகரிக்கும் எனக் கணிப்பிட்டுள்ளனர்.
அயன மண்டல சூறாவளிகளும் கடும் காற்றுக்களும் இன்று அதிகரித்துள்ளமை காலநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றத்தினாலேயே ஆகும். கடந்த பத்து ஆண்டுகளில் ஹரிக்கேன் சூறாவளிகள் முன்னைய காலங்களைக் காட்டிலும் இந்த நூற்றாண்டில் மோசமான அழிவுகளை ஏற்படுத்தியுள்ளன. தென்சமுத்திரத்தில் ஏற்பட்டு வரும் எல்நினோ (ELNINO) லானினோ (LANINO) எனும் நீரோட் டங்கள் உலகம்தழுவிய காலநிலை அமைப்பை மாற்றியுள்ளன.
உலகின் வெப்ப அதிகரிப்பின் காரணமாக உலகின் உயர் மலைப் பிரதேசங்களிலும் முனைவு பகுதிகளிலும் காணப்படுகின்ற பனிக்கட்டிகள் உருகி கடலின் நீர்மட்டம் உயர்கின்றது. இந்தக் கடல் நீர்மட்ட உயர்வால் சிறிய தீவுகள் எதிர்காலத்தில் நீரில் மூழ்கும் அச்சுறுத்தலும் காணப்படுகின்றது. யாழ்ப்பாணம், சென்னை போன்ற தமிழர் பகுதிகள் கூட இத்தகைய அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பகுதிகள் என்று தெரிவிக்கப்படுகின்றன.
உலகில் வெப்பம் அதிகரிப்பதற்கும் அதனால் ஏற்படும் காலநிலை மாற்றத்துக்கும் உரிய காரணங்கள் எவை? மாறிவரும் உலகில் மனிதனுடைய செயற்பாடுகள் அதற்கான முதன்மைக் காரணம்.
உலகின் பசுமைப் போர்வைகள் என்று அழைக்கப்படுகின்ற இயற்கைத் தாவரங்களை மனிதன் பல்வேறு தேவைக்காக அழிக்கின்றான். இது புவியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கள் புவி மேற்பரப்புக்கு வந்து வளிமண்டலத்தில் சேருகின்றன. புவி மேற்பரப்புக்கு வந்து சேருகின்ற இந்த பச்சை வீட்டு வாயுக்கள் புவி மேற்பரப்பில் தேங்குவதன் காரணமாக புவியின் வெப்பம் அதிகரிகின்றது. வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரிப்பதற்கு முழுமையான காரணம் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பேயாகும். இந்த வாயுக்கள் அதிகரிப்பதில் முக்கிய பங்காற்றுவது மனிதனுடைய ஆடம்பரச் செயற்பாடுகளேயாகும்.
புவியின் வெப்பத்தைக் குறைக்க வேண்டும் என்றும் காலநிலையால் ஏற்படும் தாக்கங்களை குறைக்க வேண்டும் என்றும் உலகில் பல மாநாடுகளும், ஒப்பந்தங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இருப்பினும் இந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. எனவே இத்தகைய அச்சுறுத்தல்களில் இருந்து சூழலைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தனிமனிதனதும் தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணி, மூப்பு, சாக்காடு இவற்றுக்கு அப்பாலும்

கே.எஸ்.சிவஞானராஜா

பொதுவாகவே இந்த உலகம் பிணி, மூப்பு, சாக்காடு மூன்றையும் சந்தித்தே தீரவேண்டும். இதற்கப்பாலே மனித வாழ்வு பேறடைகிறது. இது தெரிந்தும் நாம் நில்லாதனவற்றை நிலையென்று எண்ணுகின்ற பேராசைக்குள் விழுந்து விட்டோம். இனித் தப்பவே முடியாது. அனுபவிக்க அனுபவிக்க உடல் புளகாங்கிதம் கொள்ளும். உள்ளம் பலவீனம் அடையும். உடல்வேண்டாத அத்தனையையும் வேண்டிக் கொள்ளும். எமது வாழ்நாள் முழுவதுமாக நாகரிகம் என்று சொல்லிச் சொல்லி, அநாகரிகமானதனைத்தையும் வீட்டுக்குள் அழைத்து வந்துவிடுகிறோம். இறைவனைத் தவிர ஏனைய அனைத்தையும் அதியுச்சமாக மாற்றிவிட்டோம்.

தலைமுடி தொடக்கம், பாதம்வரை எமக்குச்சொந்தமல்ல. உலகம் எமது உடம்பை எப்படியெல்லாம் செய்ய வேண்டுமோ அதனை வலு கச்சிதமாக மாற்றியமைத்துள்ளது. இயற்கையை மாற்றினால் ஆபத்து மனிதனுக்கே என்பது தெரிந்தும், இளமைக்குத் திரும்பினால் சமுதாயப் போலிகளே மிஞ்சுவதனால் நல்லவை யாவும் பதம்கெட்டுப்போக, சூழல் அனைத்துமே மாசடையும்.

போலிகளைக் கண்டு ஏமாறுகின்ற எமக்கு கெட்டது அனைத்தும் நல்லதாகவே தோன்றும். இதனால் எமக்கு மிக எளிதில் மூப்பு, பிணி, சாக்காடு அல்லது பிணி, மூப்பு, சாக்காடு வந்து சேர்ந்து விடும். இவற்றை வெல்வதுதான் சித்தார்த்தர் கையாண்ட நன்னெறி.

வெண் குதிரைகள் பூட்டப்பட்ட அழகிய தேரில் சித்தார்த்தன் நகர்வலம் செய்வதற்காகப் புறப்பட்டார். சன்னா என்ற தேர்ப்பாகன், தேரை மகிழ்ச்சிக் கொண்டாட்டம் மிக்க மக்கள் கூட்டத்தினூடாகச் செலுத்துகின்றபோது திடீரென்று வரவேற்பு ஏதும் இல்லாத ஒரு சிறு வீதியில் தேரை ஓட்டுமாறு சித்தார்த்தன் கட்டளையிடவே தேர்ப்பாகனும் தேரை அந்தச் சிறுவீதிக்குத் திருப்பினான். அந்த வீதியில் இளவரசன் வருவதை யாருமே எதிர்பார்க்கவில்லை. அந்த வீதியோ அசுத்தம் நிறைந்ததாகக் காணப்பட்டது. அப்போது கூன்விழுந்த வயது முதிர்ந்த ஒரு பெரியவர், தட்டுத்தடுமாறி நடந்துகொண்டிருந்தார். அதுவரை காலமும் அரண்மனை சந்தோஷங்களோடு வாழ்ந்த சித்தார்த்தனுக்கு வாழ்வின் முழுமையைப் புரிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பே அளிக்கப்படவில்லை. அந்தத் தள்ளாடிய உருவத்தைக் கண்டார், அதிர்ச்சியடைந்தார். அவர் யார்? என்று வினாவினார். அவர் ஏன் அப்படி காட்சியளிக்கிறார்? என்று சன்னாவிடம் வினவினார்.

அதற்குச் சன்னா எல்லோருக்கும் முதுமையுண்டு, நாமும் வயதான பின்னர் இப்படித்தான் இருப்போம் என்று கூறினான். நானும் மனைவியும் முதுமையடைந்து இப்படித் தான் தள்ளாடி விழப்போகின்றோமே என எண்ணி மனம் குழம்பினார் சித்தார்த்தர். அதிர்ச்சியடைந்தார். இதுவரை கண்டிராத அந்தக் காட்சி சித்தார்த்தனது மனதை நோதல் படுத்தியது. மனம் வெதும்பினார். மூப்பு துன்பமானது என உணர்ந்தார். இதையறிந்த மன்னன் சுத்தோதனன், இசைவாணர்களையும் நடன மாதுக்களையும் வரவழைத்து இளவரசனை மகிழ்வித்த போதும், சித்தார்த்தனின் சிந்தனை முழுக்க முழுக்க அந்த முதியவரின் மூப்பிலேயே குவிந்தது.



## வாழ்வதற்காய் அமையட்டும் உனது செயற்பாடு

மூப்புடைய முதியவர் பட்டபாட்டை மட்டுமல்ல இன்னும் என்னென்ன விடயங்கள் தனக்குத் தெரியாமல் நடக்கின்றன என்பதை அறிய விரும்பியவராய் மீண்டும் நகர் வலம் செல்லத் தீர்மானித்தார் சித்தார்த்தர்.

நகர்வலம் வந்துகொண்டு இருந்த போது வழியில், நடக்கவே முடியாத ஒரு நோயாளியைக் கண்டார். தனது தேரோட்டியை நோயாளியருகே நிறுத்துமாறு பணிக்க, சன்னா இவ்வாறு கூறினான். "பிரபு! இவனோ மீள முடியாத கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டுள்ளான். இவனுக்குச் சாவுப் பயம் தொட்டுவிட்டது" என்று சொல்லியதோடு நிற்காமல், எல்லோருக்குமே நோய் ஏற்படும், இதிலிருந்து யாருமே தப்பிவிட முடியாது என்று விடை கூறிமுடித்தான்.

சித்தார்த்தர் இதிலிருந்து ஓர் உண்மையைப் புரிந்து கொண்டார். என்னவெனில் உயிரினங்கள்மெல்ல மெல்ல நோயினால் பீடிக்கப்பட்டேயாகிவிடும் என்பதாகும். அப்போது ஒருவருக்கு மூப்பும் வந்தே தீரும். பிணியும் வந்தே தீரும். மெல்ல மெல்ல சித்தார்த்தன் மனித வாழ்வின் துன்பங்களைத் தானும் அனுபவிக்கத் தொடங்கினார். துன்பங்களின் காரணத்தைத்தேட ஆரம்பித்தார்.

மீண்டும் நகர் வலத்துக்குப் புறப்பட்டார் சித்தார்த்தன். பிரதான பாதையை விட்டு இன்னுமொரு குறுக்கு வீதியால் தேர் ஓடியது. இன்னுமொரு துக்கம் காத்திருந்தது. இறந்துபோன ஒரு மனிதனைச் சுடுகாட்டுக்குத் தூக்கிச்சென்று ஈற்றில் எரிப்பதைக் கண்டு பதைபதைத்தார். தேரோட்டியிடம் இதென்னப்பா? என்று கேட்க, உலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஒருநாள் இறப்பது நிச்சயம். இறந்தபின் இந்த உடம்பு எரிந்தோ– புதைந்தோ மண்ணாகிப் போவதும் உறுதியானதே என்று பதில் அளித்தான்.

இந்த மூன்று சம்பவங்களும் சித்தார்த்தரை மிகவும் வருந்தச் செய்தன. எவ்வளவுதான் சொத்துப் பத்து, தேர், அரண்மனை, ஆடல், பாடல் இருந்தாலும் இந்த உடலுக்கு மூப்பு, பிணி, சாக்காடு ஆகியன வந்து வருத்தியே தீரும். அதற்கு நானும் மற்றவர்களும் விதிவிலக் கல்லர் என்று உணர்ந்தார். இதி லிருந்து தான் விடுபடவேண்டும் என அவர் விரும்பியபோது, ஒரு துறவியானவர் மஞ்சள் ஆடை யணிந்து சாதுவாகக் காட்சியளித் தார். தேர்ப்பாகனிடம் யாரிவர்? எனக்கேட்ட போது இந்தத் துறவி எல்லா ஆசைகளையும் துறந்தவர். பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்டவர். விருப்பு வெறுப்பற்றவர். இன்னல்களைக் கடந்தவர். மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் யாவரையும் விலக்கி நிம்மதியாக வாழ்கின்றார் என்று தேர்ப்பாகன் சொன்னான். அதைக் கேட்ட சித்தார்த்தன், தானும் அவ்வாறு துறவு நிலையில் வாழ்ந்திடத் துடித்தார். தனது முடிவில் உறுதியாக இருந்தார். நள்ளிரவுவேளை, தனது மனைவி யசோதரா, மகன் ராகுல் இருவரையும் ஒருமுறை பார்த்துக் கொண்டார். திரும்பிப் பாராமலே அரண்மனையை விட்டு வெளி யேறினார். தேரோட்டியும் உடன் வர இருவருமாக கானகம்புக்கினர்.

சித்தார்த்தன் துறவுக்கு அலட்டியாளமாகத் தனது தலைமுடியை வழித்து, தேரோட்டியிடம் கொடுத்து அரண்மனைக்கு அனுப்பி வைத்தார். உடைமைகளைக்களைந்தார். காவி மஞ்சள் ஆடையையுடுத்தார். நிரஞ்ஜனா என்ற நதியில் மூழ்கி எழுந்தார்.

ஆழ்ந்த தியானமே உண்மையைத் தேடியலையும் வழி எனத் துணிந்து, கயாவின் புறநகர்ப் பகுதியில் அமைந்த அமைதியான அழகான இடத்திலே பெருவிருட்சமாக விளங்கிய அரச மரத்தின் கீழ் ஆசனமிட்டு அமர்ந்தார் சித்தார்த்தன். உண்மையைக் கண்டறியும்வரை இந்த இடத்தைவிட்டு அகலுவதில்லை என்று முடிவுசெய்தார். ஆழ்ந்த தியானத்தில் மூழ்கினார். ஆழ்ந்த தியானமே நிலையான உண்மையைத் தேடியலையும் வழி என்ற உறுதியான முடிவுக்கு வந்தார்.

புயலோ, மழையோ, பசியோ, பண்டமோ, பெண்களோ, பேரழகோ, காமமோ, கட்டிளமையோ, கட்டடங்களோ, தேரோ, அரண் மனையோ, அந்தரங்கமோ எதுவுமே அவரைத் தொந்தரவு செய்யவில்லை. விலகிச் சென்றன.

ஒரு கருங்கல்லிலிருந்து அல்லாதவற்றை நீக்கிக்கொண்டு வர உயிர்ப்புள்ள சிலை ஒன்று வெளிப்படுவது போல புலன்கள் வாயிலாக வருகின்ற ஆசைகளை நீக்கிக் கொண்டு வர மனிதன் தெய்வமாகின்றான். அந்த முகத்திலே தெய்வீக ஒளி தேஜஸ் பிரவாகிக்கும். இதுவே இந்த உலகத்துக்கு அவசியமாகவும் அவசரமாகவும் வேண்டப்படுகிறது. மூப்பு, பிணி, சாக்காடு இவற்றைப் புரிந்த பெரியோர்களின் கும்பிடுதல் பெறுமதியானது பேறானது. பேராசையில்லாதது. பொறுமையானது. பட்டங்களைச் சுமக்காதது .பதவிகளை விரும்பாதது. ஆரவாரம் இல்லாதது. அட்டகாசம் இல்லாதது. சித்தார்த்தன் யாதொன்றையுமே விரும்பவில்லை. அதனால் தெய்வமாக உயர்ந்தார். இவரது போதனைகள் யாவுமே, மனித குலத்தை உய்விக்கவல்ல நற்சிந்தனைகளாக இன்று மட்டுமல்ல என்றும் மிளிரும்.

அரச மரத்தடியில் அமர்ந்த நாற்பத்தி ஒன்பதாம் நாள் உலக வாழ்வு பற்றிய முழு உண்மைகளையும் சித்தார்த்தர் உணர்ந்துகொண்டார். அன்று முதல் சித்தார்த்தர் புத்தராக அவதார புருஷரானார். புத்தர் என்ற சொல்லுக்கு ஞானம் வரப்பெற்றவர் என்பது பொருளாகும். இதன் பயனாகச் சங்கம் வளர்த்து பல துறவிகளை உருவாக்கினார். பர்மா (மியன்மார்) இலங்கை, இந்தோனேஷியா, திபெத், சீனா, ஜப் பான் ஆகிய நாடுகளில் இவரது தர்ம உபதேசம் பரவியது. அவரது நற்போதனைகளான கொல்லாதே, களவு செய்யாதே, விபச்சாரம் புரியாதே, பொய் பேசாதே, பழிசொல்லாதே, கடுமொழி கூறாதே, வம்பு பேசாதே, பிறர் பொருளை விரும்பாதே. பகைமை கொள்ளாதே, நேர்மையாக நினைப்பாய் ஆகிய பத்தும் எல்லோருக்கும் பொதுவானது. எல்லா மதங்களும் நல்வழியையே போதிக்கின்றன. அன்பே உலகை ஆளுகின்ற மாபெரும் சக்தியாகும். அன்புக்கு எதிரியில்லை, பகைமை இல்லை, போர் இல்லை, எதேச்சாதிகாரம் இல்லை, ஆணவம் இல்லை. இதனால் மூப்பு, பிணி சாக்காட்டை வென்று அப்பாலும் வாழலாம். அன்புதான் உன் கடப்பாடு அன்பை விதைப்பாயாக!

அரச மரத்தடியில் அமர்ந்த நாற்பத்தி ஒன்பதாம் நாள் உலக வாழ்வு பற்றிய முழு உண்மைகளையும் சித்தார்த்தர் உணர்ந்து கொண்டார். அன்று முதல் சித்தார்த்தர் புத்தராக அவதார புருஷரானார். புத்தர் என்ற சொல்லுக்கு ஞானம் வரப்பெற்றவர் என்பது பொருளாகும். இதன் பயனைச் சங்கம் வளர்த்து பல துறவிகளை உருவாக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குரிமையை உறுதிப்படுத்த வாக்காளர் பதிவு முக்கியம்!

ஸ்டோ ஸ்வாமி

பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் பரபரப்பு அரசியல் வட்டாரங்களில் தெளிவாகவே தென்படுகிறது. நாடாளுமன்றக் கதிரைகளைப் பத்திரப்படுத்த முனையும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், வேட்பாளர் கதிரையை இலக்கு வைத்துக் காய் நகர்த்தும் புதுமுகங்களும், புதிதாக முளைக்கும் தேர்தல் கால கூட்டணிகளும், வேட்பாளர் வேட்டையில் இறங்கும் கட்சித் தலைமைகளும், வேட்பாளர் பட்டியலில் இடம்பிடிக்கக் கட்சிக் காரியாலய பின்கதவு மற்றும் முன்கதவுக் கைப்பிடிகளை பற்றுவோருமென தேர்தல் காய்ச்சல் தீவிரமாகப் பரவிக்கொண்டிருக்கிறது.

வேட்பாளப் பெருமக்கள் இவ்வாறு தயாராகின்றார்கள் எனில், அவர்களுக்கான வாக்காளப் பெருமக்களுக்கான பட்டியலைத் தயார்ப்படுத்தும் நடவடிக்கையில் தேர்தல்கள் திணைக்களமும் இறங்கியிருக்கிறது.

கடந்த வைகாசி 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நாடளாவிய வருடாந்த வேலைத் திட்டம், இந்த மாதம் 15ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. நடைபெறவுள்ள அடுத்த தேர்தலில் திருத்தப்பட்ட புதியவாக்காளர் இடாப்பின் பிரகாரமே வாக்காளர்கள் கவனத்தில் கொள்ளப்படுவர் எனத் தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்தல் விடுத்திருக்கிறார்.




பல படிமுறைகளைக் கொண்ட இந்த வாக்காளர் பட்டியல் திருத்தச் செயன்முறை, எவ்விதக் கட்டணங்களுமின்றி நடைபெறுவதுடன், நபரொருவர் அவ்வாறு தன்னைப் பட்டியலில் பதிந்து கொள்ளாதபட்சத்தில் அடுத்த திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்கும் தகுதியினை இழப்பார்.

வாக்காளர் பட்டியல் மீளாய்வில் முதலில் கணக்கெடுப்பாளர்களுக்கான வகுப்புக்கள் நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து கணக்கெடுப்பாளர்கள் வீட்டுக்கு வீடு சென்று கணக்கெடுப்பு நடத்துவார்கள். பின்னர், கணக்கெடுக்கப்பட்ட ஆவணங்கள் மாவட்ட தேர்தல் காரியாலயத்தில் பரிசீலிக்கப்படும். இறுதியில் நடைமுறையில் உள்ள வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படவேண்டியவர்களின் பெயர்கள் 'ஏ' பட்டியலாகவும் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படவேண்டியவர்கள் 'பி' பட்டியலாகவும் 'ஸ்ரென்சிலில்' பதியப்படுவர்.

**நான்கு படிமுறைகள்**

வாக்காளர் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் செயன்முறை நான்கு படிகளைக் கொண்டது. முதலாம் படிமுறையில் கணக்கெடுப்பாளர், பொதுவாக கிராம அலுவலர், வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான பிசி படிவத்தை (BC Form) பிரதான குடியிருப்பாளருக்கு வழங்குவார். இரண்டாம் படிமுறையில், பிரதான குடியிருப்பாளர், பதிவு செய்வதற்கான பிசி படிவத்தைப் பெற் றுக்கொண்டதற்கான அத்தாட்சிச் சீட்டை முழுமைப்படுத்தி கணக்கெடுப்பாளருக்கு வழங்குவார். பிரதான குடியிருப்பாளர் .பதிவு செய்வதற்கான படிவத்தில் தேவை யான விடயங்களை பூரணப்படுத்துவார். நான்காம் படிமுறையில் பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் கணக்கெடுப்பாளரினால் குடியிருப்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படும்.

வாக்காளராக ஒருவர் பதியப்படுவதற்குப் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். குறித்த நபர் இலங்கைக் குடிமகனாக இருப்பதுடன் பதிவு செய்யும் தினமான ஆனி முதலாம் திகதியன்று 18 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். ஆரோக்கியமான மனநிலையுடையவராகவும், பதிவு காலத்தின்போதோ அல்லது அதற்கு உடனடி முன்னான 7 ஆண்டுகளிலோ சிறைத்தண்டனை பெற்றிராதவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் பதிவு நிகழும் குறித்த முகவரியைத் தமது சாதாரண வாழிடமாகக் கொண்டிருக்க வேண்டும்.

வாக்காளர் பதிவு மீளாய்வு வருடாந்த நடைமுறையாக உள்ளபோதும் அசமந்தம் காரணமாக கவனயீனமாக இருக்குமிடத்து வாக்குரிமை ஆயுதத்தை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்படலாம். அது மாத்திரமின்றி பொதுத்தேர்தலைப் பொறுத்தவரையில் நாடாளுமன்றிற்கு ஒதுக்கப்படும் ஆசனங்களை இழக்கக்கூடிய அபாயமும் நிலவுகின்றது.

சரியான மீளாய்வை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான பொறுப்பு பொதுமக்களுக்கும் அதனைச் சார்ந்த அலுவலர்களுக்கும் உரித்தானது. உரிய காலங்களில் குறிப்பிட்ட படிவங்களை விநியோகிக்காமையாலும் பதிவுப் பத்திரங்களை முழுமைப்படுத்துவது பற்றிய சரியான, போதுமான தகவல்களை வழங்காமையாலும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதற்குச் சாத்தியமிருக்கிறது. முதன்மைக் குடியிருப்பாளரினால் முழுமைப்படுத்தப்படவேண்டிய தகவல்களை கிராம சேவகர் தாமாக முழுமைப்படுத்த முயற்சிப்பதும் முரணான தகவல் பரிமாற்றத் துக்கே வழிவகுக்கும். இதுவே பின்பு தவறான சமுதாயச் சுட்டிகளை அடைவதற்கும் வழிகோலும்.

> பல படிமுறைகளை கொண்ட இந்த வாக்காளர் பட்டியல் திருத்த செயன்முறை. எவ்விதக் கட்டணங்களுமின்றி நடைபெறுவதுடன், நபரொருவர் அவ்வாறு தன்னைப் பட்டியலில் பதிந்து கொள்ளாதபட்சத்தில் அடுத்த திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்கும் தகுதியினை இழப்பார்.

**அரசியல்வாதிகளின் கடமை**

வருடாவருடம் இடம்பெற்று வரும் வாக்காளர் பட்டியல் மீளாய்வு செயற்றிட்டத்தில் ஜூன் மாதம் முதலாம் திகதி வாக்காளர் பதிவு தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ஜூன் முதலாம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொதுமக்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பதிவுப் படிவத்தை நிரப்பி கிராமசேவையாளரிடம் கையளிக்க முடியும்.

விருப்புவாக்கு முறைமையின் கீழ் அதிக வாக்குகளைத் திரட்டுவதற்கு முனையும் அரசியல்வாதிகளால் ஒரே கட்சியின் ஆதரவாளர்களிடையே போட்டி ஏற்படுவது



வழமை. ஆனால் அத்தகைய அரசியல் வாதிகள் தமக்கு வாக்கு கிடைப்பதனைநிச்சயப்படுத்தும்வாக்காளர் பதிவு மற்றும் வாக்காளர் பட்டியல் மீளாய்வு போன்ற விவகாரங்களை உற்சாகப்படுத்தத் தவறி விடுகின்றனர்.

கட்சி பேதமின்றி வாக்காளர்கள் இந்த விடயத்தில் விழிப்பாக இருப்பதனை அரசியல்வாதிகள் ஊக்குவிக்க வேண்டும்.

சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தையும் மொத்த மக்கள் பிரதி நிதிகளையும் நாடாளு மன்றில் அதிகரிப்பதற் கான முன்மொழிவுகள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றவேளையில் ஜனநாயகத்தின் மீதான விருப்பினையும் நம்பிக்கையினையும் வாக்காளர் பதிவினூடாக நிரூபிப்பது நமது கடமை!



## கைவிடப்பட்ட மஞ்சவண்ணா மரம்

மாதகல் மயூரன்

வெய்யோன் சென்றது கண்டு இருள்பரவ
நிலவோன் புன்னகையுடன் வந்தான்
காரிருளை மெலியதாய் விலக்கி
நிலாவொளி பட்டாய் சிரித்தது
பனிக்குளிர் தென்றலோடு கலந்து
புது சுகம் விளைவித்தது
அமைதி பெறு இரவு நட்சத்திர
பிரசன்னத்துடன் ஆனந்த மூட்டியது

சற்றுத் தூரத்திலாங்கே ...
கைவிடப்பட்ட வளவி...
மலையொப்ப மஞ்சவண்ணா மரம்
பருத்துயர்ந்து கிளை பரப்பி சிலிர்த்தது
நிலாவைக் கண்டோ கிளையெங்கும்
வெண் மலர்கள் மலர்ந்தன
நிலாவொளியோடு வெண் மலர்களும் சேர்ந்து
கிளைகளை வெள்ளையடித்தன
அந்த மலர்களோடு தென்றல்
சரசம் செய்து மகிழ்ந்தது
அதனாலோ ஊரெங்கும் காரிருளில்
மஞ்சவண்ணா மலர் வாசனை!

... அடிக்கடி
... மஞ்சவண்ணா
இரவில் ஆந்தைகளும் அலற இடம்கொடுத்தது
தியாகிபோல கொடும் காபனை உறிஞ்சி
நல்பிராணனை எமக்களிக்கும் பாரி
பகலில் குளிர் வீசி
உயிர்களை வாரியணைக்கும் வள்ளல்

அழகான இரவில் மஞ்சவன்னா
மலர்வாசம் தாலாட்ட சுகமாக
தூக்கம் கண்ணையெட்டுகிறது
என்றாலும்............ கைவிடப்பட்ட வளவுதனில்
எந்த மனித மரம் மஞ்சவண்ணாவை
வேரோடு தறிக்க காத்திருக்கிறதோ
இதையெண்ணி பயமும் தினம் தினம்
மனதை வாட்டுகிறதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் சீனக் கடல் பிரசேதம் வல்லரசு மோதல்களமாக மாறும் அபாயம்

ராங்கன்

தென்சீனக் கடற் பகுதியில் குறிப்பாக ஸ்ப்ராட்லி தீவுகள் காணப்படும் பகுதியில் பெரும் பகுதிக்குச் சொந்தம் கொண்டாடும் சீனா அங்கு கடலை மேடுறுத்தி பெரிய இராணுவத் தளங்களை அமைத்து வருகிறது. தாய்வான், வியட்நாம், மலேசியா, பிலிப் பைன்ஸ் நாடுகளும் அந்தப் பகுதியில் அதேவித அக்கறை கொண்டுள்ளன. சீனாவின் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா, அந்தப் பிரதேசத்தில் நேச நாடுகளின் சார்பில் பெரிய அளவில் இராணுவத் தலையீடு செய்ய முனைகிறது. எனவே அந்தப் பகுதி இப்போது சீனா–அமெரிக்கா முறுகல் பகுதியாக புகைய ஆரம்பித்துள்ளது.

இலங்கை போன்ற சில நாடுகளில் துறைமுக நகரங்களை கடலை மேடாக்கி அல்லது உள்நோக்கித் தோண்டி அமைத்துக் கொடுப்பதில் வர்த்தக ரீதியிலும் ராஜதந்திர மூலோபாய ரீதியிலும் ஈடுபட்டு வரும் சீனா, அந்த மட்டத்தோடு நிறுத்திக் கொள்ளவில்லை. பெரிய அளவில் நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும் இராணுவ நோக்கங்களுக்காக தென் சீனக்கடற்பரப்பிலும் பெருமளவில் கடல்பகுதியை மேடாக்கி கட்டுமானங்களை நிர்மாணித்து வருவது மேற்கு நாடுகளில் அக்கறையோடு அவதானிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 18 மாத காலத்தில் தென் சீன கடற்பகுதியில் சுமார் 2,000 ஏக்கர் கடல் பகுதியை மேடாக்கி அதன் மீது இராணுவ தேவைக் கட்டுமானங்களை நிறுவி வருகிறது என்ற செய்தி மேற்கு நாடுகளில் தலைப்பு செய்திகளாக பேசப்படுகின்றன.

தென்சீனக் கடற்கரைப் பகுதியில் ஸ்ப்ராட்லி தீவுகள் அமைந்துள்ள பகுதியில் சீனா மாத்திரமல்ல அந்தப் பகுதியை உரிமை கொண்டாடும் ஏனைய நாடுகளும் கடல் தளத்தை மேடாக்கி இராணுவக் கட்டுமானங்களை நிறுவி வருவதும் தெரியவந்துள்ளது. எனினும் இதில் சீனா அளவுக்கு வேறு நாடுகள் அதிக கவனம் செலுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. இருப்பினும் தாய்வான், வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் ஸ்ப்ராட்லி தீவுப் பகுதிக்கு உரிமை கொண்டாடும் அதேநேரம் இந்த நாடுகளும் இராணுவத் தேவைகளுக்காகக் கடல் நீர்ப் பகுதியை மேடாக்கி கட்டுமானங்ளை மேற்கொண்டு வருவது தெரியவந்துள்ளது.

உதாரணமாகத் தாய்வான் நாடு, ஸ்ப்ராட்லி தீவுகளிலேயே மிகப் பெரிய தீவுகளில் ஒன்றான இட்டு அபா தீவுக்கு 1955ஆம் ஆண்டிலிருந்து உரிமை கொண்டாடி வருகின்றது. இந்தத் தீவு இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானின் நீர்மூழ்கிக் கப்பல்களுக்குத் தளமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது என்கிறார் வாஷிங்டன் போஸ்ட் கட்டுரையாளர் வால்டர் பிங்கஸ்.

இந்தத் தீவுகளுக்கு அருகாமையில் [illegible] இப்பொழுது சீனாவின் பெரும் [illegible]ான எண்ணெய் இறக்குமதி க[illegible]ல்கள் கடந்து செல்கின்றன. 20[illegible]8ஆம் ஆண்டு 3,900 அடி வி[illegible]ன ஓடு பாதை ஒன்றை அங்கு [illegible]த்திருப்பதாக தாய்வான் அறி[illegible]து. தேடுதல் மற்றும் மீட்புப் [illegible]களுக்கு இது பெரிதும் பயன[illegible]தாக இருக்கும் என்றும் அறி[illegible]ப்பட்டது. இராணுவ விமானங்[illegible]ட அங்கு இறங்கும் வசதிகள் உண்டு என்பதை தாய்வான் அதிபர் அந்த வருடமே சி–130 இராணுவ போக்குவரத்து விமானம் மூலம் அங்குபோய் இறங்கி நிரூபித்திருந்தார். அண்மைக் காலத்தில் இந்த விமான ஓடுபாதைக்கருகில் கடலை மேடாக்கும் பணி ஒன்றையும் தாய்வான் சிறிய அளவில் ஆரம்பித்துள்ளது.



அன்னிய தலையீடு வேண்டாம் சீனா
நேச நாடுகளின் நலன் முக்கியம் அமெரிக்கா

வியட்நாமும்கூட ஸ்ப்ராட்லி தீவுகள் பகுதியில் தனது உரிமைகளை விஸ்தரிக்கத் தொடங்கியுள்ளது. தாய்வானின் இட்டு அபாதீவுக்கு 7 மைல் தூரத்தில் இந்தப் பணி நடைபெறுகின்றது. அங்குள்ள கேன்ட்கே மற்றும் வெஸ்ட் லண்டன் ரீப் பகுதியில் கடல் பகுதியை மேடாக்கி இராணுவ வசதிகளை நிர்மாணிப்பதில் வியட்நாம் ஈடுபட்டு வருகிறது. ஆனால், இது சீனாவின் திட்டத்தில் 10இல் ஒரு பகுதி அளவிலேயே இருக்கும் என்று கருதப்படுகின்றது.

ஸ்ப்ராட்லி தீவுகளில் ஸொங்யி தாவோ தீவில் பிலிப்பைன்ஸ் அரசு இராணுவ விமான ஓடுபாதை ஒன்றை 1975ஆம் ஆண்டிலிருந்து பராமரித்து வருகின்றது. அதற்கு றனுடோ விமான தளம் என்று பெயரிடப்பட்டுள்ளது. மலேசியாவும் ஸ்ப்ராட்லி தீவுப் பகுதியில் அக்கறை கொண்டுள்ளது.

2013ஆம் ஆண்டு முற்பகுதியில் ஜேம்ஸ் ஷாவோல்ஸ் என்ற கடலடிப் பாறைகள் அடர்ந்த பகுதியில் சீனா கடற்படைப் பயிற்சிகளை நடத்தியிருந்தது. இது மலேசியாவின் போர்னியோ மாநிலத்துக்கு சுமார் 50 மைல் தொலை வில் இருக்கிறது. இந்தப் பகுதியை மலேசியா தனக்கு உரிமை கொண்டாடுகிறது. அந்தப் பகுதியில் சரவாக்கின் பின்ருலு என்ற இடத்தில் கட்டப்படவிருக்கும் புதிய கடற் படைத் தளத்தில் புதிதாக நிறுவப் படவிருக்கும் கடற்படைப் பிரிவு ஒன்று அங்கு நிறுத்தி வைக்கப்படும் என்று மலேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஹிசாமுதின் ஹுசேன் 2013 ஆம் ஆண்டு அறிவித்திருந்தார்.

கடந்த வாரம் சிங்கப்பூரில் இடம் பெற்ற சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனமான சங்ரி லா விவாதங்களின்போது அமெரிக்க பாதுகாப்பு செயலர் அஸ்ரோன் பி.கார்ட்டர் இந்த விடயத்தைப் பற்றிக் கருத்து வெளியிட்டிருந்தார். தென் சீன கடற்பிரதேசத்தில் சில பகுதிகளை தங்களுடையவை என்று உரிமை கொண்டாடும். அனேகமாக எல்லா நாடுகளுமே கடந்த பல வருடங்களில் காவல் நிலையங்களை அங்கு அமைத்து வந்துள்ளன. இவை வெவ்வேறு நோக்கங்களிலும் அளவுகளிலும் நிகழ்ந்துள்ளன என்று குறிப்பிட்டிருந்தார். இருந்தாலும் இதில் ஏனையவற்றைவிட வெகுதூரம் வேகமாக சென்றுள்ள ஒரு நாடுதான் சீனா என்று கூறிய கார்ட்டர்; எதிர்காலத்தில் சர்ச்சைக்குரிய அம்சங்களைக் கொண்ட இராணுவ மயமாக்கலை நாங்கள் எதிர்க்கவே செய்வோம் என்று குறிப்பிடவும் தவறவில்லை.



கடந்த 18 மாத காலத்தில் தென் சீன கடற்பகுதியில் சுமார் 2,000 ஏக்கர் கடல் பகுதியை மேடாக்கி அதன் மீது இராணுவ தேவைக் கட்டுமானங்களை நிறுவி வருகிறது என்ற செய்தி மேற்கு நாடுகளில் தலைப்பு செய்திகளாக பேசப்படுகின்றன. தென்சீனக் கடற்கரைப் பகுதியில் ஸ்ப்ராட்லி தீவுகள் அமைந்துள்ள பகுதியில் சீனா மாத்திரமல்ல அந்தப் பகுதியை உரிமை கொண்டா டும் ஏனைய நாடுகளும் கடல் தளத்தை மேடாக்கி இராணுவக் கட்டுமானங்களை நிறுவி வருவ தும் தெரியவந்துள்ளது.

### படைகளின் இருப்பை அமெரிக்கா அதிகரிக்கின்றது

அமெரிக்கப் பெருநிலத்திலிருந்து அந்தப் பகுதி சுமார் 7,000 மைல் தொலைவில் இருக்கிறது. அதன் அருகாமையிலுள்ள அலஸ்காவுக்கு 4,500 மைல் மற்றும் ஹவாய்க்கு 6,000 மைல் தூரம் ஆகும். அந்தப் பகுதியில் ஏற்கனவே நியாயமான அளவில் அமெரிக்கப் படைகள் இருக்கின்றன. 350,000 இராணுவ மற்றும் சிவில் நிர்வாகிகள் சுமார் 2,000 விமானங்கள் மற்றும் 18 கடற்படைக் கப்பல்கள் என்று கார்ட்டர் அங்கு உறுதிப்படுத்தினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்; ஆசிய பசுபிக் தேசங்கள் வளர்ச்சியடைவதால் இராணுவச் செலவுகள் அதிகரிக்கின்றன, [illegible] இந்த நிலையில், இந்த நாடுகள் [illegible] சீரமைத்துக் கொள்கின்றன, தங்கள் கரிசனைகளை மற்றும் நோக்கங்களை முன்னெடுக்கின்றன என்பதில் மாறுதல்களை நாம் காணவிரும்புகிறோம் – என்றார். அமெரிக்கா புதிய பொது முறைகளை அபிவிருத்தி செய்கையில் ஆசிய பசுபிக் மக்களுக்கும் அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க விரும்புகின்றோம் – என்றார்.

### அமெரிக்க வருகைக்கு சீனாவின் கடும்எதிர்ப்பு

இதற்கிடையில் சீனா விடுத்துள்ள இராணுவ வெள்ளை அறிக்கையொன்றில் தென் சீனக் கடற் பிரதேசத்தில் அமெரிக்க பிரசன்னத்தைக் கடுமையாகக் கண்டித்திருக்கின்றது. "சில வெளியில் உள்ள நாடுகள்" என்று அறிக்கையில் பெயர் குறிப்பிடாமல் கண்டித்துள்ள சீன அறிக்கையில், தென்சீன கடற்பகுதியில் விவகாரங்களில் அவை தலையீடு செய்ய முனைகின்றன, அதுவும் சீனாவுக்கு எதிராக ஒரு சில சிறு அளவில் விமான கடல் உளவு வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்களுடன் இணைந்து கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தென்சீனக் கடல்பகுதியில் பல தீவுகளில் சொந்தம் பாராட்டிவரும் சீன அரசு, சில பல சமயங்களில் அங்கு அக்கறை கொண்டுள்ள ஏனைய நாடுகளை எச்சரித்தும் அச்சுறுத்தியும் வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. குறிப்பாக செங்காக்கு தீவுகள் விடயத்தில் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் ஏற்கனவே முரண்பாடுகள் கிளம்பியுள்ளன. ஜப்பான் போன்ற நட்பு நாடுகளின் நலன்களைப் பாதுகாக்க அமெரிக்கா ஏற்கனவே பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### வியட்நாம் அமெரிக்காவை நாடுகிறது சீன அச்சுறுத்தலால்

ஒரு காலத்தில் கடும் எதிரி நாடுகளாக விளங்கிய வியட்நாமும் அமெரிக்காவும் இப்போது நேச நாடுகளாக மாறிவருகின்றன. வியட்நாம் கடற்பகுதியில் சீனாவின் அச்சுறுத்தல் மிகுந்து வருவதால் வியட்நாம் அமெரிக்காவின் பக்கம் அதிகமாகச் சாய்ந்து வருகிறது.

அண்மையில் ஹனோயிக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ஆஷ்ரொன் கார்ட்டருக்கு அங்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது. கார்ட்டருடன் அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் புங்குவாங் தான் இருதரப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டார்.

பாதுகாப்பு வர்த்தகத்துறையை அதிகரிக்கவும், கூட்டு உற்பத்திகளில் ஈடுபடவும், கடற்றுறை பாதுகாப்புக்களை மேம்படுத்திக் கொள்ளவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கின்றது. ஆசிய நாடுகளில் 10 நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமெரிக்க பாதுகாப்பு செயலர் இடையில் வியட்நாமில் இறங்கியமை சீனா, தென் சீனகடற்பகுதியில் ஏனைய நாடுகளை அன்னியராக்கிவிட்டு ஆக்கிரமித்து வருவதற்கு ஓர் எச்சரிக்கையாகக் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலத்தை திரும்பிப் பார்க்க...

1993 இல் பில் மூர்ரேயின் இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'கிரவுண்ட் ஹாக் டே'. தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் வானிலை அறிவிப்பாளராக இருக்கும் கதாநாயகன் மீண்டும் மீண்டும் ஒரே நாளிலேயே வாழ்ந்து கொண்டிருப்பார். ஹப்பிள் அண்டவெளி தொலைநோக்கியைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வானியலாளர்களும் பெருவிண்மீன் வெடிப்பில் (சூப்பர்நோவா) ஒரே விண்மீன் திரும்பத் திரும்ப வெடித்துச் சிதறுவதைக் கண்டதாகச் சமீபத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஐன்ஸ்டைன் ஒளியியல் (ஆப்டிக்ஸ்) கூறும் தோற்றப் பிழைதான் இது. பிரபஞ்சத்தின் வேறொரு மூலையில் 900 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் வெடித்த பெருவிண்மீன் அது. அண்டவெளியின் உதவியின்றி இவ்வளவு தொலைவில் நிகழ்ந்த ஒரு நிகழ்வை ஹப்பிள் தொலைநோக்கியால் பார்க்க முடியாது. அந்த விண்மீன் வெடிப்பிலிருந்து வெளிப்பட்ட ஒளிக்கதிர்கள் பயணிக்கும் பாதையில் சில விண்மீன் மண்டலங்கள் (கேலக்ஸி) குறுக்கிடுகின்றன. அந்த மண்டலங்களின் ஈர்ப்பு காரணமாக ஒளிக்கதிர்கள் வளைக்கப்பட்டு, பெரிதாக்கப்பட்டு அவற்றின் பல பிம்பங்கள் உருவாகியிருக்கின்றன.

அந்த பிம்பங்களுள் நான்கு, ஐன்ஸ்டைன் சிலுவை (ஐன்ஸ்டைன் குரொஸ்) என்று அழைக்கப்படும் நெருக்கமான தொகுப்பாகக் காட்சியளிக்கின்றன. அந்த விண்மீன் மண்டலங்களுள் ஒன்றைச் சூழ்ந்து இந்த பிம்பங்கள் காணப்படுகின்றன. விண்மீனிலிருந்து புறப்படும் ஒளிக்கதிர் ஒவ்வொன்றும் வேறுவேறு பாதை வழியாக அந்த இடத்தை வந்தடைவதால், அந்தச் சிலுவையில் உள்ள ஒவ்வொரு பிம்பமும் பெருவிண்மீன் வெடிப்பின் வேறுவேறு தருணங்களைச் சித்திரிக்கின்றன என்றே கருத வேண்டும்.

**முதல் முறை**

வானியலாளர்கள் ஒரே வெடிப்பைத் திரும்பத் திரும்பக் காண்பதென்பது இதுதான் முதல் முறை. இது போன்ற அரிதான நிகழ்வுகளின் தன்மையைப் புரிந்து கொள்வதில் மட்டுமல்ல, கரும்பொருள் (டார்க் மேட்டர்), பிரபஞ்சம் விரிவடையும் வேகம் போன்ற அண்டவெளிப் புதிர்களைப் பற்றிப் புரிந்துகொள்வதிலும் வானியலாளர்களுக்கு இது உதவும்.

ஹப்பிள் தொலைநோக்கியால் பதிவுசெய்யப்பட்ட படங்களிலிருந்து இந்தப் பெருவிண்மீன் வெடிப்பின் படங்களைக் கண்டறிந்தவர் பெர்க்லியில் உள்ள கலிஃபோர்னியப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர் பேட்ரிக் கெல்லி. "ஆச்சரியத்தில் எனக்குப் பேச்சே வரவில்லை. நான் சற்றும் எதிர்பாராத விடயம் இது" என்கிறார் அவர். சயின்ஸ் என்ற அறிவியல் இதழில் கடந்த மார்ச் மாதம் இந்தப் பெருவிண்மீன் வெடிப்பைப் பற்றிய அவரது ஆய்வுக் கட்டுரை வெளியானது.

"ஈர்ப்புவிசையின் காரணமாக ஒளி வளைவதை நாம் முன்பே பார்த்திருக்கிறோம். பெருவிண்மீன் வெடிப்பையும் பார்த்திருக்கிறோம். உருப்பெருக்கப்பட்ட பெருவிண்மீன் வெடிப்பையும் பார்த்திருக்கிறோம். ஆனால், ஒரே வெடிப்பின் பல பிம்பங்களைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை என்கிறார்" வானியற்பியலாளர் ராபெர்ட் கிர்ஷ்னர்.

பிரபஞ்சத்தில் நிகழும் மூர்க்கமான, அரிய நிகழ்வுகளுள் பெருவிண்மீன் வெடிப்பும் ஒன்று. ஒவ்வொரு விண்மீன் மண்டலத்திலும் அனேகமாக நூற்றாண்டுக்கு ஒன்று என்ற கணக்கில்தான் பெருவிண்மீன் வெடிப்புகள் நிகழும். விண்மீன் மண்டலங்களை விட மிகவும் பிரகாசமான ஒளியை உமிழக் கூடியவை அந்த நிகழ்வுகள். இந்த நிகழ்வுகளின்போது புதிய கிரகங்கள் உருவாகத் தேவையான ஒக்ஸிஜன், தங்கம் போன்ற அடிப்படைத் தனிமங்கள் உமிழப்படுகின்றன. இந்த நிகழ்வுகளின் எச்சங்களாக நியூட்ரான் விண்மீன்களோ கருந்துளைகளோ உருவாகின்றன.

**விண்மீன் மண்டலமே ஒரு குழிவாடி**

குறிப்பிட்ட இந்தப் பெருவிண்மீனுக்கும் ஹப்பிள் தொலைநோக்கிக்கும் இடையே விண்மீன் மண்டலங்களின் கொத்தொன்று (கேலக்ஸி கிளஸ்டர்) இருப்பதால்தான் ஒரே பெருவிண்மீன் வெடிப்பை நாம் நான்கு முறை பார்க்கிறோம் என்கிறார் டாக்டர் கெல்லி. அடுத்த 10 ஆண்டுகளில் வானத்தின் வேறு ஏதாவதொரு பகுதியில் இந்தப் பெருவெடிப்பின் பிம்பம் தோன்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பிம்பங்கள் தோன்றும் இடைவெளிகளில் நிலவும் கால தாமதத்தைக் கணக்கிடுவதன் மூலம் பிரபஞ்சம் எந்த வேகத்தில் விரிந்து கொண்டிருக்கிறது என்பது குறித்த அளவீடுகளை வானியலாளர்கள் மேலும் துல்லியப்படுத்திக்கொள்ள முடியும் என்கிறார் டாக்டர் கெல்லி. அது மட்டுமல்லாமல், பிரபஞ்சத்துக்குப் பெருமளவு நிறையையும் ஈர்ப்புவிசையையும் வழங்கும் புதிரான கரும்பொருள் குறித்துப் புரிந்துகொள்வதும் இதனால் சாத்தியமாகும் என்று சொல்கிறார் டாக்டர் கெல்லி.

ஆல்பெர்ட் ஐன்ஸ்டைனுக்கு இன்னும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது விண்வெளி. இந்த ஆண்டின் மார்ச் 14இல் அவருக்கு 136 வயது நிறைவடைந்திருக்கிறது. அவருடைய மகத்தான சாதனையான பொதுச் சார்பியல் கோட்பாட்டின் நூறாவது ஆண்டு இது. அண்டவெளி, காலம், ஈர்ப்புவிசை போன்றவற்றைப் பற்றிய நமது அறிவை மாற்றியமைத்த கோட்பாடு அது. அந்தக் கோட்பாட்டின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் சயின்ஸ் இதழின் சிறப்பிதழில்தான் டாக்டர் கெல்லியின் ஆய்வுக்கட்டுரை வெளியாகியிருக்கிறது.

பருமனான ஒருவர் அமரும்போது மெத்தையில் எப்படிக் குழிவு ஏற்படுகிறதோ அதேபோல் நிறையும் விசையும் அண்டவெளியின் வடிவத்தை வளைக்கின்றன என்றும் இதனால் உருவாகும் விளைவுதான் ஈர்ப்புவிசை என்றும் ஒரு கருதுகோளை ஐன்ஸ்டைன் முன்வைத்தார். ஒளியையும் ஈர்ப்புவிசை வளைத்துவிடுவதும், சூரியன் போன்ற நிறைமிகுந்த பொருளுக்கருகில் ஒளி வளைந்து செல்வதும் இதன் விளைவுதான். 1919 ஆம் ஆண்டு நிகழ்ந்த சூரிய கிரகணத்தின்போது ஐன்ஸ்டைனின் இந்தக் கோட்பாடு நிரூபணமானது.

இந்த அடிப்படையில் அண்டவெளியே தொலைநோக்கி போல் ஆகிவிடக் கூடும். இந்த அண்டவெளி தொலைநோக்கி எப்படி இயங்கும் என்பது விண்மீன்களெல்லாம் அமைந்திருக்கும் நிலைகளைப் பொறுத்தது. ஒரு விண்மீனின் ஒளியின் பாதையில் மேற்கண்ட தொலைநோக்கி சற்றே விலகி அமைந்திருந்தால் அந்த விண்மீனின் ஒளி, வளைவுகள் போன்று தோன்றும். நேர்க்கோட்டில் அமைந்திருந்தால் ஐன்ஸ்டைன் வளையம் என்றழைக்கப்படும் ஒளிவட்டமாக அந்தத் தொலைதூர விண்மீன் தோன்றும், அல்லது தனித்தனிப் பிம்பங்களாக ஐன்ஸ்டைன் சிலுவைபோல் தோன்றும்.

**ஹப்பிளுக்குக் கிடைத்த வரப்பிரசாதம்**

ஒட்டுமொத்த விண்மீன் மண்டலக் கூட்டங்களையும், விண்மீன் மண்டலக் கொத்துகளையும் தொலை நோக்கிபோல் கொண்டு அவற்றுக்கு அப்பால் மிகத் தொலைவில் இருக்கும் மங்கலான பொருள்களைப் பார்ப்பது எப்படி என்பதை வானியலாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இந்த வழிமுறை இல்லை என்றால், தொலைதூரப் பொருள்களெல்லாம் காலத்தின் மூட்டத்தில் தொலைந்துபோய்விட நேரிட்டிருக்கும் அல்லவா!

ஹப்பிள் விஞ்ஞானிகள் இந்த உத்தியை கிளாஸ் என்ற ஆய்வில் சமீப காலமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம் விண்மீன் மண்டலக் கொத்துகளைத் துழாவி, பிரபஞ்சத்திலேயே மிகவும் நிறை கொண்டதும், ஒளியை மிக அதிக அளவில் வளைக்கவும் உருப்பெருக்கவும் கூடியதுமான விண்மீன் கொத்துகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த உத்தியின் மூலம் கடந்த காலத்தை ஊடுருவிப் பார்ப்பதில் ஹப்பிள் ஏற்கெனவே கொண்டிருந்த அசாத்தியமான திறனை மேலும் வலுப்படுத்தியிருக்கிறார்கள். இதனால், முன்னிலும் அதிக அளவில் தொலை தூரத்தைப் பார்க்கும் திறன் ஹப்பிளுக்குக் கிடைத்திருக்கிறது. பிரபஞ்சம் உருவாகி 50 கோடி ஆண்டுகளே ஆகியிருந்த காலகட்டத்தில் இருந்த விண்மீன் மண்டலத்தை இந்த உத்தியின் மூலம் பார்க்க முடிந்திருக்கிறது.

ஒரு விண்மீன் ஒரு முறைதான் இறக்கும். ஆனால், ஐன்ஸ்டைனின் தொலைநோக்கி மூலம், எங்கே பார்க்க வேண்டுமோ அங்கே சரியாகப் பார்த்தோமென்றால், அந்த விண்மீன் சாவு ஓலமிடுவதை என்றென்றுமே காணலாம்.

*(மூலம்: திநியூயோர்க் டைம்ஸ்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லோரும் வல்லவர்களே!

வெளிநாட்டில் வேலை கிடைத்துப்போன ஒருவன், விடுப்பில் திரும்பி வந்தபோது, மொத்தம் மூன்று 'ஸ்மார்ட்' செல்பேசிகள் வாங்கி வந்தான். ஒன்றை அவன் அம்மாவிடமும், மற்றொன்றை அவனது அப்பாவிடமும் கொடுத்தான். மூன்றாவது மொபைல் போனை பதினொன்றாம் வகுப்பு படிக்கும் அவனது தம்பியிடம் கொடுத்தான். பின்பு விடுப்பு முடிந்து கிளம்பிப் போய் விட்டான்.

விலை உயர்ந்த 'ஸ்மார்ட்' செல்பேசியை மூவரும் பயன்படுத்த ஆரம்பித்தனர். அவனுடைய அம்மாவின் போனில் அழைப்பு வந்தால், அவர் அதை விரலால் வழித்துவிட்டு, வந்த அழைப்பில் பேசுவார். எப்போதும் அதை மட்டுமே செய்தார். அவர் மகன் அடுத்த விடுப்பில் திரும்பி வரும் வரை.

அவனுடைய அப்பா கொஞ்சம் மேல். அம்மா அளவு இல்லை. அழைப்பு வந்தால் எடுப்பார். தவிர, தேவைப்பட்டால் அவரால் அந்த போனில் அழைப்பு எண் விவரங்கள் பதியப்பட்டுள்ள 'கான்டாக்ஸ்' என்ற இடத்தை வரவழைத்து, அதிலிருந்து அவர் பேச விரும்பும் நபரின் எண்ணைத் தேடி எடுக்க முடியும். அழைப்பார், பேசுவார். மேலும் வரும் எண்களையும் தேவைப்பட்டால் பதிவு செய்துகொள்வார். ஆக, தன்னுடைய மனைவி பயன்படுத்தியதைக் காட்டிலும், அந்தப் புதிய விலை உயர்ந்த செல்பேசியை அவர் சற்றுக் கூடுதலாகப் பயன்படுத்தினார்.

மூன்றாவதாக, பதினொன்றாம் வகுப்பு படிக்கும் அவனுடைய தம்பி. அவன் வேண்டியவர்களை போனில் அழைப்பது, வரும் அழைப்பை ஏற்பது, பாட்டு கேட்பது, ஒலிப்பதிவு செய்வது, பதிவுகளைக் கேட்பது, படங்கள் எடுப்பது, 'வாட்ஸ்ஆப்' பயன்படுத்தி படங்கள், வீடியோ மற்றும் செய்திகள் அனுப்புவது – பெறுவது. 'ஸ்கைப்' பயன்படுத்துவது. 'கூகுள் மேப்ஸ்' பார்ப்பது, 'பேஸ் டைம்'இல் தொடர்புகொள்வது, மின்னஞ்சல்கள் பறிமாற்றம், அலாரம் பயன்படுத்துவது, அப்பாவின் தேவைகளுக்காக இணைய வங்கிச் செயற்பாடுகளில் ஈடுபடுவது அந்த செல்பேசியில் உள்ள சுமார் பதினெட்டுக்கும் அதிகமான அம்சங்களைப் பயன்படுத்தினான். அண்ணன் வரும்போது, அந்தச் செல்பேசியிலேயே புதிதாக வந்திருப்பதை வாங்கி வரும்படி கேட்கிறான்.

மூவருக்கும் கொடுக்கப்பட்டது ஒரே மாதிரியான செல்பேசி. ஒரே விலை. செல்பேசிகளில் இருந்த அம்சங்களிலும் வேறுபாடுகள் கிடையாது. மூவருக்குமே அந்த செல்பேசியை வைத்துகொண்டு எது செய்யவும் வாய்ப்பும் அனுமதியும் இருந்தது. ஆனால், பயன்படுத்திய மூவருக்குள்ளும் பயன்படுத்திய விதங்களிலும், பயனடைந்த அளவுகளிலும் பெரிய வேறுபாடுகள். இது யார் குற்றம்? செல்பேசியின் குற்றமா? கொடுத்தவனின் குற்றமா? பயன்படுத்துபவரின் குற்றம்தானே தவிர, வேறு யாருடைய தவறும் இல்லை.

இதேபோலதான், மனிதர்களின் வேறுபாடுகளும். மனிதர்களிடம் இருக்கும் மூளை என்ற இயந்திரத்தில் எந்த வேறுபாடும் இல்லை. எல்லாம் ஒரே உருவாக்கம்தான். ஆனாலும், செயல்பாடுகளிலும் சாதனைகளிலும் வித்தியாசம் உண்டு. காரணம், அதேதான். மூளையைப் பயன்படுத்தும் விதங்களில் வேறுபடுகிறோம். திறன் படைத்திருப்பதில் எவரும் எவருக்கும் குறைந்தவரில்லை. படைத்தவன் ஒரே மாதிரியாகத்தான் படைத்து அனுப்பியிருக்கிறான்.

ஆக, எல்லோரும் ஒன்றுதான். முயன்றால் எல்லோரும் வல்லவர்கள்தான். எப்படி முயல்வது? எங்கே சிலர் தவறவிடுகிறார்கள்? இவற்றைக் கண்டுபிடித்துச் சரிசெய்து விட்டால் போதும் எல்லாம் சரியாகிவிடும்.

# ஒரே நேரத்தில் பல வேலைகள் செய்வது சாத்தியமா?



தொழில்நுட்ப உலகில் பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்வதைக் குறிக்கும் 'மல்ரி டாஸ்கிங்' எனும் பதம் பிரபலம். இணையத்தில் உலாவிக் கொண்டே பின்னணியில் பாட்டுக் கேட்பது. அலுவலக சகாவுடன் உரையாடியபடி கையில் செல்பேசி 'வாட்ஸ் ஆப்' செய்திகளுக்குப் பதில் அளிப்பது தொடங்கி பல உதாரணங்களைச் சொல்லலாம். பொதுவாகப் பெண்கள் இந்த விடயத்தில் கில்லாடிகள் என்று சொல்லப்படுகிறது.

ஆனால், உண்மையிலேயே இந்த வகை திறமை சாத்தியமா? அதாவது ஒரே நேரத்தில் பல வேலைகளைத் திறம்பட தொழில்நுட்பம் மூலம் செய்வதற்குக் கைவரப் பெற்றிருக்கிறோமா? என்றால், இதற்கான பதில் 'மல்டி டாஸ்கிங்' பிரியர்களுக்கு ஏமாற்றம் தரலாம்.

இப்படி ஒரே நேரத்தில் பல வேலைகளைத் திறம்படச் செய்வது பெரும்பாலும் பலருக்குச் சாத்தியம் இல்லை என ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. அமெரிக்கப் பேராசிரியர் டேவிட் ஸ்டிரேயர் இந்த ஆய்வை நடத்தியுள்ளார்.

ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளைச் செய்ய முடிவதாகப் பலரும் நினைக்கலாம்தான். ஆனால், அப்படிச் செய்யும் வேலைகளின் செயல்திறன் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். அந்த வகையில் பார்த்தால் 2 சதவீதம் பேருக்கு மட்டுமே இந்த ஆற்றல் இருப்பதாகவும் எஞ்சிய 98 சதவீதம் பேர் ஒரு வேலை செய்துகொண்டிருக்கும்போது வேறு வேலையைச் செய்தால் ஏதாவது ஒன்றைச் சொதப்பிவிடுவதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது. இந்த 2 சதவீதம் பேர்தான் 'சூப்பர் டாஸ்கர்'கள் என வர்ணிக்கப்படுகின்றனர்.

**ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளைச் செய்ய முடிவதாகப் பலரும் நினைக்கலாம்தான். ஆனால், அப்படிச் செய்யும் வேலைகளின் செயல்திறன் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம்.**

ஏற்கனவே ஒரு முறை இது தொடர்பான ஆய்வு நடைபெற்ற நிலையில் பேராசிரியர் ஸ்டிரேயர் மீண்டும் இந்த ஆய்வை நடத்தியிருக்கிறார். பழைய ஆய்வில் பங்கேற்ற 'சூப்பர் டாஸ்கர்'களில் 5 பேரும் மூன்று புதியவர்களும் புதிய ஆய்வில் பங்கேற்றுள்ளனர். இவர்களைத் தவிர மேலும் 80 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆய்வின்போது பங்கேற்பாளர்கள் திரையில் தோன்றும் கட்டத்தையும் அதில் மாறிக்கொண்டிருக்கும் நிறத்தையும் கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் ஆடியோவில் கேட்கும் குறிப்புகளையும் காதில் வாங்கிக்கொள்ள வேண்டும். பின்னர் ஆடியோ குறிப்பை நினைவில் நிறுத்திக் கட்டங்களின் நிலையைச் சரியாகச் சொல்ல வேண்டும்.

இந்தச் சோதனையில் 2 சதவீதம் பேர் மட்டும் திறம்படச் செயல்பட்டுள்ளனர். மற்றவர்கள் குழம்பித் தவித்துள்ளனர்.

இதற்குப் பேராசிரியர் சொல்லும் விளக்கம், பலவேலைகள் செய்யும் திறன் பெற்றவர்களின் மூளை செயல்படும் விதம் மாறுபட்டதாக இருக்கிறது என்பதாகும். சோதனையின்போது பங்கேற்பாளர்களின் மூளைச் செயல்பாட்டை ஆய்வு செய்து இந்த முடிவை முன்வைத்துள்ளார்.

இந்தக் கருத்தைச் சோதிக்க விரும்பினாலும் சரி அல்லது உங்கள் மல்டி டாஸ்கிங் திறனைச் சரி பார்க்க விரும்பினாலும் சரி அதற்கு 'ஒன்லைன்' சோதனை இருக்கிறது. 'சில்வர் பே லேப்ஸ்' நிறுவனம் உருவாக்கிய அந்தச் சோதனையில் ஆரம்பத்தில் ஒரு கட்டமும் தோன்றும். கூடவே அதில் உள்ள எழுத்துக்கான 'ஓடியோ' பதிவு கேட்கும். இரண்டையும் நினைவில் கொள்ள வேண்டும். அடுத்ததாக இன்னொரு கட்டம் இன்னொரு எழுத்தும் தோன்றி, அதற்கான ஆடியோ கேட்கும். பின்னர் முன்னர் மூன்றாவதாகத் தோன்றிய கட்டத்தில் இடம்பெறும் எழுத்தும் கேட்கும். ஒளியும் ஏற்கனவே பார்த்ததும் கேட்டதும்தானா என உறுதிப்படுத்த வேண்டும். இப்படி ஒவ்வொரு கட்டமாக முன்னேற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகளின் அசமந்தம்



## வந்த வீடுகள் திரும்பின

> யாழ். மாவட்டத்தில் வீடுகள் தேவை என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களை இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்ளீர்ப்பதா அல்லது வன்னியில் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தவர்களை உள்ளீர்ப்பதா அல்லது உயர் பாதுகாப்பு வலயத்தினுள் புதிதாக விடுவிக்கப்படும் பகுதிகளைச் சேர்ந்த மக்களை இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்ளீர்ப்பதா என்பது தொடர்பில் இழுபறி ஏற்பட்டது.

தி.ராஜ்.

வீடு ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை. எனினும் யாழ். மாவட்டத்தில் உள்ள எல்லோருக்கும் வீடுகள் இருக்கின்றன என்று சொல்லிவிட முடியாது. உயர் பாதுகாப்பு வலயத்தின் ஒரு பகுதி, மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், மாவட்டத்தின் வீட்டுத் தேவை இன்னமும் அதிகரித்துள்ளது. ஆனாலும், இங்கு வீட்டுத் திட்டங்களை பெருமெடுப்பில் முன்னெடுப்பதில் அரசு அக்கறைப்படுவதாக இல்லை. பெருமளவு நிதிச் செலவை வேண்டி நிற்கும் இந்த நடவடிக்கையை பொறுப்பு எடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களும் ஐ.நா. முகவர் அமைப்புக்களும் கூடப் பின்னடிக்கின்றன. நிலமை இப்படி இருக்கும்போதே அதிகாரிகள் தமது அசமந்தத்தாலும் செயற்றிறனின்மையாலும் யாழ். மாவட்டத்துக்குக் கிடைக்க வேண்டிய 2 ஆயிரம் வீடுகளை இழந்திருக்கிறார்கள் என்பது எவ்வளவு வேதனையான விடயம்!

யாழ். மாவட்டச் செயலக அறிக்கையின் பிரகாரம் 16 ஆயிரம் குடும்பங்களுக்கு உடனடியாக வீடுகள் தேவையாக இருக்கின்றன. இந்தக் குடும்பங்கள் அனைத்தும், வாழும் தரமற்ற தற்காலிகக் குடில்களிலும் கொட்டில்களிலும்தான் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றன. புதிய மீள்குடியமர்வு இந்த எண்ணிக்கையில் ஒரு சில ஆயிரத்தை இன்னும் அதிகரித்திருக்கும். இத்தனை ஆயிரம் வீடுகள் தேவையாக இருந்தாலும் அவற்றைப் பெறுவதற்கான திட்டங்கள் எவையும் இதுவரை கிடையாது. ஆனாலும் யாழ்ப்பாணத்துக்கு கிடைத்த 2 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான வாய்ப்பு அதிகாரிகளால் இழக்கப்பட்டிருக்கிறது.

வலி. வடக்கில் புதிதாக மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கே அதிகாரிகள் பெரும் திண்டாட்டத்தை எதிர்கொண்டார்கள். மூன்று மாத முயற்சிகளின் பின்பே அது சாத்தியமானது. அங்கும் மீள்குடியமர்ந்த மக்களுக்கு ஆயிரக் கணக்கில் தேவை இருக்கும்போது நூற்றுக்கணக்கான வீடுகளே அமையப் பெறவுள்ளன. எஞ்சியோருக்கு எப்போது வீடுகள் கிடைக்கும் என்பது தெரியவில்லை. இந்த நிலையில்தான் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளை வேறு இடங்களுக்குத் திரும்பத்தக்க விதத்தில் தமது பணியில் வினைத்திறன் காட்டியிருக்கிறார்கள் யாழ். மாவட்ட அதிகாரிகள்.

### இந்திய வீட்டுத் திட்டம்

இந்திய அரசினால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான திட்டம் அறிவிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாணத்திலேயே குறித்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. யாழ். மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிப்பதற்கு 8 ஆயிரம் வீடுகளுக்கும் திருத்தங்கள் மேற்கொள் வதற்கு ஆயிரம் வீடுகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

போரினால் இடம்பெயர்ந்து பின்னர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்குவதற்கே இந்திய வீட்டுத் திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதற்கமைய முன்னோடித் திட்டத்தின் கீழ் 150 வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. அந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கே 2 ஆண்டுகளுக்கு மேல் பிடித்தது. ஒப்பந்தகாரர்களின் குளறுபடியினால் இந்தத் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. நிர்மாணிக்கப்பட்ட வீடுகளும் தரமற்றவையாக இருந்தன என்ற குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து எஞ்சிய வீடுகளை நிர்மாணிக்கும் பொறுப்பு பயனாளிகளிடமே விடப்பட்டிருந்தது. அத்துடன் பயனாளிகள் தேர்வுக்கு புள்ளியிடல் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் வீடுகள் தேவை என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களை இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்ளீர்ப்பதா அல்லது வன்னியில் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தவர்களை உள்ளீர்ப்பதா அல்லது உயர் பாதுகாப்பு வலயத்தினுள் புதிதாக விடுவிக்கப்படும் பகுதிகளைச் சேர்ந்த மக்களை இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்ளீர்ப்பதா என்பது தொடர்பில் இழுபறி ஏற்பட்டது. எனினும் ஒருவழியாக புள்ளியிடல் மூலமாக இந்த விடயம் கையாளப்பட்டு, சாவகச்சேரி, தெல்லிப்பழை, மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுகளில் முதல் கட்ட இந்திய வீட்டுத் திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், ஒவ்வொரு அல்லது சில கிராம சேவையாளர் பிரிவுகள் தேர்வு செய்யப்பட்டு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகவும் புள்ளியிடலில் அதிக புள்ளிகளைப் பெற்ற குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

புள்ளியிடல் முறைமையில் சரியான பயனாளிகளை இனங்காண முடியாது என்று பிரதேச செயலாளர்கள் சிலர் தெரிவித்திருந்தும், அதனை அப்போதைய மத்திய அரசின் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா கண்டுகொள்ளவில்லை. இது தொடர்பில் இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் முறையிட்டபோது அவர்களும் அக்கறைப்படவில்லை. திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் இலங்கை அதிகாரிகள் என்ற ரீதியில் அவர்கள் தமது வகிபாகத்தை இந்த விடயத்தில் கைகழுவிவிட்டனர்.

இவை ஒருபுறம் இருக்க இந்திய வீட்டுத் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துவதில் தாமதம் நிலவியது. பயனாளிகள் தேர்வு புள்ளியிடல் முறைமூலமாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், பயனாளிகள் தேர்வில் நேரடியான அரசியல் தலையீடு இருந்தது. இதுவும் இந்திய வீட்டுத் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்துவதைத் தாமதப்படுத்தியது.



### ஏற்பட்ட இழப்பு

இந்தத் தாமதம் காரணமாக யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்தமான 9 ஆயிரம் வீடுகள் வேறு மாவட்டங்களுக்கு மாற்றம் செய்யப்படும் என்ற எச்சரிக்கை இந்திய தூதரக அதிகாரிகளினால் விடுக்கப்பட்டது. கடந்த ஆண்டின் மத்திய காலப் பகுதியில், யாழ். நகரிலுள்ள விடுதியொன்றில் இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. அதில் அப்போதைய அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் அப்போதைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். குறித்த கூட்டத்தில் வைத்து, பயனாளிகளை இனங்காணப்படாத வீடுகள் வேறு மாவட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளன. விரைவில் யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்குரிய பயனாளிகளை இனங்காணுங்கள் என்று இந்தியத் தூதரக அதிகாரிகள் கொஞ்சம் காரசாரம் காட்டினர். அதனை ஏற்று, அதன் பின்னராவது இந்திய வீட்டுத் திட்ட நடவடிக்கைகளை யாழ். மாவட்டத்தில் விரைவுபடுத்தியிருந்தால், யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 9 ஆயிரம் வீடுகளும் கிடைத்திருக்கக்கூடும். இப்போது யாழ்ப்பாணத்துக்கான ஒதுக்கீட்டில் 2 ஆயிரத்து 61 வீடு கள் வெட்டப்பட்டுவிட்டன. அவை வேறு இடங்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலேயே வீடுகளுக்கு ஆயிரக் கணக்கில் தேவை இருக்கும்போது, கிடைக்கப் பெற்ற வீடுகளும் வேறு மாவட்டங்களுக்கு திரும்பிச் சென்றமைக்கு, அரச அதிகாரிகளின் அலட்சியமே காரணம் என்று அரசியல்வாதிகளும் தேவையற்ற அரசியல் தலையீடுகளே காரணம் என்று அதிகாரிகளும் மாறி மாறிக் குற்றஞ்சாட்டுகிறார்கள். அரசியல் தலையீடுகள் இருந்தாலும்கூட நிர்வாகத் திறமையின்மையும் – அலட்சியமும் வீடுகள் திரும்பிச் சென்றமைக்கான முக்கிய காரணங்கள்.

ஒதுக்கப்பட்ட வீடுகள் வேறு இடங்களுக்குத் திரும்பிச் செல்லக் காரணமாயிருந்த அதிகாரிகளுக்குச் சொந்த வீடுகள் இருக்கின்றன. அவற்றில் அவர்கள் சொகுசாக வசிக்கின்றனர். வீடுகளே இல்லாமல் நாளாந்தம் அல்லல்படும் மக்களின் வேதனை, வலி அவர்களுக்குத் தெரியப்போவதில்லை. அதை அவர்கள் உணரவும் போவதில்லை. வீடுகள் இல்லாமல் இருப்பவர்களுக்கோ இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.


மக்கள் நலன் பேசுவதாகச் சொல்லிக் கொள்ளும் எந்த அரசியல்வாதியும்கூட இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. அதிகாரிகளின் அசமந்தத்தால் திரும்பிச் சென்ற வீடுகளை மீட்பதற்கும் இதுவரையில் அவர்கள் குரல்கொடுக்கவும் இல்லை; முயற்சிக்கவும் இல்லை.

வடக்கு மாகாண சபையின் நிதி செலவு செய்யப்படாமை தொடர்பில் அடிக்கடி குரல் எழுப்பும், வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசாவும் இந்த விடயத்தில் மௌனமாகவே இருக்கின்றார். தவராசா அங்கத்துவம் வகிக்கும், ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்திலேயே, இந்திய வீடுகள் வேறு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டன. அதனால் அவர் இதுபற்றிக் கேள்வி எழுப்பவில்லைப் போலும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான வீட்டுத்திட்டம் – அதுவும் பல கோடி ரூபா பெறுமதியிலான வீட்டுத் திட்டத்தை யாழ். மாவட்டம் இழந்து நிற்கின்றது. இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படும் போது தான், இனிமேலாவது அரச அதிகாரிகள் திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்துவார்கள். தேடி வந்த வீட்டுத் திட்டத்தையே சரியாகப் பயன்படுத்தத் தெரியாத அதிகாரிகளைக் கொண்டிருக்கும் வடக்கு, வன்னியில் வீடுகள் இன்றி இருக்கும் 17 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளைத் தேடித்தர என்ன செய்துவிடப் போகிறார்கள்? அவர்களிடம் அதற்கான எந்தத் திட்டமும் இல்லை. இவற்றையெல் லாம் யார் திருத்துவார்கள். வடக்கு மாகாண சபையால் அது முடியும் என்று தோன்றவில்லை. அதன் மீதான நம்பிக்கைகள் கடந்து பல காலங் களாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிபட்ட புலியே நடால்



■ பிரகாஸ்

சர்வதேச ரென்னிஸ் தொடர்களிலே ரசிகர்களாலும் வீரர்களாலும் மிகவும் விரும்பப்படும் தொடர்களில் அமெரிக்காவின் விம்பிள்ரன் தொடருக்கு அடுத்த இடத்தில் இருப்பது பிரான்ஸின் ரென்னிஸ் தொடர்தான்.

பிரான்ஸின் ரென்னிஸ் என்றால் உடனே நினைவுக்கு வருபவர் ஸ்பெயினைச் சேர்ந்தரபேல்நடால்.இதற்கு ஒரேயொருகாரணம் கடந்த பத்து ஆண்டுகளில் ஒன்பது தடவை நடால் கிண்ணம் வென்று தகர்க்க முடியாத வரலாற்றுச் சாதனையைப் படைத்தமையே ஆகும். நடப்பு வருடத்திலும் கிண்ணம் வென்று பத்தாவது தடவையாக பிரான்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றுவார் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கையில் ஜோகோவிக்கின் மூலம் நடாலின் கிண்ணக் கனவு முடிவுக்கு வந்துள்ளமை அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

நடாலின் அறிமுகமே பிரான்ஸின் ரென்னிஸ் தொடரில்தான் நடைபெற்றது. கடந்த 2005ஆம் ஆண்டுபதின்ம வயதுப் பையனாக சர்வதேச ஆட்டங்களில் காலடியெடுத்து வைத்தார் நடால். அறிமுகமாகியிருக்கும் இந்தப் பையன் எமக்கெல்லாம் எமனாக மாறுவான் என்று 2005ஆம் ஆண்டு பிரான்ஸ் தொடரில் முடிசூட வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருந்த எவரும் நினைத்திருக்க மாட்டார்கள். அன்றைய காலத்து இளவட்ட வீரர்களாக இருந்த ஜோகோவிக், பெடரர், முர்ரே என்று அத்தனை பேருடனும் சவால் விட்டு சிலரை நேர் செற்களில் வீழ்த்தி பதினெட்டாவது வயதிலேயே தனது முதலாவது கிண்ணத்தைக் கைப்பற்றினார். நடாலின் அன்றைய நிலைமையைப் பார்த்து அதிர்ச்சியடைந்திருந்தது ரென்னிஸ் உலகம்.

பதின்ம வயதில் நடால் கிண்ணத்தைக் கைப்பற்றிய பொழுது ரென்னிஸ் உலகம் அடைந்த அதிர்ச்சி பலமடங்காக அதிகரித்தது நடாலின் தொடர் ஆதிக்கங்களைப் பார்த்து.

தொடர்ச்சியாக நான்கு தடவைகள் கிண்ணத்தைக் கைப்பற்றி ஐந்தாவது தடவையாகத் தவறவிட்டார். கடந்த 2009ஆம் ஆண்டு அடைந்த தோல்வியே பிரான்ஸ் தொடரில் நடாலின் முதல் தோல்வி. அதன் பின்னர் மீண்டும் நடாலின் ஆதிக்கங்கள் ஆரம்பமாகின. 2012ஆம் ஆண்டு 7ஆவது தடவையாக கிண்ணத்தைக் கைப்பற்றியதன் மூலம் பிரான்ஸ் தொடரில் அதிக தடவைகள் கிண்ணத்தைக் கைப்பற்றியவர் என்ற பெருமையைப் பெற்ற நடால் அயராமல் தொடர்ந்தும் பயணித்தார்.

நடப்பு ஆண்டிலும் கிண்ணத்தைக் கைப்பற்றி பிரான்ஸ் கிண்ணத்தை பத்தாவது தடவையாக தனதாக்கியவர் என்ற பெருமையைப் பெறுவார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் ஜோகோவிக்கிடம் தோல்வியடைந்து பாதியில் வெளியேறினார். பதினெட்டாவது வயதில் நடாலின் வெற்றியைப் பார்த்து அதிர்ச்சியடைந்த உலகம் 28ஆவது வயதில் நடாலின் தோல்வியைப் பார்த்து அதிர்சியடைந்துள்ளது. நடாலின் இந்த ஆதிக்கத்துக்கும் பெருமளவான ரசிகர்களால் விரும்பப்படுவதுக்கும் காரணம் அவரின் துடிதுடிப்பும் போராட்ட குணமும் மட்டுமேதான்.

இறுவரை நம்பிக்கையுடன் விடாப்பிடியாக போராடும் நடால் நடப்பாண்டில் தோல்வியடைந்தது பலருக்கும் ஏமாற்றமே. ஆனால் இந்தத்தோல்வி எனது முடிவல்ல. 2009ஆம் ஆண்டில் தோல்வியடைந்த பின்னர் மீண்டெழுந்து தொடர்ச்சியாக ஐந்து தடவைகள் கிண்ணத்தைக் கைப்பற்றியதைப்போல், அடுத்த வருடம் மீண்டெழுந்து பத்தாவது கிண்ணத்துடன் வெற்றிப் பயணத்தைத் தொடருவேன் என்று நடால் தெரிவித்திருப்பது நடாலின் ரசிகர்களுக்கு தற்பொழுதிருக்கும் சிறு நம்பிக்கையாக உள்ளது.

இறுதிவரை விடாமுயற்சியும், துடிதுடிப்பும், போராட்ட குணமும் உடைய நடால் நிச்சயம் தனது தோல்விகள், சரிவுகள் என்பவற்றிலிருந்து மீண்டு வருவார், மீண்டும் வருவார்.



# புரியாத புதிராகி நிற்கும் செப் பிளாட்டர்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் என்றால் உடனே நினைவுக்கு வருபவர் செப் பிளாட்டர் தான். ஓரிரு தடவைகள் அல்ல தொடர்ச் சியாக ஐந்து தடவைகள் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராகப் பணியாற்றி ஐந்தாவது தடவையாகப் பொறுப்பேற்ற ஐந்தாம் நாளிலேயே தற்பொழுது ஓய்வினை அறிவித்துள்ள பிளாட்டரையும் ஓய்வினை அறிவித்த பின்னணியையும், பற்றித்தான் மேற்குலக நாடுகளதும் பொது வாசு விளையாட்டில் அதிக ஈடுபாடு காட்டுபவர்களதும் பேச்சாகியுள்ளது.

**பிளாட்டரின் ஊழல்**

உலகில் உள்ள பணக்கார விளையாட்டுக்களில் ஒன்றாகவிருப்பது உதைபந்தாட்டம். அதனைக் கட்டிக்காக்கவேண்டிய சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனமும் அதன் தலைவரான பிளாட்டரும் தமது கடமைகளில் இருந்து விலகி மிகப்பெரும் ஊழல் பேர்வழிகளாகியிருப்பதால்தான் ஒரு தலைவரின் ஓய்வினை உலகமே கொண்டாடக் காரணமாகியுள்ளது. ஆட்டங்களுக்கான கட்டண அறவீடு, உலகக்கிண்ணத் தொடர்களை நடத்துவதுக்கான அனுமதியை வழங்குதல், கட்டுமானங்கள் போன்ற மிகப்பெருமளவில் பணம் தேவைப்படும் விடயங்களில் பொய்ச்செலவினங்கள் மூலம் செப்பிளாட்டரும் அவரது குழுவினரும் சம்மேளனத்தை தொடர்ச்சியாக ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்த பிளாட்டர் பதவி விலக முக்கிய காரணம் அமெரிக்காவின் அழுத்தமேதான். 2020ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரை நடத்தும் உரிமத்தை அமெரிக்காவும், கட்டாரும் கேட்டிருந்தன. கட்டாரின் தட்பவெப்ப நிலைமைகள் உதைபந்தாட்டத்தை விளையாடுவதுக்கோ அல்லது ரசிக்கும் பார்வையாளருக்கோ ஏற்றதாக இருக்காது என்ற போதிலும் உரிமத்தை ஊழல்மூலம் கட்டாருக்கு வழங்கியது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம். அன்றிலிருந்து அமெரிக்காவின் பார்வை பிளாட்டரின் மீதும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீதும் துல்லியமாக இருந்தது. பிளாட்டரை வீட்டிற்கு அனுப்புவதில் அமெரிக்க நீதித்துறை தீவிரம் காட்டியது. ஊழல் பிரச்சனையை ஊதிப் பெரிதாக்கியது. சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் உட்பட 7 நிர்வாகிகளை கைதுசெய்து மேற்குலகப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாக ஊழல் பிரச்சினையை உருவாக்கி விட்டது.

சுருட்டியது இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஆயிரம் கோடிகள். இவ்வாறான ஒருவரை எதற்காக தொடர்ச்சியாக ஐந்து தடவைகள் தலைவராகத் தெரிவுசெய்ய வேண்டும்? சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தில் நிரந்தர உறுப்புரிமையாகவுள்ள நாடுகளின் தலைவர்களே வாக்களித்து சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரைதெரிவுசெய்வார்கள். சுரட்டும் பணத்தில் நிரந்தர உறுப்புரிமை நாடுகளின் தலைவர்களுக்கும் பங்கு என்ற காரணத்தினால் தனது சொத்துக்களைப் பெருக்கிக் கொள்ள தமக்கு ஏற்ற பிளாட்டரை அவர்கள் தொடர்ச்சியாகத் தெரிந்தெடுத்தார்கள்.

**பிளாட்டருக்கு வந்த பிரச்சனை**

இவ்வாறாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம். அன்றிலிருந்து அமெரிக்காவின் பார்வை பிளாட்டரின் மீதும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீதும் துல்லியமாக இருந்தது.

**ஊழலை ஊதித் தள்ளிய பிளாட்டர்**

ஊழல் பிரச்சினை காட்டுத்தீபோல் உலகமெங்கும் பரவியதையடுத்து பிளாட்டருக்கான எதிர்ப்புக்குரல்கள் பல தரப்பினரிடமிருந்தும் ஓங்கியொலித்தன. ரென்னிஸ் ஜாம்பவான் நடால் முதல் இங்கிலாந்து பிரதமர் கமரூன் வரை பிளாட்டரை அடியோடு தூக்கி எறியுங்கள் என்று எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள். பிளாட்டரின் சாம்ராட்சியம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஊழலை ஊதித்தள்ளிய பிளாட்டர் தொடர்ச்சியாக ஐந்தாவது தடவையாக தலைவராகத் தெரிவானார்.

**புரியாத புதிர்!**

பதவியில் மோகம் கொண்டு பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் தலைவரான பிளாட்டர் எதற்காக பதவி விலகினார்? என்ற கேள்விக்கு இன்றுவரை விடைதெரியாமல் உலகமே தலையைப்போட்டு உடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் பிளாட்டரின் பதவி விலகலில் அமெரிக்காவின் பின்னணி உள்ளது என்று அனைவரும் தற்காலிகமாக நம்பிக்கொள்ளலாம். மலிந்தால் சந்தைக்கு வரும் என்பதைப்போல் பிளாட்டரின் பதவி விலகல் பின்னணியும் மிக விரைவில் வெளியுலகுக்கு வரும். மொத்தத்தில் பதவிப்பிரியர் பதவி விலகினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org